# சிந்தனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடம்

வருடம் மும்முறை வெளியீடு,
தொகுதி II இதழ் II
ஆடி 1984.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை யாழ். பல்கலைக்கழக கலைபீடத்தினரால் ஆண்டுக்கு மும்முறை பங்குனி, ஆடி, கார்த்திகை மாதங்களில் பிரசுரிக்கப்படுகின்றது. கட்டுரைகள் பொருளாதாரம், அரசியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், மானிடவியல், மொழியியல், தமிழ், வடமொழி, சமயம் முதலிய துறைகளில் உள்ள பொருட்கூறுகள் பற்றியனவாக இருக்கும்.

## சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| **இலங்கை** | ரூபா | **75-00** | |
| **இந்தியா** | இந்திய ரூபா | **75-00** | |
| **பிறநாடுகள்** | | £ **6-00** | $ **12-00** |

ஆராய்ச்சிக் கட்டுரைகள், **ஆசிரியர், சிந்தனை, வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கொடுப்பனவுகள் சிந்தனை நிர்வாக ஆசிரியருக்கு இலங்கையில் காசுக் கட்டளை, காசோலை, தபாற்கட்டளை மூலமும் பிறநாடுகளிலிருந்து வங்கிக்கட்டளைகள் மூலமும் அனுப்பப்படல் வேண்டும்.

மாற்றிதழாக சிந்தனையைப் பெற விரும்பும் நூலகங்கள், நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா. விமர்சனத்துக்குத் தரம்வாய்ந்த நூல்களை ஆசிரியர் குழு வரவேற்கின்றது.

**கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர். அவை யாழ். பல்கலைக் கழகத்தினதோ அல்லது சிந்தனை ஆசிரியக் குழுவினதோ கருத்தாக அமையாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

ஆசிரியர்
சி. க. சிற்றம்பலம், M. A., Ph. D.

தொகுதி II, இதழ் II
கலைப்பீட வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,
ஸ்ரீலங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CINTANAI** is published once in four months in March, July and November every year.

Editor: **S. K. Sitrampalam**

Managing Editor: **S. Murugaverl**

*Annual Subsciprtion*:

| | |
|---|---|
| **Sri Lanka** | **Rs. 75-00** |
| **India (Ind. Rs.)** | **Rs. 75-00** |
| **Other countries** | **£ 6-00 or $ 12-00** |

*Published by*:

**FACULTY OF ARTS, UNIVERSITY OF JAFFNA.**

**THIRUNELVELY, SRI LANKA.**

*Printed at*:

**Mahathma Printing Works,**

**Earlalai West,**

**Earlalai.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை ஆசிரியர்கள்


நடன. காசிநாதன்
M. A.
துணை இயக்குனர்,
தொல்லியற்றுறை,
தமிழ்நாடு,
இந்தியா.

சு. சுசீந்திரராசா
M. A., Ph. D.
பேராசிரியர்,
மொழி இயற்றுறை,
யாழ். பல்கலைக் கழகம்.

அ. கணபதிப்பிள்ளை
M. A.
விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக் கழகம்.

சி. பத்மநாதன்
B. A., Ph. D.
துணைப் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
பேராதனைப் பல்கலைக் கழகம்.

வி. நித்தியானந்தன்
B. A., Ph. D.
தலைவர்.
பொருளியற்றுறை,
யாழ். பல்கலைக் கழகம்.

சி. க. சிற்றம்பலம்
M. A., Ph. D.
தலைவர்,
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

தொகுதி II. (புதியதொடர்) ஆடி, 1984 இதழ் II.


## உள்ளுறை


பாண்டியர்கால ஆட்சி இயல் 1
— நடனா. காசிநாதன்

யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில்
ஆக்கப் பெயர்கள் 19
— சு. சுசீந்திரராசா

பயிர்ச்செய்கைப் பிரதேசம் ஒன்றில்
நீர்ப்பாய்ச்சல் திட்டமிடுதலில்
சில முக்கிய அம்சங்கள் 39
— அ. கணபதிப்பிள்ளை

இலங்கைத் தமிழ் வணிக கணங்களும்
நகரங்களும் (கி. பி. 1000 – 1250) 45
— சி. பத்மநாதன்

இலங்கையில் முயற்சியாளர் வர்க்க எழுச்சியும்
அதன் முதலாளித்துவ இணக்கப் பான்மையும் 79
— வி. நித்தியானந்தன்

ஈழமும் இந்து மதமும் — பொலநறுவைக் காலம்
(கி. பி. 1000 – 1250) 115
— சி. க. சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டியர்கால ஆட்சி இயல்

## நடன. காசிநாதன்

### சங்ககாலப் பாண்டியர்

முடியுடை மூவேந்தர்களில் ஒருவரான பாண்டியர் சங்ககாலம் தொட்டே தமிழகத்தின் தென்பகுதியைச் சிறப்புற ஆண்டுவந்திருக்கின்றனர். சங்ககாலத்துப் பாண்டிய மன்னர்களின் ஆட்சி இயல்பற்றி சங்க கால இலக்கியங்கள்வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம். அது பலராலும் ஆராயப்பெற்று எழுதப்பெற்றுள்ள ஒன்ருகும்.

### பிற்காலப் பாண்டியர்

கி. பி. 6 ஆம் நூற்ருண்டு தொடங்கி கி. பி. 14 ஆம் நூற்ருண்டு முடிய ஆண்ட பாண்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சி இயலை எவ்வாறு அமைத்திருந்தார்கள் என்பதை ஆராய்வது மிகவும் இன்றியமையாததாகிறது.

### ஆட்சியின் சாயல்

கி. பி. முதல் நூற்ருண்டிலிருந்து மூன்ரும் நூற்ருண்டுவரை ஆட்சி புரிந்த சங்ககாலப் பாண்டிய மன்னர்களின் ஆட்சி இயலின் சாயல் இந்தப் பிற்காலப் பாண்டிய மன்னர்களில் எந்த அளவுக்குப் பார்க்கமுடிகிறது; தங்களின் சமகாலத்தில் ஆட்சி புரிந்த பல்லவர், சோழர்கால ஆட்சி இயல் கூறுகள் எந்த அளவுக்குப் பாண்டியர்களின் ஆட்சி இயலில் ஆதிக்கம் செலுத்திற்று என்பவற்றைக் கண்டால்தான் பாண்டியர்கால ஆட்சி இயலை முழுமையாக ஆராய்ந்ததாகக் கருதலாம்.

### இருபிரிவினராகப் பகுத்தல்

கி. பி. 6 ஆம் நூற்ருண்டு தொடங்கி கி. பி. 14 ஆம் நூற்ருண்டு வரை ஆண்ட பாண்டிய மன்னர்களையே இருபிரிவினராகப் பிரித்து ஒரு பிரிவினர் கி. பி. 6 ஆம் நூற்ருண்டு முதல் கி. பி. 9 ஆம் நூற்ருண்டு வரை ஆண்டவர் என்றும், மற்ருெரு பிரிவினர் கி. பி. 10 ஆம் நூற்ருண்டு தொடங்கி கி. பி. 14 ஆம் நூற்ருண்டுவரை ஆட்சி புரிந்தவர்கள் என்றும் கொள்ளலாம்.

### அடிப்படை ஆதாரங்கள்

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் மொத்தம் 12 பேர் (சிலர் 14 பேர்) இருந்திருக்கின்றனர். அவர்களில் முதலாமவன் கடுங்கோன் என்பாஞவான். இறுதியில் ஆண்டவர் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன். இந்தப் பிரிவைச் சார்ந்த மன்னர்களைப்பற்றி அறிய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் ஓரளவுக்குத் துணைபுரிகின்றன. தமிழிலக்கியமான பாண்டிக்கோவையும் சில செய்திகளைத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்பேடுகள்:**

இதுவரை மொத்தம் ஆறு செப்பேடுகள் கிடைத்துள்ளன. அவை வருமாறு:

1. வேள்விக் குடிச் செப்பேடு[1]
2. சீவரமங்கலம் அல்லது சென்னை அருங்காட்சியகச் செப்பேடு[2]
3. சின்னமனூர்ச் சிறிய செப்பேடு[3]
4. தளவாய்புரச் செப்பேடு[4]
5. சின்னமனூர்ப் பெரிய செப்பேடு[5]
6. சிவகாசிச் செப்பேடு[6]

முதல் மூன்று செப்பேடுகளும் ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ் சடையன் காலத்தைச் சார்ந்தவை. தளவாய்புரச் செப்பேடு பராந்தக வீரநாராயணன் காலத்தியது. சின்னமனூர்ப் பெரிய செப்பேடு இரண்டாம் இராஜசிம்மன் காலத்தைச் சார்ந்தது. இந்த இராஜசிம்மன்தான் சோழ மன்னன் பராந்தகனேடு போரிட்டுத் தோற்றவன். சிவகாசிச் செப்பேடு வீரபாண்டியன் காலத்தைச் சார்ந்தது. இவ்வீரபாண்டியன் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் என்று சிலராலும்[7] முதலாம் இராசாதி ராசனுல் தோற்கடிக்கப்பட்ட பாண்டிய மன்னன் இவன் ஆகையினுல் முதலாம் இராசாதிராசன் காலத்தியவன் என்று சிலராலும் கருதப்படு கின்றுன். முடிவாகக் கி. பி. 11 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பாண்டியன் இவன் என்று இப்பொழுது எல்லாரும் கருதுகிருர்கள்.

**கல்வெட்டுகள்:**

பாண்டிய மன்னர்கள் காலத்தியக் கல்வெட்டுகள் இதுவரையில் சுமார் 350 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்தியது சுமார் 150 ஆகும். இந்தக் காலத்தியக் கல் வெட்டுகளுள் சில அப்பொழுது ஆண்ட மன்னர்களின் காலத்தை அறிந்து கொள்வதற்குப் பெரும் துணை புரிகின்றன. அத்தகைய கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்கவை,

1. பராந்தக நெடுஞ்சடையனின் ஆனைமலைக் கல்வெட்டு.[8]
2. இரண்டாம் வரகுணவர்மனின் அய்யம்பாளையக் கல்வெட்டு.[9]
3. மாறவர்மன் அரிகேசரியின் வைகைக் கல்வெட்டு.[10]

முதல் கல்வெட்டில் கலி ஆண்டு 3871 குறிக்கப்பட்டுள்ளது. இது கி. பி. 770 க்குச் சமமாகும். இந்தக் காலத்தில் பராந்தக நெடுஞ்சடையன் ஆண்டுள்ளான் என்பது உறுதியாகிறது. இரண்டாம் கல்வெட்டில் சக ஆண்டு 792, 2 ஆம் வரகுண பாண்டியனின் எட்டாம் ஆட்சி ஆண்டும் தரப்பட்டுள்ளன. சகஆண்டு 792 க்குச் சமம் கி. பி. 870. கி. பி. 870 என்பது வரகுணனின் 8 ஆம் ஆட்சி ஆண்டாகும். அவ்வாறெனின் வரகுணன் கி. பி. 862-63 இல் பட்டமேற்றிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. மூன்றும் கல்வெட்டு மாறவர்மன் அரிகேசரி 50 ஆண்டுகள் ஆண்டான் என்பதைத் தெரிவிக்கிறது. இத்தகைய கல்வெட்டுகளாலும் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியர்களின் சமகாலத்திய மன்னர்களின் கல்வெட்டுகளாலும் இக் காலத்தியப் பாண்டிய மன்னர்களின் காலத்தை அறிந்துகொள்வது எளிதாகிறது.

இரண்டாம் பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களைப்பற்றி ஏராளமான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. ஆனால் இதுவரையில் இம் மன்னர்கள் காலத்திய செப்பேட்டுச் சாசனங்கள் மிகக் குறைந்த அளவிலே கிடைத்திருக்கின்றன. தஞ்சையையும் உறந்தையையும் செந்தழலில் கொளுத்திய முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனும், நெல்லூர் கடப்பைப் பகுதி வரையில் படையெடுத்து வெற்றிவாகை சூடிய முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனும் தங்கள் காலத்தில் எந்தவொரு செப்புப்பட்டயமும் வெளியிடாமலா போயிருப்பார்கள். அவர்கள் காலத்திய கல்வெட்டுகள் ஏராளமாகக் காணப்படுகையில் அவர்கள் காலத்தியச் செப்பேடுகள் மட்டும் ஏன் கிடைக்கவில்லை. மண்ணுள் புதைந்து இன்னும் கண்டுபிடிக்கப்படாமலேயே உள்ளனவா? ஆராயப்படுதல் வேண்டும்.

இந்தப் பிரிவு பாண்டிய மன்னர்கள் காலத்தியக் கல்வெட்டுகள், காலத்தைப்பற்றிக் கணிப்பதற்கு உதவியாக உள்ளன. அவைகளில் கல்வெட்டு எழுதியபோது இருந்த கோள் நிலைகள் குறிக்கப்பட்டு இருப்பதால் அக்கல்வெட்டுகளின் காலத்தைக் கணிப்பது எளிதாகக் காணப்படுகின்றன.

### ஆய் மன்னர்களின் செப்பேடுகளும், கல்வெட்டுகளும்

முதல் பிரிவைச் சார்ந்த பாண்டிய மன்னர்கள் காலத்தில் அவர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக ஆய் மன்னர்கள் இருந்திருக்கின்றனர். அதே நேரத்தில் அவர்கள் தாங்களாகவே செப்பேடுகளை வெளியிட்டுள்ளார்கள். அந்தச் செப்பேடுகளும்[11] அவர்கள் காலத்தியக் கல்வெட்டுகளும் முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களை, குறிப்பாக சடையவர்மன் பராந்தக நெடுஞ்சடையனைப்பற்றி அறிந்துகொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றன.

### பாண்டிய நாடு

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்திலாயினும் சரி, இரண்டாம்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்திலாயினும் சரி பாண்டியர்களின் ஆட்சி ஆந்திராவில் உள்ள நெல்லூர் ஜில்லாவைத் தாண்டி வடக்கே செல்லவில்லை. அங்கங்கு வலிவான அரசுகள் அமைந்துவிட்டதே அதற்குக் காரணம். முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்தில் தொண்டை மண்டலத்தில் பல்லவர்களது ஆட்சி வலிமை பெற்றுத் திகழ்ந்தது. பாண்டியர்கள் நாடு விரிவடையவொட்டாமற் தடுத்துவிட்டது. இரண்டாம்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்கள் காலத்தில் சோமேசுவரத்தைத் தலைநகராகக் கொண்டிலங்கிய போசளர்களின் செல்வாக்கு பாண்டியர்களது ஆட்சி நெல்லூரைத் தாண்டிப் பரவ விடாமல் முடக்கியிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாண்டியர் அரசுகட்டிலேறுமுறை

முதற்பிரிவைச் சார்ந்த மன்னர்கள் தந்தைக்குப்பின் மகன் பட்ட மேற்றிருக்கிறான் என்ற செய்தி அவர்கள் காலத்தியச் செப்பேடுகள்மூல மாக உணரமுடிகிறது. தங்களது முன்னோர்களின் ஆட்சிச் சிறப்பைக் கூறும் மெய்க்கீர்த்திப் பகுதியில்[12] ஒருவரின் வீரச் செயல்களைக் கூறி முடித்தவுடன் "மற்றவர்க்கு மகனாகி", "மற்றவர்க்குப் பழிப்பின்றி வழித் தோன்றி" என்று அடுத்தவரைப்பற்றிக் கூற ஆரம்பிப்பதால் முன்னவரின் மைந்தன் அடுத்தவர் என்று உறுதியாகத் தெரிகிறது. ஆகவே அவர்கள் தந்தைக்குப்பின் மகன் என்ற முறையில் அரசுகட்டிலேறி ஆட்சி புரிந் திருக்கின்றனர் என்று அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இரண்டாம் பிரிவைச் சார்ந்த மன்னர்கள் எந்த முறையில் அரியணை ஏறினார்கள் என்று அறிதல் இயலாததாக உள்ளது. அவர்கள் காலத்தியக் கல்வெட்டு களும் இதுபற்றிச் சரியாகத் தெரிவிக்கவில்லை. இரண்டாம் பிரிவைச் சார்ந்த பாண்டியர்கள் ஒவ்வொருவரும் எத்தகைய உறவு உடையவர்கள் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. அப்பாண்டிய மன்னர்களின் சம காலத்திய மன்னர்களை வைத்துத்தான் இவருக்குப் பிறகு இவர் பட்டமேற் றிருக்கவேண்டும் என்று உணர முடிகிறது. தந்தைக்குப்பின் மகன்தான் பட்டமேற்றானா அல்லது அண்ணனுக்குப் பிறகு தம்பி பட்டமேற்று பின்னர் அண்ணன் மகன் பட்டமேற்றானா அல்லது தம்பி மகன் பட்டமேற்றானா என்று அறிய முடியாத சிக்கலான பிரச்சினையாக உள்ளது.

### அரசர்கள் பட்டப்பெயர்கள்

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் நிரம்பப் பட்டப் பெயர்களைச் சூட்டிக்கொண்டு திகழ்ந்திருக்கின்றார்கள். ஆனால் பெரும் பாலான பட்டப்பெயர்கள் வடமொழிப் பெயர்களாகக் காட்சி அளிக் கின்றன.[13] அதற்குக் காரணம், அவர்களின் சமகாலத்தவரான பல்லவ மன்னர்கள் வடமொழிப் பட்டப் பெயர்களை நிரம்பப் பூண்டவர்கள். எனவே அவர்களைப் பார்த்து இவர்களும் அம்மாதிரிப் பூண்டிருக்கலாம். மாறவர்மன், சடையவர்மன் என்று மாறிமாறிச் சூட்டிக்கொள்ளும் அந்த முறையும் பல்லவர்களால்தான் ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் தமி ழகத்தில் முதன்முதலில் வர்மன் என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொண்டவர்கள் பல்லவ மன்னர்களே. சிம்மவர்மன், மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் போன்றவை உதாரணங்கள் ஆகும். 'வர்மர்' என்பது க்ஷத்திரிய மன்னர்களைக் குறிக்கும் வடமொழிச் சொல். இதைப் பன்பர் என்று தமிழ்ப்படுத்தி எழுதியுள்ளமை தமிழ்க்கல்வெட்டுகளில் பல கிக் காணப்படுகிறது.

இரண்டாம் பிரிவைச் சார்ந்த பாண்டிய மன்னர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பட்டப் பெயர்களையே பூண்டிருந்திருக்கின்றனர். உதாரணமாகச் 'சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன்' என்று முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனும், 'எல்லாந் தலையானான்', 'எம்மண்டலமும் கொண் டருளிய சேரனைவென்றான்' போன்ற பட்டப்பெயர்களை முதலாம் சடைய வர்மன் சுந்தரபாண்டியனும் பெற்றிருந்தார்கள். இவர்கள் மிகக் குறை வான வடமொழிப் பட்டப்பெயர்களைப் பூண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரியணையின் பெயர்கள்

கி.பி. 10 ஆம் நூற்றாண்டிருந்து ஆண்ட பாண்டிய மன்னர்களில் சிலர் எந்த அரசுகட்டிலில் அமர்ந்து ஆட்சிபுரிந்தனர் என்பதைச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியர்களின் அரியணைகளுக்கு மழவராயன், காலிங்கராயன்[14] என்ற பெயர்கள் வழங்கிவந்தன. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் அரியணைகளுக்கு மழவராயன், பல்லவராயன்[15] என்னும் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன என்பது கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது. இதுமாதிரி அரியணைகளுக்குப் பெயரிட்டழைக்கும் வழக்கம் இவர்களுக்குமுன் ஆண்ட எந்த மன்னர்களும் கையாளாத புதுப் பழக்கமாகத் தெரிகிறது.

### மெய்க்கீர்த்திகள்

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் தங்களுக்கென்று எந்தவொரு மெய்க்கீர்த்தியும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் சமகாலத்தவர்களான பல்லவ வேந்தர்களும் தங்களுக்கென்று தனியானதொரு மெய்க்கீர்த்தி கொண்டிருக்கவில்லை. ஆனால் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் மெய்க்கீர்த்தி எழுதியிருக்கின்றார்கள். இப்பழக்கம் சோழர்களின் தொடர்பால் ஏற்பட்டிருக்கவேண்டும். முதற்பிரிவைச் சார்ந்த பாண்டிய மன்னர்களின் செப்பேடுகளிலும், சில கல்வெட்டுகளிலும் தங்களைப்பற்றியும் தங்கள் முன்னோர்களைப்பற்றியும் சில செய்திகள் மெய்க்கீர்த்தி முறையில் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை முழுமையான மெய்க்கீர்த்தி அளவில் இல்லை.

### ஆட்சி ஆண்டு

பாண்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சி ஆண்டைக் குறிக்கும் முறை புதுமையாக உள்ளது. அவர்கள் ஒரு ஆண்டைக் குறித்து அந்த ஆண்டுக் கெதிராமாண்டு என்று குறிக்கப்பட்டுள்ளது. ஒரு ஆண்டைக் குறித்து ஆண்டுக்கெதிராமாண்டும் கொடுக்கப்பட்டிருக்கும்போது அந்த எதிராமாண்டை முன்னால் உள்ள ஆண்டோடு கூட்டுவதா அல்லது பெருக்குவதா என்ற ஐயத்தை உண்டாக்கியது. சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில் சம்ஸ்கிருதப் பகுதியில் மன்னனின் 16 ஆம் ஆட்சி ஆண்டு என்றும், தமிழ்ப் பகுதியில் ''ராஜ்யவருஷம் இரண்டாவதினெதிர் பதினான்காம் யாண்டில்'' என்றும்[16] குறிப்பிடப்பட்டுள்ளதால் எதிராமாண்டை முன்னால் உள்ள ஆண்டோடு சேர்க்க வேண்டும் என்று அறியமுடிகிறது. செப்பேடுகளில் 'ராஜ்ய வருஷம்' என்று காணப்படுகிறது. இதன்மூலம் கல்வெட்டுகளில் காணப்படும் ஆண்டு ஒவ்வொரு மன்னரின் ஆட்சி ஆண்டைத்தான் குறிப்பிடுகின்றது என்று திடமாகக் கொள்ள முடிகிறது. சில பாண்டிய மன்னர்கள் ஒரு குறிப்பிட்ட ஆண்டிலிருந்து இத்தனையாவது எதிராமாண்டு என்று குறிக்கின்றனர். இரண்டாம் வரகுண பாண்டியனின் பெரும்பாலான கல்வெட்டுகள் யாண்டு நான்கு இதனெதிர் அந்தந்த ஆண்டு என்று காணப்படும்.[17] இரண்டாம் இராஜசிம்மனின் பெரும்பாலான கல்வெட்டுகள் யாண்டு இரண்டு இதனெதிர் அந்தந்த ஆண்டைக் காணலாம்.[18] பாண்டியர்களின் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் சோழமன்னர்கள் சிலருங்கூடத் தங்கள் ஆட்சி ஆண்டை இன்ன ஆண்டின் எதிராமாண்டு என்று குறித்துள்ளனர்.[19]

## முடி கவித்தல்

மன்னர்கள் முடிசூட்டிக் கொள்வதைக் கல்வெட்டுகள் 'முடி கவித்தல்' என்றும் குறிக்கின்றன. தன்னுடைய தமிழ்க்கூடலில் "மன்னிய மணி முடி கவித்து மஹாபிஷேக மகிழ்ந்த நாளில்" என்று வீரபாண்டியன் முடிசூட்டிக் கொண்டதைச் சிவகாசிச் செப்பேடுகள் [20] கூறுகின்றன. பொன் மணி முடி சூடுகின்ற நாளில் சில வரிகளை நீக்கி உத்தரவிடுவதும் வழக்கத்தில் இருந்திருக்கிறது.

## அரசமாதேவியர்

பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் இருந்ததைப் போன்ற உயர்நிலை அரசியர்களுக்குப் பாண்டிய நாட்டில் இருக்கவில்லை போன்று தோன்றுகின்றது. பல்லவர் குலத்தில் சாருதேவியும் இரங்க பதாகையும், சோழர் காலத்தில் சேரமாதேவியும் குந்தவையும் அடைந்திருந்த பெரும் செல்வாக்கு பாண்டியர் காலத்தில் இருந்த எந்த ஒரு அரசியும் பெற்றிருந்ததாக அறிய முடியவில்லை. அரசிகளின் பெயர்களையே அதிக அளவில் தெரிந்துகொள்ள முடியவில்லை. மன்னன் எந்த அரசமாதேவியோடு வீரசிம்மாசனத்தில் வீற்றிருந்து ஆட்சிபுரிந்தான் என்பதைச் சோழர் காலத்துமெய்க்கீர்த்திப் பகுதியின் இறுதிப்பகுதி விளக்கும். ஆனல் இரண்டாம்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகளில் எல்லா மெய்க்கீர்த்திகளுமே உலகமுழுதுமுடையாளோடு வீற்றிருந்தருளி என்றுதான் குறிப்பிடுகின்றன. வீரபாண்டியன் மெய்க்கீர்த்திமட்டும் "த்ரைலோகய முழுதுடையாளோடும் வீற்றிருந்தருளி" என்று கூறுகிறது.[21] த்ரைலோகமுழுதுடையாள் என்பது மூவுலக முழுவதுடையாள் என்று பொருள். இதுவும் உலகமுழுதுடையாளையே குறிப்பதாகக் கொண்டால் தவருக இருக்காது. உலகமுழுதுடையாள் என்று குறிப்பிடுவது பொதுவாகப் பட்டத்தரசியைக் குறிப்பதாகக் கொள்ளலாமேயொழிய ஒரு குறிப்பிட்ட மன்னனுக்குரிய பட்டத்தரசி அவள் என்று கூறுவது பொருந்தாததாகத் தோன்றுகிறது.[22]

## அரசு அதிகாரிகள்

முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டிய மன்னர்காலத்தில் ஒரு சில அதிகாரிகளையே செப்பேடுகள் மூலமாகவும் கல்வெட்டுகள் மூலமாகவும் உணரமுடிகின்றன. உத்தரமந்திரி ஆணத்தி, செப்பேட்டை எழுதியவன் ஆகியவர்கள் குறிப்பிடப்படுகிருர்கள். இம்முறை பல்லவர் காலச் செப்பேடுகளில் காணப்படுவதைப் போன்று உள்ளது.[23] சடையவர்மனின் வேள்விக்குடிச் செப்பேட்டில் ஆணத்தியாகக் "கரவந்தபுரத்தவர் குலத்தோன்றல் மாவேந்தும் கடற்றுனை மூவேந்தமங்கலப் பேரரையனுகிய வைத்ய சிகாமணி மாறங்காரி" என்று எழுதப்பட்டுள்ளது.[24] ஸ்ரீவரமங்கலச் செப்பேட்டில் "ஆணத்தியாய்த் தாம்ர ஸாஸனஞ் செய்வித்தான் வாத்ய கோஷ ஸங்கீதங்களான மலிவெய்திய வண்களந்தை வைத்ய குலம் விளங்கத் தோன்றி மன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கு மஹாசாமந்தனுய் மாற்றரசரை வலிதுலேக்கும் வீரமங்கலப் பேரரச ஞகிய ஸ்ரீரதரன் மூர்த்தி எயினன்''[25] என்று சொல்லப்பட்டுள்ளது. இச்செப்பேடு நிலத்தின் எல்லேயை வரையறை செய்வதற்காகப் பெண் யானேமீது அமர்ந்து சுற்றிவந்தவன் ''பாண்டியர்க்கு மதங்கஜாத்யஸ பாண்டி இளங்கோ மங்கலப் பேரரசஞகிய கொழுவூர்க் கூற்றத்துக் கொழுவூர்ச் சங்கஞ்சிரீதரன்'' என்றும் தெரிவிக்கிறது.[26]

சடையவர்மன் பராந்தக நெடுஞ்சடையனின் சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டில் ''இதற்காணத்தி பட்டான் அண்டனுட்டுக் குண்டூர்க் கூற் றத்து குண்டூருத்தர மந்திரியாயின தாயன்சிங்கன்''[27] என்று உத்தர மந்திரியே அச்செப்பேட்டுக்கு ஆணத்தியாக இருந்தான் என்பதைத் தெரிவிக் கிறது. இராமநாதபுரம் மாவட்டம் பள்ளிமடத்திலிருந்து கிடைத்திருக் கின்ற ஒரு துண்டுக் கல்வெட்டு சோழன் தலேக்கொண்ட வீரபாண் டியனேச் சேர்ந்ததாகத் தெரிகிறது. அதில் இணேயபள்ளி தென்னவன் உத்தரமந்திரி என்பான் நிலத்தின் எல்லேயைத் தெரிவிக்கும் சூழ்நிலேயில் குறிக்கப்படுகிருன்.[28]

தளவாய்புரச் செப்பேடு ''இதனுக் காணத்தி வண்டமிழ்க் கோனதி காரி பொற்றடம்பூண் மணிமார்பன் பொழிற் புல்லூ ரெழில் முஸூரன். ......வாத்ஸகோத்ர சூடாமணி திருமகிழிளேயானக்கன்'' என்று தெரிவிக் கிறது.[29] அதே செப்பேடு சேந்தங்கிழவன் என்பவன் நடுவுநிலே நாயகனுக விளங்கினுன் என்றும் கூறுகிறது.[30] சின்னமனூர்ப் பெரியசாசனம் வேம் பற்றூர் கூற்றங்கோன் ஆளாகவும், கூரக்குமரன் குடி காவல் நாயகனுகவும், நக்கங்காடன், பட்டாரஞ்சோலே, கோன்வேளான் ஆகியோர் கணக்கராக வும் விளங்கினர் என்று புலப்படுத்துகிறது.[31] வேம்பற்றூர் கூற்றங்கோன் ஆளாக இருந்தான் என்பது அதிகாரியாக அல்லது ஆணத்தியாக இருந் தான் என்பதைக் குறிப்பதாக இருக்கலாம்.

முற்காலப் பாண்டியர்கள் காலத்தில் அரசு பதவிகள் வழிவழியாக வந்தவர்களுக்கு அளிக்கப்பெற்றதாகத் தெரிகிறது.[32] செப்பேட்டை எழுதிய பெரும்பணேக்காரனேப்பற்றிக் குறிக்கும்போதும், ஆணத்தியைக் குறிக்கும் போதும், செப்பேட்டுக் கவிதையைப் பாடிய புலவர்களேக் குறிப்பிடும் போதும் அவர்களின் முன்னேரும் பெரிதும் புகழப்படுகின்றனர்[33]. அவர் களும் அரச பதவிகளில் இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்று கிறது.

சோழர்களின் தொடர்புக்குப் பின்னர் பாண்டிய அரசிலும் பலதரப் பட்ட அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். முக்கியமான அதிகாரி புரவுவரி திணேக்கள அதிகாரி ஆவார். இவ்வதிகாரிமூலம்தான் நிலம் விற்பதென்ருலோ, வாங்குவதென்ருலோ நடைபெறவேண்டும். நில விற்பனேக்காக எழுதப்படும் ஒப்புதல் ''நில விலேப் பிரமாண இசைவுதீட்டு'' எனவும், பணம் கொடுத்ததற்கான பற்றுச்சீட்டுக்குப் ''பொருள்மாவறுதி பொருட்செலவுஓலே'' எனவும் பெயர். இறுதியாகப் புரவுவரித் திணேக் களத்தில் பதிவு செய்துகொள்வதற்குப் ''பிரமாணம்'' என்றும் வழங்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அரையர்' என்பார் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த பாண்டியர் காலத்தில் முக்கிய இடத்தை வகித்திருக்கின்றனர். அரையர் என்றால் தலைவர் என்று பொருள். இவர்கள் சிறுசிறு பகுதிக்குத் தலைவர்களாக இருந்திருக்கின்றனர். இவர்களுள் ஒருவருக்கொருவர் பூசல் ஏற்பட்டதையும் பின்னர் சமாதானம் ஏற்பட்டு இனி எந்த வகையில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று தங்களுக்குள் ஒரு உடன்பாட்டுப் பத்திரம் எழுதிக் கொண்டதையும் கல்வெட்டுகள் பலபடத் தெரிவிக்கின்றன.[34]

அரசு அதிகாரிகளுக்கு ''ஏனாதி'', ''காவிதி'' போன்ற பட்டங்களும் சிறப்பாகத் 'தமிழவேள்' என்ற பட்டமும் தரப்பெற்றுள்ளன.[35]

### நாட்டுப்பிரிவு

முதல் இராஜராஜன் காலம்முதல் பாண்டிநாடு என்றுதான் இப் பகுதி வழங்கிவந்தது. இராஜராஜன் காலத்தில் இராஜராஜ வளநாடு என்றும் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் இராஜராஜ மண்டலம் என்றும் பின்னர் இராஜராஜ பாண்டிநாடு என்றும் மாற்றம் பெற்றது. இந்நாட்டில் நாட்டுப்பகுதிகள் மண்டலம், கூற்றம், ஊர் என்று பிரிக்கப்பட்டிருந்தன. சோழர் காலத்துக்குப் பின்புதான் பாண்டியர் கல்வெட்டுகளில் வளநாடு என்று ஒரு பிரிவு காணப்படுகிறது. அதுவும் குறிப்பாக இராஜேந்திரன் காலத்துக்குப் பின்புதான். கூற்றம், நாடு குளக்கீழ், ஏரிக்கீழ், இருக்கை, முட்டம் என்பவை ஒரே பிரிவைக் குறிக்கும் சொற்களாகும். இவை பல்லவர் காலத்தில் நிலவிய கோட்டம் என்ற பிரிவை ஒத்ததாகும். முதற்பிரிவைச் சேர்ந்த பாண்டியர்களின் செப்பேடுகளில் இன்ன கூற்றத்தில் படும் இன்ன ஊர் என்று குறிக்கப்படுகிறது. இதேபோன்று பல்லவர் செப்பேடுகளிலும் காணலாம். சோழர் காலத்தில் இருந்த சில வளநாடு, நாட்டின் பெயர்கள் பாண்டியர் காலத்தில் மாற்றப்பட்டன. முதலாம் இராஜராஜன் காலத்திலிருந்து மூன்றாம் இராஜராஜன் காலம்வரை வழங்கிய 'பாண்டிக் குலாசனி வளநாடு' என்பது முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலிருந்து 'பாண்டிக்குலபதி வளநாடு' என்று மாற்றப்பட்டு வழங்கப்பட்டது. பாண்டிய மண்டலத்தில் சுமார் 100 நாடுகள் அடங்கியிருந்திருக்கின்றன. அவற்றில் அறுபது நாடு என்றும், பத்து கூற்றம் என்றும், பத்து குளக்கீழ் (ஏரிக்கீழ் என்ற ஒன்றையும் சேர்த்து) என்றும், நான்கு 'இருக்கை' என்றும், ஐந்து 'முட்டம்' என்றும், ஒன்பது வளநாடு என்று முடிகின்றன. வளநாடு என்பது பாண்டி நாட்டில் நாடு என்ற பகுதிக்குத்தான் முதலில் வழங்கிவந்தது. சோழ மன்னன் முதலாம் இராஜராஜன் இதை எடுத்து நாட்டை விடப் பெரிய பிரிவுக்குத் தன்னாட்டில் சூட்டி மகிழ்ந்தான். பின்னர் அவனது மகனான இராஜேந்திரன் காலத்தில் பாண்டி நாட்டிலும் வளநாடு என்று ஒரு பெரும்பிரிவு ஏற்படுத்தப்பட்டது.[36]

### ஊராட்சி

தமிழகத்தில் ஊராட்சி முறையைப்பற்றித் தெரிவிக்கும் மிகவும் பழைமையான கல்வெட்டு பாண்டி நாட்டில் மாலூர் என்னுமிடத்திலிருந்து தான் கிடைத்துள்ளது.[37] இக்கல்வெட்டு மாறஞ்சடையனின் 35ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. களக்குடி நாட்டுப் பிரமதேயமான நிலை நல்லூர் மஹாசபையார் ஒருங்குகூடித் தீர்மானித்த தீர்மானங்களைத் தெரிவிக்கின்றன. (1) அந்த ஊரில் பங்குடையாதின் மக்கள்சபையில் உறுப்பினராவதற்கு ஒரு தர்மம்உட்பட மந்திரபிரமாணம் நன்கு கற்றவராய் நன்னடத்தையுடையவராய் இருத்தல் வேண்டும். (2) ஒரு பங்குடையார் ஒருத்தர்தான் உறுப்பினராகலாம். (3) தான் வைத்திருக்கிற பங்கு விலையாகவோ, கொடையாகவோ அல்லது திருமணக் கொடையாகவோ பெற்றிருந்தால் தர்மம் உட்பட மந்திர பிரமாணத்தில் தேறியவராய், நன்னடத்தையராய் இருந்தால்தான் சபையின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டு செயலாற்றலாம். (4) இனி புதிதாக நிலம் விலைக்கு வாங்கியோ கொடையாகப் பெற்றோ அல்லது சீதனமாகப் பெற்றோ தமக்குப் பங்கு உண்டு என்று கூறிக்கொண்டு சபையில் உறுப்பினராக யாராவது விரும்பினல் அவர்கள் முழுசிராவணை அன்றி கால், அரை, முக்கால் சிராவணைப் பெற்றிருந்தால் அனுமதிக்கப்படமாட்டார்கள். (5) விலைக்கு நிலம் வாங்கிய பிறகு தாம் பங்குடையார் என்று வருபவர்கள் பரிஷிஷ்டத்தோடு முழுவேதத்தையும் தேறியவர்களாக இருத்தல் வேண்டும். (6) இது அல்லாமல் சபையில் உறுப்பினராகிறவர்கள் சபையின் தீர்மானப்படி சபையின் உரையாடலில் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர். (7) இந்தத் தீர்மானத்தின்படி சிராவணை (பங்கு) இல்லாதார் எந்தவொரு வாரியத்துக்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படமாட்டார். (8) இந்தத் தீர்மானத்தை ஒத்துக்கொண்டவர்கள் யாவரும் பிறகு இல்லை என்று கூறக்கூடாது. தீர்மானத்துக்கு எந்தவித குந்தகமும் விளைவித்தல் கூடாது. (9) குந்தகம் விளைவிப்பாரும், குந்தகம் விளைவிப்பவர்களுக்குத் துணைநிற்பாரும் தலா ஐந்து காசு தண்டம் விதிக்கப்படுவர். தண்டம் செலுத்திவிட்டோம் என்று எண்ணுமல் அதற்குப் பிறகும் தீர்மானத்தை நன்கு கடைப்பிடித்தல்வேண்டும்.

மேலே குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்குப் பங்குடையாராகவும், மந்திரபிரமாணம், தர்மம் ஆகியவற்றில் தேர்ச்சி உடையராகவும், நன்னடத்தையுடையராகவும் இருத்தல் அவசியம் என்பது தெரியவருகிறது. அந்தப் பங்கு என்பது எவ்வளவு நிலம் என்று குறிக்கப்படவில்லை. அத்தோடு வயது வரம்பும் குறிக்கப்பெறவில்லை. தேர்தல் எந்தமுறையில் நடைபெற்றது என்பதும் தெரியவில்லை. சபையில் அங்கம் வகிப்பவர்களில் இருசாரார் இருந்தனர் என்பது தெரிகிறது. ஒரு சாரார் வெறும் உரையாடலில்மட்டும் கலந்துகொள்வர். அவர்கள் தங்கள் விருப்பங்களைக் கூறலாம். சில ஆலோசனைகளைக் கூறலாம். ஆனல் அவர்கள் எந்தவித வாரியத்துக்கும் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். இதிலிருந்து அவர்கள் தற்காலச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் போன்று இருந்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. தற்காலச் சட்டமன்றங்கள் நிறைவேற்றும் ஒரு தீர்மானத்தை மேலவை உறுப்பினர்கள் விவாதித்து சில ஆலோசனைகளைக் கூறலாமேயொழிய அதை நிறைவேற்றுமல் தடுத்துவிட அதிகாரம் இல்லை. அதைப்போன்று விவாதித்து ஆலோசனைகளைக் கூறுவதற்குமட்டும் அவர்கள் தகுதி உடையவர்களாக இருந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு சாரார் வாரியங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுடையவர்கள். அவர்களுக்குத்தான் அதிக அதிகாரம் இருந்திருக்கவேண்டும். அவர்கள் இக்காலச் சட்டமன்ற உறுப்பினர்கள் போன்று இருந்திருக்கலாம். அவ்வாறெனில் அக்காலத்திய மஹாசபை தற்காலத்தியச் சட்டமன்றம் போன்று இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. சோழர் காலத்தில் இருந்ததுபோல் கி. பி. 9ஆம் நூற்றாண்டிலேயே வாரியங்கள் இருந்ததுவும் இக்கல்வெட்டால் உணர முடிகிறது. ஆனால் சோழர்கள் காலத்தில்கூட நிலவிடாத ஒரு சிறந்த ஊராட்சி முறை (இருசாரார் தேர்ந்தெடுக்கும் முறை) பாண்டியர் காலத்தில் நிகழ்ந்திருக்கிறது என்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

இக்கல்வெட்டில் இவ்வூர் பங்குடையார் மக்கள் சபையில் மன்றாடுகிறது என்று வரும் தொடரை டாக்டர் கே. வி. இராமன் அவர்கள் ''பங்குடையார், மக்கள் சபையில் மன்றாடுகிறது'' என்று பிரித்து 'மக்கள் சபை' என்ற சொல் தமிழகத்தில் கி. பி. 9ஆம் நூற்றாண்டிலேயே வழங்கி வந்திருக்கிறது என்று கூறியுள்ளார்.[38] முன்னர் பதிப்பித்த திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்[39] மக்கள் என்று வருவதற்குத் தனியாக ஒரு பொருள் கொள்ளாது பங்குடையார் என்ற சொல்லோடு சேர்த்துப் (Share – holders) பொருள் கொண்டுள்ளார். ஆனால் அதைப் பங்குடையார் மக்கள், சபையில் மன்றாடுறது என்று பிரித்துப் பொருள் கொள்ளுதல் சிறப்பாகத் தெரிகிறது. 'மக்கள்' என்பதைப் 'பெருமக்கள்' என்று கொள்ளலாம். பிற்காலக் கல்வெட்டுகளில் 'பெருங்குடிப் பெருமக்கள்'[40], 'கணப்பெருமக்கள்'[40A], 'வாரியப் பெருமக்கள்'[41] என்று ஆளப்படுவதைக் காணலாம். அதைப்போன்றே இக்கல்வெட்டும் பங்குடையார் மக்கள் என்று குறிப்பதாகக் கொள்ளலாம்.

**வரிவசூல்**

இவர்கள் காலத்தில் வரிவசூல் எந்த அளவில் (ஆறில் ஒன்றாகவா அல்லது ஐந்தில் ஒன்றாகவா) வசூலித்தார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் நிலங்களைத் தரம் பிரித்து அதன் விளைவுக்கேற்ப வரிவசூல் செய்ததாகத் தெரிகிறது. ஒரு மா நிலத்துக்கு 1/4 காசு பணமும் 4 கலம் நெல்லும் வரியாக வசூலித்ததாக வீரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு மூலம் புலனாகிறது. மாறவர்மன் குலசேகரன் காலத்தில் நிலவிய வார முறையைத் தஞ்சைமாவட்டம் ஆலங்குடியிலிருந்த கல்வெட்டால் உணரலாம்.[41A] விளைந்த நெல்லில் வேலையாட்கள், காவற்காரர்களுக்கான கூலி நெல், கட்டு நெல் (வரி) முதலியவை முதலில் பொதுவில் கொடுத்துத் தீர்க்கப்படும். மீதி நெல்லில் கால்பாகம் நிலச் சொந்தக்காரர் வாரமாக எடுத்துக் கொள்ளலாம். வைக்கோலை ஆளுக்குப் பாதிபாதியாகப் பிரித்துக் கொள்ளலாம். மஞ்சள், ஆமணக்கு, பருத்தி, எள்ளு போன்ற புஞ்சைப் பயிருக்கு விதைப்புக்கு வேண்டிய செலவைக் கொடுத்து விளைச்சலில் பாதியை வாரமாக நிலச் சொந்தக்காரர் பெற்றுக்கொள்ளலாம். அணையைச் செப்பனிடுதல், குரம்பு (வயல் வரப்பு) கட்டுதல் போன்றவற்றை உழுபவன் செய்தல்வேண்டும். நிலக்கிழார் வீட்டில் மேல்வார நெல்லைக்கொண்டு சேர் கட்டித் தரவேண்டும் என்று எல்லாவற்றையும் தெள்ளத்தெளிவாக இயம்புகிறது. இவ்வாறு நிலக்கிழாரும் நிலம் பயிரிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவனும் ஒத்துக்கொண்டு ஒரு உறுதிப்பத்திரம் எழுதிக்கொள்வதைக் 'காணிபிடிபாடு'[42] என்று கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கோயில் நிலங்களைப் பொறுத்தமட்டில் எந்த வகையில் வாரம் தரப் பெற்றது என்பதைச் சில கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. சுந்தர பாண்டியனின் பதின்மூன்றாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டொன்று ஒரு மா தேவதான நிலத்துக்கு மூன்றுகலம் நெல்லோ அல்லது அன்று தேவ தான நிலங்கள் எவ்வளவு வழங்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதோ அதில் பாதியோ இருக்கவேண்டும் என்று கூறுகிறது.[43] மற்றொரு கல் வெட்டும் அதே அளவைத் தெரிவிக்கிறது.[44] ஒரு மாநிலத்துக்கு மூன்றுகலம் நெல் என்று வசூலிப்பதானால் ஒவ்வொரு மா நிலத்திலும் 40 கலம் நெல் விளைந்திருக்க வேண்டும் என்று அறுதியிடுகிறது. ஒரு மா நிலத்தில் 40 கலம் நெல் விளைந்திருந்தால்தான் அந்நிலம் 3 கலம் நெல்லை வரியாகத் தரவேண் டும். அவ்வாறு அல்லாமல் விளைவில் குறைந்திருந்தால் வரியும் குறைத்து வசூலிக்கப்பட்டிருக்கும் போன்று தெரிகிறது.

### வரிவசூலில் ஊழல்

நிலங்களின் தரம் பிரித்தும், விளைவுக்கேற்பவும் வரிவசூல் செய்த போதிலும் சில நேரங்களில் விவசாயிகள் வரிதர இயலாத நிலை ஏற் பட்டும் அந்த நெருக்கடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக வரிவசூல் செய்யும் அதிகாரிகளைச் சமாதானம் படுத்துவதற்காகச் சில பொருள்களைக் கையூட்டாக அளித்திருக்கக்கூடும் என்பது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251) கல்வெட்டொன்றால் புலனாகிறது.[45] அரசனது அதிகாரிகளைச் சென்று கண்டு சமாதானப் படுத்திவிட்டு வருவதற் காகத் தங்களுக்கு விதிக்கப்பெற்றிருந்த வாரப்பற்று கடமைப்பற்று நெல்லி லிருந்து சிறிது எடுத்து உபயோகப்படுத்தியதாக அக்கல்வெட்டுக் கூறுகிறது. இதுபோன்று சென்று அதிகாரிகளைக் கண்டதால் நன்மைகள் நேர்ந்திருக் கக் கூடும் போன்று மற்றொரு கல்வெட்டால் அறியமுடிகிறது. முன் விதிக்கப்பெற்றிருந்த அளவு வரி செலுத்த இயலாது துன்பப்பட்டபோது மன்னனின் புதிய ஆணையால் வரிவிதிப்பு அளவுமாற்றம் செய்யப்பட் டிருக்கிறது.[46]

### வரிகொடா இயக்கம்

சில நேரங்களில் எவ்வளவு தளர்த்தப்பட்டாலும் வரி செலுத்த இய லாத நிலையில் விவசாயிகள் இருந்திருக்கின்றார்கள். அவ்வாறான சமயங்களில் மக்கள் இங்கு வாழ்வதைவிடக் காடுகளில் வாழ்வது மகிழ்ச்சி தரக்கூடியது என்று மிகவும் மனம் வருந்தி எண்ணியிருக்கின்றார்கள்.[47] சில சமயங்களில் வரி செலுத்த இயலாத சூழ்நிலையில் பயிரிடாது ஊரைவிட்டே வெளியேறிப் போயிருக்கின்றார்கள் என்பதைத் திருச்சி மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ள மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டு உணர்த்துகிறது.[48] உறத்தூர்க் கூற் றத்தைச் சேர்ந்த மருதூர் என்ற ஊர் மன்னனின் ஆறாவது, ஏழாவது ஆண்டு களில் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தவில்லை. ஏன் செலுத்தவில்லை என்று விசாரிக்கையில் அவ்வூர் மக்கள் நிலங்களைப் பயிரிடாமல் வேறு ஊர்களுக்குச் சென்றுவிட்டதாக அறியப்படுகிறது. உடன் அவ்வரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறத்தூர் கூற்றத்தார் செலுத்தவேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. மற்ெறாரு கல்வெட்டு மேலும் ஒரு சுவையான செய்தியைத் தெரிவிக்கிறது. ஒரு விவசாயி தான் செலுத்தவேண்டிய வரியை மன்னனின் இருபத்திரண்டாம் ஆட்சி ஆண்டுவரை செலுத்தாமல் இருந்துவிட்டு ஊரைவிட்டே ஓடி விடுகிறான். அவனுக்குப் புணையாகக் கையெழுத்திட்டிருந்த மற்றொருவனை அவ்வரியைச் செலுத்த வற்புறுத்தப்படுகிறது. அவனும் ஊராரும் சேர்ந்து வரி செலுத்தாமல் ஓடிப்போனவனின் வீட்டையும் நிலத்தையும் ஒரு கோயிலுக்கு விற்று அதிலிருந்து கிடைத்த பணத்தை வரியாகச் செலுத்தினர் என்று ஜடாவர்மன் சுந்தரபாண்டியனைச் சார்ந்த அக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[49]

படை :

முதற்பிரிவைச் சார்ந்த பாண்டியர்கள் காலத்தில் உத்தரமந்திரியாக இருந்தவனே மஹா சாமந்தனாகவும் இருந்திருக்கிறான். இச்சாமந்தன் என்பவன் இக்காலப் படைத் தளபதி போன்றவன். இந்தப் பதவி ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கே தரப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் நிகழும் இராணுவப் புரட்சி போன்று ஏதும் செய்யாது அரசனிடத்தில் மிகவும் நன்றியுணர்வோடு மஹா சாமந்தர்கள் இருந்த காரணத்தால் தலைமுறை தலைமுறையாக அவன் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கே தரப்பட்டது போன்று தெரிகிறது.

சடையவர்மன் நெடுஞ்சடையன் காலத்தில் சாத்தன் கணபதி, அவனது தம்பி எட்டிசாத்தன் போன்றோரும் இரண்டாம் வரகுணவர்மன் காலத்தில் நக்கன் புள்ளனும் அவனது மகன் புள்ளன் நக்கனும் படைத் தளபதிகளாக விளங்கியிருக்கிறார்கள்.

பாண்டியர் காலத்தில் நால்வகைப் படை இருந்ததாகத் தெரிகிறது. இதனை வடமொழியில் "இரத கரி துரக பதாதி" என்று கூறுவர். அதாவது தேர், யானை, குதிரை, காலாள் படை என்பதாகும். சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில் இராஜசிம்மன் 'சென்றஞ்சை காவலனது கரி துரக பதாதிகளைச் [50] செங்களத்தில் மடிவித்தான்' என்று கூறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் தஞ்சை மன்னனின் படை கூறப்பட்டாலும் அதைப்போன்றே பாண்டிய மன்னனிடத்தும் இருந்திருக்கும் என ஊகிக்கலாம். மேற்கூறப்பெற்றிருப்பதில் இரதம் கூறப்பெறவில்லை. ஆனால் வேள்விக்குடிச் செப்பேட்டில் 'நாற்பெரும் படையும் பாற்படற் பரப்பி'[51] என்ற தொடர் வருவதால் பாண்டியர்கள் நான்கு பெரும் படையும் பெற்றிருந்தார்கள் என்று துணியலாம். சீவரமங்கலச் செப்பேடு பராந்தக நெடுஞ்சடையன் ஆய்மன்னனை வென்றதைக் குறிப்பிடுகையில் 'மாயிரும் பெரும்புனற் காவிரி வடகரை ஆயிர வேலி அயிரூர் தன்னிலும் புகழி யூரிலுந் திகழ்வே லதியனை ஒருபுறங் கண்டவ னொலியுடை மணித்தேர் ஆடல் வெம்மா வவையுடன் கவர்ந்தும்" என்று அதியனின் மணித்தேர், குதிரைப்படை ஆகியவைகளைத் தெரிவிக்கிறது.[52] தளவாய்புரச் செப்பேடு பராந்தக வீரநாராயணனைக் குறிப்பிடுகையில் 'விரைபரித்தேர் வீரநாராயணன்'[53], 'தேர்மிகு மா கடற்றானை தென்னவர் கோன்' என்று குறிப்பிடுவதும் ஈண்டு நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் வேல், வாள், வில், அம்பு போன்றவை பயன்படுத்தப்பட்டன. சீவரமங்கலச் செப்பேடு 'கொற்றவேலை உறை நீக்கி, வெற்றத்தானை வேண் மன்னனை வென்றழித்து' என்று குறிப்பிடுவதால் வேல் போரினில் பயன்படுத்தப்பட்டதென்பதும் பயன்படுத்தாத காலங்களில் உறையினில் இட்டு வைக்கப்பெற்றிருந்ததும் புலனாகிறது. 'சிலைத் தடக்கை கொலைக் களிற்றுச் செழியன்' என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுவதாலும், 'தலையாலங்கானத்திற்றன்னொக்கு மிருவேந்தரைக் கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின் கூத்தொழித்தும்' என்று சின்னமனூர்ப் பெரிய செப்பேடு கூறுவதாலும் வில் அம்பும் வாளும் போரில் பயன்படுத்தப்பட்டன என்பது அறியற்பாலதாம்.

வெற்றி பெற்ற களிப்பால் போர்வீரர்கள் 'கவந்தத் திரடாலுங்க கூகையின் பாடலுங் கண்டுங்க கேட்டும்' மகிழ்ந்தார்கள் என்பதும், 'கருங்கூந்தல் வெள்ளெயிற்றுச் செவ்வாய்ப் பொற் சூலக்கைவல்லி' யான கொற்றவைக்குப் போர்க்களத்தில் பலி இட்டனர் என்பதும் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் மெய்க்கீர்த்தியால் அறியமுடிகிறது. மன்னனின் வெற்றியைப் புலவர்கள் பரணி பாடினர் என்பதை 'வீரமுழுதெடுத்துப் பாடும் பரணி தன் பார்வேந்தர் கேட்பிக்க' என்று அம்மெய்க்கீர்த்தியில் வரும் தொடரால் அறியலாம்.

**நடுகல்**

முதற்பிரிவைச் சார்ந்த பாண்டியர்களின் சமகாலத்தவரான பல்லவர்கள் காலத்திய நடுகற்கள் நிரம்பக் கிடைத்துள்ளன. ஆனால் பாண்டிய மன்னர்கள் காலத்தியது மிகக் குறைவாகவே விரல்விட்டு எண்ணக்கூடிய விதத்திலேயே கிடைத்திருக்கின்றன. பல்லவர் காலத்தில் பெரும்பாலும் அவர்களின் கீழ் ஆண்ட சிற்றரசர்களுக்குள் ஏற்பட்ட போரில் வீழ்ந்துபட்ட வீரமறவருக்கு எடுக்கப்பட்ட கற்கள்தான் உள்ளன. அதைக் கொண்டு பார்ப்போமென்றால் பாண்டியர் காலத்தில் ஆய் மன்னர்களைத் தவிர வேறுயாரும் பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்ததாகத் தெரியவில்லை. சிலசமயம் முத்தரையர்களும், பொடும்பாணூர் வேளிர்களும் இருந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் நிலையாக அவர்களிடத்தில் சிற்றரசர்களாக இருக்கவில்லை. பாண்டியர்களிடம் சில சமயமும், பல்லவர்களிடம் சில சமயமும் சிற்றரசர்களாக இருந்திருக்கின்றனர். எனவே பாண்டியர் காலத்தில் அவர்களின் சிற்றரசர்களுக்குள் போர் மூள வழியில்லாமற் போய்விட்டது. அதன் காரணமாக நடுகற்கள் எழுப்ப அவசியமில்லாமல் இருந்திருக்கலாம்.

பாண்டியர் காலத்திய நடுகற்கள் இதுவரையில் நான்கு கிடைத்துள்ளன. இரண்டு கேரளத்தைச் சேர்ந்த விழிஞத்திலிருந்தும்[54] (இப்பொழுது பத்மநாபபுரத்திலுள்ள அரண்மனையில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது) மற்றொன்று திருநெல்வேலி மாவட்டத்தில் கழுகுமலையிலிருந்து[55] நான்காவது வடார்க்காடு மாவட்டம் காந்தப்பாளையத்திலிருந்தும்[56] கிடைத்துள்ளன.

விழிஞத்திலிருந்து கிடைத்திருக்கும் இரண்டு நடுகற்களில் முதலாவது, கரைக்கோட்டை என்ற இடத்தைச் சேரரது படை தாக்கியபோது கொழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லூர்க் கூற்றத்தைச் சேர்ந்த பெருமூர் என்ற ஊரை ஆளும் இரணகீர்த்தி என்பானின் உள்வீட்டுச் சேவகனை தாதம்பெருந்தினை என்பான் வீரமரணம் எய்தியதைத் தெரிவிக்கிறது.

இரண்டாம் நடுகல் தமிழில் பாவடிவில் எழுதப்பட்டுள்ளது. விழிஞத்தைக் கைப்பற்றியபோது, தனது செஞ்சோற்றுப் பெருங்கடனைத் தீர்ப்பதற்காக ஒரு போர்வீரன் இறுதிவரை போராடி உயிர் நீத்தான் என்பதைக் காட்டுகிறது. போர்வீரர்கள் அனைவரும் தங்கள் மன்னன்பால் எவ்வளவு அன்பு வைத்திருந்தார்கள் என்பதும், அவர்கள் எந்த அளவுக்கு நன்றி உணர்வோடு விளங்கினார்கள் என்பதும் ஈண்டு பெரிதும் உணரற்பாலது.

கழுகுமலை நடுகல் மாறஞ்சடையன் காலத்தியது. பாண்டியரது படை மலைநாட்டை ஆட்சி செய்த கருநந்தனுரைத் தாக்கி அவரின் அருவியூர்க் கோட்டையை அழித்தபோது பெருநெச்சுரத்தைச் சேர்ந்த எட்டி மன்னனுயில மங்கலஏனாதியின் உள்வீட்டுச் சேவகர் இருவர் உயிர் துறந்ததைக் குறிக்கிறது. இறந்த வீரர் இருவரில் ஒருவன் தொண்டை நாட்டைச் சேர்ந்த பூந்தண்மலியைத் தனது ஊராகக் கொண்டவன். அவனது பெயர் வினையந்தொழுசூரன். மற்றவன் பேரெயிற்குடியைச் சேர்ந்த சாத்தன் நக்கன்.

காந்தப் பாளையத்திலிருந்து கிடைத்துள்ள நடுகல் செவ்வனத்தான் மாலை உடையான் அண்ணுண்டை ஆன வன்னிய நாடாழ்வான் மகள் திருமலை அழகியார் என்பவர் சமுத்திரம் போன்ற சேனையைத் தாக்கி அவர்களிடமிருந்து ஆநிரைகளைக் கவர்ந்து வருகையில் இறந்துவிட்டபொழுது அவருக்காக எடுக்கப்பட்டதாகும். இது விக்கிரம பாண்டியனின் நான்காம் ஆட்சி ஆண்டில் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த விக்கிரம பாண்டியன் எந்த நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவன் என்பது புரியவில்லை. எழுத்தமைதியைக் கொண்டு பெரும்பாலும் கி. பி. 14–15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம்.

**பட்டான்பற்றிய பாறைக் கல்வெட்டு**

திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திர வட்டம் சிங்கப்பட்டி என்ற ஊரின் வயல் நடுவில் உள்ள ஒரு பாறையில் வட்டெழுத்தில் ஒரு கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு கி. பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம். ஐய்யாரன் என்பவன் சாத்தன் என்பானேடு பொருது இறந்ததைத் தெரியப்படுத்துகிறது.[57]

**பிற்காலப் பாண்டியர் காலத்து நடுகற்கள்**

பிற்காலப் பாண்டியர் காலத்தில் நடுகற்கள் சில திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் இலவேவங்கல் என்னும் ஊரிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை திருநெல்வேலிப் பெருமாளுக்காகக் குந்தையன் கோட்டையைச் சேர்ந்த வீரமறவர்கள் சிலர் எதிரிகளின் குதிரைகளைக் குத்தி வீரமரணம் எய்தியதைத் தெரிவிக்கின்றன.[57A]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படைத்தலைவன்**

கி. பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததும் அதற்குப் பிற்காலத்ததும் ஆன கல்வெட்டுகளில் படைத்தலைவன் என்ற அடைமொழியோடு சிலர் குறிக்கப்படுகின்றனர். உதாரணமாக படைத்தலைவன் காடம்பட்டன், படைத்தலைவன் தனியன்முண்டன், படைத்தலைவன் சாத்தன் தேவன் போன்று பலர் குறிக்கப்பட்டுள்ளனர். படைத்தலைவன் என்றால் சேனைத் தலைவர் (Chief of an army) என்று கொள்ளலாம். படைத்தலைவர்களாகக் குறிக்கப்பட்டிருப்பவர்கள், பெரும்பாலும் பிறர் தந்த ஆடுகளைப் பெற்றுக் கொண்டு அவைகளின்மூலம் கிடைக்கும் நெய்யை ஒரு குறிப்பிட்ட அளவில் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குத் திருநந்தாவிளக்குக்கு அளிப்பதற்கு ஒத்துக்கொண்டு அவ்வாறே செய்து வந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் போர் அல்லாத அமைதியான காலங்களில் கோயில்களில் நெய் அட்டும் பணியை மேற்கொண்டார்கள் என்று கருதலாம்.

பெரும்பாலான கல்வெட்டுகளிலிருந்து பார்க்கையில் நெய் அட்டுவதற்கு ஆடுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் இடையர்களாகத்தான் காணப்படுகிறது. இதற்குச் சிறந்த உதாரணம் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காணப்பெறும் இராஜராஜன் காலத்தியக் கல்வெட்டுகளாகும்.[58] ஒருசில கல்வெட்டுகள் இவர்கள் 'வெட்டிகுடி' யைச் சார்ந்தவர்கள் என்று கூறுகின்றன.[59] வெட்டிகுடி என்பது வேட்டுவகுடியைக் குறிப்பதாகக் கொள்ளலாம். முல்லை நிலப்பகுதியில் மாடு, ஆடுகளை வளர்த்து வந்த ஒரு இனத்துக்கு வேட்டுவஇனம் என்று வழங்கிவந்திருக்கிறது. அதே இனம் பிற்காலத்தில் இடையர் என்றும், கோனார் என்றும் மாறி வழங்கியிருக்கிறது. இந்த வேடுவர்கள் தங்கள் ஆநிரையை மற்றவர்கள் கவர்ந்து செல்லும்போது போரிட்டு மீட்கையில் வீரமரணம் எய்தியிருக்கின்றனர் என்பதைக் கல்வெட்டுகளால் அறிந்துகொள்ள முடிகிறது.[60] எனவே வெட்டிகுடியைச் சார்ந்தவர்கள் இடையர்கள்தாம் என்பதும் அவர்கள் போர்வீரர்களாகவும் தலைவர்களாகவும் விளங்கியிருந்தனர் என்பதுவும் போரில்லாத அமைதிக் காலங்களில் கோயில்களில் நந்தாவிளக்கு எரிவிக்க நெய் அட்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் போதரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாவியவை


1. பாண்டியர் செப்பேடுகள் பத்து. பக்கம் 1-48; Epigraphia Indica Vol. XVII, pp. 291-309.

2. Ibid, pp. 49-70; The Indian Antiquary Vol. No. XXIII, 1893.

3. Ibid, pp. 71-82; South Indian Inscriptions, Vol. III, part iv, No. 205.

4. Ibid, pp. 83-140.

5. Ibid, pp. 141-176; S. I. I. Vol. III, part iv, No. 206.

6. Ibid, pp. 177-206.

7. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக்கம் 185.

8. Epigraphia Indica Vol. VIII, p. 317ff, No. 1; S. I. I. Vol. XIV, No. 1.

9. S. I. I. Vol. XIV, No. 22.

10. Epi. Indica Vol. XXXVIII, pp. 27-32.

11. பாண்டியர் செப்பேடுகள் பத்து; கருநந்தடக்கனின் பார்த்திவசேகர புரச் சாசனம் பக்கம் அ- 1- அ-18; திருப்பறப்புச் சாசனம், பக்கம் அ-19-அ-23; பாலியத்துச் சாசனம், அ-24-அ-34, விக்கிரமாதித்திய வரகுணவர்மனின் திருநந்திக்கரைச் சாசனம், பக்கம் அ-35-அ-39.

12. பா. செ. ப. வேள்விக்குடிச் சாசனம், பக்கம் 23, வரிகள் 46, 51.

13. மாறவர்மன் அரிகேசரி, 'அரிகேசரி, அஸமஸமன், ஸ்ரீதாரம்மன், போன்ற பட்டங்களைப் பெற்றிருந்தான், வேள்விக்குடிச் செப்பேடு, வரி 62.

14. பாண்டியர் வரலாறு, சதாசிவ பண்டாரத்தார், 1969, பக்கம் 110; A. R. E. 55 of 1916, 540 of 1916.

15. S. I. I. Vol. V, No. 446, 421.

16. பா. செ. ப. சின்னமனூர் (பெரிய) சாசனம், பக்கம் 157, வரி 146-147.

17. S. I. I. Vol. XIV, No. 12, 12-A, 12-B, 13.

18. Ep. Indica Vol. XXVIII, pp. 85ff, A. R. Ep., 1946-47, App. B. Nos. 35a.

19. A. R. E. 32/1937-38; 33/1937-38, see **சோழர் காலக் கல்வெட்டுகளில் யாண்டு இதனெதிராமாண்டு** ஆராய்ச்சி 17.

20. பா. செ. பத்து, சிவகாசிச் சாசனம், பக்கம் 191, வரிகள் 54-55.

21. பாண்டியர் வரலாறு, டி. வி. சதாசிவபண்டாரத்தார், பக்கம் 213.

22. இரா. நாகசாமி, எம். ஏ., யாவரும் கேளிர், பக்கம் 99-100.

23. பல்லவர் செப்பேடுகள் முப்பது, தமிழ் வரலாற்றுக் கழக வெளியீடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பா. செ. ப. வேள்விக்குடிச் சாசனம், பக்கம் 31, வரிகள் 132–134.
25. பா. செ. ப. ஸ்ரீவரமங்கலச் சாசனம், பக்கம் 61, வரிகள் 75–81.
26. பா. செ. ப. ஸ்ரீவரமங்கலச் சாசனம், பக்கம் 60, வரிகள் 72–75.
27. பா. செ. ப. சின்னமனூர்ச் (சிறிய சாசனம்), பக்கம் 77, வரிகள் 31–33.
28. S. I. I. Vol. XIV, 51, foot note 2A.
29. பா. செ. ப. தளவாய்புரச் செப்பேடு, பக்கம் 109, வரிகள் 158–161.
30. Ibid, p. 110, வரி 166.
31. Ibid, p. 158, 159, வரி 163–167.
32. "Evidently, the office of the ministership under Pandya rulers was a hereditary one" H. Sarkar, the battle of Vaikai- A Re-assessment; in The Journal of Indian History Volume LI, part I, April, 1973.
33. பா. செ. ப. தளவாய்புரச் சாசனம், பக்கம் 115, வரிகள் 228–238.
34. I. P. S. No. 484.
35. S. I. I. Vol. XIV, No. 87.
36. See the article 'Some Reflections on Pandi Mandalam C 700–1300' by Y. Subbarayalu in Damilica Vol. II, part 3, p. 27.
37. Epigraphia Indica Vol. XXII, pp. 9–11.
38. K. V. Raman, Some aspects of Pandyan History in the light of recent discoveries, p. 42.
39. Ep. Ind. Vol. XXII, p. II.
40. No. 231 of S. I. I. Vol. XIX; No. 2 of S. I. I. XIX.
40A. S. I. I. Vol. XIX, No. 22, 127.
41. உத்தரமேரூர்க் கல்வெட்டு, Epi. Ind. Vol. XXII, No. 24.
41A. A. R. E. 1936-37, 41B. A. R. E. 509 of 1920.
42. A. R. E., 1921, part II, para 28.
43. Ibid, 409 of 1914.
44. Ibid, 1924, part II, para 38.
45. Ibid, 8/1913.
46. Ibid, 1924, part II, para 31.
47. K. A. Nilakanta Sastri, Pandyan Kingdom, page 194.
48. A. R. E. 357 of 1922.
49. Ibid, 93 of 1911.
50. பா. செ. பத்து, சின்னமனூர்ப் பெரிய சாசனம், பக்கம் 157, வரி 136.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. Ibid, வேள்விக்குடிச் சாசனம், பக்கம் 27, வரிகள் 91–92.

52. Ibid, ஸ்ரீவரமங்கலச் சாசனம், பக்கம் 57, வரிகள் 24–27.

53. Ibid, தளவாய்புரச் சாசனம், பக்கம் 105, வரிகள் 115–116.

54. Indian Archaeology, 1958–59, p. 471, T. A. S. Vol. I, p. 153ff.

55. S. I. I. Vol. XIV, No. 31.

56. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தருமபுரி மாவட்டத்தில் கல்வெட்டு ஆய்வு செய்தபோது கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு இன்னும் பதிப்பிக்கப்படவில்லை.

57. S. I. I. Vol. XIV, No. 97.

57A. A. R. E. 1939–40, p. 253.

58. S. I. I. Vol. II, No. 63, 94.

59. Ibid, Vol. XIV, No. 84.

60. Cengam hero - stones, Edited by R. Nagasamy, inscription No. 1971/39.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் ஆக்கப் பெயர்கள்

சு. சுசீந்திரராசா

## 1

*1. 0* மொழியில் ஓர் எளிமையான அடிச்சொல் அல்லது ஆக்கம் பெற்ற அடிச்சொல் மேலும் ஆக்க ஒட்டு (derivational affix)[1] ஏற்பதன்மூலமோ சொல்லில் உள்ள உயிர் அல்லது மெய்யொலியில் மாற்றம் பெறுவதன் மூலமோ சொற்பெருக்கத்திற்கு இடமளிக்கிறது. எடுத்துக்காட்டாகத் தமிழில் கல் என்னும் வினையடி – வி என்னும் ஆக்க ஒட்டு (விகுதி) பெற்று கல்வி என அமைகிறது. கெடு என்னும் வினையடியில் உள்ள முதற்குறில் நெடிலாக மாறுவதால் கேடு என்னும் சொல்லைப் பெறுகின்றோம். இவ்வாறு மொழியில் அடிச்சொற்கள் ஆக்கம் பெற்றுப் பெருகும் முறை ஒரு நியதிக்குட்பட்டதாகவே உள்ளது. ஒருசொல் மொழியில் உள்ள எந்த ஒரு ஒட்டையும் ஏற்கும் என்றோ அல்லது எந்த ஒலி மாற்றத்தையும் அடையும் என்றோ கூறிவிட முடியாது.

அடிச்சொல்லும் ஆக்கச்சொல்லும் ஒரே இலக்கண வகையைச் சேர்ந்தனவாகவோ வெவ்வேறு வகையைச் சேர்ந்தனவாகவோ இருக்கக்கூடும். சில ஆக்க ஒட்டுக்கள் அடிச்சொல்லின் இலக்கண வகையை மாற்றிவிடும்; சில மாற்றுவதில்லை. மேலே காட்டிய வினையடிகள் முறையே ஆக்க ஒட்டு ஏற்று, ஒலி மாற்றம் பெற்றுப் பெயர்ச் சொற்கள் ஆக அமைந்துள்ளன. ஆங்கிலத்தில் ஆக்க ஒட்டுகள்மூலம் பெயரில் இருந்து பெயரடை அமைகிறது; வினையில் இருந்து பெயர் அமைகிறது; பெயரில் இருந்து வினை அமைகிறது; வினையில் இருந்து பெயரடை அமைகிறது. எடுத்துக்காட்டுகள் முறையே season–seasonal, sing–singer, prison–imprison, accept–acceptable. இவை அனைத்தும் வகை மாறும் ஆக்கங்கள். ஆயின் ஆங்கிலத்தில் hood என்னும் ஒட்டு அடிச்சொல்லின் இலக்கண வகையை மாற்றுவதில்லை. man, manhood ஆகிய இரண்டும் பெயரே. ஆக்க ஒட்டுகள்மூலம் மேலும் மேலும் வகை மாறும் ஆக்கங்களும் உண்டு. manliness, modernisation ஆகிய சொற்களைப் பிரித்துக் காண்க. முறையே man பெயர்; manly பெயரடை; manliness பெயர் எனவும் modern பெயரடை; modernise வினை; modernisation பெயர் எனவும் காணலாம். குறித்த ஓர் ஒட்டைச் சில சொற்கள்மட்டும் ஏற்பதுண்டு. மற்றும் ஓர் ஒட்டைப் பல சொற்கள் ஏற்பதும் உண்டு. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் – hood என்னும் ஒட்டு manhood, nationhood, christhood எனச் சில சொற்களோடுமட்டுமே வரக் காண்கிறோம். தமிழில் – த்தை என்னும் ஒட்டு நட போன்ற ஒரு சில சொற்களோடுமட்டும் வருகிறது. ஆயின் தமிழில் - இ என்னும் விகுதி செயல் முதல் பொருளில் மிகப் பல சொற்களோடு வரக் காண்கிறோம். எடுத்துக்காட்டுகளை கீழே (2. 3) காண்க. குறித்த ஆக்க ஒட்டு ஒன்றினை ஏற்று அமையும் நூற்றுக்கணக்கான புதிய சொற்கள் நீண்டகாலம் வாழாமல் வழக்கிறந்துபோவதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவில் சில ஆண்டுகட்கு முன் cafeteria என்னும் சொல்லமைப்பை ஒட்டி (–teria என்னும் ஒட்டுப் பெறுவதன்மூலம்) groceteria, booteteria, booketeria போன்ற நூற்றுக்கு மேற்பட்ட சொற்கள் தோன்றினவாம். இன்று அவற்றுள் பெரும்பாலானவை மறக்கப்பட்ட நிலையிலும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் உளவாம்.[2]

1. 1 இங்கு யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் வழங்கும் ஆக்க ஒட்டுகளையும் அவை சேர்வதன்மூலம் தோன்றும் ஆக்கச் சொற்களையும் ஒலி மாற்றம்மூலம் அமையும் ஆக்கச் சொற்களையும் இயன்றவரை விரிவாகக் காண்போம். இவற்றை ஆய்வுப் பயன் கருதித் தேவைக்கேற்ப இலக்கிய வழக்கு, இந்தியப் பேச்சுவழக்கு ஆகியவற்றோடு ஆங்காங்கு ஒப்பு நோக்கி விவரண அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் காண்போம். இவ்வாறு ஆக்க வடிவங்களின் அமைப்பு, வரலாறு, வழக்குப் போன்றவற்றை ஆராய்வதன்மூலம் தமிழ்மொழியின் தொழிற்பாடுபற்றிய அறிவு தெளிவடையும். சமுதாயத்தில் தோன்றும் புதிய கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்ற புதிய சொற்களை முறைப்படி உருவாக்கிக் கொள்ளவும் முடியும்.

யாழ்ப்பாணத்துத் தமிழில் ஆக்கப் பெயர்கள் பெயர், வினை, பெயரடை போன்றவற்றை அடியாகக் கொண்டு பிறக்கின்றன. அடியாக நிற்பன ஏற்கும் விகுதிகளும் (ஒட்டுகள்) பலவகை. முதற்கண் அடிகளை பெயரடி, வினையடி, பெயரடை அடி என வகை செய்து பின் ஒவ்வொரு வகையிலும் விகுதிகளைக் கருத்திற்கொண்டு மேலும் வகைப்படுத்துவோம். சில விகுதிகள் ஆக்கத்தில் பெருவழக்கை ஏற்படுத்துகின்றன; பல விகுதிகள் இவ்வாறு பெருவழக்கை ஏற்படுத்துவதில்லை.

1. 2 வகைப்படுத்தும்போது சிக்கல்கள் எழுவது உண்டு. எடுத்துக்காட்டாக குளிர்ச்சி என்னும் ஆக்கப் பெயரின் அடி பெயரா? வினையா? இங்கு காரணங் காட்டாது வினையென்றே கொள்கிறோம். இத்தகைய சிக்கல் ஒருபுறமிருக்க ஆக்கப் பெயர்களை விளக்கும்போது சந்தி (புணர்ச்சி) அடிப்படையிலே தோன்றும் சிக்கல்களும் உண்டு. இவற்றைத் தனியே ஆராய்தல் வேண்டற்பாலது எனக் கொண்டு ஈண்டு கருத்திற் கொள்ளவில்லை.

## 2

2. 0 பெயரடி

2. 1 பால் காட்டும் விகுதி பெற்று அமைவன.[3]

அஃறிணைப் பெயரடிகளுள் சில பால் காட்டும் விகுதி ஏற்றுப் பொருள் மாற்றத்துடன் உயர்திணைப் பெயராக அமைகின்றன.

சில பெயரடிகள் ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டன் விகுதியையும் பெறுவன. பால் காட்டும் விகுதி சிறப்பாகப் பெண்பால் விகுதி பெயரடியைப் பொறுத்து வேறுபடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. கா.

| | | |
|---|---|---|
| (அ) | கட்டை | கட்டையன் |
| | | கட்டைச்சி |
| (ஆ) | கரை | கரையான் |
| | | கரையாடிச்சி |
| (இ) | கீரிமலை | கீரிமலையான் |
| | | கீரிமலையாள் |
| (ஈ) | சீம்– | சீமான் |
| | | சீமாட்டி |
| (உ) | செகிடு | செகிடன் |
| | | செகிடி |

மேலே காட்டிய வகைகள் ஒவ்வொன்றிலும் அடங்கக்கூடிய பெயரடிகள் பல உண்டு. அவற்றுட் சிலவற்றைமட்டும் இங்கு காட்டுகிறோம்·

(அ) இடை, தொக்கை, பறை, பெடி, பேய். (ஆ) வெள் – (பெண்பால்). (இ) ஊர், தீவு. (உ) குறுடு, தோழ், விசர்.

சீம் – என்பது கட்டுண்ட (bound) பெயரடியாகும். இது ஏனையவை போன்று தனிவடிவமாக (free form) வழங்குவதில்லை. பாட்டன், பாட்டி, மச்சான், மச்சாள் போன்றவற்றிலும் பெயரடி கட்டுண்ட வடிவமாகவே உள்ளது.

ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டின் விகுதியையும் ஏற்கும் பெயரடிகளுள் பல மரியாதை இன்மைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் பன்மை, மரியாதை இன்மைப் பொருள் தொனிக்கும் பெண்பால் பன்மை, மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் – பெண்பால் பொதுப்பன்மை ஆகிய விகுதிகளைப் பெறுவன.

எ. கா.

| | |
|---|---|
| செகிடு | செகிடங்கள் |
| | செகிடியள் |
| | செகிடர் |
| | செகிடரவை |

மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமை விகுதி சந்தர்ப்பத்தைப் பொறுத்து ஆண்பால் – பெண்பால் பொதுப்பன்மைப் பொருளையும் தரவல்லது. இவ்வேறுபாட்டை அது ஏற்கும் வினைமுற்றுக் காட்டும். எ. கா. செகிடர் வாரூர், செகிடர் வரீனம். சில பெயரடிகள் பொதுவாக மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமை விகுதி ஏற்று அப் பொருளில் வழங்குவதில்லை. அவை அவ்விகுதியை ஏற்கும்போது ஆண்பால் – பெண்பால் பொதுப்பன்மைப் பொருளையே தருகின்றன.

எ. கா.

| | |
|---|---|
| பறை | பறையர் |
| பேய் | பேயர் |

பால்காட்டும் விகுதியைப் பெறுவனவற்றுள் சில பெண்பால் விகுதியை மட்டும் ஏற்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. கா.

| | |
|---|---|
| கிழங்கு | கிழங்கன் |
| | கிழங்கங்கள் |
| | கிழங்கர் |
| | கிழங்கரவை |

காடை, கிறுக்கு, குரங்கு, சாக்கு, பல்லு, பனி, புளி, மாடு, மொறடு, மோடு, வயிறு, விழல் என்பன காட்டிய வகையில் அடங்கும்.

அஃறிணைப் பெயரடிகள் – காற் (-கார்) என்னும் ஒட்டைப் பெற்றுப் பின் பால் விகுதி ஏற்று – காறன், – காறி போன்று முடிவதும் உண்டு.

எ. கா.

| | |
|---|---|
| கடை | கடைக்காறன் |
| | கடைக்காறி |
| வேலை | வேலைக்காறன் |
| | வேலைக்காறி |

தமிழில் காணப்படும் –காற் என்பது வடமொழி வடிவம் ஒன்றின் திரிபாகும். வடமொழியில் கும்பகார என வருவதை நினைவிற் கொள்க. – காறன், – காறி ஆகிய விகுதிகள் ஏனைய விகுதிகளைக் காட்டிலும் சொல்லாக்க ஆற்றல் உடையன. எனவே இவை மிகப் பல சொற்களோடு வருகின்றன. – காரன், – காரி என்பன இலக்கிய வழக்குடையன. ரகரம் சில இடத்துப் பேச்சில் றகரமாக ஒலிக்கப்படுகிறது. – காரன், – காரி பெற்று அமைந்த பெயர்களை இரண்டாவது பாண்டியப் பேரரசு காலத் தமிழ்ச் சாசனங்களில் காண்கின்றோம். எ. கா. வேட்டைக்காரர், நிவந்தக்காரர்.

2. 2 பெயரடிகள் – ஆன் விகுதியை ஏற்கின்றன. இவ்விகுதி பெயரடிக்கு உரிமைப் பொருளைத் தருகிறது. இவ்விகுதியை ஏற்று அமைவன மிகப் பல. இங்கு சில எடுத்துக் காட்டுக்களைமட்டும் தருகிறோம்.

எ. கா.

| | |
|---|---|
| அது | அதான் |
| இது | இதான் |
| கிழக்கு | கிழக்கான் |
| தெற்கு | தெற்கான் |
| மேல் | மேலான் |
| வீடு | வீட்டான் |

2. 3 தன்மை குறிக்கும் –த்தனம் என்னும் விகுதியை 44 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

| | |
|---|---|
| ஊதாரி | ஊதாரித்தனம் |

காடை, காவாலி, கிறுக்கு, குப்பை, குரங்கு, குழந்தைப்பிள்ளை, குறும்பு, கோமாளி, கோழை, சண்டி, சிறுபிள்ளை, சேட்டை, சோம்பேறி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டாமுட்டி, நாட்டாண்மை, புத்திசாலி, பேடி, பேய், போக்கிலி, போலி, பொறுக்கி, முட்டாள், மொக்கு, வம்பு, விசர், விடுகாலி, விளையாட்டு, வெருளி, வேசை என்பனவும் அசடு, அற்பம், கசவாரம், கஞ்சம், கஞ்சல், கள்ளம், குள்ளம், குறுடு, பகடு, பட்டிக்காடு, பிடிவாதம், மிருகம், முறடு, மோடு என்பனவும் இவ்வகையில் அமைவன.

2. 4 செயல் முதற்பொருளைக் குறிக்கும் – இ விகுதியை 9 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

உபகாரம்		உபகாரி

சந்தர்ப்பவாதம், ஞானம், தியாகம், தீவிரவாதம், பயங்கரவாதம், பாவம், பிரிவினைவாதம், லோபம்.

- அம் விகுதி பெற்றுத் தமிழில் அமைந்த சொற்கள் – இ விகுதி பெற்றன. இவற்றுள் சில அண்மைக் காலத்தில் பேச்சுவழக்கிற்கு வந்தவை.

2. 5 ஆளி என்னும் விகுதியை 22 பெயரடிகள் ஏற்கின்றன. இவ் விகுதி 'ஆட்சி', 'உடைமை' என்னும் பொருளைத் தருகிறது.

எ. கா.

உழைப்பு		உழைப்பாளி

உறவு, கடன், காவல், குற்றம், கூட்டு, கொடை, சுற்றம், செலவு, தொழில், நோய், பகை, பங்கு, படிப்பு, படைப்பு, பாத்திரம், பேச்சு, பொறுப்பு, போர், முதல், வழக்கு, விருந்து என்பன இவ்வகையில் அடங்கும்.

2. 6 தன்மை குறிக்கும் – மை விகுதியை 2 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

ஆண்		ஆண்மை

பெண்.

2. 7 – வாசி என்னும் விகுதியை 5 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அரை		அரைவாசி

அரைக்கால், கால், முக்கால், விலை என்பனவும் இவ்விகுதியை ஏற்கின்றன. இவ்விகுதி பெரும்பாலும் பின்னத்துடன் வருகிறது. சுகவாசி, முகவாசி என்ற சொற்களும் வழக்கில் உண்டு. ஆயின் இவ்விரு சொற்களிலும் வரும் – வாசி வேறு பொருளைத் தருகிறதா எனச் சிந்தித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 8 உடைமைப் பொருள் தரும் – சாலி என்னும் விகுதியை 11 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அதிட்டம் அதிட்டசாலி

அனுபவம், குணம், தந்திரம், திறமை, தைரியம், பலம், பாக்கியம், புத்தி, பொறுமை, மூளை என்பன இவ்வாறு அமைவன.

2. 9 – மான் என்னும் விகுதியை 5 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

கல்வி கல்விமான்

சாதி, நீதி, பக்தி, புத்தி என்பன இவ்வகையில் அடங்கும்.

2. 10 – வான் என்னும் விகுதியை 4 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

சத்தியம் சத்தியவான்

பாக்கியம், புண்ணியம், யோக்கியம் என்பன இவ்வகையில் அடங்கும்.

2. 11 – கரம் என்னும் விகுதியை 6 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

உணர்ச்சி உணர்ச்சிகரம்

சந்தோஷம், துக்கம், பயம், மகிழ்ச்சி, வெற்றி என்பன இவ்வகையின.

2. 12 – மாரி என்னும் விகுதியை 4 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

ஆண் ஆண்மாரி

சோறு, பெண், வயிறு என்பன இவ்வகையில் அடங்கும். சோறு, வயிறு என்பன முறையே சோத்துமாரி, வயித்துமாரி என அமையும்.

2. 13 – வந்தர் என்னும் விகுதி ஒரேஒரு பெயரடியுடன்மட்டும் வருகிறது.

எ. கா.

செல்வம் செல்வந்தர்

## 3

3. 0 வினையடி

3. 1 பெயரடிகள்போல வினையடிகளும் பால் காட்டும் விகுதி பெறுகின்றன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. கா.

| | |
|---|---|
| தட்டு | தட்டான் |
| | தட்டாத்தி |
| கொல்(லு) | கொல்லன் |
| | கொல்லங்கள் |
| | கொல்லச்சி |
| | கொல்லச்சியள் |
| | { கொல்லர் |
| | { கொல்லரவை |
| கொதி | கொதியன் |
| | கொதியங்கள் |
| | கொதியர் |
| | கொதியரவை |

இங்கும் பால் விகுதி வினையடியைப் பொறுத்து வேறுபடுகிறது. சில வினையடிகள் பால் காட்டும் விகுதிகளுள் சிலவற்றை ஏற்பதில்லை. எடுத்துக் காட்டாக கொதி என்னும் வினையடி பெண்பால் விகுதியை ஏற்பதில்லை. கொல்லர் என்னும் சொல் வழக்கில் இருப்பினும் அது மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமைப் பொருளில் வழங்காது ஆண் பால் — பெண்பால் பொதுப்பன்மைப் பொருளிலே மட்டும் வழங்கக் காண்கிறோம். கொதியர் என்னும் ஆக்கப்பெயர் மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமையிலும், ஆண்பால் — பெண்பால் பொதுப்பன்மையிலும் வழங்கக் காண்கிறோம்.

– காறன், – காறி போன்ற விகுதிகள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாக உள்ள சில அடிகளோடு சேர்ந்துவரக் காண்கிறோம். எ. கா. வெட்டு: வெட்டுக்காறர். அவை தனிவடிவங் கொண்ட வினையடிகளுடன் சேர்ந்து வரக் காணோம். எழுது, எழுத்து என வினைக்கும் பெயருக்கும் தனிவடிவங்கள் காணப்படும்போது – காறன், – காறி ஆகியவை வினையடியுடன் வராது பெயரடியுடன் மட்டும் வரக் காண்கிறோம். இவ்வாக்கத்தை விதி விலக்காகக் (1. 2) கொள்தல் வேண்டும்.

3. 2 – தனம் என்னும் விகுதியை எதிர்மறை வினைகள் (எச்சங்கள்) ஏற்கின்றன.

எ. கா.

அறியா      அறியாத்தனம்

தெரியா, புரியா, விளங்கா ஆகிய மூன்றும் இவ்வகையின.

3. 3 செயல் முதற்பொருள் குறிக்கும் – இ விகுதியை 28 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அணுப்பு      அணுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதட்டு, அலட்டு, அளாப்பு, இடுக்கு, உயர், எதிர், ஏமிலாந்து, கடத்து, குளறு, கொளுவு, சப்பு, சளாப்பு, சறுக்கு, சிணுங்கு, சுறண்டு, சூப்பு, தூங்கு, நக்கு, நொண்டு, பதுங்கு, புளுகு, பொறுக்கு, மளுப்பு, மூடு, வார், விசிறு, வெருள் என்பன இவ்வகையில் அடங்கும்.

ஆடு, ஆட்டு என்னும் வினையடிகள் –இ விகுதி பெற்று வேறு சில பெயரடிகளுடன் நின்று தொகைச் சொற்கள் போன்று அமைவதும் உண்டு.

எ. கா.

| | |
|---|---|
| சூதாடு | சூதாடி |
| பாம்பாட்டு | பாம்பாட்டி |

கூத்தாடு, குரங்காட்டு, சூத்தாட்டு, தலையாட்டு, பெண்டாட்டு, பேயாட்டு ஆகியவற்றைக் காண்க. சூதாடி, பாம்பாட்டி போன்ற வடிவங்களில் உள்ள விகுதி முறையே – ஆடி, – ஆட்டி எனக் கொள்வோரும் உளர்.

நன்னூல் உரைகாரர் – இ விகுதியின் செயல் முதற்பொருளை உணர்ந்து 'வினைமுதற் பொருள்' என்றனர். கால்டுவெல் தமிழில் உள்ள – இ விகுதி வடமொழியில் இதே பொருளைத் தரும் – இ விகுதியில் இருந்தும் வேறு பட்டது எனக் காட்டினர்.

தமிழில் – அல் போன்ற சில விகுதிகளும் வினைமுதற் பொருளைத் தருவனவாயினும் (இலக்கிய வழக்கில் ஏந்தல், தோன்றல்), – இ விகுதி போலச் சொற்களைப் பெருக்குவனவன்று. சேர்ந்தாரைக் கொல்லி (குறள் 306), குடிதாங்கி (பெருந்தொகை) எனப் பண்டு வழங்கியதுபோல இன்றும் புதியதொகை ஆக்கங்களில் (compound formations) செயல்முதற் பொருளைத் தருவது –இ விகுதியேயாம்.

எ. கா.

| | | |
|---|---|---|
| ஏறு | ஏறி | சோம்பேறி<br>மரமேறி<br>வந்தேறி |
| ஓட்டு | ஓட்டி | கார்ஓட்டி |
| ஓடு | ஓடி | நாடோடி<br>முன்னோடி |
| காட்டு | காட்டி | ஆள்காட்டி<br>கைகாட்டி<br>திசைகாட்டி<br>நாள்காட்டி<br>வழிகாட்டி |
| கொத்து | கொத்தி | மரம்கொத்தி<br>மீன்கொத்தி |
| கொல் | கொல்லி | பூச்சிகொல்லி |
| தாங்கு | தாங்கி | இடிதாங்கி<br>சுமைதாங்கி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தின் | தின்னி | பழந்தின்னி |
| நோக்கு | நோக்கி | தொலைநோக்கி |
| பேசு | பேசி | தொலைபேசி |
| வருடு | வருடி | அடிவருடி |
| வெட்டு | வெட்டி | பாக்குவெட்டி |
| | | மண்வெட்டி |

சேர்ந்தாரைக் கொல்லி என்னும் திருக்குறள் தொடரிலேதான் – இ விகுதி வினைமுதற் பொருளில் முதன்முதலாகக் காணப்படுகிறது. இதனைச் சங்க இலக்கியங்களில் காணோம்.

3. 4 சில வினையடிகள் – ஐ விகுதி பெற்றுப் பெயராக அமைகின்றன.

எ. கா.

கிட     கிடை

சும, நட, பிற என்பனவும் இவ்வகையில் அடங்கும். இந்த அடிச் சொற்கள் ஒரு காலத்தில் உடன்படுமெய் ஏற்காது இகரத்தைப் பெற்று அமைந்தன என எண்ணுவதற்கு இடமுண்டு: கிட + இ, சும + இ போன்று.

உடு, உருள், எடு, ஓடு, கல், கவல், கொடு, கொல், கொள், சவள், சுறுள், தடு, திரண், திரள், நில், நிறு, பகு, படு, வகு, வறு, விடு, வில் ஆகியனவும் – ஐ விகுதி பெறுவன.

3. 5 – வி விகுதி பெறும் வினையடிகள் 5 ஆகும்.

எ. கா.

கல்     கல்வி

கேள், துற, தோல், பிற என்பன ஏனையவையாகும்.

3. 6 – தல் விகுதி பெறுவன 3 வினையடிகளாகும்.

எ. கா.

ஆறு     ஆறுதல்

கெடு, தேர் என்பன ஏனையவை.

நோதல் என்னும் ஒரு சொல்லை யாழ்ப்பாண வழக்கு எனச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி குறித்துள்ளது. ஆயின் இச்சொல் இன்றும் பேச்சு வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை.

3. 7 – வான் விகுதியை 2 வினையடிகள் மட்டும் ஏற்கின்றன.

எ. கா.

கக்கு     கக்குவான்

பயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 8 – வாணி விகுதி பெறும் வினையடி ஒன்றே ஆகும்.

எ. கா.

தட்டு தட்டுவாணி

3. 9 – அவு விகுதி பெறுவன 5 வினையடிகள்.

எ. கா.

உண் உணவு

– உழ், கள், செல், வா (வர்–).

3. 10 – வை என்னும் விகுதியை 14 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அள அளவை

இழு, கட, கல, கோர், சேர், தாழ், நடு, பற, பார், போர், விழு, வெழு, வேர்.

நடு என்னும் வினையடி – வை விகுதி பெற்றுத் தரும் பொருளை – கை விகுதி ஏற்பதன்மூலமும் தருகிறது. (3. 18)

3. 11 – ச்சு விகுதி ஏற்பன 4 வினையடிகள்.

எ. கா.

பிணை பிணைச்சு

குழை, முடி, வரி.

3. 12 – பு விகுதியை 2 வினையடிகள் பெறுகின்றன.

எ. கா.

இயல் இயல்பு

முடி.

– பு விகுதி – வு ஆக மாற்றம் பெற்றதைச் சொற்களில் காணலாம். சங்க இலக்கியங்களில் – பு விகுதி பெற்றுவருவன – வு விகுதியுடன் காணப் படுகின்றன. அழிபு – அழிவு (குறுந்தொகை), இழிபு – இழிவு (தொல்காப் பியம்), துணிபு – துணிவு, பிரிபு – பிரிவு (அகநானூறு) போன்ற சொற் களைக் காண்க. – வு பெற்றுவரும் சொற்கள் அனைத்திற்கும் – பு கொண்ட வடிவங்கள் காணப்படவில்லை. எடுத்துக்காட்டு அறிவு, பொலிவு. இன்றும் முடிபு – முடிவு ஆகிய இரு வழக்குகளும் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக் கில் இருப்பதைக் காண்க.

3. 13 – வு விகுதி பெறுகின்ற வினையடிகள் 52 ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. கா.

அசை  அசைவு

அடை, அணை, அலக்கழி, அழி, அள, அறி, இழ, ஈ, உணர், உய், உயர், உலை, உழை, எரி, ஒழி, ஓய், கசி, கழி, கிழி, குறை, சரி, சா, சாய், சார், சிதை, சோர், தறி, தாழ், துணி, துற, தெரி, தொய், நிறை, நினை, நெரி, நெளி, பதி, பணி, பிரி, பிள, பொலி, பொறி, மலி, மறை, முடி, முறி, மெலி, வளை, வாழ், விடி, விளை.

3. 14 – த்தி விகுதியை 4 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அடர்  அட(ர்)த்தி

குளிர், நேர், வளர்.

3. 15 – தி விகுதியை ஏற்கும் வினையடிகள் 11 ஆகும்.

எ. கா.

அயர்  அயர்தி

அசர், அறு, இறு, கெடு, செய், தகு, பற, பொறு, மற, விடு.

3. 16 – ச்சி விகுதி பெறுபவை 14 வினையடிகள் ஆகும்.

எ. கா.

அதிர்  அதிர்ச்சி

ஆராய், இகழ், உயர், எழு, கவர், கிளர், குளிர், சூழ், தளர், தொடர், மகிழ், வளர், வீழ்.

வள(ர்)த்தி (3. 15), வளர்ச்சி என்பன பெரும்பாலும் ஒரே பொருளைத் தருவன. விவரண அடிப்படையில் இரண்டையும் கட்டிலா மாற்றமுடைய வடிவங்கள் (free variants) எனலாம். ஆயின் வரலாற்று நோக்கில் அவை வேறுபட்ட இரு தோற்றங்கள் ஆகும். இன்று குளி(ர்)த்தி என்னும் சொல் கோயில்பற்றி வருகிறது. அங்கும் குளிர்ச்சி என்னும் பொருள் உண்டு.

3. 17 – சி விகுதியை எட்டு வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

ஆள்  ஆட்சி

சுழல், பயில், புகழ், புரள், முயல், மீள், வறள்.

3. 18 – கை விகுதியை 6 வினையடிகள் பெறுகின்றன.

எ. கா.

அழு  அழுகை

கொள், செய், திரி, தொழு, நடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடு என்னும் வினையடி – கை விகுதிக்குப் பதிலாக – வை விகுதியை யும் ஏற்பது உண்டு. நடுகை, நடுவை ஆகிய இரண்டிற்கும் பொருள் வேறு பாடு இல்லை எனலாம்.

3.19 – க்கை விகுதி ஏற்கும் வினையடிகள் 6 ஆகும்.

எ. கா.

அறி அறிக்கை

இரு, எச்சரி, கிட, படு, வாழ்.

3.20 – மை விகுதியை 10 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

இனி இனிமை

குளிர், கூர், தலை, தாழ், நிலை, நேர், பகை, பொறு, வலி.

3.21 – மதி விகுதி பெறுவன 8 வினையடிகள்.

எ. கா.

இறக்கு இறக்குமதி

ஏத்து, குடு (குடுக்கு–), சேர், தா (தரு–), பெறு, போ, வா (வரு–).

3.22 – ச்சல் விகுதியை 16 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அலை அலைச்சல்

இரை, உலை, எரி, கழி, காய், குறை, கை, துணி, தோய், நரை, பறை, பாய், புகை, மேய், விளை.

இவற்றைக் கிளைமொழிகளில் காணப்படும் தனித் தோற்றங்கள் எனக் கொள்ளலாம். கிளைமொழிகள் சொல்லாக்கத்தில் தனிப்போக்குடை யன; இலக்கியத்தின் போக்கில் இருந்து வேறுபடுவன. துணிச்சல், துணிவு ஆகிய வடிவங்களைக் காண்க. அண்மைக் காலத்தில் துணிச்சல் என்னும் சொல் இலக்கிய வழக்கிலும் கையாளப்பட்டு வருகிறது. ஆக்க வேறு பாட்டைப் பின்வரும் சொற்கள் விளக்கும்.

| கிளைமொழி | இலக்கியமொழி |
|---|---|
| அலைச்சல் | அலைவு |
| கைச்சல் | கைப்பு |
| விளைச்சல் | விளையுள் |
| | விளைவு |

பறைச்சல் என்னும் சொல் தமிழ்க் கிளைமொழிகளுள் யாழ்ப் பாணத்து வழக்கில்மட்டும் காணப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரகராதி இச்சொல்லைத் தருகிறது. எமனோ, பரோ ஆகியோர் அமைத்த திராவிட அடிச்சொல் வரலாற்று அகராதி (Dravidian Etymological Dictionary) மலையாளத்திலிருந்து பறயுக, பறச்சல் ஆகிய இரண்டையும் தருகிறது.

– த்தல் விகுதி தொழிற்பெயர் விகுதியாக மட்டும் மொழியில் வருகிறது. இது பேச்சுவழக்கில் வரக் காணோம். – தல் விகுதி தொழிற்பெயர் விகுதியாக இலக்கிய வழக்கில் வருகிறது. பேச்சுவழக்கில் பெயராக்க விகுதியாகவும் வருகிறது. – ச்சல் என்னும் பேச்சுவழக்கு விகுதிக்கு ஆதாரம் – த்தல் எனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆறுதல், கெடுதல், தேர்தல் எனப் பேச்சில் காண்க. பேச்சில் 'கெடுத்தல்' என்பாரில்லை எனலாம்; 'கெடுக்கிறது' என்றே கூறுகிறார்கள்.[4] கழித்தல், கழிச்சல் என்பன பேச்சுவழக்கில் உண்டு. இவை இரணடும் வெவ்வேறு பொருளைத் தருவன. கழித்தல் என்பது இலக்கிய வழக்கில் இருந்து கணிதத்தைக் குறிக்கவந்த சொல்லாகும்.

*3. 23* – அல் விகுதியை 59 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அவி அவியல்

அழுகு, இடி, இர, இருமு, ஏவு, கடை, கரை, கிண்டு, கிழி, குடு, குவி, குழை, குளி, கொந்து, கொளுவு, சமை, சாம்பு, சிக்கு, சீவு, சுண்டு, சோம்பு, தடங்கு, தப்பு, தவ்வு, தறி, துப்பு, தும்மு, துவை, தூறு, தை, தொங்கு, நக்கு, நசி, நாறு, நீக்கு, நெளி, படை, பாடு, பிசங்கு, பின்னு, பீச்சு, புதை, புலம்பு, பெருக்கு, பொங்கு, பொரி, மறி, மின்னு, முத்து, முறி, மோது, வத்து, வளை, வறு, வாங்கு, வாடு, விக்கு, வெம்பு.

*3. 24* – ப்பு விகுதியை 90 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அங்கலாய் அங்கலாய்ப்பு

அடு, அடை, அமை, அரி, அறிவி, அருவரு, அலு, அழை, அறி, இர, இரு, இளி, இற, இறை, இனி, உடு, உழை, உறு, உறை, எடு, எதிர், ஏய், ஒழி, ஒறு, ஓங்காளி, கச, கட, கடு, கல, கழி, களை, கறு, கனை, குதி, குளி, குறி, கை, கொதி, கொப்புளி, கொழு, சமாளி, சிரி, சிவ, சிற, சுணை, செழி, தடி, தடு, தாளி, திகை, தீர், துடி, துடை, துற, நட, நடி, நினை, நெளி, பதி, பதை, படி, படை, பழு, பற, பிடி, பிழை, பிற, புளி, பொறு, மதி, மடி, மலை, மறு, மன்னி, மித, முழி, மூ, மூதலி, வகு, வலி, வாய், விதை, விடு, விரி, விறை, வெடி, வெறு, வேய், வை.

தொகைச் சொற்களும் – ப்பு விகுதி பெறுவது உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. கா.

அன்பளி அன்பளிப்பு

மொழியெர்

ஒலிக்குறிப்பு வினைச்சொற்களும் –ப்பு விகுதி பெறுகின்றன.

எ. கா.

கடகட கடகடப்பு

கலகல, கறகற, குழுகுழு, சலசல, சுறுசுறு, பதைபதை, படபட, பளபள, பரபர, பிசுபிசு, புறுபுறு, மினுமினு, முணுமுணு, வழவழ, விறுவிறு.

3. 25 – ம் விகுதி பெறும் வினையடிகள் 3 ஆகும்.

எ. கா.

சின சினம்

நய, மண.

3. 26 – அம் விகுதி பெறும் வினையடிகள் 61 ஆகும்.

விகுதியை ஏற்கும்போது தோன்றும் ஒலி மாற்ற அடிப்படையில் இவ்வினையடிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

எ. கா.

அடக்கு அடக்கம்
இரங்கு இரக்கம்
கூசு கூச்சம்

3. 26. 1 அகல், அழுத்து, ஆட்டு, இணக்கு, இறக்கு, உயர், உருக்கு, ஊக்கு, எட்டு, எண்ணு, எழுப்பு, ஏத்து, ஏமாத்து, ஒடுக்கு, ஒதுக்கு, ஓட்டு, கட்டு, கலக்கு, குலுக்கு, குழப்பு, கூட்டு, சுணக்கு, சுருக்கு, தாக்கு, தாழ், திருத்து, திருப்பு, தேக்கு, தேட்டு, நீட்டு, நீள், நெருக்கு, நோக்கு, பிணக்கு, பெருப்பு, பெருக்கு, பொருத்து, மதி, மயக்கு, முழக்கு, வருத்து, வளை, வழக்கு, வாட்டு, விருப்பு, விளக்கு.

3. 26. 2 ஏங்கு, சிணுங்கு, தயங்கு, தூங்கு, நடுங்கு, புழுங்கு, வீங்கு.

3. 26.3 கொண்டாடு, தள்ளாடு, திண்டாடு, நாடு, மாறுடு.

3. 27 – ப்பை விகுதி பெறுவன 2 ஆகும்.

எ. கா.

கிலுகிலு கிலுகிலுப்பை

குடுகுடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 28 – அடி விகுதியை 5 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

கலக்கு கலக்கடி

காவு, கிட்டு, குழப்பு, நெருக்கு.

3. 29 – வாய் விகுதி பெறுவன 3 ஆகும்.

எ. கா.

எழு எழுவாய்

கழு, வா (வரு-).

3.30 – முதல் விகுதி பெறுவன 2 ஆகும்.

எ. கா.

கொள் கொள்முதல்

பறி.

3. 31 – வாக்கு விகுதி பெறும் வினையடி ஒன்றே ஆகும்.

எ. கா.

செல் செல்வாக்கு

3. 32 – அன் விகுதி பெறுவன 2 ஆகும்.

எ. கா.

கல கலவன்

குதி.

– அன் விகுதி முன்பும் (2. 1) காட்டப்பட்டது. பொருள் அடிப்படையில் வெவ்வேறு விகுதிகளாகக் கொள்தல் வேண்டும்.

3. 33 – அரம் விகுதி பெறுவன 2 ஆகும்.

எ. கா.

நிலவு நிலவரம்

விளம்பு.

3. 34 – வாளம் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

கடி கடிவாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 35 –அவம் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

தாண்டு தாண்டவம்

3. 36 –ஆளம் விகுதியை 2 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

ஏர் – ஏராளம்

தார் –

தாராளம் என்னும் சொல்லில் வரும் தார் - என்னும் அடிச்சொல் தமிழில் தனித்து வழங்குவதில்லை. இச்சொல்லைச் சென்னைப் பேரகராதி dhara என்னும் வடமொழிச் சொல்லில் இருந்து பெற்றதாகக் கூறுகிறது.

3. 37 – இடம் விகுதி பெறும் வினையடி ஒன்றே ஆகும்.

எ. கா.

கட்டு கட்டிடம்

3. 38 – அணம் விகுதி பெறுவன 3 ஆகும்.

எ. கா.

ஒத்து ஒத்தணம்

கட்டு, தூக்கு.

3. 39 – த்தை விகுதி பெறும் வினையடிகள் 2 ஆகும்.

எ. கா.

பூ பூத்தை

நட.

பூத்தை என்னும் சொல் யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் கெட்ட நடத்தையுடைய பெண்ணைக் குறிக்கிறது. பேத்தை என்னும் சொல்லும் வழக்கில் உண்டு. இது வால்பேத்தை எனத் தொகையிலும் வருகிறது. பேத்தை என்பதன் அடிச்சொல் தெளிவாக இல்லை. – த்தை விகுதி பழைய இலக்கியங்களில் வரக் காணோம். இது கன்னடத்திலும் தெலுங்கிலும் வினையோடு ஆக்க விகுதியாக வருகிறது. எமனோ, பரோவின் அகராதியில் 252, 1114, 1551, 1763, 2957, 3564 என எண்ணிடப் பெற்ற சொற்களைக் காண்க.

3. 40 – அத்து விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

வா(வர்–) வரத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.41 – க்கு விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

போ போக்கு

3. 42 – தம் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

தாளி தாளிதம்

3. 43 – த்தம் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

பிடி பிடித்தம்

3. 44 – ய் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

நோ நோய்

3. 45 – மானம் விகுதியை 4 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அடை அடைமானம்

தீர், தேய், பெறு.

3. 46 – குணி விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கின்றது.

எ. கா.

அழு அழுகுணி

3. 47 – படி விகுதியை 4 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

கட்டு கட்டுபடி

குழறு, செல் (செல்லு), தள்ளு.

வரும்படி என்னும் பெயரில் உள்ள – படி வடிவத்திலே ஒத்த வேறு விகுதி எனக் கொள்தல் பொருத்தமாகும்.

3. 48 – பனவு விகுதியை 4 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

குடு குடுப்பனவு

குடி, தின், படி, வில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு என்னும் சொல்லில் – வனவு வந்துள்ளது. ப > வ மாற்றம் எனக் கருதலாம். முடிபு – முடிவு போன்ற சொற்களைக் கருத்திற் கொள்க.

3. 49 – பனை விகுதியை 3 வினையடிகள் பெறுகின்றன.

எ. கா.

கல் கற்பனை

படி, வில்.

3. 50 சொல்லின் ஈற்றுயிர்க்கு முதலுயிர் (penultimate vowel) நீட்டம் பெறுவது 7 வினையடிகளில் ஆகும்.

எ. கா.

இடு ஈடு

கெடு, சுடு, தின், நக்கு, படு, பெறு.

தலையிடு, முறையிடு, அடிபடு, இடிபடு, உடன்படு, எடுபடு, கட்டுப்படு, குத்துப்படு, தட்டுப்படு, தேவைப்படு, பிடிபடு, முட்டுப்படு, வெட்டுப்படு என அமையும் சொற்களையும் இங்கு கருத்திற் கொள்க.

3. 51 வினையடியில் உள்ள ஈற்று மெய் இரட்டித்துப் பெயராக அமையும் மாற்றத்தை 14 வினையடிகளில் காண்கிறோம்.

எ. கா.

உருகு உருக்கு

எழுது, ஏசு, ஒழுகு, ஓடு, கருது, கூடு, பாடு, பூசு, பெருகு, முழுகு, மூசு, விளையாடு, வீசு.

## 4

4. 0 பெயரடை அடி

4. 1 பால் காட்டும் விகுதியைப் பெறும் பெயரடை அடிகள் 3 ஆகும்.

எ. கா.

சின்ன சின்னவன்
சின்னவங்கள்
சின்னவள்
சின்னவளவை
சின்னவர்
சின்னவா
சின்னவை
சின்னது
சின்னதுகள்

பெரிய, மற்ற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2 – ஐ விகுதி பெறும் பெயரடை அடிகள் 9 ஆகும்.

எ. கா.

அரும் அருமை

இளம், கடும், கரும், கொடும், திறம், பழம், பெரும், வெறும்.

4.3 – மை விகுதி பெறும் பெயரடை அடிகள் 3 ஆகும்.

எ. கா.

தனி தனிமை

புது, மெது.

## குறிப்பு

1. '(ஆக்க) ஒட்டு', 'விகுதி' என்னும் பிரயோகங்களுக்குப் பதிலாக 'சொல்லாக்கச் சொல்லியன்' என்னும் பிரயோகத்தை அறிஞர் சிலர் கையாள்கின்றனர். இவ்வாய்வில் 'விகுதி' என்னும் சொல் குறிக்கும் விரிந்த பொருளைத் தெளிவாக உணர்ந்துகொள்தல் வேண்டும்.

2. காண்க: Charles F. Hockett (1958) A Course in Modern Linguistics, Macmillan, p. 308.

3. தமிழில் பொதுவாக ஒருவரைக் குறிக்குஞ் சொல் (பால் காட்டும் சொல்) மேலும் ஆக்க விகுதிகளைப் பெறுவதில்லை. ஆயின் ஆங்கிலம் போன்ற சில மொழிகள் ஏற்பதுண்டு. ஆங்கிலத்தில் பின்வரும் ஆக்கங்களைக் காண்க.

| | |
|---|---|
| chemist | chemist–ry |
| confectioner | confectioner–y |
| linguist | linguist–ics |
| villain | villain–y |

4. தொழிற் பெயரையும் ஆக்கப் பெயரையும் வேறுபடுத்தல் வேண்டும். வினையடியில் இருந்து இருவகைப் பெயர்களை ஆக்குகிறோம். ஒன்று செய்–தல் போன்ற வகை. மற்றது செய்-கை போன்ற வகை. இரு வகைப் பெயர்களும் வேற்றுமை உருபை ஏற்கும். ஆயின் அடைகளை ஏற்பதில் இரண்டிற்குமிடையே வேறுபாடுண்டு. செய்தல்வகை வினையடைகளை மட்டுமே ஏற்கும்; செய்கைவகை பெயரடைகளை மட்டுமே ஏற்கும். முதல்வகை தொழிற் பெயர்; இரண்டாவதுவகை ஆக்கப் பெயர். இந்த வேறுபாட்டைக் கால்டுவெல் கூறியுள்ளார். காண்க: Caldwell, R. (1961) A Comparative Grammar of the Dravidian Languages, Madras. pp. 542–45.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெயர்கள் இரண்டும் மேலும் ஒருவகையில் வேறுபடுகின்றன. ஆக்கப் பெயர் பன்மையாக (விகுதி பெற்று) வழங்குவதுண்டு; தொழிற் பெயர் இவ்வாறு வழங்குவதில்லை. செய்கைகள் என்பர். செய்தல்கள் என்பாரில்லை. இலக்கிய வழக்கில் ஆக்கப் பெயருடன் பால் காட்டும் விகுதியைச் சேர்த்து வழங்க முடியும்: செய்கை, செய்கையன், செய்கை–ஆள்–அன் செய்கையாளன். தொழிற் பெயர் இவ்வாறு வழங்குவதில்லை. மேலும் தொழிற் பெயருக்கு ஒத்த எதிர்மறைச் சொல் உண்டு; ஆனால் ஆக்கப் பெயருக்கு இல்லை. எடுத்துக்காட்டாக செய்தல் - செய்யாமை.

## உசாவியவை


கருணாகரன், கி. இராம. சுந்தரம் (1971) "பேச்சுத்தமிழில் ஆக்கப் பெயர்கள்", செந்தமிழ்ச் செல்வி, தொகுதி 46, எண் 2, சென்னை. பவணந்தி, நன்னூல்.

Agesthialingom, S. (1964) "Tamil Nouns", Anthropological Linguistics, 6 No. 1. 7 - 12, Bloomington.

Burrow, T. and Emeneau, M. B. (1961) A Dravidian Etymological Dictionary, Oxford.

Ibid. (1968) A Dravidian Etymological Dictionary supplement, Oxford.

Charles F. Hockett (1958) A Course in Modern Linguistics, Macmillan.

Kamaleswaran, K. S. (1974) Nouns in Tamil, Ph.D. diss. (unpublished), Annamalai University, Annamalainagar.

Meenakshisundaran, T. P. (1965) A History of Tamil Language, Poona.

Robert Caldwell (1956, 3rd ed.) A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, Madras.

Shanmugam, S. V. (1971) Dravidian Nouns, Annamalai University, Annamalainagar.

Shanmugampillai, M. (1961) "Derivative Nouns in Modern Tamil", Indian Linguistics, Vol. 22, Poona.

Suseendirarajah, S. (1967) A Descriptive study of Ceylon Tamil with special reference to Jaffna Tamil, Ph. D. Diss. (unpublished), Annamalai University, Annamalainagar.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்செய்கைப் பிரதேசம் ஒன்றில் நீர்ப்பாய்ச்சல் திட்டமிடுதலில் சில முக்கிய அம்சங்கள்

அ. கணபதிப்பிள்ளை

அறிமுகம்:-

நீர்ப்பாய்ச்சுதலின் நீண்டகால குறுங்காலத் திட்டங்களை இடுதல் நீர்ப் பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய நாடு ஒன்றிற்கு மிக அத்தியாவசியமானதாகும், அதிவரட்சி, இடைவரட்சி, வரட்சிப் பிர தேசங்களில் நீர் கிடைப்பது அருமையாகவுள்ளதாலும் நீரின் தேவை அதிக மாக இருப்பதனாலும் கிடைக்கும் நீரினைக் குறித்த சூழலுக்கு ஏற்புடைத் தாகப் பயன்படுத்துவதற்கு நீர்ப்பாய்ச்சல் திட்டமிடுதல் ஆதாரமாக உள்ளது. நீர்ப்பாய்ச்சுதலைத் திட்டமிடுதல்மூலம் ஒரு அலகு நீருக்கான உற்பத்தித்திறனை முன்னரிலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக் காணப்படு கிறது. இத்தகைய முயற்சிகளில் திட்டமிடற் பிரதேசங்களின் நீர்ச்சம நிலையினைக் கணிப்பீடு செய்வது வலியுறுத்தப்படுவதொன்றாகவும் உள்ளது.

ஒரு பிரதேசத்தில் படிவுவீழ்ச்சி, ஆவியாக்க ஆவியுயிர்ப்பு நிலைமைகளை அடியொற்றி மண் ஈரத்திலோ, நீரின் இருப்பிலோ ஏற்படும் மாற்றத் தின் அளவினைக் கணிப்பிடுவது நீர்ச்சமநிலையில் பிரதான அம்சமாகும். நீர்ச்சமநிலையைக் கணிப்பிடுவதில் கழுவுநீர் அளவினைத் துணிந்துகொள்ள முடிகிறது. தோண்த்துவைட்டின் இலகுவான காலநிலை நீர்ச்சமநிலைச் சமன்பாடுகளைப் பிரயோகிப்பதன்மூலம் கழுவுநீர் போன்ற (ward, 1972) நீர்ச்சமநிலையின் ஏனைய அங்கங்களையும் அளவீடு செய்யலாம்.

தோண்த்துவைட் போன்றோர் பயன்படுத்திய காலநிலை நீர்ச்சமநிலை யினை (Thornthwaite, 1948, Thornthwaite and Mather, 1955) ஒரு பிர தேசத்தில் பிரயோகிக்கின்றபோது இலகுவான முறையில் அமைந்த மூன்று வேறுபட்ட தன்மைகளுக்கிடையில் பல காலநிலைப் பிரதேசங்களைக் காணமுடிகிறது. ஒருபிரதேசம் அங்குள்ள தாவரங்களினாற் பயன்படுத்தக் கூடிய அளவினைவிடக் கூடிய மழைவீழ்ச்சியினைப் பெறுகின்றபொழுது அதன் விளைவாக மேலதிக நீர் கிடைக்கப்பெறுகிறது. இது ஆறுகளின் ஓட்டங்களுக்கு ஆதாரமாக உள்ளது. வருடமுழுவதிலும் மேலதிக நீர் கிடைக்கின்றபொழுது என்றுமுள்ள ஆறுகள் அப்பிரதேசத்திற் காணப் படுகின்றன. தாவரங்களினாற் பயன்படுத்தக்கூடிய நீரளவினைவிடக் குறை வான மழைவீழ்ச்சி பெறப்படுகின்ற பிரதேசங்களில் நிரந்தரமான ஆறு கள் காணப்படுவதில்லை. இரண்டிற்கும் இடைப்பட்ட பிரதேசங்களான ஒருபருவத்தில் மேலதிக நீரும் மற்றைய பருவத்தில் நீர்ப் பற்றுக்குறையும் நிலவுகின்ற பகுதிகளில் பருவ ஆறுகளின் ஓட்டங்களையும், வரட்சித் தாக் கங்களையும் அவதானிக்க முடிகிறது. இத்தகைய பகுதிகளில் ஒருபருவத் தில் கிடைக்கும் மேலதிக நீரினை மற்றைய பருவத்தில் பயிர்த்தேவைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் அதன் சூழலியற் சமநிலைக்கும் பயன்படுத்துவதனை நீர்ப்பாய்ச்சுதல் திட்டமிடுதலின் முக்கிய பணியாகக் குறிப்பிடலாம்.

## தாவரத்தின் நீர்த்தேவை:

பயிர் ஆராய்வாளர்களும், விவசாயிகளும் ஒவ்வொரு பயிர்வகைக்கும் அவற்றின் சொந்த நீர்த்தேவை அளவு உண்டு என்ற அடிப்படையிற் சிந்திக்கத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் பென்மன் என்பவர் குறிப்பிட்டதன்படி ஒரேவிதமான பயிர்ப் பருவத்திலும் ஒரேவிதமான மண்ணிலும் எல்லாப் பயிர்களையும் பயிரிடும்பொழுது அவற்றிற்கான நீர்த்தேவை ஓரளவு சமனானதாகக் காணப்படும் என்ற சாதாரண பௌதிக விதிகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட தேற்றமானது மிகுந்த ஆச்சரியத்தினை அளித்தது. தாவரம் ஒன்றிற்கு நீர் பல தொழிற்பாடுகட்குத் தேவைப்பட்டபொழுதிலும் உண்மையில் தாவரத்தின் நீர்த்தேவையின் எல்லை அளவானது சூழல்வெப்பத்தைத் தாங்குகின்ற அளவில் இருந்து மேலதிகமாயுள்ள வெப்பநிலையினைக் குறைப்பதற்கான ஆவியுயிர்ப்பின் அளவாகக் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த ஒரு பிரதேசத்தின் காலநிலைக்கும் சூழல் நிலைமைகளுக்கும் ஏற்ப, தாவரத்தின் குறித்த ஒரு வளர்ச்சிக்குத் தேவையாக ஆவியுயிர்ப்புச் செய்யப்படும் நீரின் அளவானது வேறுபடலாம் எனத் தாவரவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். பயிர்ச்செய்கை என்பது வெப்ப சமப்படுத்துதலைக் கொண்டிருக்கிறது. வெப்பத்தினைச் சமப்படுத்தும் அம்சமானது மண்ணிலிருந்து ஆவியாகுதல் வடிவத்திலும், தாவரத்திலிருந்து ஆவியுயிர்ப்பு வடித்திலும் வெப்பத்தினை மறைவெப்பமாக மேலே அனுப்பப்படுவதனை உள்ளடக்கிக் காணப்படுகிறது. இரு செயற்பாடுகளையும் தனித்தனி பிரித்து அளவிடுதல் எல்லா நேரங்களிலும் கடினமானதினால் ஆவியாக்க ஆவியுயிர்ப்பு என்ற பதம் பிரயோகிக்கப்படுகிறது. (Thornthwaite, 1948)

## உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பு:

காலநிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பினைத் தீர்மானிப்பதில் பலமுறைகள் பின்பற்றப்படுகின்றன. உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பினை வளிமண்டலவியற் காரணிகளும் பயிர்க்காரணிகளும் பாதிப்பனவாகையால் இவையிரண்டினடிப்படையிலேயே கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளிமண்டலவியற் காரணிகளில் சூரியஒளி, வெப்பநிலை, காற்று, காற்றின் ஈரப்பதன் என்பனவும் பயிர்க்காரணிகளில் பயிர் மூடியநிலைமை, பயிரின் அல்பீடோ (கதிர்வீச்சலின் தெறிப்பு) திறன் பயிர் வகையும் அவற்றின் இனமும் என்பன கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியனவாகும்.

புவியியல் அகலக்கோடு, திகதி என்பவற்றின் தொழிற்பாட்டிற்கு ஏற்பவும் வானத்தின் மேகமூட்ட நிலைமைகளுக்குத் தக்கதாகவும் சூரிய ஒளியின் அளவு, குறித்த மேற்பரப்பில் படும் நேரம் என்பன தங்கியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவநிலைமைகளைச் சார்ந்து குறித்த பிரதேசத்தின் வெப்பநிலை தீர்மானிக்கப்படும். தாவரத்தின் மேற்போர்வை காணப்படும் உயரத்தில் காற்றின் வேகம் கணிப்பிடப்படுகிறது. காற்றின் ஈரப்பதன் உள்ளார்ந்த ஆவியுயிர்ப்பு கணிப்பிடுவதில் குறைந்த முக்கியத்துவத்தினைப் பெறுகிறது. பயிர் மூடியிருக்கும் பண்பானது மொத்தநிலத்தில் எத்தனை வீதமான பங்கினைப் பயிர் மூடியுள்ளது என்ற அளவினைக் கொண்டிருக்கும். இலையின் நிறத்திற்கு ஏற்ப அல்பீடோவின் பங்கு காணப்படுகிறது. தாவரவகை, இனம் ஆகியனவற்றில் பயிரின் வளர்ச்சிப் பருவம், வயது, தாவரத்தின் வாழ்வயது என்பன கவனித்தற்பாலது.

உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பு வயலில் வைத்து அளவீடு செய்யப்படுவதனையே சிறப்பான முறை எனக் கொள்ளலாம். ஆய்வுகூட முறையில் லைசிமீட்டர்களின் (ஆவியாக்க ஆவியுயிர்ப்பு அளவீட்டுமானி) உதவியுடன் உலகளாவிய முறையில் ஆவியாக்க ஆவியுயிர்ப்பு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட முறைகளைப் பயன்படுத்தி சூத்திரங்களின் உதவியுடனும் ஒருபிரதேசத்தின் ஆவியாக்க ஆவியுயிர்ப்பு அளவிடப்படுகின்றது. இவை இரண்டு முறைகளினதும் ஒப்பீடுகள் சில சந்தர்ப்பங்களில் அதிக வேறுபாட்டினைக் கொண்டிராமை அவதானிக்கப்பட்டுள்ளது. சுமார் 30 சூத்திரங்கள்வரை இத்தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

உள்ளார்ந்த ஆவியாக்கத்தினைக் கணிப்பீடு செய்வதில் பிளனி-கிறிட்டில் முறை (Blaney - Criddle method) யில் பின்வரும் சூத்திரம் பயன்படுத்தப் படுகிறது. (Blaney - Criddle, 1950) $PET = 0.46P(t+17.8) = P(0.46t+8)$ இதில் உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பு (PET) நாள் ஒன்றுக்கு மில்லிமீற்றர் அளவு நீருக்குச் சமமாகக் காட்டப்படுகிறது. P என்பது குறித்த அகலக்கோட்டில் ஒவ்வொரு மாதமும் பகல்நேரம் காணப்படும் மணித்தியாலங்களின் வீதாசாரம் 10 பாகை வடஅகலக்கோட்டில் இவ்வளவுகள் ஜனவரியிலிருந்து டிசம்பர்வரை முறையே 0.26, 0.27, 0.27, 0.28, 0.28, 0.29, 0.29, 0.28, 0.28, 0.27, 0.26, 0.26 ஆகவும் 5 பாகை வட அகலக்கோட்டில் இவை முறையே 0.27, 0.27, 0.27, 0.28, 0.28, 0.28, 0.28, 0.28, 0.28, 0.27, 0.27, 0.27 எனக் காணப்படுகிறது. (Doorenbos, Pruitt, 1975) உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பில் இருந்து குறித்த பயிரின் உண்மை ஆவியாக்க ஆவியுயிர்ப்பினை (AET) க் கணிப்பிடுவதற்காக அப்பயிரின் பயிர்க்காரணியினால் உள்ளார்ந்த ஆவியாக்க ஆவியுயிர்ப்பினைப் பெருக்கிப் பெறப்படுகிறது. காலநிலைக் காரணிகளான சார்ஈரப்பதன், சூரியஒளி வீதம், பகல் நேரம், காற்று வேகம் என்பவற்றினைக்கொண்டு சில திருத்தங்கள் மேற்கொள்ளப் படுதல் அவசியம் எனக் கருதப்பட்டது. (Doorenbos, Pruitt, 1975)

திருத்தக் காரணிகளில் பகல்நேர இழிவுச் சார் ஈரப்பதன், சார் ஈரப் பதனுகக் கொள்ளப்படுகிறது. சூரியஒளிவீதம் உண்மையான சூரியஒளி மணித்தியாலம் (n) சாத்தியமான சூரியஒளி மணித்தியாலங்களின் (N) விகிதத்தினால் தீர்மானிக்கப்படுகிறது. 2 மீட்டர் உயரத்தில் பகல் நேரக் காற்று வேகமும் ஏனையவற்றினைப்போல் தாழ், இடை, உயர் வேகத்தில் குறிப்பிடப்படுகிறது. செக்கனுக்கு 2 தொடக்கம் 5 மீட்டர்வரை இடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளவாகக் காட்டப்படுகிறது. சூரிய ஒளி .6 - .8 இடையளவாகவும் ஈரப்பதனில் 20 – 50 % இடையளவாகவும் குறிப்பிடப்படுகிறது.

| திருத்தக்காரணி சார் ஈரப்பதன் | a | b | a | b | a | b |
|---|---|---|---|---|---|---|
| | 20% கீழ் தாழ் | | 20 – 50% இடை | | 50% மேல் உயர் | |
| சூரிய ஒளிவீதம் தாழ் .3–.6 | | | | | | |
| காற்று தாழ் 0 – 2மீ/செக் | 1.15 | 2.00 | 1.05 | 2.00 | 0.80 | 1.45 |
| காற்று இடை 2 – 5மீ/செக் | 1.28 | 1.80 | 1.15 | 1.85 | 0.88 | 1.55 |
| காற்று உயர் 5மேல் மீ/செக் | 1.40 | 1.60 | 1.25 | 1.70 | 0.98 | 1.65 |
| சூரியஒளிவீதம் இடை .6–.8 | | | | | | |
| காற்று தாழ் | 1.35 | 2.30 | 1.20 | 2.20 | 0.97 | 1.80 |
| காற்று இடை | 1.55 | 2.05 | 1.38 | 2.15 | 1.06 | 1.75 |
| காற்று உயர் | 1.73 | 1.80 | 1.52 | 2.10 | 1.16 | 1.70 |
| சூரியஒளிவீதம் உயர் .8க்கு மேல் | | | | | | |
| காற்று தாழ் | 1.55 | 2.60 | 1.37 | 2.40 | 1.14 | 2.15 |
| காற்று இடை | 1.82 | 2.30 | 1.61 | 2.50 | 1.22 | 1.95 |
| காற்று உயர் | 2.06 | 2.00 | 1.82 | 2.55 | 1.31 | 1.70 |

இதன்மூலம் திருத்தம் செய்யப்பட்டுச் சூத்திரம் பின்வருமாறு காணப்படுகிறது. $PET \simeq ap\ (0.46t + 8) - b$

இம்முறையினை ஆய்வு செய்தவர்கள் சிலபகுதிகளில் குறைந்த நம்பிக்கைத் தன்மையினைக் கொண்டு காணப்படுகின்றதெனத் துணிந்தனர். பூமத்திய கோட்டுப்பிரதேசம், சிறிய தீவுகள், உயர்ந்த இடவுயர்ப் பகுதிகள், மொன்சூன் பருவத்தில் சூரிய ஒளிபடும் நேரத்தில் தளம்பல்கள் அதிகம் காணப்படும் பிரதேசங்கள் குறித்த பகுதிகளாகும்.

ஆய்வுகளின் முடிவுகள் பயிர்வளர்ச்சியின்பொழுது ஆவியாக்க ஆவியுயிர்ப்பு அளவுகள் வேறுபடுவதாகத் தெளிவுபடுத்துகின்றன. குறித்த பயிரின் ஆவியாக்க ஆவியுயிர்ப்பினைத் தீர்மானிப்பதற்குப் பயிர்க்காரணிகள் மாறிலிகளாக அட்டவணையில் காட்டப்பட்டபொழுதிலும்கூட இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

பயிர்க்காரணிகளது அண்ணளவான வீச்சு KC%

| பருவகாலப் பயிர் | KC% | பருவகாலப் பயிர் | KC% |
|---|---|---|---|
| அல்பல்பா | 90 - 105 | வெங்காயம் | 25 - 40 |
| அவக்காடோ | 65 - 75 | தோடை | 60 - 75 |
| வாழை | 90 - 105 | உருளைக்கிழங்கு | 25 - 40 |
| போஞ்சி | 20 - 25 | நெல் | 45 - 65 |
| கொக்கோ | 95 - 110 | சிசல் | 65 - 75 |
| கோப்பி | 95 - 110 | இறுங்கு | 30 - 45 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பருத்தி | 50 - 65 | சோயாஅவரை | 30 - 45 |
| ஈஞ்சு | 85 - 110 | பீற் சீனிக்கிழங்கு | 50 - 65 |
| இலையுதிர் மரங்கள் | 60 - 70 | கரும்பு | 105 - 120 |
| சணல் | 55 - 70 | வத்தாளை | 30 - 45 |
| சிறுதானியம் | 25 - 30 | புகையிலை | 30 - 35 |
| திராட்சைப்பழம் | 70 - 85 | தக்காளி | 30 - 45 |
| சோளம் | 30 - 45 | மரக்கறி வகை | 15 - 30 |
| எண்ணெய் விதைகள் | 25 - 40 | திராட்சைத் தோட்டம் | 65 - 75 |

## நீர்ப்பாய்ச்சல் வினைத்திறன்

பயன்படுத்தப்படும் நீர்ப்பாய்ச்சல் முறைகளுக்கு ஏற்பவும் ஆவியாக்க அளவு வேறுபடுகிறது. தூவு நீர்ப்பாசன முறையில் சுமார் 65 சதவீத அளவும், பார்சால் நீர்ப்பாசன முறையில் 15 தொடக்கம் 20 சதவீத அளவும் ஆவியாகிறது. பயிரின் நீர்த்தேவை தொடர்பான கணிப்பீடுகள் குறித்த காலப்பகுதியில் நீர்ப்பாசனத்துக்கான நீர்த்தேவை அளவினைத் தீர்மானிக்க உதவுகின்றன. நீர்ப்பாசனத் திட்டங்களில் பயிரின் தேவை யளவுக்கு மேலான நீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நீர்ப்பாசனத்தில் பல்வேறு செயற்றிறமையற்ற முறைகள் பின்பற்றப்படுவதனால் நீர்விரயம் என்பது தவிர்க்க முடியாததாகக் காணப்படுகிறது. ஒரு பிரதேசத்தின் பௌதிக சூழலியல் நிலைமைகளை மாத்திரமன்றி கலாசார, பண்பாட்டு அம்சங்களையும் மானிடக் காரணிகளையும் நீர்ப்பாசனத் திட்டமிடலா ளர்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் அவசியமாகும். பயிரிலிருந்து வெளியேறும் நீரின் அளவானது குறைவாக இருக்கும்வண்ணம் நீர்ப் பாய்ச்சல் முறைகளைப் பயன்படுத்துதல் நீர்ப்பாசன வினைத்திறனுக்கு அடிப்படையாகும். பயிருக்கு அதிகநீர் பாய்ச்சப்படவேண்டும் என்ற விவ சாயிகளின் மனப்போக்கினையும் மாற்றிக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும்.

வயற் பிரயோகத்தின் வினைத்திறனனது நீர்ப்பாய்ச்சல் நேரத்தில் பயிரின் நீர்த்தேவை அளவால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு வயலில் உள்ள பயிரின் நீர்த்தேவையினைப் பூர்த்தியாக்கக்கூடியதாக, பிரயோகிக்கப்படும் நீரின் அளவானது இரு காரணிகளில் தங்கியுள்ளது. குறித்த இரு காரணிக ளான பயிர்வளர்ச்சிக் கட்டங்களில் வேர்வலயத்தின் ஆழத்தினையும், மண் பிடித்துவைத்திருக்கும் பயன்படுத்தப்படத் தயாராக உள்ள மண் ஈரத்தின் அளவினையும் கணிப்பிட்டு நீர்ப்பாய்ச்சப்படுதல் வினைத்திறன் ஆய்வுக ளூடாக விபரிக்கப்படுகின்றன. (Bos, Nugteren. 1974) வயற் பிரயோக நீர்ப் பயன்பாட்டு வினைத்திறன் பின்வருமாறு காட்டப்படுகிறது. R/A இதில் R = பயிரின் நீர்த்தேவை, A = வயல்நீர்ப் பிரயோகம். இத்தகைய வினைத் திறனனது அதிகரித்துச் செல்லுகையில் குறைந்த அளவு நீரினைப் பயன் படுத்தி அதிக பயன்பாட்டினைப் பெறுதல் சாத்தியமானதொன்ருக இருக் கிறது.

பண்ணை வினைத்திறன் R/F எனக் குறிப்பிடலாம். F என்பது பண்ணை யில் நீர் வழங்கலாகக் காட்டப்படுகிறது. வழங்கல் வினைத்திறன் A/T ஆகும். இதில் T திட்டத்தின் நீர் வழங்கலாகக் காட்டப்படுகிறது. பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான நீர் கொண்டு செல்வினைத்திறன் F/T ஆகும். பண்ணைச் செயற்பாட்டு வினைத்திறன் A/F ஆகவும் இருக்கும். முடிவாக முழுத்திட்டத்துக்குமான வினைத்திறன் R/T ஆகக் காட்டலாம். இதிலிருந்து ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தின் வெற்றி அதன் நீர்ப்பயன்பாட்டு வினைத்திறனில் தங்கியுள்ளது என்பது தெளிவாகிறது. திட்டத்தில் மொத்தமாகக் கிடைக்கும் நீரினைப் பயிரின் நீர்த்தேவையைக் கருதிச் செட்டாகப் பயன்படுத்துவதிலேயே நீர்ப்பாய்ச்சல் வினைத்திறன் காணப்படுகிறதென்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

## உசாவியவை


1. Ward, R. C., 1972 February, Estimating streemflow using Thornthwaite's climatic water - balance. **Weather**, pp. 73–84.

2. Thornthwaite, C. W., 1948, An approach toward a rational classification of climate. **Geog. Rev.**, 38, pp. 55–94.

3. Thornthwaite, C. W., and Mather, J. R., 1955, The water balance laboratory of climatology, Centerton, New Jersey publ. in climat., 8, pp. 1–86.

4. Blaney, H. F. and Criddle, W. D., 1950, Determining water requirements in irrigated areas from climatological and irrigation data, SCS–TP–96, Soil Conservation Service, U.S. Department of Agriculture, Washington, D. C.

5. Doorenbos, J. and Pruitt, W. O. 1975, Crop water requirements, Irrigation and drainage paper No. 24, Food and Agriculture Organization, Rome.

6. Boss, M. G., and Nugteren, J., 1974, On irrigation efficiencies. International Institute for Land Reclamation and Improvement, Wageningan, Holland.


★●★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் வணிக கணங்களும் நகரங்களும் (கி. பி. 1000 - 1250)

**சி. பத்மநாதன்**

இலங்கையிற் சோழராட்சி ஏற்பட்டதிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டுவரையான காலப் பகுதியிலே தமிழ் வணிகர் குழாங்கள்பல சமுதாயத்திற் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தன. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல், வாணிப, கலாசாரத் தொடர்புகளின் பயனாகவே **திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்**, **வீரவளஞ்சியர்**, **நானாதேசிகள்** முதலான வணிகர் அமைப்புக்கள் இலங்கையில் வளர்ச்சியடைந்தன. கிறீஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலிருந்து தொடர்ச்சியாகவே இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்குமிடையில் வாணிபம் நடைபெற்றுவந்தது. இலங்கையில் உற்பத்தியான முத்து, இரத்தினம்; யானைத் தந்தம் முதலான போகப் பொருட்கள் அதிக பெறுமதி வாய்ந்தனவாயிருந்தன. பல நாடுகளிலுள்ள உயர்ந்தோர் குழாத்தினர்கள் அத்தகைய பொருள்களை விரும்பிப் பயன்படுத்தினார்கள். அவை தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டு, அங்கிருந்து கடல் வழியாகவும் தரை வழியாகவும் தூரதேசங்களுக்கு அனுப்பப்பட்டன. இலங்கைக்குத் தேவைப்பட்ட துணி வகைகள், உணவுப் பொருள்கள், உலோகப் பொருள்கள் முதலியவற்றுட் குறிப்பிடத்தக்க பகுதி தென்னிந்தியத் துறைமுகங்களினூடாக அங்கு எடுத்துச் செல்லப்பட்டன. புராதன காலத்திலிருந்து தென்னிந்தியாவும் இலங்கையும் ஒரே வர்த்தக நிலையமாக இணைந்திருந்தன.

**பாக்குநீரிணை** வழியான இந்திய — இலங்கை வர்த்தகம் பெரும்பாலும் தமிழக வணிகர் வசமாயிருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழக வணிகரின் நடமாட்டங்களும் நடவடிக்கைகளும் இலங்கையின் துறைமுகப் பட்டினங்களிலும் அவற்றை அடுத்துள்ள கரையோரப் பகுதிகளிலும் நகரங்களிலும் தமிழரின் குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு வழியமைத்தன. கி. பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிலே தமிழ் வணிகரின் செல்வாக்கு மிகக் கூடுதலான அளவிலே ஏற்படலாயிற்று. கூட்டுறவு முறையிலமைந்த தமிழ் வணிகரமைப்புக்கள் அக்காலத்திலிருந்து இலங்கை வர்த்தகத்திலே பங்கு கொள்ளத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய அமைப்புக்கள் இலங்கை வாணிபத்திலும் சமுதாயத்திலும் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கினைத் தெளிவான முறையிற் புரிந்து கொள்வதற்குத் தென்னிந்தியாவிலே **அய்யாவொளே**, **வீரவளஞ்சியர்**, **நானாதேசிகள்** போன்ற கூட்டத்தவர் உருவாகி வளர்ச்சியடைந்தமையினை இங்கு சுருக்கமாக எடுத்துரைப்பது அவசியமாகின்றது.

### தென்னிந்திய வணிகர்

கர்நாடகத்திலும் தமிழகத்திலும் முறையே வாதாபிச்சாளுக்கியரும் காஞ்சிப் பல்லவரும் ஆட்சிபுரிந்த காலத்தில் – குறிப்பாக எட்டாம் நூற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருண்டிலிருந்து – அய்யாவொளே, வளஞ்சியர் முதலான வணிகரமைப்புக்கள் தோன்றலாயின. சாளுக்கியரின் பிரதான நகரங்களுள் ஒன்றாகிய ஐகொளே என்னும் நகரமே அய்யாவொளே என்ற வணிகரமைப்பின் உற்பத்தித் தானமாகும்.[1] வாணிப விருத்தியால் பெருவளர்ச்சி பெற்ற நகரங்களுள் ஐகொளே என்பதும் ஒன்றாகும். அங்கு பெருந்தொகையில் அமைக்கப் பெற்றிருந்த இந்துக் கோயில்களும் சமணப் பள்ளிகளும் அவற்றின் அழி பாடுகளிடையிற் காணப்படும் சாசனங்களும் ஐகொளே நகரம் வாதாபிச் சாளுக்கியரின் காலத்தில் எத்தகைய வளத்தினைப் பெற்றிருந்தது என்பதை உணர்த்துகின்றன. அய்யாவொளே வணிகரின் சாசனங்களிற் காலத்தால் மிக முற்பட்டவை ஐகொளே நகரிலே காணப்படுகின்றன. அவை எட் டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஐகொளே நகரிலே உற்பத்தியான பெருவணிகரமைப்பொன்றிற்கு அய்யாவொளேய ஐநூர்வ்வர ஸ்வாமிகளு என்னும் பெயர் உருவாகியது. கர்நாடகம், தெலுங்கு தேசம், தமிழகம், மலையாளம் முதலியவற்றில் அய்யாவொளே வணிகர் வாணிப நடவடிக்கை களை மேற்கொண்டிருந்தனர். எனவே அங்கெல்லாம் அவர்களுடைய நிலை யங்களும் செல்வாக்கும் ஏற்பட்டன. அய்யாவொளே அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்த வணிகர் கூட்டங்கள் பல காலப்போக்கில் அதன் பெயரைக்கொண்டு அழைக்கப்பெற்றன. சோழர் காலத்திலே தமிழகத் திற் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்த 'திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்' தமிழ்ச் சாசனங்களிலே 'ஸ்ரீ, அய்யப்பொழில்புர பரமேஸ்வரிக்கு மக்க ளாகிய'வர் என்று வர்ணிக்கப்பட்டுள்ளமை அவர்களுக்கும் அய்யாவொளே வணிகருக்கும் இடையிலான தொடர்பினைக் குறிப்பதாயுள்ளது. நானாதேசி, வீரவளஞ்சியர், மணிக்கிராமம் முதலிய பிற வணிகரமைப்புக்களும் எட் டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட தென்னிந்திய சாசனங்களிலே குறிப் பிடப்படுகின்றன.

கூட்டுறவு முறையிலமைந்த வணிகர் சங்கங்கள் புராதனகால இந்தியாவில் வளர்ச்சியடைந்திருந்தன. அவற்றை ஸ்ரேணி, நிகம, பூக எனப் பலவாறு இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பௌத்த சாதகக் கதைகள், இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள் போன்ற இலக்கியங்களிலும் பல்வேறு பகுகளிலுள்ள சாசனங்களிலும் அவற்றைப்பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. சங்ககாலத் தமிழ் நூல்களில் சாத்து என்னும் வணிகர் கணம் குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. ஆயினும், அவற்றிற் கும் பிற்பட்ட காலத்து அய்யாவொளே முதலிய தென்னிந்திய வணிகர் கணங்களுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை. அய்யாவொளே போன்ற (தென்னிந்தியாவில் உருவாகிய) வணிகர் கணங்கள் மராட்டிய தேசத்திற்கு வடக்கிலேசென்று வாணிபம் நடாத் தியதற்குச் சான்றில்லை, இந்தியாவிலே பெரும்பான்மையும் திராவிட மொழிகள் வழங்கிய பிரதேசங்களே அவற்றின் வாணிப வலயத்துள் அடங்கியிருந்தன. அவை கடல்வழி வர்த்தகத்திலும் பங்கு கொண்டிருந்தன.

எட்டாம் நூற்றாண்டிலிருந்து தென்னிந்திய சமுதாய வரலாற்றில் வணிகர் சங்கங்களின் வளர்ச்சி ஒரு பிரதான அம்சமாய் அமைகின்றது. அது பொருளாதார அமைப்பிலும் வாணிபத்திலும் ஏற்பட்ட வளர்ச்சி யின் பிரதிபலிப்பாகவே கொள்ளத்தக்கது. எட்டாம் நூற்றாண்டிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராபியர் வனுந்தரப் பிரதேசங்களிலிருந்து வெளிப்பட்டு மேற்காசியா, பாரசீகம், மத்தியாசியா, வடஆபிரிக்கா முதலியவற்றைக் கைப்பற்றி வலிமை மிக்கதான பேரரசொன்றினை நிறுவினுர்கள். ஆசிய - ஐரோப்பிய வர்த்தகத்தின் உயிர்நாடியான தரைவழிப் பாதைகள் அராபியர்வசமாயின. மேலும், அவர்கள் விரைவிலே மத்தியதரைக்கடல், பாரசீக வளைகுடா என்பவற்றிலும் இந்து சமுத்திரத்திலும் ஆதிபத்தியம் பெற்றுர்கள். அராபியரின் ஆதிபத்தியம் ஏற்பட்டதன் விளைவாகக் கடல்வழி வாணிபம் பெருவளர்ச்சியடைந்தது. அராபியக் கப்பல்களும் பாரசீகக் கப்பல்களும் கூடுதலான அளவிலே வாணிபத்தின்பொருட்டு இந்தியக் கரையோரங்களுக்குச் செல்லத் தொடங்கின. மிளகு, சுக்கு, இஞ்சி, மஞ்சள் முதலியனவும், பலவகைப் பருத்தியாடைகளும், சந்தனம், அகில் முதலிய வாசனைப் பொருள்களும், முத்து, இரத்தினம் போன்ற போகப் பொருள்களும் தென்னிந்தியத் துறைமுகப் பட்டினங்களிலிருந்து ஏற்றுமதியாகின. அராபியரின் வாணிப நடவடிக்கைகள் தென்னிந்திய வணிகருக்குச் சவாலாகவும் அதேவேளை அரியவாய்ப்பாகவும் அமைந்தன. அராபியரின் ஊடுருவல்களை மட்டுப்படுத்திக் கொள்வதற்கும் அவர்களால் ஏற்பட்ட வர்த்தகப் பெருக்கத்தின் வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் பல வணிகர் கூடிக் கூட்டாக இயங்குவது இன்றியமையாதவொரு தேவையாகியது. அத்தேவையின் அடிப்படையிலேயே அய்யாவொளே போன்ற வணிகர் கணங்கள் உருவாகியிருத்தல் வேண்டும்.

தக்கிணத்திலும் தமிழகத்திலும் ஏற்பட்ட உற்பத்திப் பொருட்களின் பெருக்கமும் பெருவணிகர் கணங்களின் வளர்ச்சிக்கு ஏதுவாயிருந்தது. கி. பி. ஏழாம் நூற்றுண்டளவிலே தீபகற்ப இந்தியாவிலே குறிப்பிடத்தக்க சமுதாய மாற்றங்கள் ஏற்படலாயின. காடுகள் அழிக்கப்பட்டுப் பரந்தளவிலே விளைநிலங்கள் உருவாக்கப்பட்டன. ஆற்றோரங்களிலும் மலைச்சாரல்களிலும் காட்டுப்பகுதிகளிலும் வாழ்ந்த மக்களிடையே பொருட்பரிவர்த்தனை கூடுதலான அளவில் ஏற்பட்டது. பிரம்மதேயங்கள், கோயில்கள், சமணப் பள்ளிகள் போன்ற அமைப்புக்களின் காரணமாகப் பொதுவான கலாச்சார அம்சங்கள் அவர்களிடையே ஏற்படலாயின. தொழில், மரவேலைப்பாடு, உலோகவேலைப்பாடு போன்ற பலகைத்தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டது. சனப்பெருக்கமும் நடமாட்டமும் உற்பத்திப் பெருக்கமும் வாணிபவளர்ச்சிக்குப் பெரிதும் பொறுப்பாகவிருந்தன. துறைமுகப் பட்டினங்களும் உள்ளூர்ப் பகுதிகளும் வழிப்பாதைகளினுலே நன்கிணைக்கப்பட்டன. வணிகர் பெருமளவிலே கூடுமிடங்களிற் பல நகரங்கள் வளர்ச்சியடைந்தன. வாதாபிச் சாளுக்கியரும் பின்பு இராஷ்டிரகூடரும் ஆதிக்கஞ் செலுத்திய காலப்பகுதியிலே தக்கிணத்தில் உருவாகியிருந்த அவர்களின் மேலாதிக்கமும் அதனுல் ஏற்பட்ட அமைதியான சூழ்நிலையும் இவ்வளர்ச்சிகளுக்குச் சாதகமாயிருந்தன. கர்நாடகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த அவர்களின் பேரரசிலுள்ள பகுதிகளெல்லாவற்றுள்ளும் கர்நாடகத்திலேயே வணிக கணங்கள் கூடுதலான வளர்ச்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. கல்யாணிச் சாளுக்கியரதும் சோழரதும் ஆதிக்கம் நிலைபெற்ற காலப்பகுதியில் வணிக கணங்களின் வளர்ச்சி தென்னிந்தியாவில் உன்னத நிலையினையடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியர் மத்தியாசியப் பகுதிகளைக் கைப்பற்றியதன் விளைவாகப் பத்தாம் நூற்றண்டளவில் சீனு, இந்தியா, மேற்காசியா ஆகியவற்றுக் கிடையிலான தரைவழியான வணிகப்பாதைகள் தடைப்பட்டன. அதனுல் இந்துமாக்கடல்மூலமான கடல்வழி வாணிபம் அதிகரித்தது. நக்கவாரம், சாந்திமத்தீவு முதலிய கடல் நடுவிலுள்ள தீவுகளைக் கடற்படைகொண்டு கைப்பற்றியிருந்த சோழர்கள் இந்தியக் கரையோரங்களை அடுத்துள்ள கடல்வழிப் பாதைகளின்மூலம் நடைபெற்ற வாணிபத்திலே கவனஞ் செலுத்திஞர்கள். சுங் வமிசத்தைச் சேர்ந்த சீனமன்னர்கள் சீனுவின் வெளிநாட்டு வர்த்தகத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். சீனுவின் துறைமுகங்களுக்கு அயல்நாட்டு வணிகரை வர வழைப்பதற்கெனச் சீனவரசாங்கம் பிறதேசங்களுக்குப் பல பிரசாரக் குழுக்களை அனுப்பியிருந்தது.[2] சீனவரசாங்கத்தின் கொள்கைகளும் இக் காலத்திற் கடல்வழி வாணிபம் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாயிருந்தன. சோழர்கள் பதினேராம் நூற்றுண்டிற் சீனுவுடன் ஏற்படுத்தியிருந்த தொடர்புகளுக்கு வாணிபமே மூலகாரணமாயிருந்தது எனக் கருதலாம். முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங் கன் ஆகியோர் சீனப்பேரரசரிடம் தூதுக்குழுக்களை அனுப்பியிருந்தனர். அத்தகைய நல்லுறவுகளின் பயனுக பருத்தித் துணிவகைகள் வாசனைச் சரக்குவகைகள், போகப் பொருட்கள் என்பவற்றிலே சீனுவிற்கும் தென் னிந்தியாவிற்குமிடையில் பெருமளவிலான வாணிபம் நடைபெற்றது.[3] கடல்வழி வணிகப் பாதைகளின் பிரதான கேந்திர நிலையங்கள் தமிழகம், ஈழம் ஆகியவற்றின் கரையோரங்களில் அமைந்திருந்தமையால் வாணிபம் பெருகியது. இத்தகைய பின்னணியிலே நானுதேசித் திசையாயிரத்து ஐஞ் ஞூற்றுவர் போன்ற தென்னிந்திய வணிக கணங்கள் பெருமளவிலே கடல் வாணிபத்திற் பங்குகொண்டு இலங்கை, அருமணம், சுமாத்திரா, சீனு போன்ற கடல்கடந்த நாடுகளிலே வாணிப நடவடிக்கைகளை மேற் கொண்டன.[4]

தமிழகத்திலே காணப்பெற்ற வணிகர் கணங்களுள் **மணிக்கிராமம், நகரத்தார், நானுதேசிகள், வீரவளஞ்சியர், திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்** என்பனவே பிரதானமானவை. இவற்றுள் பதினேராம் நூற்றுண்டுவரை யான காலப்பகுதியில் **மணிக்கிராமம்** என்னும் கூட்டத்தவர் ஏனையோ ரைக் காட்டிலும் முதன்மை பெற்றிருந்தனர். மகோதைப் பட்டினம், உறையூர், கொடும்பாளூர், தலைக்காடு போன்ற தென்னகத்து நகரங்களில் அவர்களின் வாணிப நிலையங்கள் அமைந்திருந்தன.[5] இலங்கைக்கும் சீயம் நாட்டிற்கும் சென்று அவர்கள் வாணிபஞ் செய்திருந்தனர்.[6] பாண்டிய மன்னரின் சாசனங்கள் சிலவற்றிலே **நகரத்தார்** என்ற வணிக கணத்தவ ரின் நடவடிக்கைகள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.[7]

பதினேராம் நூற்றுண்டிலே **திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர்** என்ற வணிகர் கணம் மிக முன்னேற்றமடைந்தது. அக்கூட்டமானது ஐஞ்ஞூற் றுவர், திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர், நானுதேசி திசையாயிரவர் ஐஞ் ஞூற்றுவர் எனப் பலவாறு தமிழ்ச் சாசனங்களிலும் கன்னடக் கல்வெட் டுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்ற கணத்தின் அமைப்பானது தென்னிந்தியாவிலே கூட்டுறவு முறையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லமைந்த வணிகர் கணங்களின் வளர்ச்சியிலுள்ள மிகவுயர்ந்த நிலையினைக் குறிப்பதாக அமைகின்றது. திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் வேறு பல வணிகர் கூட்டங்களையும் தமது பேரமைப்பிலே சேர்த்திருந்தார்கள். அவர்கள் அரசரிடமிருந்து சில விருதுகளையுஞ் சிறப்புரிமைகளையும் பெற்றிருந்தார்கள். தென்னிந்திய வணிகர் கணங்களுள் ஐஞ்ஞூற்றுவர் மட்டுமே தங்கள் ஆவணங்களிலே 'மெய்க்கீர்த்தி' யினைச் சேர்த்துக்கொள்ளும் வழக்கத்தைப் பின்பற்றினர்கள்.

ஐஞ்ஞூற்றுவரின் மெய்க்கீர்த்தியானது, **'ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனுஸ்ரய பஞ்சத வீரஸாஸன வக்ஷமீ லங்க்ருத வக்ஷஸ்தல'** என்ற சமஸ்கிருதச் சொற்களோடு தொடங்கும்.[8] இதில் அடங்கிய வர்ணனைகள் பொதுவாக மன்னர்களின் மெய்க்கீர்த்திகளில் வருவது கவனித்தற்குரியது. 'மூன்றுலகங்களுக்கும் புகலிடமான' எனப் பொருள்படும் **திரிபுவனுஸ்ரய** என்னும் மொழியானது சாளுக்கிய மன்னர்களின் வழமையான விருதுப் பெயர்களுள் ஒன்ருகும். சாளுக்கியரின் ஆட்சியில் ஐஞ்ஞூற்றுவர் கணம் உருவாகியமையால் அம்மன்னர்களின் விருதுப்பெயரை அவர்கள் பெற்றிருத்தல்வேண்டும். ஐஞ்ஞூறு வீரசாசனங்களைப் பெற்ற சிறப்பினையுடையவர் என்ற ஐதிகத்தின் காரணமாக ஐஞ்ஞூற்றுவர் என்ற கணப்பெயர் ஏற்பட்டிருத்தல் கூடும் என்பது சிந்தனைக்குரியதாகும். ஐஞ்ஞூற்றுவரின் மெய்க்கீர்த்தியானது அவர்களின் உற்பத்தி, சமுதாய உறவுகள், வாணிப நடவடிக்கைகள், அறச்செயல்கள், சீர்வரிசைகள் என்பனவைபற்றிய விவரங்களைச் சுருக்கமாகவும் கவிரசனையுடனும் தொகுத்துக் கூறும் பான்மையுடையதாகும். வாசுதேவ(ன்), கண்டலி, மூலபத்திர(ர்) ஆகியோரின் வழியில் ஐஞ்ஞூற்றுவர் தோன்றினர்களென்றும் அவர்கள் அய்யப்பொழில்புர பரமேஸ்வரிக்கு மக்களரசியவர் என்றுஞ் சாசனங்கள் குறிப்பிடுகின்றன.[9] பரமேஸ்வரி அவர்களின் இஷ்டதெய்வமென்பதையும் ஐஞ்ஞூற்றுவர் கணம் அய்யப்பொழில்புரத்திலே உற்பத்தியானதென்பதையும் மட்டுமே இக்குறிப்புக்கள் உணர்த்தும்.

சில சாசனங்கள் ஐஞ்ஞூற்றுவரின் வாணிப நடவடிக்கைகளைப்பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றன. பதினெட்டு வகையான தானியங்கள், நெய், வெண்ணெய், உள்ளி முதலிய உணவுப் பொருட்கள், பட்டு வகைகள், பருத்தி ஆடைகள், படுக்கை விரிப்புக்கள், இஞ்சி, மஞ்சள், சுக்கு, மிளகு, கடுகு, சீரகம் போன்ற வாசனைச் சரக்குகள், கனி வருக்கங்கள், உப்பு, வெற்றிலை, பாக்கு, மலர்கள், மாலைகள், மருந்து வகைகள், பொன், வெள்ளி, இரும்பு முதலியவற்றினலான உலோகப் பொருட்கள், கருவிகள், கொள்கலங்கள், யானை, குதிரை முதலிய உயிரினங்கள் போன்றவற்றை எல்லாம் அவர்கள் விற்பனை செய்ததாகச் சாசனங்கள் கூறும்.[10] தரைவழியாகவும் நீர்வழியாகவும் ஏழு கண்டங்களுக்கும் பதினெட்டுத் தேசங்களுக்குஞ் சென்று அவர்கள் வாணிபஞ் செய்ததாகச் சொல்லப்படுகின்றது.[11] கழுதை, ஒட்டகம், எருமை, மாடு முதலிய மிருகங்களிலே அவர்கள் பொதிகளை ஏற்றிச் சென்ருர்கள். மேலும், அவர்கள் ஊர்களிலும் அங்காடிகளிலும் நகரங்களிலும் தாவளம் அமைத்து வாணிபஞ் செய்தனர். அவர்களைப்பற்றிச் சாசனங்களிற் காணப்படும் குறிப்புக்களை நோக்குமிடத்து ஐஞ்ஞூற்றுவர் தென்னிந்தியாவின் உள்நாட்டு வாணிபத்திலும் அயல்நாட்டு வாணிபத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் பெரும் பங்கினைப் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகின்றது. சுமாத்திராவிலுள்ள 1078 ஆம் ஆண்டு வரையப்பெற்ற, தமிழ்ச் சாசன மொன்று ஐஞ்ஞூற்றுவர் அங்குசென்று வாணிபஞ் செய்தததற்குச் சான்று யுள்ளது.[12] அருமண தேசத்திலே நானாதேசி வணிகர் சென்று தங்கியிருந் தனர். அதன் தலைநகரான அரிவட்டனபுரத்திலே ஒரு பெருமாள் கோயிலை அமைத்து அதற்கு நானாதேசி விண்ணகர் எனப் பெயரிட்டிருந்தார்கள். மலை மண்டலத்து மகோதைப் பட்டினத்து ஈராயிரன் சிறியனான குலசேகரநம்பி என்பவன் அக்கோயிலில் மண்டபமொன்றினை அமைத்து அதிலே 'நின் றெரிகை'க்கு நிலைவிளக்கு ஒன்றினையிட்டான்.[13]

கர்நாடகத்திலும் தமிழகத்திலும் ஏற்பட்ட வாணிப வளர்ச்சியாலும் வணிக கணங்கள் பெற்ற செல்வாக்கினாலும் சமுதாய உறவுகளிலே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. நிலக்கிழார்கள் சமு தாயத்திலே பெற்றிருந்த ஆதிக்கம் வணிக கணங்களின் வளர்ச்சியின் விளைவாகச் சிறிது தளர்வுற்றதென்று சிந்திக்கலாம். வணிகர் கணங்கள் கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பல சமூகப்பிரிவுகளுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியதன் பயனாக அவற்றின்மீது செல் வாக்கும் ஆதிக்கமும் பெற முடிந்தது. கன்னடச் சாசனங்கள் சில அய்யா வொளே வணிகருடன் தொடர்பு கொண்டிருந்த மேல்வரும் சமுதாயப் பிரிவுகளைக் குறிப்பிடுகின்றன.

கவறை, சத்திரிகர், செட்டி, செட்டிகுத்தர், செட்டிபுத்திரர், நாடு, நகரம், நானாதேசிகள், வளஞ்சியர், வீரவணிகர், ஸ்வதேசி, பரதேசி, கண்டலி, வத்ரக, காமுண்டஸ்வாமி, ஆவணக்காரர், ஏறிவீரர், முனைவீரர், கொங்கவாளர், மும்முறிதண்டங்கள், அங்கக்காரர், வீரக்கொடி, வியவகாரிகர், பாஞ்சாலர், கும்பலிகர், தண்டுவாயி, வஸ்திரபேதகர், திலகடகர், குரந்தகர், வஸ்திரராக்ஷஸர், தேவாங் கர்......[14]

இச்சமூகப் பிரிவுகள் யாவும் வணிகர், போர்வீரர், தொழில் வினை ஞர் என்னும் மூன்று தொகுதிகளைச் சேர்ந்தவையென்பது குறிப்பிடத் தக்கது. அய்யாவொளே வணிகர் பிறபல வணிகர் கூட்டத்தவரையும் தம்மோடு இணைத்துக்கொண்டதோடு பஞ்சகம்மாளர், நெசவாளர் முதலிய உற்பத்தியாளருடனும் தொடர்பு கொண்டிருந்தனர். பிரபல மான வணிகர் கணங்கள் பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து சேர்த்துக் கொள்வதற்கு மட்டுமன்றி உற்பத்தி நிலையங்களை நிறுவியும் ஆதரித்தும் வந்தன என்றும் கருதலாம். இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாகவே நானாதேசி, நகரம், வளஞ்சியர் போன்ற வணிகர் மத்தியகாலத் தமி ழகத்து வலங்கை, இடங்கை என்னுமிரு தொகுதிகளைச் சேர்ந்த சமுதாயப் பிரிவுகள் பலவற்றின் தலைவராயினர் எனக் கருதலாம்.

பட்டினங்களின் வளர்ச்சியிலும் நிர்வாக அமைப்பிலும் வணிக கணங் கள் கொண்டிருந்த பங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். பெருவணிகர் கணங்களோடு பல சமூகப் பிரிவுகள் இணைந்திருந்தமையால் அவற்றின் செல்வாக்கு மேலோங்கிய பகுதிகள் சில தடவைகளிலே பட்டினங்களாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனப்படுத்தப்பட்டன. மணிக்கிராமப் பட்டினம், நானுதேசிதசமடிப் பட்டினம், ஏறிவீர பட்டினம் போன்ற வணிகர் நகரங்கள் சிலவற்றைத் தென்னிந்திய சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அத்தகைய பட்டினங்கள் சுயாட்சியுரிமை பெற்ற நிர்வாகப் பிரிவுகளாகவும் சமுதாயவமைப்புக்களாகவும் விளங்கின. சில தடவைகளிலே பட்டணஸ்சுவாமி என்ற பட்டத்தையுடைய அதிகாரி அவற்றின் நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருந்தான்.[15] பாதுகாவல், வரி சேர்த்தல், சமுதாய வழமைகளை நிலைநாட்டுதல், தகராறுகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குதல், பொதுநலப் பணிகளை மேற்கொள்ளுதல், அறநிலையங்கள், கோயில்கள், அறக்கட்டளைகள் என்பவற்றைப் பொறுப்பேற்று நடாத்துதல் போன்ற பொறுப்புக்களை வணிக கணங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பட்டினங்கள் மேற்கொண்டிருந்தன. சபை, ஊர் போன்ற அமைப்புக்களிற்போல பொதுவிடயங்களைக் குறித்துத் தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக வணிக கணத்தவர் அனைவரும் 'நிறைவரக் கூடி'க் கூட்டாகச் செயற்படுவது வழக்கமாயிருந்தது. சில சந்தர்ப்பங்களில் வணிக கணங்கள் பிரதிநிதித்துவ அடிப்படையிற் கூடிக் குறிப்பிட்ட சில பணிகளை நிறைவேற்றுவதற்கு வாரியங்களை அமைத்தனர்.

அரசரின் அனுமதியோடும் ஆதரவோடும் அமைக்கப்பெற்ற வணிகர் நகரங்கள் தமது அதிகாரம், சிறப்புரிமைகள், சீர்வரிசைகள் என்பன குறித்துப் பட்டயங்களைப் பெற்றிருந்தன. வீரராகவன் என்ற சேர மன்னன் மணிக்கிராமத்து லோகப்பெருஞ் செட்டிக்குக் கொடுத்த பட்டயம் தக்கவோர் உதாரணமாகும். அதன் வாசகம் மேல்வருமாறுள்ளது:

மகோதைப் பட்டினத்து இரவிக்கொற்றனைய சேரமான் லோகப் பெருஞ்செட்டிக்கு மணிக்கிராமப் பட்டினங் குடுத்தோம். விளாவாடையும் பவளத்தாங்கும் பெறுபேறும் கடத்து வளஞ்சியமும் வளஞ்சியத்தில் தனிச்செட்டும் முற்சொல்லும் முன்னடையும் பஞ்சவாத்தியமும் சங்கும் பகல்விளக்கும் பாவாடையும் ஐந்தோளமும் கொற்றக்குடையும் வடுகுப் பறையும் இருபடிதோறணமும் நாலுசேரிக்கும் தனிச்செட்டும் குடுத்தோம். வாணியரும் ஐங்கம்மாளரும் அடிமை குடுத்தோம். நகரத்துக்குக் கர்த்தாவாய இரவிக் கொத்தனுக்கு பற கொண்டு அளந்து நிற கொண்டு சக்கரையோடு கஸ்தூரியோடு விளக்கெண்ணையோடு இடயில் உள்ளட எப்பேர்ப்பட்டதிலும் தரகும் அதின் அடுத்து சுங்கமும் கூட கொடுங்கூலூர் அளவியில் நீர் முதலாய செப்பேடு எழுதிக் குடுத்தோம் சேரமான் லோகப் பெருஞ் செட்டியான இரவிக் கொற்றனுக்கு. இவன் மக்கள் மக்களுக்கே வழிவழியே பேராகக் குடுத்தோம். இடறியும் பன்றியூர் கிராமமும் சோகிறக் கிராமமும் அறியக் குடுத்தோம். வேணுடும் ஓடு நாடும் அறியக் குடுத்தோம். ஏராநாடும் வள்ளுவநாடும் அறியக் குடுத்தோம்.[16]

இச்செப்பேட்டின் வாயிலாக மணிக்கிராமப் பட்டினம் என்ற நகரமொன்று உருவாகியிருந்ததென்பதையும் அதன்மீதான அதிகாரம் மகோதைப் பட்டினத்தைச் சேர்ந்த இரவிக் கொற்றனிடம் அரசனுல் அளிக்கப்பட்டது என்பதையும் அறிய முடிகின்றது. இரவிக் கொற்றன் சேர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான் லோகப் பெருஞ் செட்டி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவனுக்குத் கிடைத்த ஆட்சியதிகாரம், சீர்வரிசைகள், சிறப்புரிமைகள் என்பவற்றைச் செப்பேடு குறிப்பிடுகின்றது. குறுநில மன்னரான சாமந்தருக்குரிய அதிகாரங்களையும் சீர்வரிசைகளையும் அவன் பெற்றிருந்தமை கவனித்தற்குரியதாகும். இரவிக்கொற்றன் மணிக்கிராமப் பட்டினத்தின் தலைமையதிகாரியாக, கர்த்தாவாக, அரசனாலே நியமிக்கப் பெற்றிருந்தான். மணிக்கிராமப் பட்டினத்தின் தலைமைப் பதவியும் அதற்குரிய சிறப்புரிமைகளும் இரவிக்கொற்றனுக்கும் அவனுடைய வழிமுறைச் சந்ததியாருக்கும் பரம்பரையுரிமையாகக் கொடுக்கப்பட்டன.

பட்டினத்து அதிகாரியென்ற வகையில் இரவிக்கொற்றன் அங்கு வாழ்ந்த வணிகர், பஞ்சகம்மாளர் ஆகியோர்மீது எஜமானமும் ஆதிக்கவுரிமையும் பெற்றான். வெண்கொற்றக்குடை, பஞ்சவாத்தியம், முத்துப் பல்லக்கு, சங்கு, நிலப்பாவாடை முதலியன பதவிக்குரிய சிறப்புரிமைகளாக அவனுக்குக் கொடுபட்டன. மேலும், வாணிபத்திலே சில சிறப்புரிமைகளும் ஏற்றுமதி வாணிபத்தில் ஏகபோக உரிமையும் அவனுக்குக் கிடைத்தன. எவ்வகைத்தான பொருட்களையும் விற்பனை செய்யும்பொழுதும் கடவுகளிலே கடத்திச் செல்லும்பொழுதும் அரசிறையாகக் கொடுக்கப்பட வேண்டிய தரகு என்னும் ஆயத்தையும் சுங்கவரிகளையும் தானே சேர்த்துக் கொள்வதற்கான அதிகாரத்தையும் அவன் பெற்றான். அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவர் அமைத்த பட்டினங்களின் நிர்வாகமுறை மணிக்கிராமப் பட்டினத்து நிர்வாக முறையிலிருந்து சிறிது வேறுபட்டதாகும். அய்யாவொளே அமைத்த அய்யப்பொழில் நகரங்களின் நிர்வாகம் தனியொருவரின் பொறுப்பாகவன்றி குழு அடிப்படையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகத்தில் வீரவளஞ்சியர் அமைத்திருந்த நகரங்கள் **வணஞ்சு வட்டணம்** என்றழைக்கப்பட்டன.[17] கல்யாணிச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் ஜெயசிங்கனுடைய ஹூல்கூர் கல்வெட்டு (1038) அய்யாவொளே கணத்தைச் சேர்ந்த வீரவளஞ்சியர் வசமாயிருந்த **வணஞ்சு வட்டணம்** பற்றிக் குறிப்பிடுகின்றது.[18] கன்ஹர(ன்) காலத்து (1250) மந்தாபுரக் கல்வெட்டிலும் **வணஞ்சுவட்டணம்** ஒன்றைப்பற்றிய குறிப்பு வருகின்றது.[19]

அய்யாவொளே கணத்தவர் அமைத்த நகரங்களிற் சில **ஏறிவீர பட்டிணம்** என்று குறிப்பிடப்பட்டன. இராசாதிராசனின் 32 ஆம் ஆண்டில் (1053) எழுதப்பட்ட சாசனமொன்றிலே அய்யாவொளே வணிகர் **ஏறிவீர பட்டினம்** ஒன்றை அமைத்தமைபற்றிக் கூறப்பட்டுள்ளது.[20] நானாதேசிகளும் அவர்களைச் சேர்ந்த பிற வணிகர் பலருமாகக் கூடி சீராவள்ளி என்னுமூரின் பழம்பெயரை மாற்றி அதனை நகரமாக்கி அதற்கு நானாதேசிய தசமடி **ஏறிவீர பட்டினம்** எனப் பெயரிட்டார்கள். அப்பட்டினத்தவர்க்குச சில சிறப்புரிமைகளையும் அவர்கள் வழங்கினார்கள்.[20] அதற்கு அண்மையில் முத்துகூரு என்னுமிடத்திலும் வீரபட்டினமொன்று அமைந்திருந்தது.[21] காட்டூர் என்பது ஒரு காலப்பகுதியில் அய்யம்பொழில் பட்டினமாயிருந்தது. நானாதேசி திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் மயிலாபுரியிற் கூடி அதன் பழம் பெயரினை மாற்றிக் காட்டூருக்கு ஏறிவீர பட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம் என்று பெயரிட்டார்கள்.[22] இத்தகைய வணிகர் பட்டினங்கள் இலங்கையிலும் அமைந்திருந்தன.

## ஈழத்திலே தமிழ் வணிக கணங்கள்

இலங்கையிலே கி. பி. 900-1250 ஆகிய காலப்பகுதியைச் சேர்ந்த 22 சாசனங்களிலே தமிழ் வணிகரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இவற்றுள் மூன்று சிங்கள மொழியிலுள்ளன.[23] ஏனையவை யாவும் தமிழ்ச் சாசனங்களாகும். இச்சாசனங்கள் அநுராதபுரம், பொலநறுவை, பதவியா, வகால்கட, விகாரேகின்ன, வதுளை, தெகியமுல்ல, கல்தென்பிட்டிய, மணல் கேணி முதலிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[24] இவற்றுட் சில சிறியனவாயுள்ளன, வேறுசில மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளன. ஒரு சில சாசனங்கள் மட்டுமே நீளமானவையாகவும் பழுதடையாதனவுமா யுள்ளன. எனவே இச்சாசனங்களிலுள்ள சான்றுகளின் துணைகொண்டு ஈழத் தமிழ் வணிகர் கணங்களின் வரலாற்றிலுள்ள சில பிரதானமான அம்சங்களைமட்டுமே அறிந்துகொள்ளமுடிகின்றது. எனினும் அண்மைக் காலத்திலே இலங்கைத் தமிழ்ச் சாசனவியலில் ஏற்பட்ட பெருமுன் னேற்றத்தின் பயனாகவே ஓரளவிற்கேனும் விரிவாக ஈழத்து வணிக சங்கங் களைப்பற்றி ஆராய்ந்துகொள்ள முடிகிறதென்பது குறிப்பிடத்தக்கது. மணிக்கிராமம் என்ற வணிகர் கணம் பத்தாம் நூற்றாண்டிலே இலங்கை யில் இருந்தமைக்கு நான்காவது கஸபனுடைய வதுளைத் தூண் கல்வெட்டு சான்றளிக்கின்றது.[25] ஹோப்பிட்டிகம என்னுமிடத்திலே மணிக்கிராம கணத் தவர் நிலையாகவிருந்து வாணிபஞ் செய்தனர் என்பதை இச்சாசனத்தின் மூலம் அறிய முடிகின்றது.[26] அவர்கள் முன்னைய அரசனொருவனிடமிருந்து பெற்ற சிறப்புரிமைகளை அரசாங்க அதிகாரிகள் மீறியமையால் ஊரவரோடு சேர்ந்து அரசினிடம் முறையிட்டுத் தமது குறைகளுக்குப் பரிகாரந் தேடி னார்கள். இலங்கையின் உள்ளூர்ப் பகுதியான ஹோப்பிட்டிகமவில் மணிக் கிராமத்தவர் வாணிப நிலையமொன்றினை அமைத்திருந்தமையால் அவர்கள் இலங்கையின் உள்நாட்டு வாணிபத்திற் பங்கு கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

நான்குநாட்டார் என்ற பிறிதொரு வணிகர் கணமும் பத்தாம் நூற் றாண்டில் இலங்கை வாணிபத்திற் பங்குகொண்டிருந்தது. சேனுவர்மன் என்ற மன்னனொருவனின் ஆட்சிக் காலத்தில் நான்குநாட்டார் அநுராத புரநகரின் பௌத்தப் பள்ளியொன்றை அமைத்து அதற்கு மாக்கோதைப் பள்ளியென்று பெயரிட்டார்கள்.[27] 'நான்குநாட்டுத் தமிழர்' என்று அவர் களைச் சாசனங் குறிப்பிடுகின்றது. அநுராதபுரத்திற் நிலைகொண்டிருந்த நான்குநாட்டார் பௌத்தப் பள்ளியொன்றினை மாக்கோதைப் பள்ளியென்று பெயர் சூட்டியதால் அவர்கள் மலையாளநாட்டு மாக்கோதைப் பட்டணத்தி லிருந்து இலங்கைக்குச் சென்றிருந்தனரென்று கொள்ளலாம். கன்னட சாசனங்கள் இவ்வணிகர் கணத்தை நால்குநாடு என்று குறிப்பிடுகின்றன. அய்யாவொளே என்னும் பேரமைப்பில் நான்குநாடும் சிலவிடங்களிலே சேர்ந்திருந்தது. பத்தாம் நூற்றாண்டிற்கும் பிற்பட்ட காலத்து ஈழத்துச் சாசனங்களில் நான்குநாட்டார்பற்றிய குறிப்பெதுவுங் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யாவொளே வணிகர் சோழராட்சி ஏற்பட்டிருந்த காலத்தில் இலங்கையிலிருந்தமைக்குச் சில உறுதியான சான்றுகள் கிடைக்கின்றன. பதவியாவிலும், பொலநறுவையிலும் காணப்பெற்ற சோழர் காலத்துக்குரிய தமிழ்க் கல்வெட்டுக்களிலே தமிழ் வணிகரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. பதவியாவிலுள்ள 'முதலாம் சிவாலயம்' இராசராசனது ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட இரவிகுலமாணிக்க ஈஸ்வரமாகும். அதன் அத்திவாரக் கற்களிலே 'அழகன் வத்தமனை தேசி...... ய்யாயத்துணைச் செட்டி இட்டது', இக்கல்லு (பதியில்) வணிகர் தனி (அப்பன் இட்டது) என்ற தொடர்கள் காணப்படுகின்றன.[28] நானாதேசி வணிகர் கணத்தைச் சேர்ந்தவர்களும் அக்கோயிலை நிர்மாணிப்பதிலே பங்குகொண்டிருந்தனர் என்பது சாசனக் குறிப்பினலே தெளிவாகின்றது. பதவியாச் சிவதேவாலயத்தின் அழிபாடுகளிடையே காணப்பட்ட இராசாதிராசனின் கல்வெட்டில், (நானாதேசியன் கொண்ணுவில் வெண்காடன் எறிமணியொன்றை இரவிகுலமாணிக்க ஈஸ்வரத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தான் என்று கூறப்பட்டுள்ளது. இச்சாசனத்தைப்பற்றி கா. இந்திரபாலா மேல்வருமாறு கூறுகின்றமையும் கவனிக்கத் தக்கதாகும்.

> ''இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் எனப் பெயரிய கோயிலுக்குச் சோழரின் ஆட்சியலுவலரும் போர்வீரரும் வணிகருமாயிருந்திருக்கக்கூடியவர்கள் வழங்கிய நன்கொடைகளை இச்சாசனம் பதிவு செய்கின்றது. நானாதேசியன் என்பது நன்கறிமுகமான நானாதேசி வணிகர் கணத்தைச் சேர்ந்த ஒருவனைக் குறிக்கின்றது. எனவே நன்கொடையாளரென இவ்வாவணத்திற் குறிப்பிடப்பட்டவர்கள் பிரதானமாகச் சோழராட்சி அலுவலராயும் படைவீரராகவும் வணிகராயுமிருந்தனர் என்று முடிவு கொள்வது தவறாகாது.[29]

சோழராட்சியில் நானாதேசி வணிகர் பதவியாவிலிருந்தமைக்குச் சான்றுள்ளதால் நானாதேசிகளால் அந்நகரிலே அமைக்கப்பட்ட வாணிப நிலையங்களும் குடியிருப்புக்களும் உருவாகுவதற்கு அத்திவாரமாயமைந்தன என்று கொள்வது பொருத்தமானதாகும். சோழராட்சிக் காலத்திற்குரியதென்று கொள்ளத்தக்க வரிவடிவங்களில் அமைந்த ஈரடித் தமிழ்ச் சாசனமொன்று திசை **ஆயிரவர் ஐஞ்ஞூற்றுவர்** என்ற வணிக கணத்தைக் குறிப்பிடுகின்றது. அச்சாசனத்தின் வாசகம் மேல்வருமாறுள்ளது.

> ஸ்வஸ்தி ஸ்ரீ வஹி சிந்தயில் டு வாளாப்பள்ளி(யிற்)
> பதினெண் பூமித் தேசித் திசை ஆயிரவர் ஐஞ்ஞூற்றுவர் ....[30]

பதினொராம் நூற்றாண்டின் முதற்பகுதியிற் பொலநறுவையிலே திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் வசித்தமைக்கு இச்சாசனஞ் சான்றாகலாம். சோழராட்சிக் காலத்தில் நகர்ப்புறங்களிலே தங்கியிருந்த தமிழ் வணிகர் கணங்கள் சிங்கள மன்னர்களின் ஆட்சிக் காலத்திற் பெருவளர்ச்சியடைந்தன. அய்யாவொளே வணிகர் கணமானது இலங்கையின் பிரதான நகரங்களிலும் வடமத்திய பகுதியிலுள்ள பிற பலவிடங்களிலும் வர்த்தக நிலையங்களை அமைத்து வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமையினைப் பதினொராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளுக்குரிய சாசனங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. வகால்கட, பதவியா, விகாரேகின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெகியமுல்லை, கல்தென்பிட்டிய என்னுமிடங்களில் அவர்களமைத்திருந்த சாசனங்களின் தொடக்கத்தில் அவர்களின் மெய்க்கீர்த்தி சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் கணத்தின் அமைப்பினை அறிந்துகொள்வதற்கு அவர்களின் சாசனங்களிலுள்ள மெய்க்கீர்த்தியினை இங்கு கவனிப்பது அவசியமாகின்றது. வகால்கட சாசனத்திலுள்ள மெய்க்கீர்த்தி மேல்வருமாறு அமைந்துள்ளது.

> "ஸ்ரீ ஸமஸ்த புவனாஸ்ரய பஞ்சதை வீர ஸாஸன லக்ஷ்மீ லங்க்ருத வக்ஷஸ்தல புவன பராக்ரம வாஸுதேவ கண்டலி மூலவத்ரோத்வவ ஸ்ரீ அய்யப்பொழில்புர பரமேஸ்வரிக்கு மக்களாகிய வெய்ய சுடர் நடு வேல் வீர வளஞ்செயர் மதிதோய் நெடுங்கொடி மாடவீதிப் பதினெட்டுப்
>
> பட்டினமும் முப்பத்திரண்டு வேளர்புரமும் அறுபத்து நான்கு கடிகை தாவளமும் தாவளத்திருந்துதறம் வளர்க்கின்ற செட்டியும் செட்டி புத்திரனும்
>
> கவறை கா(ஸ்ய)பனும் காமுண்டஸ்வாமியும் அங்கக்காறனும் ஆவணக்காறனும்
>
> ......கொங்கவாளரும் வலங்கை......எம்பட்டினம் முந்நூறும் பகை பணிய அறம் வளர கலிமெலிய செங்கோலே முந்நாக சமைதன்மை இனிது
>
> நடாத்துகின்ற பதினெண்பூமித் தேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்.[31]

கர்நாடகத்திலும் தமிழகத்திலுங் கிடைக்கின்ற திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவரின் மெய்க்கீர்த்திகளின் சாராம்சங்கள் இலங்கையிலுள்ள சாசனங்களில் அடங்கியிருத்தல் குறிப்பிடத்தக்கது. அறுபத்துநான்கு கடிகைத் தாவளம் என்பவற்றைச் சாசனங்களிலே குறிப்பிடுவது தென்னிந்திய வணிகரிடையே மரபாகிவிட்டது. தம் மூதாதைகளின் வழமையைப் பின்பற்றியே இலங்கையிலிருந்த ஐஞ்ஞூற்றுவர் இவ்வமைப்புக்களைப் பற்றிய வர்ணனைகளைத் தங்கள் சாசனங்களிலே சேர்த்திருத்தல் வேண்டும். அவர்களின் சிறப்பினை வலியுறுத்துவதற்கு அவ்வர்ணனைகள் பயன்பட்டன.

ஈழத்து ஐஞ்ஞூற்றுவர் கணமானது வீரவளஞ்சியர், நானாதேசிகள், செட்டிகள், செட்டிபுத்திரர், கவறையர், காமுண்டஸ்வாமி, ஆவணக்காரர், வீரக்கொடி முதலான பல பிற வணிகர் குழாங்களையுந் தன்னோடு இணைத்துக் கொண்ட பேரமைப்பாய் விளங்கியது. பதவியா, வகால்கட, விகாரேகின்ன ஆகிய மூன்றிடங்களிலுமுள்ள சாசனங்களிலும் இப்பிரிவுகளிற் பல குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் கணமானது ஈழத்திலிருந்த தமிழ் வணிக கணங்களுள் மிகப் பெரியதாகவும் அதிக செல்வாக்கு வாய்ந்ததாகவும் விளங்கியதோடு அவர்களுக்கெல்லாம் தலைமை தாங்கியதென்றுங் கருதலாம். திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் பொலநறுவைக்கால சமுதாயத்திலே செல்வமும் செல்வாக்கும் பெற்ற கூட்டமாக விளங்கினார்கள். அவர்கள் தென்னிந்தியாவிற்போல இலங்கையிலும் சில சிறப்புரிமைகள் பெற்றிருந்தார்கள். பீடும் சீருமாய் வந்ததாக என்னும் சொற்கள் அவர்களின் சாசனங்களில் வருவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்தற்குரியதாகும். 'பதினெண் பூமி எறிந்தாரை இங்ஙனம் சாத்திக் குலத்துப் பெயரிட்டுச் சிறப்புச் செய்தமையிலாங்கு, நமக்குப் பொதுமக் களும் சிறப்புச் செய்ய வேண்டும்' என்று சாசனமொன்றில் வருந் தொடர் கள் தமிழ் வணிகர் கணங்கள் மக்களாலே சிறப்பிக்கப்பட்டமைக்குச் சான்ருகலாம். **வளஞ்சியர்** என்ற வணிகர் கணத்தைப்பற்றி ஈழத்திலுள்ள நான்கு கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. **வெய்ய சுடர் (மி) நடு வேல் வீரவளஞ்சியர்** என்ற சொற்ருெடர்கள் வகால்கட, விகாரேகின்ன, தெகிய முல்ல ஆகியவிடங்களிலுள்ள ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களிலே காணப் படுகின்றன. பொலநறுவையிலும் பன்னிரண்டாம் நூற்ருண்டின் முதற் பகுதியிலே வீரவளஞ்சியர் வசித்தனர். இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலுள்ள வாணிபத்திலே வளஞ்சியரும் பங்கு கொண்டிருந்தார்கள். வளஞ்சியர் நெடுங்காலமாகவே இலங்கையிலிருந்தமையாலே அவர்களை இலங்கையரென்றே தமிழகத்திற் கருதினுர்கள். அதனுலும் அங்குள்ள வளஞ்சியரிலிருந்து வேறுபடுத்துவதற்குமாக அவர்களைத் **தென்னிலங்கை வளஞ்சியர்** என்று வர்ணித்தார்கள்.

தமிழகத்திலுள்ள இரு சாசனங்கள் தென்னிலங்கை வளஞ்சியர்பற்றிக் கூறுகின்றன. அவற்றுளொன்று தஞ்சாவூர் மாவட்டத்து நன்னிலம் தாலு காவிலுள்ளது.[32] மற்றையது இராமநாதபுர மாவட்டத்துத் தித்தாண்ட புரம் என்னுமிடத்திலுள்ளது. சடையவர்மன் வீரபாண்டியனுடைய காலத் துக்குரிய அச்சாசனத்திலே இவ்வூரில் இருக்கிற அஞ்சு வண்ணம் மணிக்கிரா மத்தோமும் ஆரியரில் சாமந்த பண்டசாலையும் .........பட்டாரியரும் தோயாவாத்திரச் செட்டுகளும் தென்னிலங்கை வளஞ்சியரும் கைக்கோள ரும் தூசுவரும் வாணிபரும் நீண்ட கரையாரும் கோயில் திருமுன்பிலே நிறைவரக் கூடி இருந்து என்ற சொற்ருெடர்கள் வருகின்றன.[33]

சர்வதீர்த்தமுடைய நாயனுர் கோயிலில் ஆவுடைய நாயனுர் எழுந்தரு ளியிருந்த மண்டபமானது பழுதடைந்தமையால் அதனைப் புனரமைப்பதற்கு வேண்டிய முதலைச் சேர்க்கும் நோக்குடன் இரணிய முத்தநாட்டுச் சிறு தூருடையானுன பெருமாள் இராசராசதேவ தென்னவதரையன் திருக் காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் மண்டபத்திலே கூடுமாறு வணி கர் கூட்டத்தவர் பலரையும் பிறரையும் அழைத்திருந்தான். எனவே மணிக்கிராமத்தார், **தென்னிலங்கை வளஞ்சியர்** முதலானேர் கூடி தங்கள் வருமானத்தினிலொரு பகுதியைக் கோயிற்றிருப்பணிக்குக் கொடுப்பதென்று தீர்மானம் நிறைவேற்றினுர்கள்.[34] இத்தகைய நடவடிக்கைகளிற் பங்கு கொண்ட தென்னிலங்கை வளஞ்சியர் தென்பாண்டி நாட்டிலே நிலையாக விருந்து வாணிபஞ் செய்திருத்தல் வேண்டும். **வளஞ்சியர்** என்பது கன் னடத்திலே **வணஞ்ஜிய** என்ற வடிவில் வந்துள்ளது. தமிழ் வழக்கில் வளஞ்சியம் என்பது வாணிபத்தைக் குறித்தது என்பது கடத்து **வளஞ்சியம்** எனச் சாசனத்தில் வருஞ் சொற்ருெடரினுல் உறுதியாகின்றது. தென் னிந்திய சமுதாயத்தில் வளஞ்சியர் காலப்போக்கிலே தனியானவொரு சமூகப் பிரிவானுர்கள்.

நானுதேசி என்னுங் கணத்தவர்பற்றி இலங்கையிலுள்ள ஏழு சாச னங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. நானுதேசி வணிகர் முன்குறிப்பிடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவாறு இலங்கையிற் சோழராட்சிக் காலத்திற் பதவியாவிலே தங்கி யிருந்தனர். கொண்ணுவில் வெண்காடன் என்ற நானுதேசியனைப்பற்றிப் பதவியாவிலுள்ள இராசராசனின் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. லீலாவதி என்னுமரசி பொலநறுவையில் ஆட்சிபுரிந்த காலத்தில் அனுராதபுரத்தில் நானுதேசி வியாபாரிகளிருந்தனர். அந்நகரில் அமைக்கப்பட்டிருந்த பல வ(ல்)லவி மேதாவி என்ற தானசாலைக்குத் தேவையான வாசனைச் சரக்கு வகைகளை நானுதேசி வியாபாரிகள் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை லீலாவதி செய்திருந்தாள்.[35]

பதவியா, வகால்கட, விகாரேகின்ன, தெகியமுல்ல ஆகியவிடங்களிலுள்ள சாசனங்கள் நானுதேசி வணிகரைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. வகால்கட கல்வெட்டிலும் பதவியாவிலுள்ள கல்வெட்டுக்களிலும் நானுதேசி வணிகர் பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நானுதேசி கணத்தைச் சேர்ந்தவர்கள் இச்சாசனங்களிலே தேசி என்று குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. தேசி மண்டை அழகிய மணவாளரான மூன்று தரமலைக்கலங்காத கண்டநாட்டுச் செட்டியார், தேசி வீதிவிடங்கனுன அடைக்கல நாட்டுச் செட்டியார், செங்கண்மாலாரான தேசி பிஞ்ஞகன், தலைத்தலாலுகின்ற தேசி பட்டவர்த்தனம் முதலிய நானுதேசியர்பற்றி வகால்கடக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.[36]

நானுதேசிகளைப்பற்றி இலங்கைச் சாசனங்களிலுள்ள சில குறிப்புக்கள் அவர்களுக்கும் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவருக்கும் இடையிலான தொடர்புகளைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு உதவுகின்றன. தமிழ்ச் சாசனங்களைப் பொறுத்தவரையில் நானுதேசியரைப்பற்றிய செய்திகள் யாவும் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவரின் கல்வெட்டுகளில்மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன. விகாரேகின்னக் கல்வெட்டு ஐஞ்ஞூற்றுவரை **நானுதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்** என வர்ணிக்கின்றது. **பதினெண் பூமித் தேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்** என்ற சொற்றொடர்கள் வகால்கட, பதவியா ஆகியவிடங்களிலுள்ள கல்வெட்டுக்களிலும் வருகின்றன. **நானுதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்** என்பது தனியொரு வணிகர் கணத்தின் பெயராக வருகின்றதனுல் நானுதேசியரே திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்றழைக்கப்பட்டார்களா என்ற சிந்தனை எழுகின்றது.

நானுதேசி, அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவர் என்போர் இரு வேருன வணிகர் கணங்களாயிருந்தமைக்குச் சான்றுகளுள்ளன. மந்தாபுரக் கல்வெட்டில் ஸ்ரீமத் அய்யாவொளேய அய்நூர்வர் ஸ்வாமிகளும்...... மும்முறிதண்டங்களும் உபய நானுதேசிகளும்... எனவுள்ள பகுதி இதற்குத் தக்கவோர் உதாரணமாகின்றது.[37] ஒரே சாசனத்தில் ஐஞ்ஞூற்றுவரும் நானுதேசிகளும் இரு வேருன கணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனவே நானுதேசியரே ஐஞ்ஞூற்றுவராயிருந்தனர் என்று கருதுவதற்கிடமில்லை. நானுதேசிகள், அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவர் ஆகியவிரு கணங்களுங்கூடிய மிகப்பெரியவொரு அமைப்பே நானுதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்றழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தென்னிந்தியாவிலுள்ள பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த நானுதேசிகளும் ஐஞ்ஞூற்றுவரும் தம்மிடையே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார்கள் என்பதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலசாசனங்கள் மூலமாக அறியமுடிகின்றது. கர்நாடகத்து அயயாவொளே ஐஞ்ஞூற்றுவர், நானாதேசியர் முதலான பல வணிகர் குழாங்களைத் தம்மோடு இணைத்திருந்தமையும் இங்கு நினைவுகொள்ளத்தக்கதாகும்.

செட்டி வணிகரும் இலங்கையின் வாணிபத்திற் குறிப்பிடத்தக்க அளவிலே பங்கு கொண்டிருந்தார்கள். அவர்களைக் குறிப்பிடும் இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுக்களுட் காலத்தால் மிக முற்பட்டவை பத்தாம் நூற்றுண்டுக்குரியனவாகும். சிரிசங்கபோதி மாராயன் என்னும் பட்டப்பெயரினையுடைய அரசனின் ஐந்தாம் ஆண்டிலும் ஏழாம் ஆண்டிலும் அனுராதபுரத்தில் எழுதப்பட்ட இருசாசனங்கள் முறையே சேக்கிழான் சங்கன் சேக்கிழான் சென்னி என்ற செட்டிவணிகரைக் குறிப்பிடுகின்றன.[38] சோழராட்சிக் காலத்திற் பதவியாவிலே செட்டிகளிருந்தனர். பொலநறுவைக் காலத்து ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்கள் பலவற்றிலே செட்டி வணிகரின் பெயர்கள் பல காணப்படுகின்றன. ஐஞ்ஞூற்றுவர், நானாதேசியர், வளஞ்சியர், நகரத்தார் ஆகிய கணங்களைச் சேர்ந்த வணிகர் பலர் செட்டிகளாயிருந்தனர். திராவிட மொழிகள் பலவற்றிற் செட்டி என்பது பொதுவாக வணிகரைக் குறிக்குஞ் சொல்லாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. பதினோராம் நூற்றுண்டு முதலாகச் செட்டி வணிகர் இலங்கையின் வாணிபத்திற் பங்கு கொண்டிருந்தமையினை பலவாற்றாலும் ஊகித்தறிந்துகொள்ள முடிகின்றது. வடமத்திய மாகாணத்திலும் வடமேற்கு மாகாணத்திலுமுள்ள செட்டி என்னும் சொல்லை முதனிலையாகக் கொண்ட பெருமளவிலான இடப்பெயர்கள் முன்னொரு காலத்திற் செட்டி வணிகரின் குடியிருப்புக்கள் பல அங்கிருந்தமைக்குச் சான்றாகவுள்ளன.

நகரத்தார், பரதேசிகள் என்னும் வணிக கணங்கள் ஒவ்வொன்றினைப் பற்றியும் பொலநறுவைக் காலத்திற்குரிய ஒவ்வொரு சாசனத்திலே கூறப்பட்டுள்ளது. பதினோராம் நூற்றுண்டின் முதற்பகுதியிற் பொலநறுவையில் நகரத்தார் வசித்தனர். கர்நாடகத்திலும் தமிழகத்திலும் நகரத்தார் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தனர். பெருந்தொகையான சாசனங்களிலே அவர்களின் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கர்நாடகத்திற் சில சமயங்களிலே அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவரோடு நகரத்தாரும் இணைந்திருந்தனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நகரத்தார் திசை ஆயிரத்து ஐஞ்ஞூற்றுவரோடு உறவு கொண்டிருந்தமையினைப் பிரான்மலைச் சொக்கநாதர் கோயிலிலுள்ள சாசனமொன்றின் மேல்வரும் பகுதியின் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது.[39]

> 'நாடு நகரங்களிற் திசைவிளங்கு திசை ஆயிரத்து ஐஞ்ஞூற்றுவரோமும்
> கேரணசிங்க வளநாட்டு அருவிமாநகரான குலசேகர பட்டினத்து நகரத்தோமும்
> துவாராபதி நாட்டு எறிபடை நல்லூர் வடமட்டை நகரத்தோமும்
> புறமலை நாட்டுப் புதுத்தெருவான சேரநாராயண புரத்து நகரத்தோமும்
> கடலடையாது இலங்கை கொண்ட சோழவளநாட்டு உறத்தூர்க் கூற்றத்து கொடும்பாளூர் மணிக்கிராமத்து நகரத்தோமும்
> திருக்கோட்டியூர் மணியம்பலத்து நகரத்தோமும்
> கேரளசிங்க வளநாட்டு அளகாபுரமான செழிய நாராயணபுரத்து நகரத்தோமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயம்பொழில் நாட்டுக் கல்வாயல் நாட்டு சுந்தர பாண்டிய புரத்து நகரத்தோமும்
களவழிநாட்டு அழகை மாநகரமான ஐயங்கொண்ட சோழப்பெருந் தெரு நகரத்தோமும்...'

எட்டு நாடுகளைச் சேர்ந்த நகரத்தார் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவ ரோடு கூடிச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இச்சாசனத்தின் மெய்க் கீர்த்தியானது திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவருடையதாகையால் அதிலே குறிப்பிடப்பெற்ற வணிகர் கணங்கள் எல்லாம் ஐஞ்ஞூற்றுவரின் தலைமை யின்கீழே செயற்பட்டனவென்று ஊகித்துக் கொள்ளலாம். மணிக்கிரா மத்து நகரத்தோம் என்ற சொற்றொடரானது மணிக்கிராமம் என்ற வணிக ரமைப்போடு நகரத்தாருங் கூடியிருந்தனர் என்பதை உணர்த்துகின்றது. நானாதேசியர், திசையாயிரவர், ஐஞ்ஞூற்றுவர் ஆகிய கணங்கள் சில வேளைகளிலே சங்கமமாகி நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் என்ற பேரமைப்பாகியதைப் போல நகரத்தார் மணிக்கிராமம் என்ற கணங்க ளும் தமிழகத்திலே ஒன்றுசேர்ந்தார்களென்பதற்கு இச்சாசனஞ் சான்றா யுள்ளது, ஐஞ்ஞூற்றுவரின் நினைவின் பொருட்டுப் பெயரிடப்பெற்ற ஐயம் பொழில் நாட்டுக் கல்வாயல் நாட்டுச் சுந்தரபாண்டியபுரத்திலே நகரத் தார் வசித்திருந்தமை அவர்கள் ஐஞ்ஞூற்றுவரோடு நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்தக்கூடும். ஈழத்து வணிகர் கணங் களின் கல்வெட்டுக்கள் நகரத்தார்பற்றிக் குறிப்பிடாதபோதும் ஐஞ் ஞூற்றுவரின் வாணிப முயற்சிகள் விரிவடைந்ததனைத் தொடர்ந்து நகரத் தாரும் ஈழநாட்டிற்குச் சென்றனர் எனச் சிந்திக்கலாம்.

பரதேசி வணிகர் பன்னிரண்டாம் நூற்றாண்டிலே இலங்கையின் கடல் வழி வாணிபத்திலே ஈடுபட்டிருந்தார்களென்பதை முதலாம் பராக்கிரம பாகுவின் ஊராத்துறைக் கல்வெட்டின்மூலமாக அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள ஊராத்துறையிலே பரதேசிகளிருந்தனர். செட்டி புத்திரர், கவறை, காமுண்டஸ்வாமி, ஆவணக்காரர் முதலியோர் கர் நாடக தேசத்தில் உற்பத்தியான வணிகர் கணங்களைச் சேர்ந்தவராவர். அவர்களனைவரும் ஐஞ்ஞூற்றுவரின் அமைப்புக்களிலே இடம்பெற்றிருந்தனர். பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் அவர்கள் இலங்கை யிலிருந்தமைக்கு எதுவித சான்றுமில்லை.

## ஈழத்து வீரபட்டினங்கள்

இலங்கையிலே பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிற் சுயாட்சியுரிமை கொண்ட பட்டினங்களை அமைத்துக்கொள்ளுமளவிற்குத் தமிழ் வணிக கணங்கள்சில பலமுஞ் செல்வாக்கும் அதிகாரமும் பெற் றிருந்தன. இதுவரை கிடைத்துள்ள சாசனங்களிலிருந்து வணிக கணங்கள் அமைத்திருந்த நான்கு பட்டினங்களைப்பற்றி அறிந்துகொள்ள முடிகின் றது. அவற்றிலொன்று வகால்கட என இந்நாட்களில் வழங்கும் கட்ட னேரி என்னும் இடத்திலிருந்தது. ஐஞ்ஞூற்றுவர் கட்டனேரி என்னும் ஊரினைப் பட்டினமாக்கி, அதன் பழம்பெயரை மாற்றி, அதற்கு நானா தேசிய வீரபட்டினம் என்று பெயரிட்டிருந்தார்கள். பதவியாவிலே ஐயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழில் பட்டினம் என்ற நகரினைப் பதினெண்பூமித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் அமைத்திருந்தனர் என்பதைப் பதவியாவிலுள்ள அவர்களின் சாசனமொன்றின்மூலம் அறியமுடிகின்றது.[40] தக்கிண தேசத்தின் தலைநகரான பாண்டுவாஸநுவரவிற்கு அண்மையில் நானாதேசிய பட்டினமொன்றிருந்தது.[41] அதைப்பற்றிக் குறிப்பிடுஞ் சாசனம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதன் வரிகளைத் தொடர்ச்சியாக வாசிக்க முடியாதுள்ளமையால் அப்பட்டினத்தைப்பற்றிய விபரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை. எனினும் அதிலே காணப்படும் நானாதேசி பட்டினம், அருஞ்சிறப்புத் தேசி பதினெண்பூமிப் பட்டினப்பாதை என்ற சொற்றொடர்கள் சாசனம் வைக்கப்பட்டிருந்தவிடத்திலே பட்டினமொன்றை ஐஞ்ஞூற்றுவர் அமைத்திருந்தனர் என்பதை உணர்த்துகின்றன.[42] விகாரேகின்னக் கல்வெட்டும் வீரபட்டினமொன்றை நானாதேசிகள் அமைத்தமையினைப்பற்றிக் குறிப்பிடுகின்றது.[43]

கர்நாடகத்திலும் தமிழகத்திலுமிருந்த வணிகர் பட்டினங்களைப்போல இலங்கையிலிருந்த தமிழ் வணிக நகரங்களும் சில சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தன. அவர்களின் நடவடிக்கைகளைக் குறிப்பிடுகின்ற தமிழ்க் கல்வெட்டுக்களிலே அரசனின் பெயர் குறிப்பிடப்படாதமை கவனித்தற்குரியதாகும். அரசனைப்பற்றிய குறிப்புக்களுக்குப் பதிலாக ஐஞ்ஞூற்றுவர் பிரஸஸ்தியே சாசனங்களிற் சேர்த்துக்கொள்ளப்பட்டது. ஈழத்து வணிக நகரங்களிலே கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினமே பிரபலமானதாகும். அது வகால்கட வாவியின் அண்மையில் அமைந்திருந்தது. பொலநறுவைக் காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் முன்னேற்றமடைந்ததன் காரணமாக இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் விவசாயம் சிறப்புற்றிருந்தது. அதன் பயனாக வளம் பெருகியதால் வாணிபத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருத்தல்வேண்டும் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் மக்கள் நடமாட்டம் மிகுந்ததாயும் மத்திய நிலையமாகவும் அமைந்திருந்த வகால்கட என்னும் கட்டனேரியில் ஏற்படுத்தியிருந்த வணிக நிலையங்கள் காலப்போக்கில் நகரமாக வளர்ச்சியடைந்தன. அந்நகரத்திலே ஐஞ்ஞூற்றுவர் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். அத்துடன் அவர்கள் அதனை நானாதேசிய வீரபட்டினம் எனப் பெயரிட்டு அதன்மேல் அதிகாரஞ் செலுத்தினார்கள்.

'தேசிப்பகை கூத்திப்பெருமானுக்கு தண்டம் இறுத்துத் தளற்சிப் பட்டமையில் பதிநெண் பூமி நாட்டுச் செட்டிகளும் வீரக்கொடியோமும் இப்பட்டினம் அழிவுபடலாகாதென்று பின் முறை இட்டமக்களும்...[44]' என்ற வகால்கட சாசனப் பகுதியால் நானாதேசிய பட்டினமானது கூத்திப் பெருமான் என்பவனுக்குத் திறைசெலுத்த நேர்ந்ததென்றும் அதனால் அப்பட்டினம் பலவீனமடைந்ததென்றும் உய்த்துணர முடிகின்றது. கூத்திப் பெருமானைப்பற்றி வேறொன்றுந் தெரியவில்லை. அவனைத் தேசிப்பகை என்று சாசனங் குறிப்பிடுவதாலும் அவனுக்குக் கொடுத்த முதலைத் தண்டம் என்று வணிகர் கருதியதாலும் கூத்திப் பெருமான் சிவபெருமானல்லன் என்பது ஓரளவிற்குத் தெளிவாகின்றது.[45] அவன் வணிகர்மீது பகைமையுற்ற பலம்மிக்க அதிகாரியாகவோ பிரதானியாகவோ விளங்கினான் என்று சிந்திக்கலாம். வணிக நகரங்கள் அவற்றின் செல்வச் செழிப்பினாற் படையெடுப்பாளரதும் பிறரதும் கவனத்தைப் பெற்றன. சமுதாயத்தில் அமைதியின்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் இராஜகமும் மேலோங்கியிருந்த காலப்பகுதியில் கூத்திப்பெருமான் என்பவன் கட்டனேரி வணிகரை வற்புறுத்தி அவர்களின் செல்வங்களைப் பெருமளவிலே தண்டமாக அபகரித்திருத்தல் வேண்டும். பட்டினங்களையும் வழிப்பாதைகளிற் செல்வோரையுஞ் சூறையாடுவதற்குத் தங்கள் படையாட்களுக்கு அனுமதி வழங்கியதன்மூலம் மன்னருமே மக்களுக்குத் தீங்கிழைத்தனரென்று விக்கிரமபாகுவின் காலத்தைக் குறித்துச் சூளவம்சம் கூறுவது இங்கு நினைவுகொள்ளத் தக்கனவாகும்.[46]

வீரபட்டினம் அழிவுபடலாகாதென்று பதினெண்பூமி நாட்டுச் செட்டிகளும் வீரக்கொடியும் முறையிட்டதன் காரணமாக வீரபட்டினத்து ஆளுங் கணமானது கூடிச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டதென்பதை வகால்கட கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகின்றது.

(1) செட்டி பாளி தக்கிண பதினெண்பூமி நாட்டுச் செட்டி தேசிய மண்டை அழகிய மணவாளரான மூன்றுதரமலைக் கலங்காத கண்ட நாட்டுச் செட்டியாரான தேசிக்கு இன்னுதான் வடக்குச் செட்டியார் (2) பெற்றான் வீதிவிடங்கனை அடைக்கல நாட்டுச் செட்டி (3) வேளான் அம்பலக் கூத்தனை விரகன் (4) தேவன் உடையாரான விரகன் சேனு பதிச் செட்டியார் (5) செட்டி தேவன் மூன்றுதரம் திண் கலங்காத கண்ட ஐஞ்ஞூற்றுவர் விடானை விரகன் (6) சோறுடை அப்பன் (7) அறிஞ்சி குழைச்சானை மாந்தை தோணக்கார கணத்தார் பட்டவர்த்தனம் (8) கண்டன் அடைமான் நூருயிரனை மதிவிரகன் சேனு பதி ஆண்டான் (9) செங்கண்மாலரான தேசிபிஞ்ஞன் (10) வீதிராசனை விக்கன் இழபியானை (11) தலைத்தலாலுகன்ற தேசி பட்டவர்த்தனம் (12) கண்டன் ஐயங்கொண்டனை மடிகையாண்டான் (13) சேந்தன் எதிராளன் மல்லனை தேசிமதவாரணம் (14) சித்த சாத்தனை 'வளஞ்செயர்' சேனுபதி வளஞ் செயாண்டான் (15) கோணன் மாதவனை வலங்கையாண்டான் (16) பட்டாலகன் தேவனை மும்மதக்களிறு (17) ஊன் இந்நாதான் தேசி சங்கன் (18) அக்கசாலை விக்கரமாத்தனை இளஞ்சிங்கம் (19) கணவதி சோழனை விட்டம் முரிபரன் என்போர் கூடிப் பட்டினத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைக் குறித்து ஆராய்ந்தனர்.[47]

இப்பத்தொன்பதின்மரும் 'வீரபட்டினம் ஆகையும்' என்று வர்ணிக்கப்படுவதால் அவர்கள் பட்டினத்தின் அதிகாரி சபையாக, ஆளுங் கணமாக பிரதிநிதித்துவ அடிப்படையிலே அமைந்திருந்தனர். நானுதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் கணத்தின் தலைவர்களாயுள்ள வணிகர் பலரும் பட்டினத்தின் பிரதான நிர்வாக அதிகாரிகளும் வணிகர் கணத்தின் ஆதரவிலுள்ள படைத் தலைவர்களும் அதிலே சேர்ந்திருந்தமை கவனித்தற்குரியதாகும்.

வீரபட்டினத்தின் ஆளுங் கணத்தைச் சேர்ந்தவர்களிற் சிலர் நிர்வாகத்தின் பொருட்டு வீரபட்டினத்தால் அமைக்கப்பட்டிருந்த பிரதானமான குழுக்களுக்குப் பொறுப்பாயிருந்தனர் என்று கருத முடிகின்றது. சாசனங் குறிப்பிடுகின்ற அறிஞ்சி குழைச்சானை மாந்தை தோணக்கார கணத்தார் பட்டவர்த்தனம், கண்டன் ஐயங்கொண்டானை மடிகையாண்டான், அக்கசாலை விக்கிரமாதித்தனை இளஞ்சிங்கம், வீதிராசனை விக்கன் இழபியானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போர் முறையே மாந்தை தோணக்காரர் கணம், மடிகை, அக்கசாலை, வீதிகளைக் காவல் புரியும் குழு என்பவற்றின் தலைவராயிருந்திருத்தல் வேண்டும்.

மாந்தை தோணக்காரர்பற்றி வகால்கடச் சாசனத்தில் வரும் குறிப்பானது கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினத்து வணிகர் பரந்தளவிலே வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துவதாயுள்ளது. **மாந்தை தோணக்காரர் பட்டவர்த்தனம்** என்ற சொற்றொடரானது மாந்தையிலுள்ள கப்பலோட்டிகள் கணமொன்றிற்கு அதிபனாயிருந்த ஒருவனையே குறிக்கின்றதெனக் கொள்வது பொருத்தமான தாகும். அவ்வாறாகிற் கட்டனேரியிலுள்ள வீரபட்டினமானது மாந்தைத் துறைமுகத்தினூடாக நடைபெற்ற இறக்குமதி ஏற்றுமதி வாணிபத்திற் பங்குகொண்ட பெருவணிகர் கணங்களைச் சேர்ந்தவர்களைத் தன்னகத்தே கொண்டிருந்திருத்தல் வேண்டும். **மடிகையாண்டான்** என்பது மடிகை என்பதன் அதிகாரியைக் குறிக்கும் தொடராகும். கடவுகளிலும் எல்லைப்புறங்களிலும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கென அமைக்கப்பட்ட நிலையங்களே **மடிகை** என்று வழங்கலாயின. அவற்றிலே ஆட்சியதிகாரிகள் வணிகரிடமிருந்து கடவுவரிகளைப் பெறுவது வழமையாகும். அநுராதபுரத்திலுள்ளதும் லீலாவதியின் ஆட்சிக்குரியதுமான நானாதேசி வியாபாரிகள்பற்றிக் குறிப்பிடும் சாசனத்திலும் **மடிகய** என்ற சொல் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.[48] பதினாலாம் நூற்றாண்டிற்குரிய(1344) லங்காதிலக விகாரத்துத் தமிழ்ச் சாசனத்தில், 'புறமடிகையாலும் உள்மடிகையாலும் ஒன்பது துறையாலும் பதினெட்டுத் தேசத்தில் நின்றும் வந்த வாணிபங்களுங் கொண்டுவந்த பல மண்டலச் சரக்குக்கு நூற்றுக்குக் கால் குடுக்கும்படி பதினெண் விஷயமாகக் கூடிவைத்துக் குடுத்த , என வரும் வரிகள் மடிகையென்பது வணிகர் கூடுந்தளமென்பதைத் தெளிவுபடுத்துகின்றது.[49] கண்டன் ஐயங்கொண்டான் மடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாக விருந்தான் என்பதை வகால்கடவிலுள்ள ஐஞ்ஞூற்றுவரின் சாசனத்தின் மூலமாக அறிய முடிகின்றது.

விக்கிரமாதித்தன் என்பவன் வீரபட்டினத்து அக்கசாலைக்குப் பொறுப்பாக விருந்தான். அக்கசாலை என்பது பொதுவாகக் காசு அச்சிடப்படும் சாலையைக் குறிக்கும். ஆனால் வணிக கணங்கள் நாணயங்களைத் தாமாகவே உற்பத்தி செய்தமைக்குச் சான்றுகள் காணப்படவில்லை. அவற்றால் அமைக்கப்பட்டவை என்று கொள்ளத்தக்க நாணயங்களெதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஆகையாற் பொன், வெள்ளி முதலிய உலோகங்களைப் பதப்படுத்துகின்ற கம்மாளர் நிலையங்களையே அக்கசாலையென்று இச்சாசனங் குறிப்பிடுகின்றதெனக் கொள்ளவேண்டியுள்ளது. எனவே அக்கசாலை பற்றிய குறிப்பானது கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினத்திற் கம்மாளரின் உற்பத்தி நிலையங்கள் அமைந்திருந்தன என்று கருதுவதற்கு இடமளிக்கின்றது. அத்தகைய நிலையங்கள் விக்கிரமாதித்தன் என்பவனின் மேற்பார்வையின்கீழ் இயங்கியிருத்தல்கூடும். வீரபட்டினத்தின் எல்லைகளுக்குளமைந்த ஊர்காவல் அப்பட்டினத்து அதிகாரிகளின் கட்டுப்பாட்டிவிருந்தது என்பதை **வீதிராசன்** என்ற பட்டத்தையுடையவனைப்பற்றிய குறிப்பு உணர்த்துவதாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிதொரு வீரபட்டினமொன்றைப்பற்றி ஐஞ்ஞூற்றுவரின் விகாரே கின்னச் சாசனம் விபரிக்கின்றது. அச்சாசனத்திலுள்ள வாக்கியங்கள் தெளிவற்றனவாய் இருப்பதால் அதிலே கூறப்பட்ட வீரபட்டினத்தைப் பற்றிய விவரங்களைச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை. 'நானுதேசிகள்......இ(ம்)மாநகரம் அடியிட்டதற்காகவும்' என வருஞ் சொற்கள்மூலமாக வீரபட்டினத்தை நானுதேசிகள் அமைத்தார்கள் என்பது உறுதியாகின்றது. 'பதினெண்பூமி நாடு நானுதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் தண்டியம் உள்ளிட்ட பதினெண்பூமிப் பிரகாரம் மிளகும் மிளகங்காய்...... பெருமக்கள் எங்கும் நோக்கிச் செய்து சிறப்பிப்பது நம் உடன்பிறந்தான் சம்பளம் நீக்கி நாளடங்க தேசியாண்டாண்டென்றுடை வீரபட்டினத்துக்கு வைப்ப இந்தப் பாதுகைத் தளையிட்டமையின்' என்ற பகுதியானது ஐஞ்ஞூற்றுவர் வாணிபஞ் செய்கின்றவிடங்களில் மிளகு முதலிய பொருட்களை விற்பனை செய்த வணிகரின் இலாபத் தொகையில் அவர்களுடைய சம்பளத்தை நீக்கி மிகுதியை வீரபட்டினத்தின் இருப்பாக வைத்து அவ்வணிகர்களைச் சிறப்பித்தார்கள் என்பதனைக் குறிப்பனவாயமையலாம்.[50] பின்பு பொதுவாகிய காசினைக் கொண்டு வீடுகளை வாங்கி அவர்களுக்குக் கொடுத்துப் பதினெண்பூமிச் செட்டிகளின் இருக்கைக்கு வீரபட்டினம் எனப் பெயரிடப்பட்டு (சாத்தி குலப் பெயரிட்டு) அதனைச் சேர்ந்தவர்களுக்குச் சிறப்புரிமைகளும் (பீடுஞ் சீருமாட்சியதாகவும்) ஆட்சியுரிமையும் அரசுக்குரிய அதிகாரமும் கொடுக்கப்பட்டன. மேலும் மட்டு, புறகு ஆகிய வாத்தியக் கருவிகளை இசைப்பதற்கும் உரிமை கொடுக்கப்பட்டது. இந்நானுதேசிய வீரபட்டினமானது பிரான் சாத்தனுன வீரகன் சேனுபதி என்னும் படைத்தலைவனின் சேவையினையுஞ் சிலகாலம் பெற்றிருந்தது.

இலங்கையிலிருந்த நானுதேசித் திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவரும் அவர்களோடு கூடியிருந்த பிற வணிக கணங்களும் பல இராணுவப் பிரிவுகளின் சேவைகளைப் பெற்றிருந்தன. அங்கக்காரர், கொங்கவாளர், வீரக்கொடி என்னும் பிரிவினரை வணிகரமைப்புக்கள் உள்ளடக்கியிருந்தன என்பதை ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களிலுள்ள மெய்க்கீர்த்திப்பகுதியிலிருந்து அறிந்துகொள்ளலாம். கொங்கு நாட்டிலிருந்து சேர்க்கப்பட்ட வாட்படை வீரர்களே கொங்கவாளரென்று அழைக்கப்பட்டனரென்று கருதலாம். அங்கக்காரரைப்பற்றி அறிந்துகொள்வதற்குத் திருவண்ணுமலையிலுள்ள ஒரு சாசனத்தில் வரும் 'வேளைக்காரன் அஞ்சாதான் அங்கக்காரனேன்' என்ற சொற்றொடர்கள் துணைபுரிகின்றன.[51] வேளைக்காரனுகிய அஞ்சாதான் என்பவன் அங்கக்காரனென்று வர்ணிக்கப்பட்டுள்ளதால் அங்கக்காரர் எனப்படுவோர் ஒரு படைப்பிரிவினர் என்பது தெளிவாகின்றது. அங்கக்காரர் என்போர் மெய்க்காப்பாளரை ஒத்தவொரு காவற் படையினர் என்று கொள்வது பொருத்தமானதாகும்.[52] வேளைக்காரருட் சிலர் அங்கக்காரராயிருந்தபடியால் இலங்கையிலிருந்த வணிக கணங்களைச் சேர்ந்திருந்த அங்கக்காரருட் சிலர் வேளைக்காரராயிருந்திருத்தல்கூடும்.

இலங்கையிலிருந்த வேளைக்காரருக்கும் வளஞ்சியர் நகரத்தார் என்னும் வணிகர் கணத்தவருக்குமிடையில் நெருங்கிய தொடர்புகளிருந்தன என்பதற்குப் பொலநறுவையிலுள்ள வேளைக்காரரின் சாசனஞ் சான்றுயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுள் இரு வணிக கணங்களை 'எங்கள் மூதாதைகளாயுள்ள வளஞ் செயரையும் எங்களோடு கூடிவரும் நகரத்தாருள்ளிட்டாரையும்' என்ற வாறு வேளைக்காரர் குறிப்பிட்டுள்ளார்கள்.[53] 'மூதாதைகள்' என்ற சொல் லானது முன்னோர்கள் என்பதையன்றித் தலைவர்கள், ஆதரிப்பவர்கள் என்ற கருத்துக்களைக் குறிக்கும் வகையில் இச்சாசனத் தொடரிலே வந் துள்ளது என்று கருதலாம். வலங்கை, இடங்கை என்ற தொகுதிகளைச் சேர்ந்த சமூகப் பிரிவுகளிற்குப் பொது விடயங்களைக் குறித்து வளஞ்சியர், நகரத்தார் முதலியவர்கள் தலைமை தாங்குவது வழமையாதலாலும் பொல நறுவையிலிருந்த வேளைக்காரர் வலங்கை, இடங்கை என்றவிரு பிரிவுகளை யுஞ் சேர்ந்திருந்தமையாலும் வேளைக்காரருக்கும் வணிகருக்குமிடையிலான சமுதாய உறவுகளின் காரணமாகவே வணிகர் கணங்களைப்பற்றிப் பொல நறுவைச் சாசனங் குறிப்பிட்டுள்ளது என்று கொள்ளலாம். 'ஆயினும் எங்களோடு கூடிவரும் நகரத்தாருள்ளிட்டாரையும்' என்ற குறிப்பானது நகரத்தாரின் காவற்படையினராக வேளைக்காரருள் ஒரு பகுதியினர் சேவை புரிந்தனர் என்ற சிந்தனைக்கு இடமளிகின்றது.

(நானாதேசிய) வீரபட்டினம் என்ற நகரங்களிலே படைப்பிரிவுகள் பிரதானமான பங்கினைப் பெற்றிருந்தன. தங்கள் நகரங்களையும் வாணிப நிலையங்களையும் வணிகர் கூட்டங்களையும் சொத்துடைமைகளையும் பாது காத்தற்பொருட்டு வணிக கணங்கள் பல காவற்படைகளைப் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தியிருந்தார்கள். பதவியாவிலும், விகாரேகின்னையிலு மிருந்த வீரபட்டினங்களில் வலங்கைப் பெரும்படை என்னும் இராணுவப் பிரிவுகளிருந்தன. பதவியாவிலிருந்த அய்யம்பொழில் பட்டினத்திலே ஒன்றுக்கு மேற்பட்ட காவற்படைகள் தங்கியிருந்தன என்பது 'இ(ந்)நக ரம் இரண்டாம் மித்துரு கணப் படையாகும்' என்ற சாசனத் தொட ராலே உணரப்படுகின்றது.[54] வீரபட்டினங்களுக்குரிய படைகள் சேனாதி பதிகளின் தலைமையின்கீழமைந்திருந்தன. மதிவிரகன் சேனாபதியாண்டான், சித்தன் சாத்தனான வளஞ்செயர் சேனாபதி வளஞ்செயாண்டான், பிரான் சாத்தினான் விரகன் சேனாபதி முதலியோர் அத்தகைய சேனாதிபதிகளா வர்.[55] கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினத்து நிர்வாகவமைப்பிற் சேனாதிபதிகளுஞ் சேர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வணிக கணங்களின் வாணிப நடவடிக்கைகள்

பொலநறுவைக் காலத்து இலங்கையின் வாணிப நிலைகளின் அடிப் படையில் வணிகர் கணங்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்தறிவது பொருத்தமானதாகும். அரசாங்கத்திற்கு வாணிபத்தின்மூலமாக அதிக வருமானங் கிடைக்குமாகையால் அரசர்கள் வழமையாகவே வணிகர்க ளுக்குச் சிறப்புரிமைகளையும் ஆதரவினையும் நல்கினார்கள். மேலும் மிகப் பெறுமதி வாய்ந்தனவாயும் மன்னரின் 'ஏகபோக உரிமை'ப் பொருட்க ளாயுமுள்ள முத்து, மணி, இரத்தினம், யானைகள், யானைத்தந்தம் முத லிய பொருட்களை விற்பனை செய்வதற்குப் பிறநாட்டு வணிகரோடும் தொடர்பு கொள்வது அரசரைப் பொறுத்தவரையிலோர் இன்றியமை யாத தேவையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவைக் காலத்து அரசருட் சிலர் வாணிப வளர்ச்சியால் விளையக்கூடிய நன்மைகளை நன்குணர்ந்திருந்தமையால் வாணிபத்தில் மிகுந்த கவனஞ் செலுத்தினர்கள். முதலாம் விஜயபாகு உறுகுணையில் ஆட்சி புரிந்த காலத்தில் சோழருக்கெதிரான போர்முயற்சிகளுக்குத் தேவையான முதலைத் தேடிக்கொள்ளும் நோக்கத்துடன் அருமண தேசத்தோடு வாணிபஞ் செய்தானென்று சூளவம்சம் குறிப்பிடுகின்றது. பெறுமதி மிகுந்த பொருட்களை அருமணத்திற்கு அனுப்பியதோடு அங்கிருந்து விலையுயர்ந்த புடவைகள், சந்தனம், கற்பூரம் முதலியவற்றைக் கப்பல்கள்மூலமாக அவன் இறக்குமதி செய்தான்.[56] அவ்வாறே முதலாம் பராக்கிரமபாகு தக்கிண தேசத்தில் ஆட்சி புரிந்த நாட்களில் முத்து, இரத்தினம், யானைத் தந்தம், யானைகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தான்.[57]

வாணிபத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த பொலநறுவைக் கால அரசருட் சிலர் தமிழ் வணிக கணங்கள் சிலவற்றோடு நல்லுறவு கொண்டிருந்து அவற்றுக்கு ஆதரவும் வழங்கியிருந்தார்கள். யாழ்ப்பாணத்து ஊராத்துறை என்னும் துறைமுகத்திலே தங்கியிருந்த பரதேசிகள் என்னும் வணிக கூட்டத்தவர் அரசனுக்குத் தேவையான யானை, குதிரை என்பவற்றை மரக்கலங்களில் இறக்குமதி செய்திருந்தார்கள் என்பது நயினுதீவுக் கோயிலிலுள்ள பராக்கிரமபாகுவின் கல்வெட்டின்மூலம் அறியப்படுகின்றது. பராக்கிரமபாகு ராசன் பரதேசி வணிகருக்கு எத்தகைய ஆதரவினை அளித்திருந்தான் என்பது மேல்வரும் சாசனப் பகுதியாற் புலனுகின்றது.

> ''ஊராத்துறையில் பரதேசிகள் வந்து இருக்கவேணுமென்றும் அவர்கள் ரகைஷப்பட வேணுமென்றும் பல துறைகளில் பரதேசிகள் வந்து நந்துறையிலே கூடவேணுமென்றும் நாம் ஆனை குதிரை மேல் ஸ்நேகமுண்டாதலால் நமக்கு ஆனை குதிரை கொடுவந்த மரக்கலங் கெட்ட துண்டாகில் நாலத்தொன்று பண்டாரத்துக்குக் கொண்டு மூன்று கூறும் உடையவனுக்கு விடக் கடவதாகவும் வாணிய மரக்கலங் கெட்ட துண்டாகிற் செம்பாகம் உடையவனுக்கு விடக் கடவதாகவும் இவ்வியவஸ்தை சந்திராதித்யதுள்ளதனையுங் கல்லிலுஞ் செம்பிலும் எழுத்து வெட்டுவித்து......''[58]

ஊராத்துறையிலிருந்த துறைமுக அதிகாரிகளுக்குப் பரதேசிகளைக் குறித்து அரசன் அனுப்பிய ஆணையின் வாசகமே நயினுதீவுக் கல்வெட்டிற் பதிவு செய்யப்பட்டுள்ளமை கவனித்தற்குரியது. ஊராத்துறையிலும் வேறுபல துறைகளிலும் பரதேசிகள் வந்திருந்து வாணிபஞ் செய்யவேண்டுமென்றும் அவர்கள் பாதுகாக்கப்படவேணுமென்றும் அரசன் தனது கட்டளையிற் குறிப்பிட்டுள்ளான். அரசன் வணிகருக்கு ஆதரவினையும் வசதிகளையும் அளிப்பதற்கு நாட்டங் கொண்டிருந்தமையினை இச்சாசனம் உறுதிப்படுத்துகின்றது. பராக்கிரமபாகுவின் பட்டத்தரசியான லீலாவதியின் ஆட்சிக்காலத்தில் தானசாலையொன்றினைப்பற்றிச் சில ஒழுங்குகளை அநுராதபுரத்திலிருந்த நானுதேசி வியாபாரிகளோடு அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது. நானுதேசி வணிகர் தங்கள் வாணிப நடவடிக்கைகளுக்கு அரசாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் அனுமதியையும் அங்கீகாரத்தையும் ஆதரவையும் பெற்றிருந் தமைக்கு லீலாவதி அவர்களோடு தானசாலையைக் குறித்துச் செய்திருந்த ஏற்பாடு ஓர் எடுத்துக்காட்டாகலாம்.

அரசாங்கத்தோடு அவை கொண்டிருந்த நல்லுறவுகளும் அவற்றின் பரந்தளவிலான தொடர்புகளும் முதலீடு, பாதுகாப்பு, கொள்வனவு, விற் பனவு முதலியன குறித்து அவை உருவாக்கியிருந்த உறுதியான அமைப் புக்களும் தமிழ் வணிக கணங்கள் இலங்கையில் மேன்மை பெறுவதற்கு ஏதுவாயிருந்தன. இலங்கையின் வாணிபத்திலே தமிழ் வணிக கணங்கள் எவ்வளவிற்குப் பங்கு கொண்டிருந்தார்கள் என்பது ஆராய்வதற்குரிய தாகும். அவர்களின் சாசனங்களிலே வாணிப நடவடிக்கைகளைப்பற்றி அறிந்து கொள்ளக்கூடிய குறிப்புக்கள் மிக அரிதாகவேயுள்ளன. அவர்கள் அமைத்திருந்த சாசனங்களெல்லாம் வாணிபத்தைப்பற்றியன்றிப் பிற நடவடிக்கைகளைப் பதிவு செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆயினும் பொலநறுவைக் காலத்திற்குரிய சிங்கள, தமிழ்ச் சாசனங்களில் வணிகரைப்பற்றியுள்ள குறிப்புக்கள் எல்லாம் தமிழ் வணிகரைப்பற்றி யனவாயுள்ளன. எனவே, அவர்கள் இலங்கையின் உள்நாட்டு வாணிபத் திலே பிரதானமான பங்கினைப் பெற்றிருந்தனரென்று கருதலாம்.

இலங்கையின் வடபகுதியான இராசரட்டையில் அமைந்திருந்த அநுராதபுரம், பொலநறுவை, பதவியா போன்ற நகரங்களிலும் மேற்குப் பகுதியான தக்கிணதேசத்திலும் அமைந்திருந்த பராக்கிரமபுரத்திலும் அவற்றின் சுற்றுடல்களிலும் தமிழ் வணிகர் தங்கள் நிலையங்களை அமைத் திருந்தனர். வகால்கட, விகாரேகின்ன, ஹோப்பிற்றிகமு போன்ற பிற உள்ளூர்ப் பகுதிகளிலும் தமிழ் வணிகர் கணங்கள் நிலைகொண்டிருந்தன. மேலும் இப்பகுதிகளிலுள்ள நகர வாழ்க்கையிலும் நகர வளர்ச்சியிலும் அவற்றின் செல்வாக்கு முன்னொரு காலத்திலுங் காணப்படாத அளவிலே ஏற்பட்டிருந்தது. இவ்வணிகர் கணங்களில் முதன்மை பெற்றிருந்த ஐஞ் ஞூற்றுவர் பரந்த அளவிலே வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந் தார்கள். அவர்களால் அமைக்கப்பட்ட நானாதேசிய வீரபட்டினங்கள் அவற்றுக்கெல்லாம் மத்திய நிலையங்களாய் விளங்கின. வீரபட்டினத்தி லிருந்து பல்வேறு திசைகளிலுங் கூட்டங்களாகப் பிரிந்து சென்று ஆங் காங்கு தாவளங்களை அமைத்தும் சந்தைகளிற் கூடியும் வாணிபஞ் செய் தனரென்று கருதுவதற்குச் சாசனக் குறிப்புக்கள் இடமளிக்கின்றன. பொதி களை ஏற்றிச் செல்வதற்கு அவர்களாற் கழுதைகள் பெரிதும் பயன்படுத் தப்பட்டன. அநுராதபுரத்திலிருந்த நானாதேசிகள் வாசனைச் சரக்குகளை யும் விற்பனை செய்தார்கள் என்பதை லீலாவதியின் காலத்துச் சாசனத் தின் மூலம் அறிய முடிகின்றது. விகாரேகின்னக் கல்வெட்டில் மிளகு, மிளகங்காய் என்பவற்றைப் பல்வேறிடங்களுக்குஞ் சென்று கொள்வனவு, விற்பனவு செய்வோரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஈழத்து வணிகரைப் பற்றிக் கூறும் இரு சாசனங்கள் மடிகை என்ற அமைப்பினைக் குறிப்பிடு கின்றன. நானாதேசி வியாபாரிகள் மடிகையாற் கிடைக்கின்ற வருமானத் தின் ஒரு பகுதியைக் கொண்டு பல வலபி மேதாவி என்னும் தானசாலைக் குத் தேவையான சரக்கு வகைகளை கொடுக்கப் பொறுப்பேற்றனர் எனப் படுவதால் அநுராதபுரத்திலுள்ள மடிகையொன்றில் கடவுவரிகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கும் உரிமையினை நானாதேசியர் பெற்றிருந்தனர் என்று கருதலாம். அய்யாவொளே வணிகரமைப்புக்களால் இலங்கையில் நன்கறிமுகமாகிய தாவளம், வீரக்கொடி என்னும் சொற்கள் சிங்கள மொழி வழக்கிலும் காலப்போக்கில் இடம்பெறலாயின. சிங்கள மொழியிலே தாவளம் என்ற சொல் பொதிமாடுகள், வணிகர் கூடும் விற்பனை நிலையம் என்பவற்றைக் குறிக்கும். சிங்களவரிற் பலர் வீரக்கொடி என்ற பெயரைக் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் வெளிநாட்டு வாணிபத்திலே தமிழ் வணிக கணங்கள் குறிப்பிடத்தக்க பங்கினைப் பெற்றிருந்தன. அதனை நன்கு புரிந்து கொள்வதற்குச் சர்வதேச வர்த்தகத்தில் இக்காலப்பகுதியில் இலங்கை கொண்டிருந்த பங்கினை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. தென்னிந்தியாவிற் சோழப் பேரரசு நிலவிய காலப்பகுதியில் சர்வதேசப் பொருட் பரிவர்த்தனை நிலையம் என்ற வகையில் இலங்கை முக்கியத்துவம் இழந்திருந்தது. சோழராட்சிக்குப் பிற்பட்ட காலத்தில் மாந்தை நகரம் வீழ்ச்சியுற்றது. பதினோராம் நூற்றாண்டின்பின் மாந்தைத் துறைமுகத்திற்குத் தூரதேசங்களிலிருந்து ஆழ்கடல் வழிச் செல்லும் பெருங் கப்பல்கள் வந்திருந்தமைக்குச் சான்றுகளில்லை. ஆழ்கடல் வழியான வாணிபத்தில் ஒரு பிரதான தொடர்பு நிலையம் என்ற நிலையினை இழந்தமையால் மாந்தையில் நகர வாழ்க்கை சீரழிந்தது. கி. பி. 1050 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட சாசனங்களிலும் இலக்கியங்களிலும் மாந்தையிலுள்ள வணிகரைப்பற்றியோ அங்கிருந்த கட்டிட அமைப்புக்களைப்பற்றியோ குறிப்புக்கள் காணப்படவில்லை. எனவே பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியளவில் பொருட் பரிவர்த்தனை நிலையங்கள் மாதோட்டத்திலிருந்து தென்னிந்தியத் துறைமுகப் பட்டினங்களுக்கு மாற்றப்பட்டன என்று கருதலாம். அதன் விளைவாகத் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வாணிபத்தில் தமிழ் வணிகர் கணங்களின் பங்கு கூடுதலான அளவிலே ஏற்பட்டிருத்தல் வேண்டும். மாந்தையின் வீழ்ச்சியின் பயனாகவே ஊராத்துறை முக்கியத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். பன்னிரண்டாம் நூற்றாண்டில் யானை, குதிரை முதலியவற்றை அரசனுடைய தேவைக்கு ஏற்றிச் சென்ற கப்பல்களும் பிற வாணிபக் கப்பல்களும் ஊராத்துறைக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. அங்கு துறைமுகத்தைப் பரிபாலிப்பதற்கான அரசாங்க அதிகாரிகளிருந்தனர் என்பது நயினாதீவுக் கல்வெட்டினால் உணரப்படுகின்றது.

தமிழ் வணிக கணங்கள் சில இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்திலும் பங்கு கொண்டிருந்தன. பரதேசிகள் என்ற வணிகர் ஊராத்துறையிலிருந்து கப்பல்கள்மூலம் பொருட்களை ஏற்றுமதி செய்வதிலும் இறக்குமதி செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்கள். அரசாங்கம் அவர்களை வரவேற்றுப் பாதுகாப்பளிக்க முற்பட்டிருந்தது. பரதேசிகளைக் குறித்துப் பேராசிரியர் இந்திரபாலா எழுதியுள்ளவை இங்கு கவனிக்கத்தக்கனவாகும்.

> ''ஊராத்துறைத் துறைமுகத்திற்கு அடிக்கடி போய்ச்சென்ற வெளிநாட்டு வணிகரை விளித்து அமைக்கப்பெற்ற நயினாதீவிலுள்ள பராக்கிரமபாகுவின் சாசனம் அரசனுக்கு யானைகளையுங் குதிரைகளையும் ஏற்றிச் சென்ற வாணிபக் கப்பல்களைக் குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகள், குதிரைகள் என்பன ஐஞ்ஞூற்றுவர் தாம் கொள்வனவு, விற்பனவு செய்ததாகக் குறிப்பிடுவனவற்றுள் இரு பிரதானமான பொருட்களாகும். தென்னிந்தியச் சாசனங்களிற் குதிரைச் செட்டிகளைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றபோதும் குதிரை வாணிபமானது அராபியர் வசமாயிருந்திருத்தல்கூடும். யானை வர்த்தகமானது தென்னிந்தியர், சிங்களவர், தென்கிழக்காசியர் ஆகியோர் பங்குகொண்டிருக்கக் கூடியவொன்றாகும்.[59]

குதிரை வாணிபம், யானை வர்த்தகம் என்பவற்றைப்பற்றி இங்கு மேற்கோளாகக் கொள்ளப்பட்ட பகுதியிலுள்ள முடிபுகள் பொருத்தமானவையாகக் காணப்படவில்லை. பராக்கிரமபாகுவின் சாசனம் வெளிநாட்டு வணிகரை விளித்து எழுதப்பட்டதென்ற கருத்து தவறானதென்பதை அச்சாசனத்தின் மேல்வரும் பகுதியே ஓரளவிற்குத் தெளிவுபடுத்துவதாயுள்ளது. 'ஊராத்துறையில் பரதேசிகள் வந்து இருக்கவேணுமென்றும் அவர்கள் ரக்ஷைப்பட வேணுமென்றும் பல துறைகளில் வந்து நம் துறையில் கூடவேணுமென்றும் நாம் ஆனை குதிரைமேற் ஸ்நேக முண்டாதலால் நமக்கு ஆனை குதிரை கொடு வந்த மரக்கலங் கெட்டது துண்டாகில் நாலத்தொன்று பண்டாரத்துக்குக் கொண்டு மூன்று கூறும் உடையவனுக்கு விடக்கடவதாகவும்'

ஊராத்துறைக்குப் பரதேசிகள் வரவேண்டும், அவர்கள் வந்திருந்து வாணிபஞ் செய்யவேண்டும், அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பன அரசனுடைய எண்ணங்களாயிருந்தன என்பது சாசனத்தின்மூலம் தெளிவாகின்றது. ஆனால் பரதேசிகளை விளித்துச் சாசனம் எழுதப்பட்டதாகச் சாசனத்திற் குறிப்பில்லை. அத்துடன் துறைமுகத்திற்கு வரும் நாவாய்கள் சேதமடையுமிடத்து அவற்றிலுள்ள வாணிபப் பொருட்களை எவ்வாறு பங்கிட வேண்டுமென்றும் அரசன் தனது கட்டளையிலே குறிப்பிட்டிருந்தான். 'நமக்கு ஆனை குதிரை கொடுவந்த மரக்கலங் கெட்ட துண்டாகில் நாலத்தொன்று பண்டாரத்துக்கு கொண்டு மூன்று கூறும் உடையவனுக்கு விடக்கடதாகவும்' எனச் சாசனத்தில் வரும் வசனம் அரசனுடைய கட்டளை வணிகருக்கன்றித் துறைமுகத்து அதிகாரிகளுக்கே அனுப்பப்பட்டதென்பதை உணர்த்துகின்றது. குறிப்பாகப் 'பண்டாரத்துக்கு கொண்டு', 'உடையவனுக்கு விடக்கடதாகவும்' என்ற சொற்றொடர்கள் உடைந்த மரக்கலங்களின் வாணிபப் பொருட்களை நான்கு கூறுகளாகப் பிரித்து அவற்றுளொன்றை அரசாங்கத்திற்குரியதாக எடுத்துக்கொண்டு மிகுதியை உடையவனிடத்தில் விடக்கூடியவர்களுக்கே அரசன் ஆணையிட்டிருந்தான் என்பதை நன்கு தெளிவுபடுத்துகின்றன. அத்தகையவர்கள் வணிகர்களாகவன்றி அவர்கள்மீது கட்டுப்பாடுகளை விதித்து அதிகாரஞ் செலுத்தக்கூடிய துறைமுக அதிகாரிகளாகவே இருந்திருப்பர். அவர்கள் அரசனால் நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகளா அல்லது துறைமுகத்திலே சுங்கவரிகளைச் சேர்ப்பதற்கு உரிமை பெற்றிருந்த வணிககண அதிபர்களா என்பதை அறிந்துகொள்வதற்கு வழியில்லை. வணிகர், துறைமுகவாசிகள், அதிகாரிகள் ஆகிய எல்லோருமே அரசனுடைய கட்டளையினை அறிந்துகொள்ள வேண்டுமாதலால் அது கல்லிலும் எழுதப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற நாட்டவர்களையும் அந்நிய தேச உற்பத்தியுடையவர்களையும் பரதேசிகள் என்று குறிப்பிடுவது நெடுங்கால வழமையாகும். ஆயினும் பிற நாட்டவரையன்றி ஒரு வணிக கணத்தவரையே நயினாதீவுக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறதென்று கொள்வதற்குத் தக்க காரணமுண்டு. தென்னிந்திய சாசனங்கள்சில பரதேசி என்று வணிக கணத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. சிலவிடங்களில் அய்யாவொளே ஐநூற்றுவரோடு பரதேசி வணிகருங் கூடியிருந்தனர்.[60] வெளிநாட்டு வாணிபத்திலே ஈடுபட்டிருந்த காரணத்தாற் பரதேசி என்ற வணிக கணத்தின் பெயர் உருவாகியிருத்தல் கூடும். பரதேசி வணிகர், ஐஞ்னூற்றுவரோடு சில காலங்களிலே தொடர்பு கொண்டிருந்தமையாலும் ஐஞ்னூற்றுவர் யானை, குதிரை முதலியவற்றையும் வாணிபஞ் செய்தார்களென்றும் அவர்களின் சாசனங்கள் குறிப்பிடுவதாலும் நயினாதீவுக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்ற பரதேசிகள் பரதேசி என்னும் கணத்தைச் சேர்ந்தவர்களென்று கொள்வது பொருத்தமானதாகும். அவர்கள் யானைகளையும் குதிரைகளையும் மரக்கலங்களில் ஏற்றி ஊராத் துறைக்குக் கொண்டுசென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசன் தனக்குத் தேவையான யானைகளையும் குதிரைகளையும் பரதேசிகள்மூலமாக இறக்குமதி செய்வித்தான். எனவே குதிரை வாணிபம் அராபியர்வசமாயிருந்ததென்று பேராசிரியர் இந்திரபாலா கூறுவது பொருத்தமற்றதாகும். அராபியர் குதிரை வாணிபங் கருதி இலங்கைக்கு வந்திருக்கவில்லை என்று எவருங் கொள்வதற்கில்லை. ஆயினும் இச்சாசனம் எழுதப்பட்ட காலத்தில், பன்னிரண்டாம் நூற்றுண்டில், அராபியர் குதிரைகளை விற்பனை செய்தற் பொருட்டு இலங்கைக்கு வந்திருந்தார்களென்று ஈழநாட்டு இலக்கியங்களிலோ சாசனங்களிலோ கூறப்படவில்லை. இந்தியப் பிரதேசங்களில் விற்பனையாகிய குதிரைகள் பெரும்பான்மையும் அராபியா, பாரசீகம் ஆகிய நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றை அராபிய, பாரசீக வணிகர்களே தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு நாவாய்களில் ஏற்றிச் சென்றுர்கள். ஐஞ்னூற்றுவர், குதிரைச்செட்டி, பரதேசி முதலிய தென்னிந்திய வணிகர்கள் குதிரைகளை அவர்களிடமிருந்து கொள்வனவு செய்து அரசர் பலரிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். எனவே தென்னிந்தியப் பிரதேசங்களிலும் இலங்கை முதலிய அயல்நாடுகளிலும் நடைபெற்ற குதிரை வாணிபத்தைப் பொறுத்தவரையில் அராபியர், பாரசீகர் ஆகியோருக்கும் தென்னுசிய அரசர்களுக்கும் நடுவிலமைந்த இடைநிலையாளராகத் தென்னிந்திய வணிகர் விளங்கினுர்களென்பது மறுக்க முடியாதவொன்றுகும். அய்யாவொளே ஐஞ்னூற்றுவருடன் சில சமயங்களிலே தொடர்பு கொண்டிருந்தவர்களாகிய பரதேசிகள் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான குதிரை வாணிபத்திலே பங்குபற்றினுர்களென்பதை நயினாதீவுக் கல்வெட்டின்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

இலங்கையின் யானை வர்த்தகத்திலே தென்னிந்திய வணிகர்களோடு சிங்களவரும் தென்கிழக்காசியரும் பங்குபற்றியிருந்திருத்தல்கூடும் என்ற சிந்தனையும் நிதானமற்றதாகும். ஐரோப்பியர் ஆட்சியேற்படுவதற்கு முற்பட்ட காலத்து இலங்கை வாணிபத்தைப்பற்றிய பல விடயங்கள் அறியப்படாதனவாகவும் தெளிவற்றனவாகவுமுள்ளன. இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலுள்ள காடுகளில் யானைகள் பெருமளவில் உற்பத்தியாகியிருந்தன. அத்துடன் இந்நாடுகளிலேயே அவை பெரிதும் உப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகிக்கப்பட்டன. போர்களிலும் பாரங்களை இழுத்துச் செல்வதற்கும் அரண்மனையோடும் சமயநிறுவனங்களோடும் தொடர்புடைய அலங்கார ஊர்வலங்களிலும் இந்நாடுகளிலே யானைகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் யானைகளின் வாணிபமானது இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய வலையத்திலுட் பெரும்பாலும் நடைபெற்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டிலே தென்கிழக்காசியர்கள் யானை வர்த்தகங் குறித்து இலங்கைக்கு வந்தமைக்கு எதுவித ஆதாரங்களும் கிடைக்க வில்லை. வேட்டைத்தளங்களை அமைத்து யானைகளைப் பிடிப்பதிலும், பழக் குவதிலும், பராமரிப்பதிலுஞ் சிங்களவர் பயிற்சி பெற்றிருந்தார்களே தவிர யானைகளை வாணிபஞ் செய்வதில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்க ளென்று கொள்வதற்குச் சான்றுகளில்லை. தமிழ் வணிக கணங்கள் இலங்கை யிற் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த பொலநறுவைக் காலத்தில், பன் னிரண்டாம் நூற்றாண்டில், இலங்கையின் யானை வர்த்தகத்தில் இந்திய வம்சாவழியினரான பரதேசிகள் முதலிய வணிகர் பிரதான பங்கினைப் பெற்றிருந்தனர் என்று கொள்ளலாம். இந்தியாவிற்கும் இலங்கைக்கு மிடையிலான வாணிபத்தில் யானை, குதிரை தவிர்ந்த வேறெப்பொருட்கள் இடம்பெற்றிருந்தன என்பதைப்பற்றி வணிகர் கணங்களின் சாசனங் களிற் குறிப்பிடப்பெறவில்லை. ஆதலால் அவை ஊகித்தறிந்துகொள்ள வேண்டியனவாய் உள்ளன.

பதவியா, வகால்கட போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த ஐஞ்ஞூற்றுவரின் வீரபட்டினங்கள் கடல்வழியாக நாவாய்களில் வாணிபப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்த பெருவணிகரோடும் தொடர்பு கொண்டிருந்தன. கட்டனேரியான நானாதேசிய வீரபட்டினம் **மாந்தை தோணக்கார பட்டவர்த்தனம்** என்ற தலைவனையும் உள்ளடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மாந்தைத் துறைமுகத்திலிருந்த நாவாய் செலுத்தும் கூட்டத்தவரோடு கட்டனேரியான வீரபட்டினம் நெருங்கிய தொடர்பு களை ஏற்படுத்தியிருந்தது என்பதை இதனால் அறிந்துகொள்ள முடிகின்றது. அதேபோல பதவியாவிலிருந்த அய்யம்பொழில் பட்டினமும் கப்பலோட்டும் வணிகரோடு ஏதோ ஒரு வகையிலே உறவு கொண்டிருந்தது. பதவியாவி லுள்ள ஐஞ்ஞூற்றுவரின் சாசனமொன்று **சங்கர மனுதன்** என்றவொரு வனைக் குறிப்பிடுகின்றது.[61] பெரும் நாவாய்கள் **சங்கரம்** எனப்பட்டதால் வாணிப மரக்கலங்களை வைத்திருந்தவொருவனையே **சங்கர மனுதன்** என்று சாசனம் குறிப்பிடுகின்றதெனக் கருதலாம். இலங்கையின் உள்நாட்டு வாணிபத்தையும் வெளிநாட்டு வாணிபத்தையும் சில முறைகளில் இணைத் துக் கொள்ளத்தக்க வகையிலே நானாதேசித் திசையாயிரத்து ஐஞ்ஞூற்று வர் பரந்த கூட்டுறவின் அடிப்படையிலான அமைப்புக்களை ஏற்படுத்தி யிருந்தனர். உள்ளூர்ப் புறங்களிலே கொள்வனவு, விற்பனவுகளைச் செய்த தோடு துறைமுகங்களினூடாகப் பொருட்களை இறக்குமதி செய்வதிலும் ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

## வணிகரின் கலாச்சார நடவடிக்கைகள்

வளமான வாழ்க்கையினையுஞ் செல்வவளங்களையும் பெறும் வாய்ப் பினைப் பெற்ற வணிகர் தங்கள் மேலதிகமான வருமானங்களிற் குறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடத்தக்க பகுதியினைச் சமயப் பணிகளுக்கும் பொதுப்பணிகளுக்குஞ் செல விட்டார்கள். கோயில்கள், பௌத்தப்பள்ளிகள் போன்ற சமய நிறுவனங் களை அமைப்பதிலும் அவற்றை ஆதரிப்பதிலும் அவர்கள் ஆர்வங் கொண் டிருந்தார்கள்.[62] முத்தமிழ், பாடல், ஆடல் என்பவற்றில் அவர்கள் ஈடு பாடு கொண்டிருந்தார்கள் என்பதனை அவர்களின் மெய்க்கீர்த்தி உணர்த்து கின்றது. 'அறம் வளரக் கலிமெலியப் பகை பணிய' என ஐஞ்ஞூற்று வரின் சாசனங்களில் வருஞ் சொற்றொடர்கள் அறம்பற்றிய சிந்தனைகள் அவர்களைக் கவர்ந்திருந்தன என்பதைக் குறிப்பனவாயுள்ளன. வணிக ரமைத்திருந்த பட்டினங்களிலே சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளை யும் இலக்கிய வடிவங்களையும் கற்றறிந்து கொள்வதற்கான வசதிக ளிருந்தன என்பதற்கு ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களும் அவற்றிலுள்ள மெய்க்கீர்த்திகளும் மறைமுகமான சான்றுகளாயுள்ளன.

தமிழ் வணிகர் இலங்கையிலுள்ள சைவக் கோயில்களுக்கும் பௌத் தப் பள்ளிகளுக்கும் நன்கொடை முதலியவற்றைக் கொடுத்து ஆதரவளித் தமையினைப் பல சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அநுராதபுரத்திலிருந்த இந்துக்கோயிலொன்றில் வருமானத்தைக்கொண்டு நாள்தோறும் திரு வமுது இடுவதற்கும் நொந்தா விளக்கொன்றினை எரிப்பதற்குமாகச் சேக்கிழான்சங்கன் என்ற செட்டி வணிகன் 30 ஈழக்காசினைக் குமார கணத்துப் பேருரார் என்னும் குழுவினரிடம் முதலிருப்பாக வைத்திருந் தான்.[63] இதற்குப்பின் ஈராண்டுகள் கழிந்த பின்னர், சங்கபோதிமாரா யன் என்ற பட்டத்தையுடைய அரசனின் ஏழாமாண்டில் அதே கோயிலில் அதே திருப்பணிகளுக்காகச் சேக்கிழான்சென்னி என்ற வணிகன் 30 ஈழக்காசினைக் குமாரகணத்துப் பேருராரிடம் முதலிருப்பாக வைத்தான்.[64]

பதவியாவிலிருந்த இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என்னுங் கோயிலை அமைத்துக்கொள்வதிலும் ஆதரிப்பதிலும் நானுதேசியரும் பிற தமிழ் வணிகரும் பங்கு கொண்டிருந்தனர். அழகன் வத்தமநான தேசிய்யாயத் துணைச்செட்டி, பதியில் வணிகன் தனியப்பன் என்போரும் அக்கோயி லின் அத்திவாரக் கற்களை நாட்டியிருந்தனர்.[65] அக்கோயிலுக்கு நன் கொடை வழங்கியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்ற ராசராசனின் சாசனத்தில் நானுதேசியன் கொண்ணுவில் வெண்காடன் என்ற பெயருங் காணப்படுகின்றது. அவன் ஒரு எறிமணியையும் ஒரு வெண்கல மணி யையும் கோயிலுக்குத் தானம் பண்ணியிருந்தான்.

பதவியாவிலுள்ள ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களிரண்டு அவர்கள் சைவநிறுவனங்களோடு கொண்டிருந்த தொடர்பினைக் குறிப்பிடுகின்றன. அவற்றுளொன்றில் 'நகரை அரனுக்குத் தேசிகளாக்கி' என்ற மொழித் தொடர் வருகின்றது.[66] சிவன் கோயிலொன்றினைப் பரிபாலிப்பதற்கும் அதற்குச் சேவை புரிவதற்கும் வணிகரின் நகரமான அய்யம்பொழில் பட்டினம் பொறுப்பேற்றிருந்தமையினைக் குறிப்பதாய் இம்மொழித் தொடர் அமைகின்றது. வடதனி நங்கைகள்பற்றிய சாசனக் குறிப்பு பதவியாவிலுள்ள காளிகோயில்களுடன் ஐஞ்ஞூற்றுவர் தொடர்பு கொண்டிருந்தமையினை உணர்த்துவதாயுள்ளது[67]. அங்கிருந்த அய்யம் பொழில் பட்டினத்தைச் சேர்ந்த வீரக்கொடி என்போர் கோயிலொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிற்கு விக்கிரகஞ் செய்து கொடுத்தார்கள். பதவியாவிலுள்ள மூன்றும் சிவதேவாலயத்தின் அழிபாடுகளிடையிற் கண்டெடுக்கப்பெற்றதும் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குரிய வரிவடிவ அமைப்பிலுள்ளதுமான சாசன மொன்று வணிகரின் சிறப்பினைப்பற்றிப் புகழ்ந்துரைக்கின்றது.[68] அக்கோயிலும் வணிகரின் ஆதரவைப் பெற்றிருந்தது எனச் சிந்திக்கலாம். அய்யம்பொழில் பட்டினத்தைச் சேர்ந்த வணிகர் பதவியாவிலே பல இந்துக்கோயில்களை அமைத்து அவற்றைப் பாதுகாத்துவந்ததுடன் அந் நகரிலேற்பட்ட இந்துக் கலாச்சார வளர்ச்சிக்கும் ஆதரவாயிருந்தனர் என்பது மிகையாகாது.

இலங்கையிலிருந்த தமிழ் வணிகரிற் சிலர் பௌத்த விகாரங்களை அமைத்து அவற்றிற்கு நன்கொடைகளைக் கொடுத்திருந்தார்கள். அநுராதபுரத்திலிருந்த நான்குநாட்டார் சேனுவர்மன் என்ற மன்னனின் ஆட்சிக் காலத்தில் மாக்கோதைப்பள்ளி என்ற விகாரத்தினை அமைத்து அதன் அறக்கட்டளைகளைப் பரிபாலிப்பதற்கும் ஒரு குழுவொன்றினை நியமித்திருந்தார்கள்.[69] பொலநறுவையிலுள்ள பதினொராம் நூற்றாண்டிற்குரிய சாசனமொன்றிலே பதினெண்பூமித் தேசித் திசையாயிரவர் ஐஞ்ஞூற்றுவர் வாழுகின்றவிடத்திலுள்ள பள்ளியொன்றினைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.[70] அப்பள்ளியானது ஐஞ்ஞூற்றுவரால் அமைக்கப்பட்டிருந்தவொரு பௌத்த விகாரமாயிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாவியவையும் குறிப்புக்களும்

1. அய்யாவொளே என்பது ஐகொளே என இந்நாட்களிற் குறிப்பிடப்படும் நகரின் பழம் பெயராகும். அது வாதாபிச் சாளுக்கியரின் பிரதான நகரங்களுள் ஒன்றாகும். வாதாபி சாளுக்கியரின் தலைநகரமாகவும் பிரதான இராணுவத் தளமாகவும் விளங்கியது. அதற்கண்மையிலிருந்த அய்யாவொளே, பெருவணிகர் குழாங்கள் வாழ்ந்த வாணிப நிலையமாகவிருந்தது. அய்யாவொளே நகரில் உற்பத்தியான வணிக கணம் அய்யாவொளே ஐஞ்ஞூற்றுவர் என்ற பெயரைப் பெறலாயிற்று. அவ்வணிக கணத்தவரைக் குறிப்பிடும் சாசனங்களுட் காலத்தால் மிக முற்பட்டவை ஐகொளேயில் உள்ளன. அவை எட்டாம் நூற்றாண்டிற்குரியவை. அய்யாவொளே வணிகர் தாம் சென்றிருந்த இடங்களிலே புதிய வணிக நகரங்களை அமைக்குமிடத்து சில சமயங்களில் அவற்றிற்குத் தக்ஷிண அய்யாவொளே என்று பெயரிட்டிருந்தார்கள். தமிழ்ச் சாசனங்கள் குறிப்பிடும் அய்யம்பொழில் பட்டினம் இத்தகையதாகும்.

2. K. Indrapala, South Indian Mercantile communities in Ceylon, circa 950 — 1250', **CJHSS**, New Series, Vol. I, No.2, p.102.

3. Ibid, K. A. Nilakanta Sastri, **The Colas**, Madras 1955, pp. 605-606.

4. அருமணத்தின் தலைநகரான பகானில் நானாதேசி வணிகர் தங்கியிருந்தமைக்கு அங்குள்ள அவர்களின் சாசனமொன்று சான்றளிக்கின்றது. சுமாத்திராவில் 1088 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஐஞ்ஞூற்றுவரின் சாசனமொன்றுள்ளது. சீனாவின் துறைமுகப் பட்டினங்களிலும் தென்னிந்திய வணிகர் தங்கியிருந்தார்கள் என்பதைச் சில தொல்பொருட்கள் மூலமாக அறிய முடிகின்றது. **The Colas** pp. 596-597; J.Filiozat 'Research in South East Asia and in the Far East'., Proceedings of the First International Conference Seminar of Tamil Studies, Kulala Lumpur, 1966, I, p. 12.

5. A.Appadurai, **Economic Conditions in South India**, Vol I, Madras 1936, pp. 398-402.

6. பல்லவ அரசன் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் (844-866) எழுதப்பெற்ற மணிக்கிராமத்து வணிகரின் சாசனமொன்று சீயம்நாட்டிலுள்ள தகுவ-ப என்னுமிடத்திலுள்ளது. மணிக்கிராமத்து வணிகர் பெருமாள் கோயிலொன்றையும் தடாகமொன்றையும் அந்நாட்டில் அமைத்திருந்தார்கள். K. A. Nilakanta Sastri, **A History of South India**, Oxford University press, Madras, 1958, p. 321.

7. K. A. Nilakanta Sastri, **The Pandyan Kingdom**, Reprint. Swathi Publications Madras, 1973, p. 81.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஐஞ்ஞூற்றுவரின் கன்னடச் சாசனங்களிலும் தமிழ்ச் சாசனங்களிலும் சேர்க்கப்பட்டுள்ள மெய்க்கீர்த்திகளெல்லாம் இச்சொற்றொடர்களைக் கொண்டுள்ளன. ஐஞ்ஞூற்றுவர் ஐஞ்ஞூறு வீரசாசனங்களைப் பெற்ற வர்கள், அவர்கள் மூன்று உலகங்களுக்கும் புகலிடமானவர்கள், அவர்களுடைய மார்பகத்தைத் திருமகன் அலங்கரிக்கின்றான் என்பவற்றை இச்சொற்றொடர்கள் குறிக்கின்றன.

9. A History of South India; p. 321.

10. Ibid pp. 321 – 322; Y. Yazadani, **The Early History of the Deeean.**

11. எழு கண்டங்கள், பதினெட்டுத் தேசங்கள் என்பனபற்றிய குறிப்புக் கள் வரலாற்றுச் சார்பற்றவை. அவை பௌராணிக, இலக்கிய மரபு களைப் பின்பற்றி எழுந்தவை. நாவலந்தீவு முதலான ஏழு கண்டங் களைப்பற்றிப் புராணங்கள் சில கூறுகின்றன. சோழ மன்னரின் மெய்க்கீர்த்திகளிலும் ஏழு கண்டங்கள் பற்றிய குறிப்புக்களுள்ளன. 'பாரேழும், பொழிலேழும் படிபுரக்கும் கிரியேழும் நீரேழும் தனி கவித்து நிறைமதி வெண்குடை நிழற்ற' என்பது மூன்றும் ராஜ ராஜனின் மெய்க்கீர்த்தியிலுள்ள தொடராகும்.

சிங்களம், சோனகம், சாவுகம் முதலிய தேசங்கள் பதினெட்டென் பது ஓரிலக்கிய மரபாகும். சேர, சோழ, பாண்டிய, மலைய, மகத, கோசல, சௌராஷ்ட்ர, தனுஷ்ட்ர, குரும்ப, காம்போஜ, கௌள்ள (கௌட)லாட்டவர்வ்வர, பரஸ (பாரசீகம்), நேபாள ஆகிய தேசங் களுக்குச் சென்று ஐஞ்ஞூற்றுவர் வாணிபஞ் செய்தனரென்று அவர் களின் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. ஐஞ்ஞூற்றுவர் பல தேசங் களுக்குச் சென்று வாணிபஞ் செய்தனராயினும் அவர்கள் பதினெட்டுத் தேசங்களுக்குஞ் சென்றிருந்தார்கள் என்று கொள்ள முடியாது. **History of South India**, p. 321.

12. The Colas, p. 597.

13. 'ஸ்வஸ்தி ஸ்ரீ திருச்செல்வம் பெறுக...... புக்கமான அரிவட்டன புரத்து நானாதேசி விண்ணகர் ஆழ்வார் கோயில் திருமண்டபமுஞ் செய்து திருக்கதவும் இட்டு இந்த மண்டபத்துக்கு நின்றெரிகைக்கு நிலைவிளக்கொன்றும் இட்டேன். மலைமண்டலத்து மகோதையர் பட்டினத்து ஈராயிரன் சிறியனை குலசேகரநம்பியேன், இது ஸ்ரீதன்மம் மலைமண்டலத்தான்' இது மியின்பகானிலுள்ள தமிழ்க் கல் வெட்டின் வாசகமாகும். **EI, VII**, pp. 187–189.

14. **EC, VII**, pp. 158–159, **ARE** 1918, p. 174.

15. T. V. Mahalingam, **South Indian Polity.**

16. V. Venkayya, 'Kottayam Plates of Vira Raghava' **EI, IV.** No. 41, p. 295.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. வணிக பட்டினம் என்பது கன்னட மொழியில் வணஞ்சு வட்டணம் எனப்படும். **வணஞ்சு** என்பது **வணிஜ** என்ற சமஸ்கிருதச் சொல்லின் திரிபு என்பது நீலகண்ட சாஸ்திரியின் கருத்தாகும். **A History of South India**, p. 321.

18. 'Hulgur Inscriptions of the Reigns of Jayasimha II (Saka 960) and Yadava Kanhara', **EI, XVI.** No. 25, p. 332.

19. L. D. Barnett Memdapur Inscription of the reegn of Kanhara Saka 1172, **EI, XIX**, p. 25.

20. **The Colas**, p. 597.

21. Ibid, p. 610.

22. Ibid, p. 597.

23. பொலநறுவைக்கு அண்மையிலுள்ள ஆனைவிழுந்தான், வதுளை ஆகிய விடங்களிலும் அநுராதபுரத்திலும் உள்ளமையே சிங்களச் சாசனங்களாகும். அநுராதபுரத்திலுள்ள லீலாவதியின் ஆட்சிக் காலத்திற்குரிய சாசனம் நானாதேசி வியாபாரிகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆனை விழுந்தான் என்னுமிடத்திலுள்ள சாசனம் சிங்கள எழுத்துக்களிலுள்ள சமஸ்கிருத மொழியிலமைந்தவொன்றாகும். சாசனம் எழுதப்பட்ட கல்லின் ஒரு சிறிய பகுதிமட்டுமே கிடைத்துள்ளது. அதில் ஐஞ்ஞூற்றுவரின் பிரஸஸ்தியின் தொடக்கப்பகுதி காணப்படுகின்றது.

**EZ, II**, No. 38, pp. 235-236.

24. வீரக்கொடி பற்றிக் குறிப்பிடுகின்ற மணல்கேணியிலுள்ள சாசனம் இன்னும் வாசித்து வெளியிடப்படவில்லை. வகால்கட, விகாரேகின்ன ஆகியவிடங்களிலுள்ள ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களும் பதவியாவிலுள்ளவொரு சாசனமும் முழுமையாகவிருப்பதோடு ஓரளவிற்கு வாசிக்கக்கூடியனவாயுமுள்ளன. ஐஞ்ஞூற்றுவரின் சாசனங்களுட் பதவியாவிலுள்ள சாசனங்களிலொன்றும் கல்தேன்பிட்டிய, தெகிய முல்லை ஆகியவிடங்களிலுள்ளவையும் சேதமடைந்துள்ளன.

25. S. Paranavitana, 'A. Revised Edition of the Badulla (Horabora) pillar-Inscripton' **EZ, V**, pp. 177-189.

26. சமஸ்கிருத சாசனங்களிலும் நூல்களிலும் வணிக்கிராமம் என்று குறிப்பிடப்படும் வணிக கணமே தென்னிந்திய சாசனங்கள் குறிப்பிடும் மணிக்கிராமம் என்பதாகும். '**வணிகர் கணம்** எனப்பொருள்படும் **வணிக்கிராமம்** என்பதன் திரிபே மணிக்கிராமம் என்ற பொதுவான விளக்கம் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்' என்பது நீலகண்ட சாஸ்திரியின் குறிப்பாகும். மணிக்கிராமம் என்பதையே இச்சாசனம் வணிக்கிராமம் எனக் குறிப்பிடுகின்றதென்பது சே. பரணவிதான,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா. இந்திரபாலா என்போரின் கருத்தாகும். A History of South India, p. 321, EZ, V, p. 190, CJHSS New Series, Vol. I, No, 2, p. 105.

27. SII, IV, No, 1403, கா. இந்திரபாலா, 'அநுராதபுரத்திலுள்ள நான்குநாட்டார் கல்வெட்டு', சிந்தனை I, (4), சனவரி, 1968, பக்கங்கள் 31–35.

28. CTI, pt. II. pp. 23-24.

29. ET, Vol. I, pt I, p. 33.

30. CTI, pt. II, p. 12.

31. இலங்கைத் தொல்பொருட்டிணைக்களத்திலுள்ள சாசனப் படிவம். இலக்கம் 2346.

32. ARE, 1922, No. 505, p. 32.

33. ARE, 1927, p. 94, No, 598 of 1926.

34. Ibid.

35. EZ, 1, p. 180.

36. CTI, pt. I, pp. 53–54.

37. EI, XIX, p. 56

38. SII, Vol. IV, p. Nos. 1403, 1404.

39. SII, Vol. IV, No. 442.

40. CTI, pt. II, p. 20.

41. 'புரந்தர தேசியபட்டன பதினெ(ண்பூமி) வளத்து...', 'அருஞ்சிறப்புத் தேசி பதினெண்பூமி பட்டினப் பாதை' எனத் தெகியமுல்லை சாசனத்தில் வருஞ் சொற்றொடர்கள் பாண்டுவாஸநுவரவிற்கு அண்மையில் வணிக பட்டினமிருந்ததென்பதை உணர்த்துகின்றன. CTI, pt. II, p. 16.

42. CTI, pt. II, p. 16.

43 விகாரேகின்னக் கல்வெட்டிலே, 'பெருமக்கள் எங்கும் நோக்கிச் செய்து சிறப்பிப்பது நம் உடப் பிறந்தான் சம்பளம் நீக்கி நாளடங்க தேசி யாண்டாண்டென்றுடை வீரபட்டினத்துக்கு வைப்ப', 'இ(ம்) மா நகரம் அடியிட்டதற்காகவும்' என வரும் வரிகள் நானுதேசித் திசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் விகாரேகின்னப் பகுதியிலே நகரம் ஒன்றை அமைத்திருந்தனர் என்பதையும் அது வீரபட்டினம் எனப்பட்டது என்பதையும் தெளிவுபடுத்துகின்றன.

44. 'தன்றசிபட்டமையில்' என்ற வாசிப்புப் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. அத்துடன் தன்றசி என்பது பொருளற்றதால் அதனைத் தமிழ் வழக்கிலுள்ள ஒரு சொல்லாகக் கொள்ளவியலாது.

45. கூத்திப்பெருமான் சிவனின் மூர்த்தமாகிய நடராசப் பெருமானையுங் குறிக்கும். ஐஞ்ஞூற்றுவர் அய்யப்பொழில் பரமேஸ்வரியாகிய துர்க்காதேவியை இஷ்டதெய்வமாக வழிபட்டமையாலும் பதவியாவிலுள்ள அய்யம்பொழில் பட்டினத்து ஐஞ்ஞூற்றுவர் அங்கிருந்த சிவன் கோயிலொன்றிற்குச் சேவை புரிந்தமையாலும் அவர்கள் இந்துக்கள் என்பதுஞ் சைவசமயச் சார்புடையவர்களென்பதுந் தெளிவாகின்றன. ஆகையால் தெய்வத்தையன்றி மனிதனையே இச்சாசனங் குறிப்பிடுகின்றது எனக் கொள்ளவேண்டியுள்ளது.

46. சூளவம்சம், 61 : 67.

47. CTI, pt. I, pp. 53 – 54.

48. அச்சாசனத்தைப் பதிப்பித்த விக்கிரமசிங்க இதனை 'மஸிஸய' என வாசித்துள்ளார்; மடிகய என்றே அது கொள்ளத்தக்கதாகும்.

49. CTI. pt. II. p. 78.

50. CTI, pt. I. p. 56.

51. அங்கக்காரர் என்போர் தங்கள் எஜமானையும் அவனுடைய இலட்சியங்களையும் தங்கள் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாத்துக் கொள்வதாகச் சத்தியஞ் செய்துகொள்ளும் வழக்கமுடைய போர்வீரர்களாவார். இவ்வழக்கத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் வேளைக்காரரைப் பெரிதும் ஒத்திருந்தமை கவனித்தற்குரியது. அங்கக்காரர் எனப்படுவோர் கர்நாடகத்திலே உருவாகிப் பின் தமிழகத்திலே அறிமுகமாகிய ஒரு படைப்பிரிவினராயிருத்தல் வேண்டும்.

52. SII, Vol. IV, No. 1396.

53. CTI, pt. II, p. 19.

54. CTI, pt. I, pp. 53, 54.

55. சூளவம்சம், 58 : 8 – 9.

56. சூளவம்சம், 69 : 33.

57. K. Indrapala, 'The Nainativu Tamil Inscription of Parakramabahu I; UCR, XXI, No. 1, April 1963, p. 68.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. CJHSS, new series, Vol. I, No. 2.

59. **Economic conditions in South India.**

60. CTI, pt. I, p. 55.

61. ஆறு தர்சனங்களையும் நான்கு சமயங்களையும் கற்றுணர்ந்த மேதாவிகளையும் முனிவர்களையும் தாம் போற்றி ஆதரித்ததாக ஐஞ்ஞூற்றுவர் தங்கள் சாசனங்களிலே குறிப்பிடுகின்றனர். 'முத்தமிழ்ப் பாடலொடு ஆடலோவா விழவும் வேழ்வியும் விளங்கிய வீதியிடைத் தெங்கும் பலாவுந் தேமாஞ்சோலையும் சந்தன வேலிச் சண்பகப் பொழிலும் வாழையும் கமுகும் வளர்கொடி முல்லையும் பூவையுங் கிள்ளையும் பொலிவொடு சூழ' என்ற சொற்றொடர்கள் ஐஞ்ஞூற்றுவரின் சாசனமொன்றிலே வருகின்றமையுங் குறிப்பிடத்தக்கது. SII, IV, No. 442.

62. SII, IV, No. 1412.

63. SII, IV, No. 1403.

64. SII, IV, No. 1404.

65. CTI, pt. II, pp. 23-24.

66. CTI, pt. I, p. 55.

67. CTI, pt. I, p. 55.

68. CTI, pt. II, p. 20.

69. SII, Vol, IV, No. 1405.

70. CTI, pt. II, p. 12.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முயற்சியாளர் வர்க்க எழுச்சியும் அதன் முதலாளித்துவ இணக்கப் பான்மையும்

வி. நித்தியானந்தன்

நவீன உலகின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரப் பிரச்சினையாகிய 'குறைவிருத்தி நிலை' பற்றி ஆராய்ந்துள்ள எஸ். பீ. டீ. டி. சில்வா, தமது நூலின் அறிமுகத்திற் குறைவிருத்தி நிலை என்பது '. .. வரையறுக்கப்பட்ட ஓர் அரசியல்-வரலாற்றுச் செய்முறையின் விளைவு' என்றும் அக்காரணத்தினால் அதனை 'மரபு ரீதியான பொருளியல், அபிவிருத்திக் கோட்பாடு என்பவற்றிற்குப் புறம்பாகப் பலதரப்பட்ட துறைகளாகிய அரசியல், பொருளியல், வரலாறு, சமூகவியல் ஆகியவற்றையும் கணிப்பிற் கொண்டே ஆராய முற்படவேண்டும்' எனவும் எடுத்துக் கூறுகின்றார்.[1] அவ்வகையில் இலங்கையின் குறைவிருத்தி நிலையை உருவாக்குவதிலும் அது நீடித்திருப்பதிலும் இச்சக்திகள் பலவும் தனித்தனியாகவும் ஒருமித்த வகையிலும் பாரிய செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன, இன்றும் செலுத்துகின்றன. அதற்காதாரமாக இலங்கையின் அபிவிருத்தி அநுபவத்திலிருந்து அநேக எடுத்துக்காட்டுக்களைச் சுட்டிக்காட்ட முடியும். அவற்றுள் அடிப்படைத் தன்மை வாய்ந்த ஒன்றாகிய முயற்சியாளர் வர்க்க எழுச்சி பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முயற்சியாளர் வர்க்கமே நாடுகளில் இடம்பெறும் பொருளாதார மாறுபாடுகளுக்குரிய முன்னோடியாக என்றுமே திகழ்ந்து வந்துள்ளது. அரசாங்கக் கொள்கை முயற்சியாளரின் செயற்பாட்டைப் பாதிக்க வல்லதாயிருந்த போதும், பல சந்தர்ப்பங்களில், அவர்களே அரசாங்கக் கொள்கைக்குப் பொறுப்புடையவர்களாயிருந்தார்கள்; அல்லது அதன் மீது தமது செல்வாக்கைப் பிரயோகித்து அதனைத் தமது தேவைக்கேற்ப மாற்றியமைக்கக் கூடிய சக்தி பெற்றிருந்தார்கள். இலங்கை மாத்திரம் எந்த வகையிலும் அதற்கு விதி விலக்காயிருக்கவில்லை. உள்நாட்டு முயற்சியாளர் வர்க்கத்தின் தோற்றம், வளர்ச்சி, அது மேற்கொண்ட முதலீடுகள் என்ற யாவும் சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தின் தன்மையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாயமைந்தன.

ஒரு குடியேற்ற நாடாயிருந்து சுதந்திரம் பெற்றதென்ற வகையில், இலங்கையின் முயற்சியாளர் வர்க்கம், பொதுவாக, அது போன்ற ஏனைய நாடுகளின் வர்க்கங்களையொத்ததொன்றெனக் கூற முடிந்தாலும், அதற்கே உரித்தான சில தனித் தன்மைகளும் இலங்கை முயற்சியாளர் வர்க்கத்திற்கு இல்லாமற் போய் விடவில்லை. அவ்வாறான தனியான பண்புகள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மாத்திரமன்றி அதன் சமூக அமைப்பு, அரசியல் வளர்ச்சி என்பவற்றையும் பெரிதும் செல்வாக்கினுக்குட்படுத்தி நாட்டின் பிரச்சினைகளை வேறான ஒரு பாதையில் திசை திருப்பி விடுவதற்குப் பொறுப்பாயிருந்தன. இலங்கை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளின் பட்டியலில் உச்ச நிலையில் இருக்கும் இன நெருக்கடி கூட, நுணுகிப் பார்ப்பின், ஒரு வகையில் அத்தகைய செல்வாக்கின் விளைவென்றே கூறலாம். எனினும் இன்றைய காலகட்டம் வரை நீட்டுவிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படக்கூடிய வளர்ச்சிகள் தனியொரு ஆய்வின் கருப் பொருளாக வேண்டியவையென்பதுடன் இது போன்றதொரு கட்டுரையின் பருமனுக்கும் அப்பாற்பட்டவையாகும்.

எனவே இக்கட்டுரை முன்வைக்க விழைபவை, உண்மையில், மிக மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நோக்கினையுடையவையென்றே கூற வேண்டும். தரப்பட்ட குடியேற்றநாட்டுவாத நிலைமைகளின் கீழ் முயற்சியாளர் வர்க்கத்தின் தோற்றம், வளர்ச்சி என்பன எடுத்துக் கூறப்படுவதுடன், இலங்கை சுதந்திரமடையும் தறுவாயில் அவ்வர்க்கம் எவ்வாறு தெளிவான ஒரு தன்மையைப் பெற்றிருந்ததென்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது. அவ்வாறாக அது கொண்ட தெளிந்த நீரோடை போன்ற துல்லியமான தன்மை நாட்டின் பொருளாதார, சமூக அம்சங்களைப் பாதித்திருந்ததுடன் இலங்கையின் சுதந்திரத்தையே வெறும் பெயரளவிலான ஒரு நடைமுறையாக மாற்றியமைத்திருந்ததென்பதும் முன்வைக்கப்படுகின்றது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால இலங்கையின் அரசியற் பொருளாதார மாறுபாடுகளைச் சரியான ஒரு நோக்கினிற் பொருத்திப் பார்ப்பதற்கு இக் கட்டுரை ஒரு வழிகாட்டியாக அமைய முடியுமாயின் கட்டுரை தனது குறிக்கோளைப் பூர்த்தி செய்துள்ளதெனலாம்.

## I

உலக முதலாளித்துவ அபிவிருத்திக்கும் குடியேற்றநாட்டுவாதத்திற்கு மிடையே நெருக்கமான ஒரு தொடர்பு நிலவுகிறதென்பது இன்று நன்கு நிறுவப்பட்டுவிட்டதோர் எண்ணக் கருவாகும். மாக்ஸ் இது பற்றிக் கூறும்போது

> 'அமெரிக்காவில் தங்கமும் வெள்ளியும் கண்டு பிடிக்கப்பட்டமை, ... இந்தியா கைப்பற்றப்படவும் சூறையாடப்படவும் ஆரம்பித்தமை, ஆபிரிக்கா கறுப்பர்களை வணிக நோக்குடன் வேட்டையாடுவதற்குரிய ஒரு வேட்டைக் காடாக மாற்றப்பட்டமை என்ற இவை யாவும் முதலாளித்துவ உற்பத்திச் சகாப்தத்தின் விடிவைக் குறித்து நிற்பவையாகும்.'[2]

எனக் குறிப்பிட்டார். அவ்வகையிற் குடியேற்ற நாடுகள் மூலதனத் திரட்டலுக்கான தொடக்க நிலைச் சாதனங்களாகச் செயற்பட்டிருந்தன.[3] 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியளவில் உற்பத்தி முதலாளித்துவம் தோன்றுவதற்கு முன்னதாக இடம் பெற்றிருந்த வணிக முதலாளித்துவமானது (வாணிபவாதம்), உண்மையில், குடியேற்றநாட்டு முறைமையொன்றினை அடிப்படையாகக் கொண்டு அதன் மீது தங்கியிருப்பதொன்றாகவே கட்டியெழுப்பப்பட்டிருந்தது. உதாரணமாக, இங்கிலாந்தின் வாணிபவாதக் கொள்கை மேற்கிந்திய, வடக்குப்புறக் குடியேற்றங்களின் உதவியின்றி வெற்றியடைந்திருக்க முடியாது. எனினும் உற்பத்தி முதலாளித்துவத்தின் படிப்படியான தோற்றத்துடன் குடியேற்ற நாடுகளின் பங்கும் மாற்றமடைய வேண்டியதாயிற்று. அது வரை அவ்வப் பிரதேசங்களிற் சேகரிக்கப்படக் கூடிய வளங்களை மாத்திரம் மூலதனத் திரட்டலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிக் கொண்டிருந்த குடியேற்ற நாடுகள் இப்போது தாய் நாட்டில் உற்பத்தியாகிய பொருட்களுக்கான சந்தையாகவும் அதே நேரத்தில் தாய் நாட்டு உற்பத்திகளுக்குரிய முடியுமான முதல் விளைவு மூலப் பொருட்களை வழங்குவதற்குரிய நிரம்பல் நிலையங்களாகவும் மாற்றமடைய வேண்டியிருந்தன.[4] சுங்கப் பாதுகாப்பிலிருந்து பூரணமாக விடுவிக்கப்பட்ட கட்டற்ற வர்த்தகம் என்பது அதற்குரிய தத்துவமாக முன்வைக்கப்பட்டுச் சர்வதேசத் தொழிற் பிரிவு அதன் குறிக்கோளாக வலியுறுத்தப்பட்டது. ஆனால் அதன் மூலம், நடைமுறையில், தாய் நாட்டுக்கும் குடியேற்ற நாடுகளுக்குமிடையே சமமற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு இடம் அளிக்கப் பட்டதுடன் பின்னையவற்றில் இயல்பாக ஏற்பட்டிருக்கக் கூடிய உற்பத்தி வளர்ச்சியும் தடைப்பட்டது.

ஒரு புறம், தாய் நாட்டின் தரம் கூடிய உற்பத்திகள் குவிக்கப்பட்ட விடத்துக் குடியேற்ற நாடுகளின் கைத்திறக் கைத்தொழில் உற்பத்தி அமைப்புப் படிப்படியாகத் தூர்ந்து போக, மறு புறம், புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட முதல் விளைவு மூலப் பொருள் உற்பத்தி அவற்றின் இயல் பான உற்பத்திச் செய்முறையைத் திரிபு நிலைக்குட்படுத்திக் கொண்டிருந் தது. தனிப்பட்ட உற்பத்தியாளருக்கிடையிலான போட்டியை அடிப்படை யாகக் கொண்ட இத்தகைய முதலாளித்துவ வளர்ச்சிச் செய்முறை வெகுவிரைவில் – 1848 அளவில் – தனியுரிமை முதலாளித்துவமாக மாற்ற மடைந்த போது இந்நிலைமை மேலும் மோசமடையலாயிற்று. அதன் மூலம், லெனின் குறிப்பிடும் முதலாளித்துவத்தின் உச்சக் கட்டமாகிய ஏகாதிபத்தியவாத சகாப்தம்[5] தோற்றுவிக்கப்பட்டதுடன் ஏற்கனவே அறி முகமாயிருந்த சர்வதேசத் தொழிற் பிரிவும் மேலும் இறுக்கமடைந்து கொண்டிருந்தது. அதாவது மேற்கத்திய வல்லரசு நாடுகள் கைத்தொழி லில் மேன்மேலும் முன்னேற்றமடைந்து கொண்டு செல்ல அவற்றின் கீழிருந்த குடியேற்ற நாடுகள் விவசாய முதல் விளைவு மூலப் பொருளுற் பத்தியிற் சிறப்பு நிலையடைந்து கொண்டிருந்தன. அதன் விளைவாக மேற்கு நாடுகளின் முதலாளித்துவத் தனியுரிமைகள் தமது தனியுரிமை லாபங்களை மேலும் அதிகப்படுத்தும் நோக்கத்துடன் வெளி நாடுகளிலும் முதலீட்டு வாய்ப்புக்களைத் தேட ஆரம்பித்திருந்தன. அவ்வாறு வெளி நாடுகள் நோக்கிச் சென்ற மூலதனம் முயற்சி சார்ந்த உற்பத்தி மூல தனமாக மாத்திரமன்றிப் பெருமளவு கடன் மூலதனமாகவும் விளங்கி யமை குறிப்பிடத்தக்கது.[6] குடியேற்ற நாடுகள், இவ்வாறான முதலீட்டு வாய்ப்புக்களை இடப்படுத்தி இலகுவாக லாபம் உழைக்கக் கூடிய பாதுகாப் பான பிரதேசங்களாக விளங்கின. எனவே, குடியேற்ற நாடுகளில் ஏற் கெனவே சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பொருளியல் முயற்சிகள் இப்போது பெரிதும் விஸ்தரிக்கப்படவே அந்நாடுகளிலான பழைய உற்பத்தி அமைப்பு முற்றாகவே சிதறிப் போயிற்று. அவ்விடத்திற் புதிய முதலாளித்துவத் தொடர்புகள் புகுத்தப்பட்டிருந்தன. ஆகவே புதிய முதலீடுகள் வாயிலாக மூலதனத்தை ஏற்றுமதி செய்த நாடுகளில் முத லாளித்துவ அபிவிருத்தி பெரிதும் விரைவு படுத்தப்பட்டது மாத்திரமன்றி அதனை ஏற்றுக் கொண்ட நாடுகளிலும் முதலாளித்துவ முறைமை அறி முகம் செய்யப்பட்டிருந்தது. லெனின் வார்த்தைகளில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எந்நாடுகளுக்கு மூலதனம் ஏற்றுமதி செய்யப்பட்டதோ அந்நாடு களின் முதலாளித்துவ அபிவிருத்தியை இவ்வேற்றுமதி செல்வாக் கினுக்குட்படுத்துவதுடன் பெரிதும் விரைவு படுத்தவும் செய்கின் றது. ...... (அதன் வழி) முதலாளித்துவம் உலகளாவியதொன் ருக்கப்பட்டது'.[7]

இவ்வகையிற் குடியேற்றநாட்டுவாதமானது உலக முதலாளித்துவ ஊடுருவ லுக்கான முக்கிய கருவிகளுள் ஒன்ருகச் செயற்பட்டிருந்தது.

ஆனல் குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட முதலாளித்துவ ஊடுருவல் மேற்கத்திய நாடுகளைப் போல அந்நாடுகளின் உற்பத்திச் சக்திகளைத் தகுந்த வகையில் அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது அதன் அடிப்படை யில் முழுமையான அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கோ காலாயிருக்கவில்லை. அதற்குப் பதிலாகக் குடியேற்ற நாடுகளின் பொருளாதாரங்கள் மூலதனத் தின் சர்வதேசத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்படலாயின. அதன் விளைவாகக் குடியேற்ற நாடுகளில் இடம் பெற்றது மேற்கத்திய முதலாளித் துவ விரிவாக்கத்தின் பிரதிபலிப்பாகிய தங்கியிருக்கும் முதலாளித்துவ வளர்ச்சியேயாகும். இது அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதற்குப் பதிலாகக் குறைவிருத்தி நிலைக்கு இட்டுச் செல்கின்றதென்பதையே தங்கியிருத்தற் கோட்பாடுகள் முக்கியமாக வலியுறுத்த முன்வந்தன.[8] குறைவிருத்தி நிலையை விளக்கும் பூரணமான ஒரு கோட்பாடு என்ற வகையில் தங்கி யிருத்தற் கோட்பாடு பல குறைபாடுகளைக் கொண்டதொன்ருயினும்,[9] குடியேற்ற நாடுகளில் முதலாளித்துவம் அறிமுகம் செய்யப்பட்டமையின் விளைவாக உருவாகியிருந்த நடைமுறை வளர்ச்சிகள் சிலவற்றை அது சரி யாகவே எடை போட்டிருந்தது. தங்கியிருக்கும் முதலாளித்துவம் குடி யேற்ற நாடுகளில் நேர்க்கணிய அல்லது எதிர்க்கணிய விளைவுகளை ஏற் படுத்தலாம். ஆனல் அவை எவ்வாறு அமைந்தாலும் அதன் வழி (அடிப் படையான தங்கியிருத்தல் நிலை காரணமாகச்) சுரண்டல், பிற்போக்கு என்பன ஏற்பட்டுக் குறைவிருத்தி நிலைக்கே ஈற்றில் இடமளிக்கப்படுகின் றது.[10] குடியேற்ற நாடுகளின் மலிந்த ஊழியம், மூல வளங்களின் மீதான தனியுரிமைக் கட்டுப்பாடு என்பன சுரண்டலுக்கும் அதன் வழி குறை விருத்திக்குமான கருவிகளாக அமைகின்றன. மறு புறம், சிறந்த நுட்ப முறைகளின் அறிமுகமோ, அதனை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுட்ப முன்னேற்றம், அபிவிருத்தி என்பனவோ இந்நாடுகளில் இடம்பெற வில்லை.

ஆனல் இதன் கருத்து முதலாளித்துவத்தின் சமூக ரீதியான தொடர்பு களும் குடியேற்ற நாடுகளிற் பரவாது தடுக்கப்பட்டன என்பதல்ல. மாருக, உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ சமு தாயத் தொடர்புகள் இந்நாடுகளிற் படிப்படியாகப் பதிய வைக்கப்பட்டன. அதன் காரணமாக, அந்நிய முதலாளிகளுக்குப் புறம்பாக, உற்பத்திச் சாத னங்களைத் தமதாக்கிக் கொண்ட, சலுகை பெற்ற வர்க்கமொன்றும் உள் நாட்டு மட்டத்தில் மெது மெதுவாக வளரத் தொடங்கியிருந்தது. இது ஏற்கெனவே இந்நாடுகளில காணப்பட்ட மானிய நிலச்சுவான்களுடன் இணைந் திருக்கக் கூடிய இடைத்தரகு பூர்ஷீவா வர்க்கமாக விளங்கியிருந்தது. இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரு சாராருமே ஏகாதிபத்திய நலன்களுக்குப் பெருமளவு ஆதரவு நல்கு பவர்களாகக் காணப்பட்டனர். ஆனுல், மறு புறம், உள்நாட்டுக் கைத் தொழில் துறையொன்றை ஆதாரமாகக் கொண்ட சுதேசிய பூர்ஷீவா வர்க்கமொன்றும் பெரும்பாலான குடியேற்ற நாடுகளில் நிலவியிருந்தது. அது ஏகாதிபத்திய நலன்களேயும் அவற்றுடன் கட்டுண்டு கிடந்த நிலச் சுவான்கள் வர்க்கம், இடைத்தரகு பூர்ஷீலா வர்க்கம் என்பனவற்றையும் எதிர்ப்பதொன்ருக விளங்கலாயிற்று.[11] 'முன்னேற்ற உணர்வுடைய தேசிய பூர்ஷீவா வர்க்கம்',[12] என்ற கருத்து உதயமாவதற்குரிய அடிப் படையை இதுவே வழங்கியது. இந்த வர்க்கமே பெரும்பாலான குடி யேற்ற நாடுகளில் முளே விட்ட சுதந்திரத்திற்கான இயக்கங்களிலும் முன்னணி வகித்தது.

முதலாளித்துவ வளர்ச்சியிற் குடியேற்ற நாடுகளின் பங்கை முன்வைக் கும் இந்தப் பொதுவான மாதிரியுருவினுள் இலங்கையின் அநுபவத்தைப் பொருத்திப் பார்ப்போமாயின் அது சில பிரதான மாறுபாடுகளேப் புலப் படுத்துவதையும், இம்மாறுபாடுகள் நாட்டின் அரசியல், பொருளாதார வளர்ச்சியைப் பெரும் செல்வாக்கினுக்குட்படுத்தியிருப்பதையும் கண்டு கொள்ள முடியும். அவற்றுள் முக்கியமானது யாதெனில், லத்தீன் அமெரிக்க நாடுகளேப் போன்ருே அல்லது இந்தியாவைப் போன்ருே உள் நாட்டு மட்டத்திற் கைத்தொழில்களே அபிவிருத்தி செய்ய முனேந்த சுதேசிய பூர்ஷீவா வர்க்கமொன்று இலங்கையில் வளர்ச்சியடைந்திராமை யாகும். உதாரணமாக, இந்தியாவை எடுத்துக் கொள்வோமாயின், மேற் கத்திய முதலாளித்துவத்தின் செல்வாக்கு இந்தியாவிற் பரவ முற்பட்ட காலத்தில், லாப உணர்வுடைய உற்பத்தி நடவடிக்கைகளில் அக்கறை கொண்டிருந்த ஒரு குழுவினர் ஏற்கெனவே அங்கு காணப்பட்டனர்.[13] வர்த்தகத்தில் இந்தியர் அடைந்திருந்த செல்வாக்கு என்பதற்குப் புறம் பாக இரும்பு உருக்கு, பருத்தி நெசவு என்பவற்றிலும் இந்திய உற்பத்தி யாளர் பெருமளவில் நிறைந்திருந்தனர். அவர்கள் பிரித்தானியர் அக்கறை கொண்டிருந்த பல பொருளாதார அலுவல்களில் தாமும் நேரடியாக ஈடு பட்டிருந்த காரணத்தினுற், பல சந்தர்ப்பங்களிற், பிரித்தானியருக்குப் போட்டியாகவே இயங்க வேண்டியுமிருந்தது. உதாரணமாகத் துணி நெச வாளரும் அவர்களுடைய சில்லறை வியாபாரிகளும் பரந்த இந்தியச் சந்தையில் லங்காஷயர் துணி உற்பத்தியாளருடன் போட்டியிட வேண்டியிருந்தமை சிறப்பாகக் கவனிக்கத்தக்கது. உள்நாட்டுச் சந்தையைப் பாதுகாத்து அதனேப் பிரித்தானியரும் ஏனேய அந்நியரும் ஆக்கிரமிக்காது கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இந்தியக் கைத்தொழில் முதலாளிகள் உணர்ந்திருந்தனர். எனவே அவர்கள் தாம் உற்பத்தி செய்த பொருட்களுக்குப் பாதுகாப்புத் தீர்வைகளே வேண்டி நின்றதுடன் இந்தியா வின் வளங்கள் வெளியே எடுத்துச் செல்லப்படுகின்றன என்ற முறைப் பாட்டினேயும் தீவிரமான ஒரு கோட்பாடாக முன்வைத்தனர். அதற்கெதி ராகக், குறிப்பாகத் தமது கைத்தொழில்களுக்குதவக் கூடிய சில மூலப் பொருட்கள் வெளியே எடுத்துச் செல்லப்படுவதற்கெதிராக, ஏற்றுமதித் தீர்வைகள் விதிக்கப்பட வேண்டுமெனவும் கோரி நின்றனர். இந்திய அரசாங்கத்திற்குத் தீர்வைச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென 1930

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் அவர்கள் நடாத்திய பிரசாரமும் இது விடயத்திற் குறிப்பிடத் தக்கது.[14] வர்த்தகத்தைப் பொறுத்தவரை இந்திய முதலாளிகளின் மூதாதையர் எனக் கருதப்படக் கூடிய இந்திய வர்த்தகர் 19ஆம் நூற்றுண்டின் நடுப் பகுதியளவிலேயே இந்தியாவுக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான தமது வர்த்தகத்திலும் அதே போலத் தூர கிழக்கு நாடுகளுடன் தாம் நடாத்திய வர்த்தகத்திலும் பிரித்தானிய வர்த்தக நிறுவனங்களுக்குப் போட்டியாகவே இயங்க முற்பட்டிருந்தனர். அவர்களுடைய நடவடிக்கைகள் இடைத்தரகு நிலேயில் இருக்கவில்லே.[15] வெகுவிரைவில் வெளிநாட்டு வர்த்தகம், கப்பற் போக்குவரத்து என்பன இந்திய முதலாளி வர்க்கத்தினர் மிகையை உழைக்கத்தக்க சாதனங்களாகச் செயற்பட ஆரம்பித்ததும் முழு முதலாளி வர்க்கமுமே அவற்றிற் கூடியளவினதான பங்கிீனே இந்தியாவின்பால் திருப்பி விடுவதற்கு அணி திரண்டது. பிரித்தானிய கப்பற் போக்குவரத்துத் தனியுரிமைக்கெதிரான இந்தியரின் போராட்டம் 1890 களில் ஆரம்பித்து, இடையிடையே ஏற்பட்ட தோல்விகளின் மத்தியிலும், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருந்தது. இந்தியக் கடலோரக் கப்பற் போக்குவரத்தை இந்தியருக்கு மாத்திரம் பிரத்தியேகமாக ஒதுக்குவதற்குரிய சட்டம் ஒன்றை ஆக்குவிப்பதற்குரிய பகீரதப் பிரயத்தனமும் 1920 களிலும் 1930 களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.[16] இவ்விரு சாராரையும் விட இந்திய நிலச்சுவான்களும் விவசாய முதலாளிகளும் கூடத் தம்மைப் பாதிக்கக் கூடிய வகையில் மிகையாக விதிக்கப்பட்ட நில வரிகளுக்குக் கடுமையான எதிர்ப்புக் காட்டினர். அத்துடன் குடியேற்றநாட்டுவாத காலப் பொருளாதாரத் தேக்க நிலே காரணமாக நிலச்சுவான்களின் வருமானம் பாதிக்கப்பட்டதால் அவர்கள் மத்தியிற் பெருமளவான ஏற்றத்தாழ்வுகளும் உருவெடுத்திருந்தன.[17] அவர்களிற் பலர் செல்வம் மிக்க குடியான்களின் மட்டத்திற்குத் தரம் குறைக்கப்பட்டிருந்தனர். அத்தகையவர்கள் பிரித்தானியராட்சிக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், இந்தியத் தேசியவாதப் போராட்டத்தை வெகுசனப்படுத்துவதிலும் பெரும் பங்கு வகித்தனர். மேற்கத்திய கல்வி வாய்ப்புப் பெற்ற உயர் குழாமொன்றே ஈற்றில் இந்தியத் தேசியவாதத்தை நெறிப்படுத்திய போதும் அதற்கான கூடிய வலிமை இந்திய முதலாளி வர்க்கத்திடமிருந்தே கிடைக்கப் பெற்றதெனலாம். பிரித்தானிய முதலாளித்துவ நலன்களும் இந்திய முதலாளித்துவ நலன்களும் தாம் கொண்டிருந்த பொதுவான அக்கறை காரணமாக ஒன்றையொன்று எதிர்க்கத் தலேப்பட்டதால், இந்தியர் காட்டிய எதிர்ப்புணர்வு அவர்கள் வெளிப்படுத்திய தேசியவாதத்தின் மீதும் பரந்து செல்வதைத் தடுக்க முடியவில்லே. அதற்கேற்ப இந்திய சுதந்திரப் போராட்டமும் மிகத் தீவிரம் நிறைந்ததொன்ருக வளர்ந்து செல்ல முற்பட்டது.

ஆனுல் இலங்கையில் இவ்வாருக நன்கு வளர்ச்சியுற்ற முயற்சியாளர் வர்க்கமொன்று இருக்கவில்லே. லத்தீன் அமெரிக்க நாடுகளேப் போன்று பெரும் நிலச்சுவான்கள் வர்க்கமொன்று கூட இலங்கையில் வளர்ச்சியடைந்திருக்கவில்லே.[18] அதற்குப் பதிலாக நாட்டின் மரபு ரீதியான சமூக அமைப்பின் வழி சில குடும்பங்கள் நில உடைமையாளராகவும், உயர் வர்க்கம் என்ற தரத்திீனப் பெற்றவையாகவும் விளங்கியிருந்தன.[19] எனினும் அக் குடும்பங்களேச் சார்ந்தோர் தம் வசமிருந்த செல்வத்தை உற்பத்தி நட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கைகளில் முடக்கி மூலதனத் திரட்டற் செய்முறையெதிலும் பரந்த அளவில், ஈடுபடவில்லை. ஆகவே இலங்கையைப் பொறுத்தவரை சுதேசிய சனத்தொகையொன்று நிறைந்திருந்த நிலையிலும், அந்நிய முதலாளித்துவ உற்பத்தி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போது அவை பெருமளவுக்கு ஒரு வெறுமை நிலையில் ஆரம்பிக்கப்படக் கூடியனவாயிருந்தன. நாட்டில் ஏற்கெனவே நிலவியிருந்த உயர் வர்க்கம் ஓர் இடைத்தரகு பூர்ஷீவா வர்க்கமாக உருவெடுக்கக் கூடிய மிக வாய்ப்பான ஒரு சூழ்நிலையாக இது காணப்பட்டது. தேசியவாத நடவடிக்கைகள் கூட இந்த வர்க்கத்திடமிருந்தன்றி வேறு வகையில் ஊற்றெடுக்க முடியவில்லை.

## II

மேற்கூறியவாறுன நிலைமைகளின் கீழ் 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தங்களின் வழி இலங்கை முதலாளித்துவ உற்பத்தி அலுவல்களுக்கெனத் திறந்து விடப்பட்டு மேற்கத்திய கைத்தொழிற் சமூகத்துக்கு வேண்டிய முதல் விளைவுப் பண்டங்களை உற்பத்தி செய்வதிற் பிரித்தானிய முதலீட்டாளர் ஈடுபட முன்வந்த போது அவர்களுக்கு உள்நாட்டு மட்டத்திலிருந்து எவ்வகையான போட்டியும் கிளம்பவில்லை. கைத்தொழிற் பொருட்களெதுவும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாதது மாத்திரமன்றி முதல் விளைவு உற்பத்தித் துறையில் உருவாகியிருந்த முதலீட்டு வாய்ப்புக்களைக் கூட உடனடியாகப் பயன்படுத்துவதற்கு இலங்கையர் தயாராயிருக்கவில்லை.

பிரித்தானிய முதலீட்டாளர் முதன்முதலாகப் பயிர் செய்வதற்குத் தேர்ந்தெடுத்த கோப்பி இலங்கையருக்கு எவ்வகையிலும் புதிய ஒரு பயிராயிருக்கவில்லை. சிறு பயிர் மட்டத்தில் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட அது 19 ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்தே வருடமொன்றிற்குச் சராசரி 1000 அந்தர் வரை ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. 1820 களில் இந்த அளவு 10,000 அந்தருக்கு மேற்பட்ட ஒரு தொகையைத் தொட்டிருந்தது.[20] ஆனல் வர்த்தக நோக்கினில் திளைத்த அரசொன்றின் தனியுரிமைக் கட்டுப்பாடுகளின் கீழ்க் கோப்பிச் செய்கை மேற்கொண்டு விரிவடையத்தக்க எதுவித தூண்டுதலும் வழங்கப்படவில்லை.[21] அத்தகைய கட்டுப்பாடுகள் யாவும் 1833 இல் நீக்கப்பட்டதும் சிறு பயிர்க் கோப்பி உற்பத்தியாளர் முன்னேறக் கூடிய வாய்ப்பு ஏற்பட்ட போதும், பெருமளவு மூலதனத்துடன் தோட்ட அடிப்படையிற் கோப்பியைப் பயிர் செய்ய முன்வந்த பிரித்தானிய முதலீட்டாளரின் போட்டியை அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. தமது உற்பத்தியைத் தோட்ட அடிப்படையில் மாற்றிக் கொள்ளக் கூடிய வசதிகளெதுவும் சிறு பயிர் மட்ட உற்பத்தியாளருக்கிருக்கவில்லை. எனவே அவர்களுடைய செய்கை நலிவடையப் பெருந்தோட்டக் கோப்பி, கோப்பி ஏற்றுமதியை ஆக்கிரமித்துக் கொண்டது. எனவே பயிர் பரிச்சயப்பட்டதொன்ருயிருந்த போதும் அதனை முதலாளித்துவ ரீதியிற் பயிர் செய்யக் கூடிய புற வசதிகளெதுவும் இலங்கையருக்கில்லாதிருந்த காரணத்திஞற் பிரித்தானியரின் முதலாளித்துவ உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உள்நாட்டு மட்டத்திற் போட்டியெது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் உருவாகவில்லை. அதனாற் கோல்புறூக் சீர்திருத்தங்கள் அமுல் செய்யப்பட்டு ஏறக்குறைய அரை நூற்றாண்டுக் காலம் சென்ற பின்பு கூட— 1880 – 81 அளவில் – இலங்கையின் பிரதான உற்பத்தி நடவடிக்கையாகக் கோப்பி உற்பத்தியே நீடித்திருந்தது மாத்திரமன்றி அதன் செய்கையின் கீழான நிலப் பரப்பிலும் 90 சத வீதத்திற்கு மேற்பட்டவை ஐரோப்பிய ருக்குச் சொந்தமானவையாகவே விளங்கியிருந்தன.[22] மிகுதியான 10 சத வீத பரப்பிலும், அதன் பெரும் பகுதி, இலங்கையரல்லாத இந்திய நலன்களின் கைகளிலேயே முடங்கிக் கிடந்தது.[23]

முதலாளித்துவ உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய தகைமை பெற்ற வர்க்கமொன்று உள் நாட்டில் இல்லாதிருந்த நிலையிற் பிரித்தானிய பொருளாதார அலுவல்களுக்குப் போட்டி ஏற்படாமை ஒரு புறமிருக்க, மறு புறம், பிரித்தானிய முயற்சிகள் தான் இலங்கையிலான முதலாளித்துவ உற்பத்திச் செயற்பாட்டின் ஒரு முன்னோடியாக இயங்க முடிந்தன. அவ் வகையிற் பிரித்தானியரின் பெருந்தோட்டச் செய்கை, உண்மையில், உள் நாட்டவரின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கான ஒரு தூண்டுதலாகவும், வழி காட்டியாகவும் விளங்க முற்பட்டிருந்தது. உற்பத்தி அலுவல்களுக்காகப் பொருளாதாரத்தைத் திறந்து விடும் ஒரு செய்முறையைப் பிரித்தானியர் தொடக்கி வைத்ததும், அதன் மூலம் உருவாகிய சந்தர்ப்பங்களைத் தகுந்த வகையிற் பயன்படுத்திக் கொள்வதில் இலங்கையர் ஒருபோதும் பின்னிற்க வில்லை. அத்தகையவர்களில் நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட மரபு ரீதியான உயர் வர்க்கத்தினர் முன்னணி வகித்தனர்.[24] அவர்கள் மாத்திரமன்றி அவர்களுக்குப் புறம்பாகவும் பல தனிப்பட்டவர் புதிதாக ஏற்பட்ட முத லீட்டு வாய்ப்புக்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முன் வந்தனர்.

எனினும், அவ்வாறாக இலங்கையர் பலரும் ஈடுபட்ட முதலீட்டு நட வடிக்கைகளின் முக்கிய தன்மையென்னவெனில் அவை இந்தியாவைப் போன்று பிரித்தானியருக்குப் போட்டியான முறையிலன்றி அவர்களுடைய செயற்பாடுகளுக்குச் சார்பாக அமைந்திருந்தமையேயாகும். அவ்வகையில் உள்நாட்டவரின் நடவடிக்கைகள் பிரித்தானிய நலன்களுடன் முரண்படுவ தாக அல்லாமற் பெருமளவுக்கு ஒத்துப் போவனவாகவே நிலை பெற லாயின. அந்நிய முதலாளி வர்க்கத்தினருக்கு இணக்கமுடைய ஒரு கூட்டத் தினராகவே உள்நாட்டு முயற்சியாளர் வளர்ந்து செல்லத் தலைப்பட்டிருந் தனர். இந்த இணக்கச் செய்முறையை விரிவு படுத்துவதே கட்டுரையின் இப்பகுதி கொண்டுள்ள பிரதான நோக்கமாகும்.

இலங்கை முயற்சியாளர் லாப நோக்கம் கருதி மேற்கொண்ட பொருளாதார அலுவல்களை முக்கியமாக இரு மட்டங்களில் அடையாளம் கண்டு கொள்ள முடியும்:

(1) அந்நிய முதலீட்டாளரின் முதலீட்டு முயற்சிகளுக்கு ஆதாரமாக இயங்கக்கூடிய பலதரப்பட்ட சேவைத் தொழில்களில் அவர்கள் கொண்ட அக்கறை.

(2) அந்நியரின் முதலீட்டு முயற்சிகளில் நேரடியாக அவர்கள் கொண்ட ஈடுபாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையிரண்டில் முதலாவது செய்முறை பிரித்தானியராட்சிக்கு முன்பே, உண்மையில், ஆரம்பித்து விட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு இலங்கையர் ஈடுபட்ட சேவைத் தொழில்களில் முக்கியமானவை வெளிநாட்டவருக்கு உணவுப் பண்டங்களையும் ஏனைய நுகர்வுப் பொருட்களையும் வழங்கல், கட்டடத் தளபாடங்களை வழங்கல், சாராயக் கைத்தொழில் போன்றனவாகும். இவற்றின் வழி கரையோர மாகாணங்களிலிருந்த இலங்கையர் சிறிது சிறிதாக மூலதனத்தைத் திரட்டிக் கொண்டிருந்தனர். பிரித்தானியர் வருகையுடன் இத்தகைய சேவைத் தொழில்களை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்புத் தோன்றியிருந்தது. அவர்களாட்சிக் காலத்திற் படிப்படியாகப் பெருந்தோட்ட விவசாய வளர்ச்சி ஏற்பட்டதும் அதனுடன் இணைந்த வகையில் அபிவிருத்தியடைந்த பணக் கொடுக்கல் வாங்கல்களின் பெருக்கம் அவற்றை மேலும் ஊக்குவிப்பதற்குக் காலாயிற்று.[25] அவை மாத்திரமன்றிப் பெருந்தோட்டங்களின் ஆரம்பத்துடன் வேறு பல புதிய சேவைகளுக்கும் தேவை ஏற்பட்டிருந்தது. காடுகளை அழித்தல், ஊழிய நிரம்பல், போக்குவரத்து, கட்டட நிர்மாணம் போன்றவற்றிலான கொந்தராத்துக்களும் கோப்பியிலான வர்த்தகமும் இவற்றிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவை மூலதனத் திரட்டலுக்குரிய பாரிய மார்க்கங்களாகச் செயற்படலாயின. உதாரணமாகப் போக்குவரத்துத் துறையில், 1860 களின் நடுப்பகுதியளவில் — கொழும்பு - கண்டி புகையிரத வீதி பூர்த்தி செய்யப்படுவதற்குச் சற்று முன்னதாக — கொழும்புக்கும் கண்டிக்குமிடையிலான பாதையில் மாதாந்தம் 8,000 முதல் 15,000 மாட்டு வண்டிகள் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டனவென்பது போக்குவரத்துக் கொந்தராத்து மூலம் ஒருவர் உழைத்துக் கொள்ள முடிந்த லாப அளவினை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.[26] இவ்வாறாகப் பெருந்தோட்டத் துறையுடன் நேரடியாகத் தொடர்பு படும் பிரதான மட்ட சேவைகளைவிட, இரண்டாந்தர மட்டத்தில், மறைமுகமாகவும் பல சேவைகள் வளர்ச்சியடையக் கூடியதாயிருந்தன. கொள் கலன், வீட்டுத்தளபாடங்கள், புகையிரதப் பாதைக்கான சிலிப்பர் கட்டைகள், தந்திக் கம்பங்கள் என்ற இது போன்றவற்றின் உற்பத்தியும், இலகு சேவைகள் எனக் கொள்ளத் தக்க, மக்கள் நடமாட்டம் கூடிய பகுதிகளில், பலதரப்பட்ட தேவைகளுக்கும் வேண்டிய கடைகளையும், ஹோட்டல்களையும் திறத்தல் என்பனவும் இவற்றிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

மேற்கூறிய வகையிலான முதலீடுகளின் பிரதான அம்சம் யாதெனில் இவை யாவும் பிரித்தானியர் லாபமுழைக்கக் கூடிய செய்முறையைப் பெரிதும் சுலபப்படுத்தியிருந்தமையாகும். அவர்கள் தமது முழுமுதல் அக்கறையையும் பெருந்தோட்டச் செய்கை மீது செலுத்த, அதனுடன் தொடர்புடைய வகையில் முன்னும் பின்னும் ஏற்பட்ட இணைப்பு நடவடிக்கைகள் பலவற்றையும் இலங்கையர் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தனர். பிரித்தானியரின் பெருந்தோட்ட முதலீடுகள் வேகமாக அதிகரித்துச் சென்றமைக்கும், அதனையும் விட முக்கியமாகக் கோப்பியின் முறிவைத் தொடர்ந்து ஏனைய பயிர்களை நோக்கிக், குறிப்பாகத் தேயிலை உற்பத்தி நோக்கித், தமது முதலீடுகளை அவர்கள் இலகுவாகத் திருப்பிக் கொள்ள முடிந்தமைக்கும் உள்நாட்டவர் ஆதார நிலையில் வழங்க முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த இத்தகைய சேவைகளே பெருமளவுக்குக் காரணமாயிருந்தன. இவ்வகையிற் பிரித்தானியரும் இலங்கையரும் ஒருவருக்கொருவர் போட்டியாளராயன்றி ஒருவரில் ஒருவர் தங்கியிருப்போராகவே வளர்ந்து சென்றமை கவனிக்கத்தக்கது. பிரித்தானியரின் பெருந்தோட்டச் செய்கையின்றி இலங்கையரோ அல்லது இலங்கையரின் ஆதார சேவைகளின்றிப் பிரித்தானியரோ லாபத்தினை உழைத்துக் கொள்ள முடியவில்லை. இந்நிலையில் இலங்கையில் இடம் பெற்ற மூலதன திரட்டற் செய்முறையும், அதனுடன் இணைந்த வகையில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியும் பிரித்தானிய நடவடிக்கைகளையும் அதன் வழி பிரித்தானியரையும் பெரிதும் சார்ந்திருந்தமை ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல.

இரண்டாவது நிலையில், ஆங்கிலேயரின் செயல் விளக்க விளைவினால் உந்தப்பட்டு இலங்கையர் தாமும் அவர்களைப் போலவே பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபட முன்வந்தனர். இவ்வாறாகப் பெருந்தோட்டத் துறையில் இலங்கையர் இறங்குவதற்கு வேண்டியளவான மூலதனம் நாம் மேலே குறிப்பிட்ட ஆதார சேவைகளின் வழியாகவே பெருமளவுக்குத் திரட்டப்பட்டிருந்தது. பெருந்தோட்டங்கள் உள்நாட்டவரின் மூலதனத்தைக் கவரக் கூடிய மேலதிக மார்க்கங்களாகவே செயற்பட்டன. அவை முதல் நிலையில் அவர்கள் மேற்கொண்ட ஆதார ரீதியான நடவடிக்கைகளைப் போன்றன்றிப் பிரித்தானியருக்குப் போட்டியாக மாறி விடக் கூடிய வாய்ப்பிருந்த போதும், மெய் நிலையில், முதலீடுகள் சென்ற திசை, அவற்றின் அளவு என்பவற்றைக் கொண்டு நோக்குமிடத்து அவை அவ்வாறு போட்டியாக அமைவது தவிர்க்கப்பட்டமையைக் கண்டுகொள்ள முடியும்.

பெருந்தோட்டங்களிலான சுதேசிய முதலீடுகள் கோப்பிச் சகாப்தத்திலேயே ஆரம்பித்த போதும் கோப்பியிலான ஐரோப்பிய முதலீடுகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கையர் இத்துறையில் மேற்கொண்டவை மிகச் சொற்பமாகவே காணப்பட்டன. உதாரணமாக, 1880 அளவிற், பெருந்தோட்ட முறையிலமைந்த கோப்பிப் பரப்பின் ஏறக்குறைய 13,500 ஏக்கர் இலங்கையரின் கைகளில் இருந்ததாக மதிப்பிடப்பட்டது.[27] எனினும் இது பெருந்தோட்டக் கோப்பியின் கீழான மொத்த நிலப்பரப்பின் 7 சதவீதத்திற்குக் குறைந்த ஓர் அளவே என்பது கருத்திற் கொள்ளத்தக்கது. ஆகவே இத்தகைய குறைந்த அளவுடன் அவர்களுடைய முதலீடுகள் பிரித்தானிய நலனை எந்த வகையிலும் அச்சுறுத்த முடியவில்லை. கோப்பிச் செய்கையில் அவர்கள் தகுந்தளவு முன்னேறுவதற்கு முன்னதாக அது இலங்கையின் பொருளாதார அரங்கிலிருந்து முற்றாகவே மறைந்து விட்டது.

கோப்பியைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்த பிரதான பயிராகிய தேயிலையில் இலங்கையர் ஆரம்பத்திலிருந்தே குறைந்தளவுக்குத் தான் கவனம் செலுத்தி வந்தனர். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பமளவிற்தான் அவர்களுடைய கவனம் ஓரளவுக்காவது தேயிலை நோக்கித் திருப்பியதெனலாம். எனினும் தேயிலைச் செய்கை நன்கு உறுதி பெற்றிருந்த 1917ஆம் ஆண்டளவிற் கூட 650 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்புடைய தோட்டங்களின் உடைமையாளராக விளங்கிய ஆறு பேர் உட்பட, ஏறக்குறைய 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர் மாத்திரமே 300 ஏக்கருக்கு மேலான விஸ்தீரணமுடைய தேயிலை நிலங்களை வைத்திருந்தனர்.[28] அதே நேரத்தில் தேயிலையின் கீழான மொத்தப் பரப்பு 500,000 ஏக்கருக்கு மேற்பட்டதொன்றாகக் காணப் பட்டது.[29] ஆகவே கோப்பியைப் போன்றே தேயிலையிலும் பிரித்தானிய முதலீட்டாளர் பெரிதுபடுத்துமளவிற்குச் சுதேசிய முதலீடுகள் வளரவில்லை என்பது புலனாகும். மொத்தத் தேயிலைப் பரப்பின் ஏறக்குறைய 2 சத வீதம் வரைதான் இலங்கையருக்குச் சொந்தமான தோட்டங்களாகக் காணப்பட்டது. அது மாத்திரமன்றி, உள் நாட்டவர் ஆரம்பித்த தேயிலைத் தோட்டங்களிற் பெரும்பாலானவை நடு மட்ட, கீழ் மட்டத் தேயிலை ரகங்கள் உற்பத்தியாகிய களனிப் பள்ளத்தாக்கு, தென்மாகாணம் போன்ற பிரதேசங்களிலேயே இடப்படுத்தப்பட்டிருந்தன. எனவே உயர் ரகத் தேயிலையை உற்பத்தி செய்து கொண்டிருந்த ஆங்கிலேயரின் மத்திய, ஊவா மாகாணங்களில் அமைந்திருந்த தோட்டங்களுடன் அவை சமமான முறையிற் போட்டியிடவும் முடியவில்லை.

உள்நாட்டவரின் பெருந்தோட்ட முதலீடுகளைப் பாரிய அளவிற் கவர்ந்து கொண்ட துறையாகத் தெங்குச் செய்கையே விளங்கியது. 1935 ஆம் ஆண்டளவில், இலங்கையிலிருந்த தெங்கு நிலங்களின் ஏறக் குறைய 90 சத வீதம் சுதேசிகளுக்கே சொந்தமாயிருந்ததென்பது,[30] தெங்குச் செய்கையில் உள்நாட்டவர் கொண்டிருந்த அசைக்க முடியாத பிடியை எடுத்துக் காட்டும். அதற்குப் பல காரணங்கள் பொறுப்பாயிருந் தன. ஆரம்பத்திலிருந்தே தெங்குப் பொருட்களுக்குக் கிடைத்து வந்த நல்ல விலை; ஏனைய பெருந்தோட்ட முதலீடுகளுடன் ஒப்பிடுமிடத்து அதற்கு வேண்டியிருந்த குறைந்த அளவிலான மூலதனமும் அது ஒரே முறையிலன்றிச் சிறிய அளவுகளிற் பரந்த ஒரு காலப் பகுதியில் (10 முதல் 12 ஆண்டுகள் வரை) முடக்கப்படக் கூடியதாயிருந்தமையும்; தேயிலை, கோப்பி போன்றவற்றை விட மிகக் குறைந்தளவு கவனத்தின் மத்தியிலும் அது பலன் கொடுக்கக்கூடியதாயிருந்தமை; குறைந்த மட்டப் பதப்படுத்தல் தேவை என்பன இவற்றிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.[31] எவ்வா றாயினும், இலங்கையரின் நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்த ஒரு பயிரில் அவர்கள் பிரசித்தி பெற்றமை அதிகளவு ஆச்சரியத்திற்குரியதொன் றெனவும் கூற முடியாது. ஆகவே பல வகையிலும் சுதேசிகளுக்கு வாய்ப் பான இத்தகைய ஒரு பயிர் மீது தாம் கவனம் செலுத்துவதினின்றும் பிரித்தானியர் புத்திசாலித்தனமான முறையில் விலகிக் கொண்டிருந்தனர். ஆனால் அதற்கு மேலாக, ஒரு பருநிலை மட்டத்திற் பெருந்தோட்ட முதலீடுகளை ஒன்றாக எடுத்து நோக்குமிடத்து, தெங்கு உற்பத்தியினூடாக இலங்கையர் வேகமாக முன்னேறியிருந்த போதும் கூட, அதையிட்டு மேற் கத்திய முதலீட்டாளர் தம்மை அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டிய தாகவும் இருக்கவில்லை. அதற்கு உள்நாட்டவரின் முதலீடுகள் வளர்ந்து சென்ற தன்மையே காரணமாயிருந்தது. தேயிலையைப் பொறுத்தவரை நன்கு பிரசித்தியடைந்திருந்ததும், றப்பர்ச் செய்கையில் தகுந்தளவு பரவி யிருந்ததுமான கூட்டுப் பங்கு நிறுவனங்கள் தெங்கு உற்பத்தியில் வெகு குறைவாகவே காணப்பட்டன. கூட்டுப் பங்கு நிறுவன முறை நன்கு நிலை பெற்று விட்ட 1950 அளவிற் கூட ஏறக்குறைய 85 சத வீதமான தெங்கு நிலங்கள் (உள்நாட்டுத்) தனியார் முகாமையின் கீழிருக்க ஏற்க்குறையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 சத வீதமானவையே ஏதாவது நிறுவன முறையின் கீழ் முகாமை செய்யப்பட்டன.[32] அதற்குக் கூட்டுப் பங்கு நிறுவன முறையின் நன்மைகளை இலங்கையர் இக்கட்டத்திற் சரியானபடி புரிந்து கொள்ளாமை ஒரு காரணமெனக் கூற முடிந்தாலும்,[33] நில உடைமை சமூக அந்தஸ்திற்குரிய ஓர் அளவு கோலாக இருந்தமையும், அதன் விளைவாக வேறு வகை முகாமையின் கீழ் லாப அளவுகளை அதிகரித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பிருந்தாலும் அதனை விட்டுக் கொடுத்துத் தனி உடைமையின் கீழ்த் தமது சமூக உயர்வினைப் பேணிக் கொள்ள அவர்கள் தயாராயிருந்தமையும் முக்கியமாகச் சுட்டப்பட வேண்டும். இது, இலங்கை வங்கி முறை ஆணைக் குழு எடுத்துக் காட்டுவது போல, 'குறைவிருத்தி நிலையிலுள்ள கைத் தொழில், வணிக ஒழுங்கு முறையொன்றின் அறிகுறியாகவே' கொள்ளப் பட வேண்டும்.[34] எனினும் தனியார் உடைமையை இலங்கையர் விரும்பி ஏற்றுக் கொண்டமை பிரித்தானியப் பெருந்தோட்ட முதலீட்டாளரைப் பொறுத்தவரை பெரிதும் வாய்ப்புடையதாயிற்று. ஏனெனில் உள்நாட்டவர் தமக்குகந்த ஒரு பயிர் மீது முதலிட முன்வந்த போதும் கூட அவர்கள் தகுந்த முகாமை முறையைத் தேர்ந்தெடுக்காத காரணத்தினல் வெளிநாட்டு முதலாளிகள் உழைத்துக் கொண்ட அதே அளவான லாபத்தை உழைத்துக் கொள்வதோ அல்லது அவர்களுடைய தரத்தை எட்டிப் பிடிப்பதோ முடியாது போயிற்று. அந்தளவுக்கு இலங்கையர் பிரித்தானியருடன் சரி சமமாகப் போட்டியிடவும் முடியவில்லை.

இலங்கையின் இன்னொரு பிரதான ஏற்றுமதிப் பயிராகிய றப்பரில் லாபம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் 20 ஆம் நூற்றுண்டின் ஆரம்பளவில் தான் உதயமாகின்றன. இந்நிலையிற் பிரித்தானியர் அதன் செய்கையில் அக்கறை செலுத்த முற்பட்ட போது இலங்கையருடைய கவனமும் ஏக காலத்தில் அதன் மீது திரும்புகின்றது. இக்கட்டமளவில் இலங்கையர் பெருந்தோட்டச் செய்கையிற் போதிய அநுபவம் பெற்றிருந்ததுடன், ஏற்கனவே நாம் நோக்கிய, ஆதார சேவைகளினூடாகவும், தெங்குச் செய்கையில் உழைத்துக் கொண்ட லாபத்தின் வழியாகவும் கணிசமானளவு மூலதனத்தையும் திரட்டிக் கொண்டிருந்தனர். ஆகவே இலங்கையரும் பிரித்தானியரும் இது வரை தவிர்த்துக் கொண்ட போட்டி இப்போது றப்பரின் மூலம் ஏற்படுவதற்குரிய தகுந்த சூழ்நிலையொன்று உருவாகியிருந்தது. ஆனல் இங்கு கூட, ஈற்றில், அது கைகூடவில்லை. ஆரம்பத்திலிருந்தே பிரித்தானியரை விட இலங்கையரின் செல்வாக்கு றப்பர்க் கைத் தொழிலில் அதிகமாயிருந்ததுடன், படிப்படியாக அது பின்னையவரின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட ஒரு துறையாகவே வளர்ச்சியடையலாயிற்று. அவ்வகையில் அது தேயிலை, கோப்பி என்பவற்றை விடத் தெங்குச் செய்கையைக் கூடியளவு அண்மிப்பதொன்ருயிருந்தது.

றப்பர், தென்னையைப் போல, உள்நாட்டவரின் நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்த ஒரு பயிராக இல்லாமலிருந்த போதும் அது அவர்கள் வசமானமைக்குச் சில குறிப்பான காரணங்களிருந்தன. அவற்றுள் முதன்மையாகக் குறிக்கப்பட வேண்டியது றப்பர் உற்பத்தியாளர் எதிர் நோக்கிய நிலப் பற்றுக்குறையாகும். கோப்பியின் முறிவைத் தொடர்ந்து தேயிலை, தெங்கு என்பன நன்கு முன்னேறிய ஒரு நிலையிலேயே றப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமாகிய காரணத்தினுல் அதன் செய்கைக்குட்படுத்தப்படக் கூடிய கன்னி நிலங்கள் வெகு குறைவாகவே இருந்தன அரசாங்கக் கட்டுப் பாட்டின் கீழான முடிக்குரிய காணிகள் இன்னமும் ஓரளவு காணப்பட்ட போதும் கோப்பி, தேயிலைக் காலங்களைப் போல அரசாங்கம் அவற்றை இலகுவில் விட்டுக் கொடுப்பதற்குத் தயாராயில்லாமலிருந்ததுடன் நிலம் பெறும் விடயத்திற் பிரித்தானிய முதலீட்டாளருக்கு வேறு வகையில் உதவி செய்வதற்கும் பெரிதும் தயக்கம் காட்டியது. றப்பர்ச் செய்கைக் குகந்த பிரதேசங்களில் வேண்டியளவு நிலங்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் வசதி செய்யவில்லை என்ற ஆங்கில முதலாளிமாரின் குற்றச்சாட்டின் மத்தியிலும் உத்தேச நோக்கங்களுக்கு நிலத்தைப் பெற்றுக் கொடுப்பதில்லை என்ற தனது கொள்கையில் அரசாங்கம் உறுதியாயிருந்தது.[35] இந்நிலையில் ஏனைய பயிர்களின் கீழிருந்த நிலங்களை றப்பர் நோக்கித் திருப்பி விடுவதன் மூலமன்றி வேறு வகையில் நிலத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பிரித்தானிய முதலாளிமாரைப் பொறுத்தவரை அவ்வாறு திருப்பி விடக் கூடிய நிலங்கள் பெரும்பாலும் தேயிலைச் செய்கைக்குட்பட்டவையாகவே இருந்தன. ஆனுல் தேயிலை தகுந்த லாபம் உழைத்துக் கொண்டிருந்த நிலையில் அதனை அழித்து றப்பர் பயிரிடுவதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. அவர்களுடைய முழு முதல் அக்கறை தேயிலையின் மீதே நிலைத்திருந்தது. அதே நேரத்தில் றப்பரில் லாபம் உழைக்கக் கூடிய வாய்ப்பினையும் முற்ருக விட்டுக் கொடுக்க அவர்கள் தயாராயிருக்கவில்லை. அதன் காரணமாகவே தேயிலைச் செடிகளிடையே றப்பரைப் பயிரிடுகின்ற வழக்கமும் அதன் வழி தேயிலை – றப்பர்த் தோட்டங்கள் என்ற பெயரில் முதல் விளைவு உற்பத்தி யிலும் கலப்புத்தோட்டங்கள் உருவாவதும் சாத்தியமாயிற்று. எனினும், றப்பர் உற்பத்தியிலான புதிய ஆங்கில முதலீடுகள் இலங்கைக்குப் புறம் பாகப் பெரும்பாலும் மலேயாவை நோக்கியே சென்றமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டும். இலங்கையில் 1920 அளவிற் கூட ஐரோப் பியருக்குச் சொந்தமான றப்பர் நிலங்கள் 161,000 ஏக்கர் வரை மாத்திரமே காணப்பட,[36] மலேயாவில் 1914 ஆம் ஆண்டளவிலேயே 23·96 மில்லியன் பவுண் முதலீடு செய்யப்பட்டு 808,224 ஏக்கர் நிலத்தை உள்ளடக்கிய 234 றப்பர்த் தோட்டங்கள் திறக்கப்பட்டிருந்தன.[37]

மறு புறம், நிலத்தைப் பெறுவதில் ஆங்கிலேயர் எதிர்நோக்கிய அதே அளவான நெருக்கடிகளை இலங்கையில் உள்நாட்டவரும் சந்தித்த போதும், ஏனைய பயிர்களின் கீழிருந்து நிலங்களை றப்பர் நோக்கி மாற்றி விடு வதற்குப் பின்னைய சாரார் கூடியளவு விருப்புடையவராயிருந்தனர். உள் நாட்டவர் வசமிருந்த நிலங்கள், பிரித்தானிய முதலீட்டாளரைப் போல, அதிகளவான லாபத்தை ஈந்து கொண்டிருந்த தேயிலையின் கீழ் மாத்திரம் முடங்கிக் கிடக்கவில்லை. லாபம் தரக் கூடிய நிலங்கள் ஓரளவுக்குத் தேயிலைச் செய்கையிலும் தெங்கு உற்பத்தியிலும் பயன்படுத்தப்பட்டன வென்ருல், அவற்றிற்குப் புறம்பாகக், கணிசமானளவு நிலங்கள் நெற் செய்கைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தன.[38] இந்நிலங்களில் ஏக்கருக்கான விளைச்சல் மிகக் குறைவாயிருந்ததுடன், முன்னேற்றமான முறைகளைக் கையாள்வதற்குரிய தூண்டுதல்களும் எதுவும் காணப்படவில்லை. ஆகவே அத்தகைய நிலங்களை றப்பர் விலைகள் வேகமாக உயர்வடைந்து கொண் டிருந்த ஒரு நிலையில், அதன் செய்கை நோக்கித் திருப்பி விடுவதில் எது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித தடையும் இருக்கவில்லை. நெல் பயிரிடப்பட்ட தாழ் நிலப்பரப்புக்கள் பல றப்பர் வளர்ப்புக்குகந்தவையாயிருந்தமை இம்மாற்றத்தினை மேலும் ஊக்குவிப்பதாயிருந்தது. அதனால் உள்நாட்டவர் றப்பரில் மேற்கொண்ட முதலீடுகளுக்கான நிலங்கள் ஓரளவுக்குச் சுலபமாகவே கிடைக்க முடிந்தன. நிலத்தின் மீதான கட்டுப்பாட்டை விட றப்பர்ச் செய்கை உச்சக் கட்டத்தினை அடைந்து கொண்டிருந்த ஒரு நிலையில் 1914 ஆம் ஆண்டு, முதலாவது உலக மகா யுத்தம் குறுக்கிட்டமை காரணமாகவும் பிரித்தானியருடைய அக்கறை பலவீனப்படுத்தப்பட்டது. றப்பர், யுத்த தேவைகளுக்கான ஒரு முக்கிய மூலப் பொருளாயிருந்த போதும், பிரித்தானியரின் மனித சக்தி, நிதி என்பவற்றின் மீது யுத்தம் ஏற்படுத்திய மிகுந்த தாக்கத்தின் காரணமாக, யுத்த காலத்தில் றப்பர் நோக்கிப் புதிய முதலீடுகளைத் திருப்பி விடுவது மிகவும் பலவீனமடைந்தது.[39] இந்த இடையீட்டை இலங்கையர் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதாயிருந்தது. அது மாத்திரமன்றி, றப்பரும் தென்னையைப் போன்று ஒரு மரப் பயிராக இருந்த காரணத்தினால், தெங்கு உற்பத்தியில் சுதேசிகள் அநுபவித்ததாக நாம் குறிப்பிட்ட சாதக நிலைகள் பல, றப்பருக்கும் பொருந்துவனவாகக் காணப்பட்டன. ஆகவே எல்லா வகைகளிலும் றப்பர்ச் செய்கைக்கான நிபந்தனைகள் பிரித்தானியரை விட இலங்கையருக்கு வாய்ப்புடையவையாக விளங்கியமையால் அதனைத் தாம் கட்டுப்படுத்திக் கொள்வது பின்னையவருக்கு இலகுவாயிற்று. 1934 ஆம் ஆண்டளவில் இலங்கையிலிருந்த றப்பர்ப் பரப்பின் ஏறக்குறைய 77 சத வீதம் ஸ்ரேளிங் நிறுவனங்களல்லாதவற்றுக்குச் சொந்தமானதாக மதிப்பிடப்பட்டிருந்தது.[40] எனினும் இது உள்ளூர் மூலதனத்தை மாத்திரமன்றி அந்நிய மூலதனத்தையும் தம் வசம் வைத்திருந்த ரூபாய்க் கம்பெனிகளையும் உள்ளடக்கிய காரணத்தினால் அதற்கு இடம் கொடுத்துப் பார்க்குமிடத்து அண்ணளவாக 55 சத வீத றப்பர் நிலங்கள் இலங்கையருடைய கட்டுப்பாட்டின் கீழிருந்தன எனலாம்.[41] இது, ஓர் உள்ளார்ந்த நிலையில் பிரித்தானியருக்கும் இலங்கையருக்கும் போட்டியை ஏற்படுத்தக் கூடிய தொன்றாகக் காணப்பட்ட போதும், நாம் ஏற்கனவே நோக்கியபடி, றப்பர்ச் செய்கையிலான பிரித்தானிய முதலீடுகள் இலங்கையை விட மலாயா நோக்கியே பெருமளவு கவரப்பட்ட காரணத்தினால் இத்தகைய போட்டி தவிர்க்கப்பட்டிருந்தது.

பெருந்தோட்ட நடவடிக்கைகளுக்குப் புறம்பாகவும் சில தொழில்கள் இலங்கையரின் கவனத்தை ஈர்த்திருந்தன. அவற்றுட் காரீய உற்பத்தியும், இரத்தினக் கல் அகழ்வும் பிரதானமாகக் குறிப்பிடத்தக்கவை. காரீயச் சுரங்கத் தொழில் 1830 களின் பிந்திய கட்டத்திலும் 1840 களிலும் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் 1860 களில் தான் மிகுந்த வேகமுடையதொன்றாக மாறியிருந்தது. ஐக்கிய அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் காரீயத்திற்கு ஏற்பட்ட கேள்வி அதற்கான தூண்டுதலாக அமைந்தது. அத்தொழிலிற் செயற்பட்ட (ஐரோப்பியருக்குச் சொந்தமான) ஒரு சில ஏற்றுமதி ஏஜன்சிகளைத் தவிர அது முற்றாகச் சிங்களவரின் உடைமையாகவே விளங்கியிருந்தது.[42] அதே போன்று இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரிடப்படுத்தப்பட்டிருந்த இரத்தினக் கல் அகழ்வும் இலங்கையருக்குக் கணிசமானளவு வருமானத்தைப் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கக் கூடிய ஒரு தொழிலாயிருந்தது. முஸ்லிம் மக்கள் மத்தியிலான உயர் வர்க்கத்தினர் அதனை அடிப்படையாகக் கொண்டே பெருமளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தனர்.[43] எனினும் பிரித்தானிய முதலீட்டாளர் அவற்றில் அக்கறை கொள்ளாமை இவ்விரு தொழில்களினதும் முக்கிய பண்பாகக் காணப்பட்டது.

மேற் குறித்தவை நேரடியான பொருளாதார அலுவல்களெனின் அவற்றிற்குப் புறம்பாகவும் இலங்கையர் வருமானம் உழைத்துக் கொள்வதற்கான சில மார்க்கங்கள் பிரித்தானியராட்சியின் கீழ் உருவாகியிருந்தன. அரசாங்க சேவையிலான நிர்வாகப் பதவிகள் அவற்றுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. எனினும் அவற்றின் முக்கியமான தன்மை என்னவெனில் அவை முற்றாக ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழிருந்தமையேயாகும். அவர்களின் தயவினூடாகவே இலங்கையர் அப்பதவிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆரம்ப காலத்திலிருந்தே பிரித்தானியர், உயர் மட்டத்திலான முக்கிய பதவிகளைத் தம் வசம் வைத்துக் கொண்டு, அதிக முக்கியத்துவமற்ற நடு மட்ட, கீழ் மட்டப் பதவிகளையே இலங்கையருக்குத் திறந்து விட்டிருந்தனர். இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வி முறைமையும் அதற்கேற்ற வகையிலேயே அமைந்திருந்தது. அதாவது, உள் நாட்டு நிர்வாகத்திற்கான, ஆங்கில மொழியிற் பயிற்றப்பட்ட, மலிவான, தரம் குறைந்த ஊழியரை வழங்குவது அதன் நோக்கங்களுள் முதன்மை வாய்ந்ததாயிருந்தது.[44] அரசாங்க நிர்வாக அமைப்பின் உச்சப் பதவியாகிய சிவில் சேவையை மிக மட்டுப்படுத்தப்பட்ட ஒரு முறையிலேயே ஆங்கிலேயர் உள்நாட்டவருக்கு விட்டுக் கொடுக்கத் தயாராயிருந்தனர். 1920 களிலிருந்து ஓரளவுக்குக் கூடியளவான இலங்கையர் இப்பதவிகளைப் பெற்றுக் கொண்டனரெனினும் அவற்றின் மீதான கட்டுப்பாட்டை ஆங்கிலேயர் பூரணமாகத் தளர்த்தியிருக்கவில்லை.[45] உண்மையில், இக்காலப் பகுதியில் அரசாங்கப் பதவிகளை அடைவதற்குரிய சாதனமாகிய ஆங்கிலக் கல்வியை ஒரு சிறு தொகையினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவதற்குப் பிரித்தானிய நிர்வாகம் பெரிதும் முயன்றது.[46] எனவே அரசாங்கப் பதவிகள் ஆங்கிலேயரின் தயவிலன்றி வேறு வகையில் இலங்கையருக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை.

அரசாங்கப் பதவிகளுடன் இணைந்த வகையில், ஆங்கிலக் கல்வியின் வழி, இலங்கையர் வாழ்க்கைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட சில துறைகளையும் குறிப்பிட முடியும். அவை உள்நாட்டில் இரண்டாந்தர ஆங்கிலக் கல்வியைப் பூர்த்தி செய்த பின்பு பிரித்தானிய பல்கலைக் கழகப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றமையின் விளைவாக உருவாகியிருந்தன.[47] வைத்திய, சட்டத் துறைகள் அவற்றுள் முன்னணி வகித்தாலும் மற்றும் ஆசிரியர், பத்திரிகையாளர், நில அளவையாளர், பொறியியலாளர், கணக்காளர் போன்ற சேவைகளும் குறிப்பிடத்தக்கன. இவை யாவும் உள்நாட்டவருக்கு முன்னேற்றப் பாதையைத் திறந்து விடுவனவாயிருந்தன. இச்சேவைகளிற் பெரும்பான்மையானவற்றிலான பதவிகள் அரசாங்க சேவையினூடாகவே, குறிப்பாகத் தொடக்க நிலைகளிற் கிடைக்கப் பெற்ற போதும், மேற் கொண்டு சுயமான முறையிலும் பலர் தொழில் பார்க்கத் தொடங்கியிருந்தனர். சட்டத் துறையில் ஈடுபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையரின் எண்ணிக்கை 1901 குடி மதிப்பின் போது 356 ஆகவிருந்து 1921 குடி மதிப்பில் 800 ஆக உயர்வடைந்திருந்தது. அதே போல வைத்தியத் துறையிலிருந்த இலங்கையர் தொகை அதே காலப் பகுதியில் 323 லிருந்து 789 ஆகவும், நில அளவையாளர் சேவையிலிருந்தோரின் எண்ணிக்கை 160 லிருந்து 165 ஆகவும் உயர்ந்திருந்தது.[48]

அரசாங்கப் பதவிகளும் ஏனைய வாழ்க்கைத் தொழில்களும் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் உள்நாட்டவர் மூலதனத்தைத் திரட்டிக் கொள்வதற்கான ஒரு சாதனமாகச் செயற்பட்டிருந்தன. அவை, ஒப்பீட்டு ரீதியாகக், கணிசமானளவு வேதனத்தைச் சம்பாதித்துக் கொடுத்தவிடத்து அதன் ஒரு பகுதியைச் சேமித்துக் கொள்ளக் கூடியதாயிருந்தது. ஆனால் இவ்வாறான நேர்க் கணிய நன்மையை விட மறைமுக நிலையிலேயே அதிகளவான நன்மைகள் பெறப்பட்டன எனலாம். இது விடயத்தில் அரசாங்க சேவையானது குடியேற்றநாட்டுவாதத்திற்கு முற்பட்ட முடியாட்சியின் போது எவ்வாறு அந்தஸ்து, அதிகாரம் என்பவற்றின் நிலைக்களனாகக் காணப்பட்டதோ, அவ்வாறே குடியேற்றநாட்டுவாத காலத்திலும் தொடர்ந்திருக்கத் தலைப்பட்டது.[49] இந்நிலையில் ஒருவர் வகித்த பதவிக்கேற்ப அதிகாரத்திற்குட்பட்ட வகையிலும் அதற்குப் புறம்பாகவும் குறிப்பிடத்தக்க செல்வாக்கை அவர் பிரயோகிக்க முடிந்தது. அவர் அநுபவித்த செல்வாக்கின் அளவுக்குப் பதவியுடன் இணைந்த வேதனத்திற்கு அப்பாற்பட்ட முறைகளிலும் அவர் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடிந்தது. லஞ்சம் பெறுவது கூட அதற்கு விதி விலக்காயிருக்கவில்லை. அவற்றிற்கு மேலாக ஒருவர் செய்யும் தொழில், வகிக்கும் பதவி என்பவற்றிற்கேற்ப அவருடைய திருமணத்தின் போது தகுந்த சீதனத்தையும் பெற்றுக் கொண்டார். சீதனம் ஓர் இரண்டாந்தர நிலையில் வருமானத்தை விரிவுபடுத்துவதற்கான நிச்சயமான ஒரு மார்க்கமாக விளங்கியிருந்தது.[50] செல்வந்த நிலையிலுள்ள இரு குடும்பங்கள் திருமணத்தின் மூலம் ஒன்று சேர்ந்த போது அவற்றின் செல்வம் மேலும் திரட்சியடைந்ததுடன் வலிமையும் பெற்றது. சீதன வருமானம் பணம், சொத்து என்ற இரண்டையும் உள்ளடக்கிய காரணத்தினால், பல சந்தர்ப்பங்களில், மிகக் கணிசமான ஓர் அளவாகக் காணப்பட்டது.

ஆகவே தொகுத்து நோக்கின், ஆங்கிலேயராட்சிக் காலத்தில், இலங்கையர் புதிதாக வருமானம் உழைத்துக் கொள்ளக் கூடியதாயிருந்த அநேக வாய்ப்புக்கள், பல்வேறு மட்டங்களிலும் உருவாகியிருந்தன. இலங்கையில் உயர், நடுத்தர நிலைகளிலிருந்தோர் அவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் தவறவில்லை. எனினும் அத்தகைய வாய்ப்புக்களிலும், அவற்றை இலங்கையர் பயன்படுத்திக் கொண்ட பான்மையிலும் காணப்பட்ட சில தனிப் பண்புகள் எமது சிறப்பான கவனத்திற்குரியவை.

## III

மேற் கூறியவாறு பிரித்தானியரராட்சிக் காலத்தில் இலங்கையர் ஈடுபட்ட மூலதனத் திரட்டல் நடவடிக்கைகளை ஒன்றாக எடுத்து நோக்குவோமாயின் அவை அனைத்தும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியர் மீது தங்கியிருப்பனவாகவே வளர்ந்திருந்தன. உள்நாட்டவரின் பெருந்தோட்ட முயற்சிகள் யாவும் ஐரோப்பியரின் செயல் விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்க அவர்கள் ஆரம்பித்த ஆதார சேவைகளும், பெற்றுக் கொண்ட அரசாங்கப் பதவிகளும் நேரடியாகவே பிரித்தானியரின் தயவில் தங்கியிருந்தன. சுயமாக வாழ்க்கைத் தொழில்களை மேற்கொண்ட இலங்கையர் கூட இத்தகைய செல்வாக்கினின்றும் விடுபட முடியவில்லை. தனிப்பட்ட முறையில் தொழில் செய்த வழக்கறிஞரும், டாக்டரும், ஆங்கில நாட்டு மரபுப்படி அந்நெறிகளைப் பயின்றிருந்தமை ஒரு புறமிருக்க, பிரித்தானியக் குடிகளையும், பிரித்தானியக் கம்பெனிகளையும், தமது பெருமதி மிக்க நிரந்தர வாடிக்கையாளராகவும் பெற்றிருந்தனர். அதே போலப் பெருந்தோட்டச் சொந்தக்காரரும், காரீயச் சுரங்க உடைமையாளரும் அரசாங்கத்திலிருந்து விலகிய நிலையில் இயங்கிய போதும், பிரித்தானியருடைய செல்வாக்கினின்றும் முற்றாக விடுபட முடியவில்லை. அவர்களுடைய ஏற்றுமதி வர்த்தகம் பிரித்தானிய முகவர் இல்லங்கள், கப்பற் சேவை நிறுவனங்கள், காப்புறுதி நிலையங்கள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டது மாத்திரமன்றி, உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையும் பிரித்தானியாவில் அல்லது பிரித்தானிய ஏகாதிபத்தியவாதத்திற்குட்பட்ட நாடுகளில் தான் காணப்பட்டது. ஆகவே பிரித்தானியரின் முற்றான தயவும் ஆதரவுமின்றி இலங்கையர் தமது தொழில்களில் நீடித்திருப்பதோ லாபம் உழைப்பதோ முடியாமலிருந்தது.

இலங்கையர் வெளிப்படுத்திய இவ்வாறான தங்கியிருக்கும் தன்மை மேல்வாரியான நிலையில் தோற்றமளிப்பதை விட உள்ளூர மிக நெருக்கமான ஒரு முறையில் வளர்ந்து சென்றமை குறிப்பாகக் கவனிக்கத்தக்க தொன்றாகும். அவர்கள் ஏற்றுக் கொண்ட அரசாங்கப் பதவிகளும் வாழ்க்கைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட துறைகளும் ஆங்கில மொழி மூலம் பெற்ற கல்வியை அடிப்படையாகக் கொண்டிருந்தவிடத்துத் தொடக்க நிலையிலிருந்தே ஆங்கிலேயருடன் ஒரு மொழி வழித் தொடர்பை இலங்கையர் நிறுவிக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். எந்தளவுக்கு இலங்கையரின் கல்வித் தரம் உயர்ந்தும் அதன் வழி அவர்கள் பெற்றுக் கொண்ட பதவி, தொழில் என்பன மேனோக்கியும் சென்று கொண்டிருந்தனவோ அந்தளவுக்கு இந்தத் தொடர்பு மேன்மேலும் இறுக்கமடைந்து கொண்டு சென்றதெனலாம். குறிப்பாக உயர் கல்வியைப் பொறுத்தவரை, 1921 ஆம் ஆண்டு பல்கலைக்கழகக் கல்லூரியொன்று கொழும்பில் நிறுவப்படும் வரை,[51] அதற்கான வசதியெதுவும் இலங்கையில் உருவாகாத காரணத்தினால் உயர் கல்வி பெற முன் வந்த எவரும் ஆங்கிலப் பல்கலைக்கழகங்களையே நாட வேண்டியிருந்தது. 1921 க்குப் பின்பு கூட இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டங்களுக்கே மாணவர்களைத் தயார் செய்ததால் அந்நிலையில் அதிக மாற்றம் ஏற்படவில்லை. கல்வி மூலம் ஏற்படத் தொடங்கிய இவ்வாறான தொடர்பு அதனுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட தொன்றாயிராமல் நாளடைவில் உள்நாட்டவர் வாழ்க்கையின் சகல துறைகளையும் பீடிக்க முற்பட்டிருந்தது. ஆங்கிலத்திற் கல்வி பயின்ற பெரும்பாலானோர் படிப்படியாக ஆங்கில வாழ்க்கை முறையையும் நடையுடை பாவனைகளையும் பின்பற்றத் தலைப்பட்டனர். அதன் மூலம், அவ்வாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர் நாட்டின் சாதாரண மக்களுடன் தொடர்புபடும் தேசியத் தன்மை சார் அலுவல்களிலிருந்து அந்நியப்படும் ஒரு வளர்ச்சியும் ஏற் பட்டிருந்தது. அவ்வகையில் இலங்கையர் பொருளாதார ரீதியாக மாத்திர மன்றிச் சமூக கலாச்சார நிலைகளிலும் ஆட்சியாளர் வர்க்கத்தினைப் பெரி தும் அண்மித்திருந்தனர்.

மறு புறம், ஆங்கிலேயர் நிலையிலிருந்து நோக்குமிடத்து, அவர்களைப் பொறுத்தவரை, இலங்கையர் முயற்சிகள் தமது முதல் நிலை நடவடிக்கை யாகிய கைத்தொழில் துறையைச் சாராத வரை அதையிட்டு அவர்கள் தம்மை அதிகம் அலட்டிக் கொள்ள விரும்பவில்லையென்றே கூறலாம். இந்தியாவைப் போல, அது போன்ற ஒரு சூழ்நிலை அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஒரு போதும் ஏற்படவும் இல்லை. இந்த முதன்மைத் தேவை பூர்த்தி செய்யப்பட்டதும் உள்நாட்டவருடன் பிரித்தானியர் பொருதுவதற்குரிய முக்கியமான நிபந்தனைகளுள் ஒன்று நீங்கிப் போயிருந் தது. அதற்கு மேலாகவும் ஆங்கில முயற்சிகள், ஏற்கெனவே நாம் எடுத்துக் காட்டியவாறு, ஒன்றில் உள்நாட்டவரின் கவனம் அவை நோக்கித் திரும்பி னும் அதனாற் பாதிக்கப்படாத அளவிற்குப் பலம் பொருந்தியவை யாகவும் அல்லது இலங்கையர் இயல்பாகவே சிறந்த வாய்ப்பினைப் பெற் றிருந்த சில தொழில்களைத் தவிர்த்துக் கொள்பனவாகவும் காணப்பட்டன. ஆனால் அதே நேரத்தில், ஆங்கிலேயரும் ஆரம்பத்திலிருந்தே படிப்படியாக உள் நாட்டவர் மீது பல வகைகளிலும் தங்கியிருக்கும் ஒரு நிலைக்குத் தள்ளப் பட்டிருந்தனர். அது நேரடியாக வெளிப்படாது போயினும் மறைமுக மாகத் தொடர்ந்து செயற்படுவதொன்றாயிருந்தது. இலங்கையர் பல கட்டங்களில் வழங்கிக் கொண்டிருந்த ஆதார சேவைகளின்றி இலங்கையி லான தமது பொருளியல் முயற்சிகள் அதிக வெற்றி தர மாட்டா என் பதை ஆங்கிலேயர் நன்குணர்ந்திருந்தனர். சுருக்கமாகக் கூறின், இவ்விரு சாராரும் ஒரு முழுமையான தொழிலின் வேறுபட்ட கட்டங்களைப் பூர்த்தி செய்வோராகவே விளங்கியிருந்தனரெனலாம்.

ஆகவே பிரித்தானியருக்கும் இலங்கையருக்குமிடையே பொருளியல் மட்டத்தில் உண்டான தொடர்பு ஒருவரில் மற்றவர் தங்கியிருக்கும் ஒரு பரஸ்பர நிலைத் தொடர்பாயிருந்ததேயன்றிப் போட்டி மனப்பான்மையினால் உந்தப்பட்டதொன்றாயிருக்கவில்லை. எனவே இவ்விரு சாராரும் ஒரே கொள்கையுடையவர்களாகவும் ஒரே நோக்குடையவர்களாகவும் வளர்ந்து செல்வது பெருமளவுக்குச் சாத்தியமாயிற்று. இவ்வாறாக அவர்களிடையே ஏற்பட்ட ஒற்றுமையின் தன்மையை மைக்கல் றொபேட்ஸ் (Michael Roberts) தெளிவாகக் முன்வைக்கிறார்:[52]

> ''...சொத்துடையவர்கள் அல்லது சொத்தைத் தேடிச் செல்பவர்கள் என்ற முறையில் இலங்கை அரசாங்க ஊழியர், சாராய விற்பனை வாடகையாளர், கொந்தராத்துக்காரர், வியாபாரிகள், வழக்கறிஞர், டாக்டர், காரீய உற்பத்தியாளர், பெருந்தோட்டச் சொந்தக்காரர் ...சுதேசிய பூர்ஷீவாக்கள் முற்றாகவே, தீவின் ஏற்றுமதி வர்த்தகம், பொருளாதாரம் என்பவற்றை ஆக்கிரமித்திருந்த பிரித்தானிய இடைத்தரகு பூர்ஷீவாக்களுடன் ஒன்றுபடும் பொதுவான நலன்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்து கொண்டனர். இரு சாராருமே தனியார் சொத்துடைமை, லாப நோக்கம், ஒப்பந்தச் சட்டம், தனியார் சுதந்திரக் கருத்து என்பவற்றைப் பேணுவதற்குத் தம்மை அர்ப்பணித்திருந்தனர். இதிலிருந்து பிரித்தானிய, இலங்கை முதலீட்டாளரிடையே வெறுமனே ஒற்றுமையன்றி வர்க்க ரீதியான ஓர் இணக்கம் ஏற்பட்டிருந்தமை நன்கு வெளிப்படுகின்றது. இசைவான பொருளாதாரத் தொடர்புகளின் வழி ஒன்று பட்டிருந்த இவ்விரு சாராரும் முதலாளித்துவ நலன் காக்க உறுதி பூண்டிருந்தனர்.

மேற் கூறிய வகையிற் பொருளாதார மட்டத்திலேற்பட்ட இவ்வாறான இணக்கம் நாட்டின் சமூக, அரசியல் நிலைகளிலும் மாறுபாடுகளைக் கொண்டு வருவது தவிர்க்க முடியாமலிருந்தது. அவ்வாறான சமூக, அரசியல் தாக்கங்களை முன் வைப்பதே கட்டுரையின் எஞ்சியுள்ள பணியாகும்.

## IV

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதலே சமூக மாற்றங்களும் படிப் படியாக ஏற்படத் தொடங்கியிருந்தன. முதற்கண் அந்நிய முதலாளித்துவ அலுவல்களுக்குச் சேவை செய்வதில் ஆரம்பித்துப் பின்பு சிறிது சிறிதாக அத்தகைய அலுவல்களையே தானும் அரவணைத்திருந்த உள்நாட்டு முதலீட்டாளர் கூட்டம் இலங்கையின் ஓர் உயர் வர்க்கமாக வளர முற்பட்டிருந்தது. இந்த உயர் வர்க்கம், மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடக் கூடிய வகையில், தொழில் முயற்சிகளில் ஈடுபடும் ஓர் உண்மையான முதலாளித்துவ வர்க்கம் எனக் குறிக்கப்பட முடியாவிட்டாலும், நிச்சயமாக, முதலாளி வர்க்கத்தின் சில சாயல்களைப் புலப்படுத்தும் ஓர் உயர் மத்திய வர்க்கமாகத் தென்பட்டது. இவ்வுயர் மத்திய வர்க்கத்தினை வசதி கருதி மேல் மட்டம், கீழ் மட்டம் என இரு தரங்களிற் பிரித்து நோக்க முடியும். மேல் மட்ட உயர் மத்திய வர்க்கத்தினரே நேரடியான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களாகவும் உயர்தர அரசாங்கப் பதவிகளை வகிப்போராகவும் விளங்கியிருந்தனர். கீழ் மட்ட மத்திய வகுப்பினர் பொதுத் துறை மற்றும் வங்கித் துறை, வர்த்தகத் துறை போன்றவற்றில் தொழில் புரியும் ஏராளமான ஊழியராகக் காணப்பட்டனர். இவ்விரு சாராருக்கும் புறம்பாகத் தொழிலாளர் வர்க்கமொன்றும் மெதுமெதுவாக உருவம் பெற்றிருந்தது. இலங்கையில் மேற் கொண்டு இடம் பெற்ற அரசியல் வளர்ச்சியில் வர்க்க வேறுபாடுகள் செலுத்திய செல்வாக்கினை ஆராயப் புகுமிடத்து இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் சரியான தன்மை பற்றியும் ஓரளவு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இலங்கையின் (பிரித்தானிய – உள்நாட்டு) முதலாளி வர்க்கம் முற்றாகவே தொழில் முயற்சிகளைப் புறக்கணித்தவிடத்துக் கைத்தொழிற் பாட்டாளி வர்க்கமொன்று நாட்டில் எழுச்சியடைவதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆகவே, இந்நிலையில், இலங்கையில் வளர்ச்சியடைந்த தொழிலாளர் வர்க்கம் பெருந்தோட்ட அலுவல்களையொட்டியதாகவன்றி வேறு வகையில் உருப் பெற முடியவில்லை. பெருந்தோட்ட வேலைகளில் நேரடியாக ஈடுபட்ட தொழிற் படை முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலைகளின் கீழ் ஓர் அந்நிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் – தென்னிந்தியாவிலிருந்து – ஊற்றெடுத்ததொன்றாகக் காணப்பட்டது. அதற்கான காரணங்களை ஆராய்வதோ, அத்தகைய தொழிற் படையின் தன்மைகளை விரிவு படுத்துவதோ இக்கட்டுரையின் நோக்கிற்கு அப்பாற்பட்டதாகும். எனினும் கடுமையான அடக்கு முறைகளின் கீழ், ஓர் அரைகுறை அடிமை நிலையில், வைக்கப்பட்டிருந்த பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கம், மலிவான கூலியை முதலீட்டாளர் நாடி நின்ற முதலாளித்துவச் செய்முறையின் ஒரு பகுதியேயன்றி வேறில்லை என்பதை மாத்திரம் இங்கே சுட்டிக் காட்ட முடியும்.[53] ஆகவே பெருந்தோட்டச் செய்கையின் நேரடியான தொழில் வாய்ப்புக்களை நோக்கி இலங்கையின் சுதேசிய சனத்தொகை கவரப்படாத நிலையில் நாட்டின் பெரும்பான்மை மக்கள் தொடர்ந்தும் நிலத்துடன் பிணைக்கப்பட்ட குடியான்களாகவே நீடித்திருந்தனர். மறு புறம், சுதேசிய மட்டத்தில் எழுச்சியடைந்த தொழிலாளர் வர்க்கம் பெருந்தோட்டத் துறைக்குரிய துணை நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதொன்றாகவே வளர்ந்து செல்லலாயிற்று. அவ்வாறான நடவடிக்கைகள், தவிர்க்க முடியாத வகையிற், கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமே இடப்படுத்தப்பட்டன. ஒழுங்கு படுத்தப்பட்ட நகரத் தொழிலாளர் வர்க்கமொன்று வளர்ச்சியடைவது அதன் காரணமாகவே சாத்தியமாயிற்று.

இந்தத் தொழிலாளர் வர்க்கம் பலதரப்பட்ட இன, மதங்களைச் சேர்ந்தவரைக் கொண்டிருந்த போதும், அது அவ்வாறான அடிப்படைகளைக் கொண்டு பிரிக்கப்பட்டதொன்றாயிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அது பயிற்றப்பட்டவர், பயிற்றப்படாதவர் என்ற பாகுபாட்டையே முக்கியமானதாகக் கொண்டிருந்தது.[54] அவர்களை நடு நாயகமாகக் கொண்ட நகரப் பொருளாதாரம் முகவர் இல்லங்கள், போக்குவரத்து ஏஜன்சிகள் என்பவற்றையும் பெருந்தோட்ட உற்பத்திகளைப் பதனிட்டுப் பொதி செய்யும் தொழிற்சாலைகள், பொறியியல் தொழில் நிலையங்கள், சில்லறைக் கடைகள், சேவைக் கைத்தொழில்கள் போன்றவற்றையும் அரவணைத்ததொன்றாகக் காணப்பட்டது.

பெருந்தோட்டத் துறைக்குச் சேவை செய்யும் முகமாக நிர்மாணிக்கப்பட்ட போக்குவரத்து அமைப்பு முறையே பயிற்றப்பட்ட தொழிற் படையொன்று பெருகுவதற்குரிய முக்கிய சாதனமாகச் செயற்பட்டது. குறிப்பாகப் புகையிரதப் பாதை அமைப்பு முறையொன்று படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டதன் விளைவாக நவீன சாதனங்களைக் கொண்ட வேலைத் தளங்கள் நிறுவப்பட்டு ஏராளமான தொழிலாளர் அச்சாதனங்களைக் கையாள்வதிலும் பயிற்சி பெறலாயினர். 1901 — 1911 தசாப்தத்திற் புகையிரத சேவைத் தொழில்களிலான தொழிலாளர்களின் எண்ணிக்கை 5,800லிருந்து 9,500ஆக, அதாவது ஏறக்குறைய 64 சத வீதத்தினால், அதிகரித்தது.[55] 1911ஆம் ஆண்டு நிலவியிருந்த ஒன்பது புகையிரத இயந்திர வேலைத்தளங்கள் மொத்தம் 2,800 பயிற்றப்பட்ட தொழிலாளரை வேலைக்கமர்த்தியிருந்தன.[56] அதே நேரத்தில், புகையிரதப் பாதைகள், பாலங்கள், கட்டடங்கள் என்பவற்றைப் பேணுவதற்குப் பொறுப்பான சிவில் பொறியியற் பகுதியை உள்ளடக்கிய புகையிரதப் பாதைத் தொழில் திணைக்களம் 4,300 தொழிலாளரைக் கொண்டிருந்தது.[57] புகையிரத சேவைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் புறம்பாக, வீதிப் போக்குவரத்து அபிவிருத்திக்கும் பயிற்றப்பட்ட தொழிலாளர் பெருந்தொகையாகத் தேவைப்பட்டனர். வீதி நிர்மாணம், பேணல், திருத்தம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருந்த பொது வேலைகள் திணைக்களம் 1912 அளவில் 21,000 பயிற்றப்பட்ட ஊழியரை வேலைக்கமர்த்தியிருந்தது.[58] அதே போலத் துறைமுகக் கப்பற் போக்குவரத்துச் சேவைகளும் பயிற்றப்பட்ட தொழிலாளர் வர்க்கமொன்றின் வளர்ச்சியை ஊக்குவித்திருந்தன. நீராவிக் கப்பல்களைப் பழுது பார்ப்பது மாத்திரமன்றிப் பெருந்தோட்ட உற்பத்திகளின் பதப்படுத்தலிற் பயன்படுத்தப்படும் கனரக இயந்திரங்களையும் பழுது பார்த்த கொழும்பு இரும்புத் தொழில்கள் நிறுவனம் (Colombo Ironworks) 30 பிரித்தானியப் பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் ஏறக்குறைய 1000 உள்நாட்டவரை வேலைக்கமர்த்தியிருந்தது.[59] அது மாத்திரமன்றிக் கார்ச் சாரதிகள், மின்சாரத் தொழிலாளர், நீர், வடிகால் தொழிலாளர் என்போரும் பயிற்றப்பட்ட குழுவினராகவே வளர்ச்சியடைந்திருந்தனர். பயிற்றப்பட்ட தொழிற்படையை ஒன்றாக எடுத்து நோக்குமிடத்து அது ஏனைய குழுக்களை விட உயர்ந்த அறிவுடைய தொழிலாளரைக் கொண்டிருந்தது. அவர்களிற் பெரும்பாலோர் ஒரே இடத்தில் வேலை செய்த காரணத்தினால் வர்க்க உணர்வை வளர்த்துக் கொள்வதும் அதன் அடிப்படையில் தம்மை ஒழுங்கு படுத்திக் கொள்வதும் சுலபமாயிருந்தது.

பயிற்றப்பட்ட தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்த வகையிற் பயிற்றப்படாத தொழிற் படையொன்றும் நகர்ப் புறங்களில் நிலவியிருந்தது. அதனைச் சேர்ந்தவர்களிற் பெரும்பாலானோர் துறைமுகம், புகையிரத சேவை, பொது வேலைகள் திணைக்களம் என்பவற்றில் தொழில் புரிந்தனர். கொழும்பு மாநகர சபையும் அத்தகையவர்களிற் பலரைப் பலவித கடமைகளுக்குமென அமர்த்தியிருந்தது. பயிற்றப்படாத தொழிலாளரிற் பலர் பெருந்தோட்டத் தொழிலாளரைப் போன்று தென்னிந்திய வம்சாவழியினராக விளங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. தனியாகத் தொழில் செய்த பலரையும் பயிற்றப்படாத கூட்டத்தில் அடக்க முடியும். வண்டிக்காரர், ரிக்ஷாக்காரர், தையற்காரர், சப்பாத்துத் தைப்போர், இறைச்சிக் கடைக்காரர் போன்ற இன்னோரன்னவர்கள் இப்பட்டியலிற் சேர்த்துக் கொள்ளப்படத் தக்கவர். பயிற்றப்படாத தொழிலாளர் தகுந்த அறிவு படைத்திராததுடன் பயிற்றப்பட்டவர்களை விட வறியவர்களாகவும் வர்க்க ரீதியாகப் பெருமளவு ஒழுங்கு படுத்தப்படாதவர்களாகவும் விளங்கியிருந்தனர். ஆகவே ஒரு வர்க்கம் என்ற வகையிற் பயிற்றப்பட்டவர்களின் அளவுக்கு இவர்கள் முக்கியத்துவம் பெறவில்லை. எனினும் எமது வரையறையைப் பொறுத்தவரை பொதுவான தொழிலாளர் வர்க்கம் என்பதில் இவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

எனவே இலங்கை உலக முதலாளித்துவச் சுழலினுள் இழுக்கப்பட்டமை காரணமாக அதன் சமுதாயமானது நாளடைவில் வர்க்க சார்புடைய தொன்றாக மாற்றமடைந்திருந்தமை தெளிவானது. முதலாளித்துவ அலுவல்கள் பலவற்றிலும் அக்கறை கொண்டு மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள முற்பட்டிருந்த உயர் வர்க்கமானது பிரித்தானிய முதலீட்டாளர் வர்க்கத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையும் அதன் வழி பிரித்தானிய ஆட்சியாளரையும் சார்ந்ததொன்றாகவே வளர்ந்திருந்தது. மறு புறம் தொழிலாளர் வர்க்கமானது மிகக் குறைந்த கூலியளவுகளைக் கொண்டு நாட்டின் குடியான்கள் வர்க்கத்தை அண்மித்திருந்ததுடன் உயர் வர்க்கத்திலிருந்து துண்டிக்கப்பட்டதொன்றாகவும் காணப்பட்டது.

ஆகவே இலங்கையின் பொருளாதார, சமூக அமைப்பினை ஒன்றாக எடுத்து நோக்குமிடத்து, அது உள்நாட்டு முயற்சியாளரின் முதலாளித்துவ இணக்கம் காரணமாக இரட்டைத் தன்மை கொண்டதொன்றாக வளர்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கத்தக்கது. இலங்கை உயர் வர்க்கத்தினரின் பொருளாதார அலுவல்கள் பிரித்தானிய முதலாளி வர்க்கத்தினரை நோக்கி அவர்களை எடுத்துச் சென்றவிடத்து அதனுடன் இணைந்த வகையில் ஏற்பட்ட இன்னொரு செய்முறை யாதெனில், தமது உள்நாட்டுச் சகாக்களாகிய பெரும்பான்மையான நாட்டு மக்களிடமிருந்து இலங்கை முயற்சியாளர் மேன்மேலும் விலகிச் சென்றமையாகும். இலங்கை மக்களிற் பெரும்பான்மையினர் தொடர்ந்தும் குடியான்களாகவே விளங்கியிருந்ததுடன் அவர்களுடைய விவசாய நடவடிக்கைகளும் சீவனோபாய மட்டத்திலிருந்து அதிக தூரம் முன்னேறாதனவாகவே காணப்பட்டன. உள்நாட்டவர் ஆரம்பித்த பெருந்தோட்ட முயற்சிகளிற் கூட இலங்கையர் பெருமளவில் வேலை வாய்ப்புப் பெற்றதற்கான ஆதாரங்கள் மிகவும் குறைவானவையே. உண்மையில், பிரித்தானியரின் முதலீட்டு நடவடிக்கைகள் நாட்டில் இரட்டை அமைப்பொன்று உருவாவதற்கு வகை செய்தவிடத்து, இலங்கையரும் அதே முயற்சிகளில் ஈடுபடுதல் அவ்வமைப்பினை முறியடிப்பதற்கு உதவியிருக்க வேண்டும். அதாவது முதலீடுகள் ஒரு சாராரிடம் மாத்திரம் முடங்கிச் சிறப்புத் தன்மை பெறுவதற்குப் பதிலாக எல்லாரிடமும் பரவலாக்கப்படுவதற்குச் சுதேசிய முயற்சிகள் உதவியிருக்க வேண்டும். பிரித்தானியர் மாத்திரம் மேற்கொண்ட தொழில்களை இலங்கையரும் மேற்கொள்கின்றனரென்ற அளவில் இந்தப் பரவலாக்கல் ஏற்பட்டிருந்த போதும் அது ஒரு வர்க்க ரீதியான பரவலாக்கலாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாக வர்க்க ரீதியான ஒருங்கிணைப்பாகவே இருந்தது. பிரித்தானியருடைய தொழில் முயற்சிகளில் சுதேசிய மட்டத்திலிருந்தும் ஒரு சாரார் சென்றிணைந்து கொண்டனர். அதன் மூலம் பரவலாக்கல் இடம் பெறுவதற்குப் பதில் சிறப்பு நிலை மேலும் இறுக்கமடைந்திருந்ததென்றே கூற வேண்டும். மறு புறம், பிரித்தானியருடைய நடத்தையை விட இலங்கை முதலீட்டாளரின் நடத்தை குடியான்கள் வர்க்கத்தை மோசமாகப் பாதிக்கக் கூடியதொன்றாகவும் இருந்தது. ஏனெனில் றப்பர்ச் செய்கை போன்றவற்றில், நாம் ஏற்கெனவே எடுத்துக் காட்டியவாறு, பிரித்தானியர் நிலப் பற்றாக்குறையொன்றை எதிர் நோக்கிய போதும், உள்நாட்டவர் அதற்கென வயல் நிலங்களைத் தோட்ட நிலங்களாக மாற்றுகின்ற ஒரு செய்முறையை மேற்கொண்டிருந்தனர். அதனால் இலங்கையின் குடியான்கள் வெகுவிரைவில் எதிர்நோக்கிய கடுமையான நிலமின்மைப் பிரச்சினைக்கு உள்நாட்டு முதலாளி வர்க்கம் பெருமளவு தூண்டுகோலாயிருந்ததெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மட்டத்தை விடச் சமூக மட்டத்தில் இரட்டைத் தன்மை மேலும் தெளிவு பெறுவதற்கு உள்நாட்டு முதலாளிகள் பெரிதும் உதவியிருந்தனர். பொருளாதார ரீதியாக எத்தகைய தொழிலை மேற் கொண்டாலும் சமூக மட்டத்திற் சுதேசிய அம்சங்களை இலங்கை முதலாளிகள் பேணிப் பாதுகாப்பது ஓரளவிற்காவது சாத்தியமானதொன்றே யெனலாம். எனினும் அவர்கள் அது விடயத்தில் எதுவித முயற்சியும் மேற் கொள்ளாது சமூக ரீதியாகவும் பிரித்தானிய முதலாளி வர்க்கத் தினரை அணுகும் ஒரு செய்முறையையே கைக்கொண்டிருந்தனர். குறிப் பாகத் தமது வாழ்க்கை முறையையும் நுகர்வு முறையினையும் இலங்கை முயற்சியாளர் வர்க்கம் பிரித்தானியருடைய தரத்திற்கு மாற்றியமைத்துக் கொண்டமை கவனிக்கத்தக்கது. அதன் முக்கிய பகுதியாகப் பிரித்தானியாவி லிருந்தே பல வகை நுகர்வுப் பொருட்களையும் இறக்குமதி செய்ய வேண்டியிருந்த போது, அது நீண்ட காலத்தில், பிரித்தானியப் பொரு ளாதாரத்திற்கு நன்மையாக முடிந்து இலங்கைப் பொருளாதாரத்தை (அந்நியச் செலாவணி இழப்பின் மூலம்) நலிவடையும்படி செய்ததை அவர்கள் உணரவில்லை. பிரித்தானியருடன் சமூக ரீதியாக ஏற்பட்ட ஒருங்கிணைப்பு, ஓரளவிற்கு, நாம் முந்திய பகுதியில் எடுத்துக்காட்டியவாறு, உள்நாட்டவர் மேற் கொண்ட தொழிலின் தன்மை, கற்ற ஆங்கிலக் கல்வி என்பவை காரணமாகத் தவிர்க்க முடியாததொன்ருயிருந்த போதும், இலங்கை முதலாளிகள், இயல்பாக ஏற்பட்ட இந்தப் போக்கினைக் கட்டுப் படுத்த முற்படுவதற்குப் பதிலாகக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். அதன் விளைவாகத் தாம் அங்கத்துவம் பெற்றிருந்த சுதேசிய சமூகத்திலிருந்தே முற்ருகத் துண்டிக்கப்பட்டு (பிரித்தானியரைச் சார்ந்த) வேருன ஒரு கூட்டத்தினராக அவர்கள் வளர முற்பட்டிருந்தனர்.

## V

இவ்வாருனதொரு சமூக அமைப்பும் அது கட்டியெழுப்பப்பட்டிருந்த பொருளாதார அத்திவாரமும் இலங்கையின் அரசியல் வளர்ச்சிகளைச் செல் வாக்கினுக்குட்படுத்துவதற்கு அதிக காலம் எடுக்கவில்லை. அரசியற் பொறுப் பாட்சிக்கான கோரிக்கை உயர் வர்க்கத்தவரிடமிருந்து ஊற்றெடுத்த போது அதனை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ரீதியான தாக்கம், தரப்பட்ட குடியேற்ற நாட்டு வரையறையின் கீழ், இரு வகைகளில் வெளிப் பட்டதெனலாம். அவற்றுள் ஒன்று வெளிப்படையாக இயங்க மற்றது மறைமுக நிலையிற் செயற்படுவதாயிருந்தது.

முதலாவதாக, இலங்கையில் உருவாகிய அரசியற் சீர்திருத்தக் கோரிக்கைகள், இந்தியாவையோ அல்லது ஏனைய பல லத்தீன் அமெரிக்க நாடுகளையோ போன்றன்றி எப்போதுமே ஒரு மிதமான போக்கினைக் கொண் டிருக்கக் காணப்பட்டன. அவை கூடியளவு எச்சரிக்கையுடன் ஓரளவு பழைமைத் தன்மையும் கலந்து தீவிரம் குறைந்தவையாகவும் அதிகளவு கிளர்ச்சிப் போக்கு அற்றவையாகவும் விளங்கியிருந்தன. பிரித்தானியாவுடன் பொருதுவதன் மூலமன்றி அதனுடைய ஆதரவைப் பெற்றே இலங்கை டொமினியன் அந்தஸ்தை அடைய வேண்டுமென்பதும், அவ்வகையில் இலங்கை இந்தியாவையன்றிப் பேரரசின் பழைய குடியேற்ற நாடுகளாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றவற்றையே தனக்குரிய எடுத்துக்காட்டாகப் பின்பற்ற வேண்டுமென்பதும் தான் இலங்கையின் அரசியல் தலைமை கொண்ட கொள்கைகளாக அமைந்தன.[60] அதற்குக் காரணம் தமது சுதந்திரப் போராட்டம் பிரித்தானியருடனுன சுமுக உறவைப் பாதித்து அதன் வழி தமது பொருளாதார நலன்களையும் தாக்கி விடக் கூடாதென்பதேயாகும். அதன் விளைவாக இலங்கையின் அரசியற் சுதந்திரக் கோரிக்கை தொடர்ச்சியான அரசியல் திட்டச் சீர்திருத்தங்களை வேண்டி நிற்பனவாயன்றி வேறு வகையில் ஏற்படவில்லை. அத்தகைய அரசியல் திட்ட வளர்ச்சி 1833 முதற் கொண்டு படிப்படியாக ஏற்பட்டிருந்ததுடன். வேறுபட்ட கட்டங்களில் வரையப்பட்ட அரசியல் திட்டங்களினூடாகவே இலங்கை தனது சுதந்திரத்தையும் பெற்றுக்கொண்டிருந்தது.[61] இந்த வளர்ச்சிச் செய்முறையின் இறுதியில் பூரண சுதந்திரத்தைப் பிரித்தானியா வழங்க முன்வந்த போது இலங்கை ஆரம்பம் முதற் கடைப்பிடித்து வந்த மிதமான போக்கு, இலங்கைக்கு உரிய வெற்றியை அளித்திருந்ததென்பதிலும் ஐயமில்லை. ஏனெனில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும் செயல் முறைகளிற் பிரித்தானிய அதிகாரிகள் நாட்டின் நீண்ட கால அரசியல் திட்ட அநுபவம், அது எப்போதும் கைக்கொண்டு வந்த மிதவாதத் தன்மை என்ற இரண்டையும் சாதகமான காரணிகளாக வலியுறுத்தியிருந்தனர்.[62]

இரண்டாவது நிலையிற், பிரித்தானியருடைய கோணத்திலிருந்து பார்க்கும் போது, இலங்கையில் ஒரு சாராருடன் வர்க்க ரீதியாக அவர்கள் கொண்டிருந்த இணக்கம் பொருளாதார ரீதியாக அந்நாட்டிலிருந்து அவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகளை ஒரு குறுகிய காலத்தில் மாத்திரமன்றி நீண்ட காலத்திலும் உத்தரவாதப்படுத்துவதாயிருந்தது. வல்லரசுகள் குடியேற்ற நாடுகளை வைத்திருப்பதன் அடிப்படையான நோக்கம் பொருளாதார வாய்ப்புக்களை அதிகப்படுத்திப் பொருளியல் நன்மைகளைப் பெருக்குவதாகவே இருந்ததால், அரசியல் அதிகாரத்தின் பிரயோகமின்றி அதனை நிறைவேற்றிக் கொள்ள முடிமாயின் அது பெரிதும் வரவேற்கக் கூடிய ஒரு சூழ்நிலை என்பதிற் சந்தேகமில்லை. இலங்கையில் இடம் பெற்ற வளர்ச்சிகள் பிரித்தானிய அரசியல் அதிகாரத்திற்கான தேவையைப் பெருமளவு குறைத்திருந்தன. ஆங்கில முதலீட்டாளருக்கும் இலங்கை முதலீட்டாளருக்குமிடையிலான இணக்கம் எந்தளவுக்கு இறுக்கமடைந்து கொண்டு சென்றதோ அந்தளவுக்குப் பிரித்தானிய அரசியல் மேன்மைக்கான அவசியமும் படிப்படியாகக் குறைவடைந்து கொண்டே சென்றது. ஆகவே அரசியல் திட்ட வரையறைக்குட்பட்ட முறையில் இலங்கையர் பொறுப்பாட்சி வேண்டி முன்வைத்த கோரிக்கைகளை அவை தம்மைச் சார்ந்த உயர் வர்க்கத்தினரிடமிருந்தே உருவாகிய வரை, ஆதரவான ஒரு முறையில் அவற்றைச் செவி மடுப்பதிற் பிரித்தானியருக்குப் பெருமளவு சிரமம் இருக்கவில்லை. இந்நிலையில், இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்ட ஒவ்வொரு அரசியல் திட்டச் சீர்திருத்தமும் அரசியற் பொறுப்பாட்சி நோக்கிய முன்னேற்றப் படிகளாக அமைந்ததில் வியப்பில்லை. ஈற்றில் இந்தியா சுதந்திரம் பெறுவது உறுதியானதும், இலங்கையின் சுதந்திரம் வெறும் ஓர் ஒழுங்கு முறை சார்ந்த நிகழ்ச்சியாக இடம் பெறக் கூடியதாயிற்று. அரசியல் மட்டத்தில் ஏற்பட்ட இந்த மாற்றம், இலங்கையிலிருந்து பிரித்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னியர் பெற்றுக் கொண்டிருந்த பொருளாதார நலன்களை எவ்வகையிலும் அச்சுறுத்தவில்லை.

ஆகவே ஒரு முழு நிலை மட்டத்தில் நோக்குமிடத்துக் குடியேற்ற நாட்டுவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையினல் இலங்கையில் ஏற்பட்ட ஒரேயொரு விளைவு யாதெனில் முன்பு பிரித்தானியரின் கைகளில் இருந்த ஆட்சிப் பொறுப்பு இப்போது இலங்கை உயர் வர்க்கத்தினரை அடைந்திருந்தமையேயாகும். இது வர்க்க ரீதியாக எதுவித திருப்பத்தினையும், குறிப்பாக நாட்டின் பொருளாதார முகாமையைப் பொறுத்தவரை, குறித்து நிற்கவில்லை. பொருளாதாரமானது பழைய ஒழுங்கு முறையிலேயே தொடர்ந்திருக்கத் தலைப்பட்டது. ஒரு நுண் நிலை மட்டத்திற் பிரித்தானியர் வசமிருந்த பெருந்தோட்டங்கள் பல இலங்கையர் வசம் கைமாறிய போதும் பரு நிலை மட்டத்தில் இலங்கையிலிருந்து பிரித்தானியர் பெற்றுக் கொண்ட நன்மைகளில் அது எதுவித குறைவையும் ஏற்படுத்தவில்லை. புதிய உடைமையாளர் பழையவர்களிடமிருந்து வர்க்க அடிப்படையில் வேறுபட்டிராதது மட்டுமன்றித் தமது (முதல் விளைவுப்) பொருட்களை விற்பனை செய்வதற்கும் பிரித்தானிய சந்தைகளையே தொடர்ந்தும் நம்பியிருக்க வேண்டியதாயிருந்தது. எனினும் அடிப்படை நிலையில் மாறுபாடுகளெதுவும் நிகழாத இத்தன்மை இலங்கை பெற்றுக் கொண்ட சுதந்திரத்தின் தன்மையைப் பாரதூரமாகப் பாதிக்கக் கூடிய தொன்றுயிருந்தது.

ஒரு நாடு சுதந்திரமடைவதென்பது வெளிப்படையான ஓர் அரசியல் நிகழ்வாக இருந்தாலும், அது அரசியலைப் பொறுத்தவரை மாத்திரமன்றி அக்குறிப்பிட்ட நாட்டின் சமூக – பொருளியல் வளர்ச்சியிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம்பவமாகும். சுதந்திரத்தின் மூலம் அரசியல் ரீதியாக நாடு தனித்தியங்கக் கூடியதாயிருப்பதுடன் அதன் பொருளாதார அமைப்பு, சமூக அம்சங்களாகிய மொழி, மதம், கலாச்சாரம் என்பவற்றையும் சுயமாக வளர்த்துச் செல்லக் கூடிய வாய்ப்பும் அதற்குக் கிட்டுகின்றது. ஆகவே எல்லா வகைகளிலும் நாடொன்றின் சுதந்திரம் அதன் அரசியல் வரலாற்றிலும் சமூகப் பொருளியல் வளர்ச்சியிலும் ஒரு திருப்பு முனையாக இயங்க வேண்டியதொன்றுகும். இலங்கை அதற்கு எந்த வகையிலும் ஒரு புறநடையல்லவெனப் பொதுவாகக் கூற முடிந்தாலும், இலங்கையின் விடயத்தில் அதன் சுதந்திரம் மேலும் தனிச் சிறப்பு வாய்ந்ததொன்றுக விளங்கியிருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமானது. ஏனெனில் இலங்கை 1505 ஆம் ஆண்டு முதலாக ஏறக்குறைய நாலரை நூற்றுண்டுகள் வரை வேறுபட்ட ஐரோப்பிய வல்லரசுகளின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த பின், 1948ஆம் ஆண்டு, தனது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றது. அத்துணை நீண்டதொரு சகாப்தத்தில் ஒன்றிலிருந்து மற்றது பெரிதும் மாறுபடுகின்ற வல்லரசுகள் நாட்டின் பெரும் பகுதியை ஆட்சி புரிந்ததால் அதன் அரசியல் நிலை, பொருளாதார அமைப்பு, சமூக வளர்ச்சி என்ற யாவுமே ஒரு திரிபு பட்ட பின்னணியைக் கொண்டதாக மாற்றமடைந்திருக்குமென எதிர் பார்க்கலாம். அத்திரிபு நிலையிலிருந்து நாட்டைப் படிப்படியாக விடுவித்து அதனைச் சுயமான அபிவிருத்திப் பாதை நோக்கித் திருப்பி விடுவதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் தான் சுதந்திரமானது உண்மையான அர்த்தம் பெறக் கூடியதா யிருந்தது. சுருக்கமாகக் கூறின், சுதந்திரம் என்பது எல்லா வகையிலும் ஒரு பிரிநிலைக் கோடாக இயங்கியிருக்க வேண்டும்.

எனினும் இலங்கையின் சுதந்திரத்தைப் பொறுத்த முக்கியத்துவம் யாதெனில், அது நாம் எதிர்பார்ப்பது போல ஒரு பிரிநிலைக் கோடாக எந்த வகையிலும் செயற்படவில்லையென்பதேயாகும். அவ்வாறான பிரி நிலைக் கோடாகச் சுதந்திரம் விளங்க வேண்டுமாயின், அது நாட்டு மக்கள் அனைவரினதும் உணர்வுடன் ஒன்றிய வகையில் அவர்கள் எல்லோரும் ஒரு குறிப்பிட்ட லட்சியத்துடன் போராடிப் பெற்றுக் கொண்டதொன்றா யிருக்க வேண்டும். அவ்வாறான ஈடுபாடு ஏற்பட்டால் மட்டுமே சுதந்திரத்தை மக்கள் அநுபவிப்பதற்கும், அதன் நடைமுறை வெளிப்பாடாக, அரசியல் நிலைக்கப்பாற் பொருளாதார, சமூக, கலாச்சார நிலைகளிற் புத்துணர்வு பிறப்பதற்கும் வாய்ப்பேற்படும். ஆனால் இலங்கை பெற்றுக்கொண்ட சுதந்திரத்தின் தன்மை யாது? எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா அதற்கு விடை பகர்கின்றார்: 63

> '(சுதந்திரமானது) வரையறுக்கப்பட்ட தத்துவத்தின்பாற்பட்ட கொள்கைகளுக்கும் திட்டங்களுக்குமான போராட்டத்தின் பின் வரவில்லை. ஆனால் அது உண்மையில் சாதாரண நிகழ்வுகளின் போக்கி லேயே வந்திருந்தது. ............ சுதந்திரமின்றி நடைமுறைப் படுத்த முடியாத தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை ஈடுபடுத்தி அவற்றிற்காகச் சுதந்திரத்திற்குப் போராடுவதென்பது இருக்கவில்லை............அது ஓர் இரவுக்குள் கிடைத்திருந்தது. ஒரு நாள் நாங்கள் கண் விழித்தபோது ''நீவிர் இப்போது ஒரு டொமினியன்'' என எமக்குக் கூறப்பட்டது.'

ஆகவே சுதந்திரம் சாதாரண நிகழ்வுகளின் போக்கில் ஏற்பட்டதொன்றா யிருந்ததுடன் நாட்டு மக்கள் தம்மை அதனுடன் ஈடுபடுத்த முடியாத ஒரு 'திடீர்ச்' சுதந்திரமாக அது விளங்கியதென்பதைப் பண்டாரநாயக்கா முன்வைக்கிறார். இலங்கையின் உயர் வர்க்கத்தினர் பிரித்தானியருடன் முதலாளித்துவ ரீதியாகக் கொண்ட இணக்கத்தின் விளைவாகவே அது ஏற்பட்டிருந்தது. அத்தகைய சுதந்திரத்தினால் அரசியல் அதிகாரம் உள் நாட்டு உயர் வர்க்கத்தினரைச் சென்றடைந்திருந்த போதும் அதனால் பெரும்பான்மையான நாட்டு மக்களுக்கு அவர்கள் உய்த்துணரக் கூடிய நன்மையெதுவும் கிடைத்திருக்கவில்லை. அதே நேரத்தில் ஆங்கில முதலாளி களுக்கும் பொருளாதார ரீதியாக அதிக இழப்பு ஏற்பட்டிருக்கவில்லை. மறு புறம், அரசியல் ரீதியாகக் கூடத், தமக்கு ஏற்படக் கூடிய இழப்பைப் பிரித்தானியர் பெரிதும் குறைத்துக் கொண்டிருந்தனரென்றே கூற வேண்டும். சுதந்திரத்தின் வழி அதிக அரசியல் நட்டம் ஏற்படாமற் பாது காத்துக் கொள்வதில் இரு அம்சங்கள் பிரித்தானியருக்கு உரிய உத் தரவாதமளித்திருந்தன எனலாம். அவற்றுள் ஒன்று இலங்கை சுதந்திர மடைந்த போது ஏற்றுக் கொண்ட அரசியல் திட்டம், மற்றது சுதந்திரத் தின் ஒரு பகுதியாக இலங்கை பிரித்தானியாவுடன் கைச்சாத்திட்டுக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான இரு ஒப்பந்தங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடொன்று சுதந்திரத்தை எதிர்நோக்கும் போது ஏனைய துறைகளி லான மாற்றங்கள் ஒரு தாமதித்த நிலையில் ஆரம்பிக்க முடிந்தாலும், குறைந்த பட்சம் அரசியல் ரீதியாக ஆவது, அது ஓர் உடனடி மாற்றத் தைக் குறித்து நிற்க வேண்டும். அந்த மாற்றத்தின் சின்னமாகப் புதிய அரசியல் திட்டமொன்று வரையப்பட்டு அதன் கீழ் நாட்டின் நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்படுவது அத்தியாவசியமானதாயிருந்தது, ஆனால் அவ்வா றான புதிய அரசியல் திட்டமொன்று இலங்கையின் சுதந்திரத்துடன் அமு லுக்கு வந்திருக்கவில்லை. 1944ஆம் ஆண்டு மந்திரிகள் சமர்ப்பித்த நகல் திட்டத்துக்கமைய வரையப்பட்டு 1946ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே அமுலாக்கப்பட்டிருந்த சோல்பரி அரசியல் திட்டமே 1948 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் அரசியல் திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் தன்மையை ஹோவார்டு றிகின்ஸ் (W. Howard Wriggins) எடுத் துக் கூறுகின்றார்:[64]

> '1948 ஆம் ஆண்டின் ''புதிய'' அரசியல் திட்டம் எந்த வகையிலும் புதியதாயிருக்கவில்லை. ஏற்கெனவே இருந்தவற்றுடன், அடிப்படைத் தன்மை வாய்ந்தவையாயிருந்தாலும், குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய ஒரு சில பதிலீடுகளும், விசேட உடன்படிக்கைகளும் மாத்திரமே கூடுத லாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. சுதந்திரமானது கடந்த காலத்திலிருந்து விடுபடும் தீவிரமான ஒரு முறிவைக் குறித்து நிற்ப தற்குப் பதிலாகப் பூரண பிரதிநிதித்துவம், பொறுப்புணர்வு என்ப வற்றைக் கைக்கொள்ளும் அரசாங்கம் நோக்கிய முடிவுக் கட்டமொன் றினையே பிரதிநிதித்துவப்படுத்தியது.'

சோல்பரி அரசியல் திட்டத்தின் முக்கியமான தன்மை யாதெனில் அதன் தீர்மானம் எடுக்கும் செய்முறை அசைவுத் தன்மை குறைந்ததொன்றா யிருந்தமை ஆகும்.[65] அதன் கீழான பாராளுமன்ற நிர்வாக சபை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு மாத்திரமன்றி மேற் சபை யொன்றிற்கும் பொறுப்புடையதாயிருந்தது. அத்துடன் பிரித்தானிய முடி யின் பிரதிநிதியாகிய மகா தேசாதிபதியும் நிர்வாக சபையின் தீர்மானங் களை அங்கீகரிக்க வேண்டியதாயிருந்தது. இத்தனை படிகளையும் கடந்து சட்டம் ஆக்கப்பட்ட பின்பு அதற்கு விளக்கம் அளிக்கும் பொறுப்பு உயர் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டு ஈற்றில் அது பிரித்தானிய பிரிவி கவுன்சில் வரை செல்லக் கூடியதாயிருந்தது. ஆகவே சட்டங்களின் இறுதி அங்கீ காரம் பிரித்தானியா வசம் தொடர்ந்திருப்பதற்கு வகை செய்யப்பட்டிருந் தது. ஆனால் அதற்கு முந்திய படியிலிருந்த மேற் சபையானது சலுகை பெற்ற உயர் வர்க்கத்தினரின் உறைவிடமாகவே விளங்கியிருந்தது. எனவே, பிரித்தானிய ஆட்சியாளருடன் இணக்க உடன்பாடு கொண்ட அதன் அங்கத்தவர் பிரித்தானிய நலவுரிமைகளுக்குப் பாதகமான எந்த ஒரு சட்டத்தையோ தீர்மானத்தையோ தடுத்து அல்லது ஆகக் குறைந்தது தாமதித்து வைக்கக் கூடிய சக்தி பெற்றவர்களாயிருந்தனர். சோல்பரி அரசியல் திட்ட நடைமுறைகளை முற்றாக நோக்கின், அவை இலங்கையின் சுதந்திரத்தின் மூலம் பிரித்தானியா உடனடியாகப் பாதிப்படையாது பாதுகாக்கக் கூடிய பல்வேறு ஒழுங்குகளையும் கொண்டிருந்தன. ஆனால் அதே நேரத்தில் அவை 'குறைவிருத்திச் சமூகமொன்றை நவீன தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாக விரைவாக உருமாற்ற விழையும் நீண்ட கால நோக்குடைய கொள்கை வகுப்போரை விரக்தியடையச் செய்யக் கூடியவையாயிருந் தன.'[66] ஆனால் பிரித்தானியருடன் இணைந்திருந்த உயர் வர்க்கத்தினர் ஆட்சி பீடத்திலிருந்த வரை இந்த விரக்தி நிலை உணரப்படவில்லை,

இலங்கை சுதந்திரம் பெறுவதுடன் இணைந்த வகையில், சுதந்திரத்தின் ஒரு பகுதியாகவே 1948 பிப்ரவரி மாதத்திற் பிரித்தானியாவுடன் இலங்கை கைச்சாத்திட்டுக் கொண்ட இரு உடன்படிக்கைகள் அமுலுக்கு வந்திருந் தன.[67] அவற்றுள் முதலாவது ஒரு பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தமாகும். அதன்படி இலங்கையின் எல்லைகளைப் பிற நாடுகளின் ஆக்கிரமிப்பினின்றும் பாதுகாப்பதற்குரிய இராணுவ உதவியைப் பிரித்தானியா வழங்க வேண்டு மென எடுத்துக் கூறப்பட்டது. தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள் வதற்கான தகைமை, திறமை என்பன இலங்கைப் படைகளுக்கு இல்லாத காரணத்தினால் இது அவசியமானதெனச் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு ஈடாக, இலங்கை உள்நாட்டிலிருந்த கடற் படை, விமானத் தளங்களையும், துறைமுகங்கள், மற்றும் இராணுவ நிறுவனங்கள், தொலைத் தொடர்பு வசதிகள் என்பவற்றையும் பிரித்தானியா தொடர்ந்தும் பயன்படுத்துவதற் குச் சம்மதித்தது. இது தவிரப் பாதுகாப்புத் தேவைகள் கருதி இரு அர சாங்கங்களும் இணைந்து சில விடயங்களை நிர்ணயித்துக் கொள்வதற்கும், நிர்வாக ஒழுங்குகள் சிலவற்றை மேற்கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டிருந் தது. இரண்டாவது ஒப்பந்தம், முதலாவதன் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாயிராவிட்டாலும், அதுவும் இலங்கை பிரித்தானியாவின் மீது தங்கியிருக்கும் பான்மையை வளர்ப்பதாகவே இருந்தது. பொதுநல வாய அமைப்பின் அடிப்படைத் தன்மைகளுள் ஒன்றாகிய ஆலோசனை பெறும் தகுதியை இந்த ஒப்பந்தம் இலங்கைக்கு வழங்குவதாயிருந்தது. அதன்படி வெளிநாட்டுக் கொள்கை விடயத்தில் இன்னொரு தனிப்பட்ட அங்கத்தவர் பாதிக்கப்படும் படியான நடவடிக்கை எதனையும் இலங்கை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுமாயின் அதற்கு முன்னதாகப் பொது நல அமைப்பின் பரஸ்பர ஆலோசனையை அது பெற்றுக் கொள்ள வேண்டு மென நிர்ணயிக்கப்பட்டது. அத்துடன் இலங்கை தனது சொந்தத் தூத ரகங்களை நிறுவிக் கொள்வது சாத்தியப்படாத நாடுகளில் அதனைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்குப் பிரித்தானியா சம்மதித்தது.

இந்த இரு உடன்படிக்கைகளும், நெகிழ்ச்சியற்ற சோல்பரி அரசியல் திட்டத்துடன் இணைந்த வகையிற், பிரித்தானியரின் அரசியல் முன்னுரிமை கள் இலங்கையின் சுதந்திரத்தாற் பாதிக்கப்படாதென்பதைச் சந்தேகத்துக் கிடமின்றி உத்தரவாதப்படுத்தியிருந்தன. ஆனால் அதே நேரத்தில், நாடொன்றின் வெளிநாட்டுக் கொள்கை கூட ஆட்சியாளர் குழாமின் வர்க்க ஈடுபாட்டிற்கேற்பவே நிர்ணயிக்கப்படுமென்பதையும் அவை எடுத் தியம்புவனவாயிருந்தன.[68] 1956 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வெளி நாட்டுக் கொள்கை பிரித்தானியாவுக்கும் அதனைச் சார்ந்த ஏனைய முதலாளித்துவ வல்லரசுகளுக்கும் சார்பானதொன்றாகவே பின்பற்றப் பட்டமையைக் கண்டு கொள்ளலாம். அத்தகைய போக்கிற்குரிய ஒரு முன்னோடியாகவே இந்த இரு ஒப்பந்தங்களும் அமைந்திருந்தன. நாட்டின் சுதந்திரத்துடன் ஒன்றிணைய வேண்டிய அடிப்படையான பொருளாதார,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்றங்களை அவை மேலும் தடுத்து வைப்பனவாயிருந்தன. ஏனெனில் முதலாளித்துவ வல்லரசுகளுக்கு வாய்ப்பான வெளிநாட்டுக் கொள்கையொன்று பின்பற்றப்படும் வரை, உள்நாட்டிலும் சுயமாக இயங்கக் கூடிய வலிமையை நாடு இழந்திருந்ததென்றே கொள்ள வேண்டும். உள்நாட்டில் அரசாங்கம் செயற்படுத்த விரும்பும் திட்டங்களை, அவை முதலாளித்துவ வல்லரசுகளுக்கு ஏற்புடையதாக இருக்கும் வரை தான், தடையின்றி அமுல் நடாத்தக் கூடியதாயிருக்கும். அவ்வாறில்லாத நிலைகளில் அவற்றைக் கைவிடும்படி அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படலாம் அல்லது வெளி நாட்டிலிருந்து உருவாகக் கூடிய பல தடைகளுக்கு அது முகம் கொடுக்க வேண்டியதாயிருக்கலாம்.

ஆகவே தொகுத்து நோக்கின் இலங்கை முயற்சியாளர் பிரித்தானியருடன் கொண்ட முதலாளித்துவ இணக்கம் பொருளாதாரத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதொன்ருயிராது நாட்டின் சமூக அரசியல் வளர்ச்சிகளையும் வெகுவாகப் பாதிப்பதொன்ருயிருந்தது. அதனுடைய பிரதான விளைவாக நாம் மேலே எடுத்துக் காட்டியிருப்பது போல நாட்டின் சுதந்திரம் என்பது, பல வகைகளிலும் அர்த்தமற்றதொன்ருக ஆக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இலங்கையின் சுதந்திரம் 'பொதுநலவாய பிரதம மந்திரிகள் மகாநாட்டுக்கான லண்டன் விஜயங்களையும், ஐக்கிய நாடுகள் சபையில் வாக்குரிமை என்பதையும் தவிர............எதனைக் கருதியது?' என ஹியூ ரிங்கர் (Hugh Tinker), வினவெழுப்புவது[69] பெரிதும் நியாயமுடையதொன்ருகவே படுகின்றது. இலங்கை ஆட்சியாளர் தம்முடன் கொண்டிருந்த இணக்கத்தைப் பிரித்தானியா எவ்வளவு தூரம் மதித்ததென்பதற்கு, 1956 வரை இலங்கை 'ஒரு மாதிரிக் குடியேற்ற நாடு' என அதனுல் வர்ணிக்கப்பட்டமை[70] தவிர வேறு எவ்வகைச் சான்றும் அவசியமில்லையெனலாம். எனினும் இலங்கை முயற்சியாளரின் முதலாளித்துவ இணக்கமும் அதன் மூலம் உண்டான பொருளாதார, சமூக, அரசியல் விளைவுகளும் 1956 வரை மாத்திரமன்றி இலங்கையின் 1956க்குப் பிந்திய நீண்ட கால அபிவிருத்தி மீது கூட பலத்த தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியனவாயிருந்தன. அது பற்றிய விபரங்கள் தனி ஓர் ஆய்வுக்குரியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

1. S.B.D. de Silva (1982) : 1-2.

2. Karl Marx (1976) : 915.

3. இவ்விபரங்களடங்கிய பூரணமான ஓர் ஆய்வுக்கு, Andre Gunder Frank (1978).

4. அதனிடையே வல்லரசுகளிடம், குறிப்பாகப் பிரித்தானியாவிடமிருந்த, குடியேற்ற நாடுகளின் தன்மையிலும் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தமை கவனிக்கத் தக்கது. மித மண்டலக் குடியேற்றங்களாகிய வடக்குப் புறக் குடியேற்றங்களும், ஐரோப்பியர் நிரந்தரமாகக் குடியேறிய குடியேற்றங்களும் தமது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள, அயன மண்டலப் பிரதேசங்களிலான, ஐரோப்பியர் நிரந்தரமாகக் குடியேறாத குடியேற்றங்களே இப்போது வல்லரசுகளின் குடியேற்றங்களாக மாறியிருந்தன. இப்புதிய குடியேற்றங்களின் விளைபொருட்கள் பலவும் மித மண்டலத்திலிருந்த வல்லரசுகளில் எவ்விதத்திலும் பெற்றுக் கொள்ள முடியாதவையாயிருந்தன. எனவே அவை வல்லரசுகளுக்கு ஒரு வகையில் அத்தியாவசியமான பண்டங்களாகவுமிருந்தன. ஐரோப்பியர் (நிரந்தரமாகக்) 'குடியேறிய' குடியேற்றங்களுக்கும் 'குடியேறாத' குடியேற்றங்களுக்குமிடையிலான வேறுபாடுகள் பற்றிய சிறந்த ஓர் ஆய்வுக்கு, S. B. D. de Silva (1982) : 51-134.

5. V. I. Lenin (1960).

6. G. A. Kozlov (ed) (1977) : 339 - 340.

7. V. I. Lenin (1960) : 761.

8. தங்கியிருத்தற் கோட்பாடுகளின் வளர்ச்சி 1950கள் முதலே ஆரம்பித்திருந்தாலும் 1960 களின் இறுதியிலும் 1970 களின் ஆரம்பத்திலும் குன்டார் பிராங் மேற்கொண்ட முயற்சிகளின் வழியாகவே அது உச்ச நிலையை அடைந்தது.
   Andre Gunder Frank (1967).
   Andre Gunder Frank (1969).

9. தங்கியிருத்தற் கோட்பாட்டின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதற்கெதிரான கண்டனங்கள் போன்ற விபரங்களுக்கு, Ronaldo Munck (1984) : 7-15.

10. T. Dos Santos (1973): 76.

11. குறைவிருத்தி நாடுகளின் வர்க்க வளர்ச்சி தொடர்பான சிறந்த ஒரு விளக்கத்திற்கு, Ronaldo Munck (1984) : 81 - 109.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. Ibid : 88.

13. விபரங்களுக்கு, Bipan Chandra (1979) : 144–170.

14. Ibid : 148.

15. Ibid: 146.

16. Ibid: 148.

17. Ibid: 331.

18. லத்தீன் அமெரிக்க நாடுகளைப் பொதுவாக எடுத்து நோக்குமிடத்துச் சுதேசிய கைத்தொழில் பூர்ஷீவா வர்க்கமானது, பல சந்தர்ப்பங்களில், நிலச் சுவான்கள் வர்க்கத்துடன் ஒன்று சேர்ந்ததொன்ருகக் காணப் பட்டது. அதன் காரணமாக அது அபிவிருத்திச் செய்முறையில் தனது முன்னணி நிலையினை வலியுறுத்த முற்படவில்லையென்ற குற்றச்சாட் டுக்கும் உள்ளாகின்றது. விபரங்களுக்கு, Ronaldo Munck (1984) : 88 – 89.

19. அவ்வாறு முன்னணியில் திகழ்ந்த உயர் குடும்பங்கள் பற்றிய விபரங் களுக்கு, Michael Roberts (1972b) : 276 – 277.

20. ஏ. சீ. எல். அமீர் அலி (1972) : 1.

21. Ibid.

22. Michael Roberts (1972) : Table I : 97.

23. Ibid : 98.

24. Michael Roberts (1972b) : 277.

25. Ibid : 268.

26. Ibid : 269.

27. Ibid : 266.

28. Ibid : 267.

29. D. R. Snodgrass (1966) : Table A – 37.
இப்பரப்பளவு பெருந்தோட்ட முறையிலமைந்த செய்கையுடன் சிற்றுடைமைகளையும் உள்ளடக்கினுலும் பின்னையவை எந்த வகையி லும் பெருந்தோட்டங்களுக்குப் போட்டியாக அமைய முடியவில்லை.

30. Sessional paper XXII – 1934 (Dec. 1934) : 170.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. V. Nithiyanandan: (1975) 362 - 363.

32. Ibid : 364.

33. 20 ஆம் நூற்றுண்டின் ஆரம்ப வருடங்களில் றப்பர்ச் செய்கைக்கென இலங்கையில் மிதக்க விடப்பட்ட கூட்டுப் பங்கு நிறுவனங்கள் பல முறிவடைந்தமையும் அவற்றில் இலங்கையர் கொள்ளக் கூடிய நம்பிக்கையை ஓரளவுக்குச் சிதறடித்திருந்தது. Ibid: 365.

34. Sessional paper XXII - 1934 (1934 Dec.): 161.

35. S. Rajaratnam (1962 April): 102.

36. Ibid: 109.

37. Richard T. Stillson (1971 Nov.) : 592.

38. நெற் செய்கை மரபு ரீதியான ஒரு துறையாயிருந்தது மாத்திரமன்றி அரசாங்கத்திடமிருந்து புதிதாகப் பெற்ற காணிகளும் நெற் செய்கைக்குட்படுத்தப்பட்டிருந்தன. அவ்வகையில் முடிக்குரிய காணிகளைப் பெறுவதில் இலங்கையரும் முன்னணி வகித்தமையும் அவர்கள் பெற்றுக் கொண்ட காணிகள் 1—10 ஏக்கர் வரை பரப்புடையவையாயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அது தவிர, தனியார் நிலங்களுக்கான சந்தையிலும் நெல் பயிரிடு நிலங்கள் ஒரு பிரதான இடத்தைப் பிடித்திருந்தன.
விபரங்களுக்கு, Michael Roberts (1972 a): 149.

39. V. Nithiyanandan (1975) : 149.

40. N. Ramachandran (1963) : 149.

41. Sessional Paper XXII - 1934 (1934 Dec.) : 192.

42. Michael Roberts (1972b) : 271.

43. Ibid : 270.

44. Swarna Jayaweera (1979) : 133.

45. Michael Roberts (1972b) : 271.

46. Swarna Jayaweera (1972) : 467.

47. Ibid.

48. Michael Roberts (1972b) : 272.

49. Ibid : 271.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. Ibid : 273 - 274.

51. இந்நிலையை இந்தியாவுடன் ஒப்பிடுவோமாயின் அங்கு 1857 ஆம் ஆண்டிலேயே மூன்று பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

52. Michael Roberts (1978) : 179.

53. இது தொடர்பான விபரங்கள் பலவற்றையும் உள்ளடக்கிய பெருந்தோட்ட ஊழியம் பற்றிய ஆய்வுக்கு, S. B. D. de Silva (1982) : 204 – 273.

54. நகரத் தொழிலாளர் வர்க்கத்தின் அமைப்புப் பற்றிய விபரங்களுக்கு Visakha Kumari Jayawardena (1972) : 5 – 12.

55. Ibid : 6.

56. Ibid.

57. Ibid.

58. Ibid.

59. Ibid : 7.

60. இது தொடர்பாக டீ. எஸ். சேனநாயக்கா கொண்டிருந்த கொள்கைகள் அவற்றின் செயற்பாடு பற்றிய விபரங்களுக்கு, K. M. de Silva (1982): 78 – 84.

61. 1833 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கையின் முதலாவது சட்டசபை உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரின் ஆலோசனைகளைக் கருத்திலெடுத்துக் கொள்வதொன்ருயிருந்தது. 1912, 1920, 1923 ஆகிய ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை வழங்கியிருந்ததுடன் சட்டவாக்க நடவடிக்கைகளிற் படிப்படியாகக் கூடியளவு பொறுப்பினையும் இலங்கையருக்கு வழங்கியிருந்தன. 1931 ஆம் ஆண்டின் டொனமூர் அரசியல் திட்டம் சர்வசன வாக்குரிமை, பிரதேசப் பிரதிநிதித்துவம் போன்ற புரட்சிகர அம்சங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்தி அரைகுறைப் பொறுப்பாட்சியை வழங்குவதற்குக் காலாயிருந்தது. 1946இல் அமுலுக்கு வந்த சோல்பரி அரசியல் திட்டம் மேற்குறித்தவற்றுடன் மந்திரி சபை ஆட்சி முறையையும் புகுத்தியிருந்தது. இந்த அரசியல் திட்டமே 1948 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டு இலங்கை பூரண சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான திட்டமாக அங்கீகரிக்கப்பட்டது.

62. விபரங்களுக்கு, K. M. de Silva (1982) : 82–85.

63. மேற்கோள் E. F. C. Ludowyck (1966) : 204.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. W. Howard Wriggins (1960) : 93.

65. Radhika Coomaraswamy (1984) : 10.

66. Ibid : 10 - 11.

67. விபரங்களுக்கு, W. Howard Wriggins (1960) : 384–385.

68. விபரங்களுக்கு, S. Lenka & S. Pattanaik (August 1979) ; 48–57.

69. Hugh Tinker (1982) : 19.

70. K. M. de Silva (1982) : 85.

## உசாவியவை


*அமிர் அலி, ஏ. சீ. எல். (1972 ஜனவரி – ஜூலை) 'இலங்கையின் 19 ஆம் நூற்றாண்டுப் பொருளாதார வளர்ச்சியிற் சிறுபயிர்க் கோப்பிச் செய்கையின் வரலாறும் பங்கும்', சிந்தனை, மலர் 5, இதழ் 1, 2, பக்கம் 1 – 13.*

Chandra, Bipan (1979), **Nationalism and Colonialism in Modern India**, Orient Longman, New Delhi.

Coomaraswamy, Radhika (1984), **Sri Lanka: The Crisis of the Anglo - American Constitutional Traditions in a Developing Society**, Vikas Publishing House Pvt. Ltd. New Delhi.

de Silva, K. M. (1982), '"The Model Colony" : Reflections on the Transfer of power in Sri Lanka', in Wilson, A. Jeyeratnam and Dalton, Dennis (ed) **The States of South Asia : Problems of National Integration**, C. Hurst & Company, London, pp. 77–88.

de Silva, S. B. D. (1982), **The Political Economy of Under-development**, Routledge & Kegan, paul Ltd., London.

Frank, Andre Gunder (1967), **Capitalism and Underdevelopment in Latin America**, Monthly Review Press, New York.

......(1969), **Latin America : Underdevelopment or Revolution**, Monthly Review press, New york.

......(1978), **World Accumulation 1492 – 1789**, Macmillan Press Ltd., London.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jayawardena, Visakha Kumari (1972), **The Rise of the Labor Movement in Ceylon**, Duke University Press Durham, North Carolina.

Jayaweera, Swarna (1972), 'Education Policy in the Early Twentieth Century' in de Silva, K. M. (ed), **University of Ceylon, History of Ceylon**, University of Ceylon Press Board Colombo, pp. 461 - 475.

......(1979) 'Education' in Fernando, Tissa & Kearney Robert, N. (ed), **Modern Sri Lanka : A Society in Transition**, Maxwell School of Citizenship and Public Affairs, Syracuse Univer sity, New York, pp. 131- 154.

Kozlov, G. A. (ed) (1977), **Political Economy : Capitalism**. Progress Publishers, Moscow.

Lenin, V. I. (1960), 'Imperialism, the Highest Stage of Capitalism' in **Selected Works**, Vol. I, Foreign Languages Publishing House, Moscow, pp. 711 - 815.

Lenka, S. and Pattanaik,S (1979 August), 'Sri Lanka's Foreign Policy : A Class Analysis', **Social Scientist**, Vol. 8, No. 1 (Whole No. 85) pp. 48 - 57.

Ludowyck, E. F. C. (1966), **The Modern History of Ceylon**. Weidenfeld & Nicholson, London.

Marx, Karl (1976), **Capital**, (Vol. 1) Penguin Books Ltd., Harmondsworth.

Munck, Ronaldo (1984), **Politics and Dependency in the Third World: The Case of Latin America**, Zed Press Ltd. , London

Nithiyanandan, V. (1975), **The Development and Impact of the Primary Commodity sector in Ceylon 1920 — 1950, With special Reference to International Marketing Agreements**, Ph. D. Thesis (Unpublished) University of Reading.

Rajaratnam, S. (1962 April) 'Plantation Rubber Industry in Ceylon' **University of Ceylon Review**, Vol. XX, No. 1, pp. 96 - 124.

Ramachandran, N. (1963), **Foreign Plantation Investment in Ceylon 1889 - 1958**, Central Bank of Ceylon, Colombo.

Roberts, Michael (1972) 'Export Agriculture in the Nineteenth Century', in de Silva, K. M. (ed), **University of Ceylon**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**History of Ceylon**, University of Ceylon Press Board, Colombo, pp.89–106.

......(1972a) 'Aspects of Ceylon Agrarian Economy in the Nineteenth Century', in de Silva, K. M. (ed), **Ibid.**, pp. 146–164.

......(1972b) 'Elite Formation and Elites 1832 – 1931', in de Silva, K. M. (ed), **Ibid.**, pp. 263-284.

......(1978) 'Reformism, Nationalism and Protest in British Ceylon: The Roots and Ingredients of Leadership', in Robb, Peter & Taylor, David (ed), **Rule, Protest, Identity: Aspects of Modern South Asia**, Curzon Press, London, pp. 159-192.

Santos, T. Dos (1973) 'The Crisis of Development Theory and the Problem of Dependence in Latin America', in Bernstein Henry (ed), **Underdevelopment and Development**, Penguin Books Ltd., Harmondsworth, pp. 57-80.

Sessional Paper XXII – 1934 (1934 Dec.) **Report of the Ceylon Banking Commission**, Government Press, Colombo.

Snodgrass, Donald R. (1966) **Ceylon: An Export Economy in Transition**, Richard D. Irwin Inc., Illinois.

Stillson, Richard T. (1971 Nov.) 'The Financing of Malayan Rubber 1905–1923', **Economic History Review** (Second Series) Vol. XXIV, No. 4, pp. 589–598.

Tinker, Hugh (1982) 'South Asia at Independence: India, Pakistan and Sri Lanka', in Wilson, A. Jeyaratnam & Dalton, Dennis (ed), **The States of South Asia: Problems of National Integration**, C. Hurst & Company, London, pp. 1–25.

Wriggins, W. Howard (1960) **Ceylon; Dilemmas of a New Nation**, Princeton University Press, Princeton, New Jersey.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமும் இந்து மதமும் - பொலநறுவைக் காலம்
## (கி.பி.1000—1250)

சி. க. சிற்றம்பலம்

ஈழவரலாற்றில் பொலநறுவைக் காலம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். அரசியற்றுறையை நோக்கும்போது இந்நாட்டில் ஏற்பட்ட தமிழ்ப் படைஎடுப்புகள் உக்கிரமடைந்து காணப்பட்டதோடு பொலநறுவை ராசதானியின் வீழ்ச்சியில் இதுவரை ஒரு தலைநகரை மைய மாக வைத்து ஆண்ட மரபு மறைய, பல்வேறு தலைநகர்களை அமைத்து ஆளும் மரபு தலைஎடுத்ததோடு வடபகுதியில் சுதந்திரத் தமிழ் அரசின் எழுச்சியும் கருக்கட்டிய காலமாகவே இக்காலம் அமைகின்றது. கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பிருந்தே தமிழகத்திலிருந்து ஈழத்தின்மீது படை எடுப்புகள் மேற்கொள்ளப்பட்டாலும்கூட அநுராதபுர காலத்தின் பிற் பகுதியில் அதுவும் குறிப்பாக கி.பி. 8ஆம், 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் உக்கிரம் அடைந்தன. இத்தகைய நிலைக்கு மன்னர்களது வலிமையின்மை மட்டுமன்றித் தமது அதிகாரத்தை வலுப்படுத்துவதற்குத் தென்னிந்திய படைப்பிரிவினர் தயவிலே தங்கியிருக்க வேண்டிய நிலையும் முக்கிய காரணி யாக அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அத்துடன் படை எடுத்தவர்கள்கூட இந்நாட்டிற்கு அழிவை ஏற்படுத்தத் தவறவில்லை என வும் சூளவம்சம் குறிப்பிடுகின்றது. உதாரணமாக, முதலாவது சேனன் (கி.பி.831-51) அநுராதபுரத்தில் அரசாட்சியை மேற்கொண்டபோது சிறீ மாற சிறீவல்ல என்பவன் தலைமையில் இங்கு வந்த தமிழர் படை இங் குள்ள தமிழர்களது ஆதரவோடு நகரைச் சிதைக்க அந்நகர் யக்ஷர்களால் சூறையாடப்பட்ட நகர்போன்று காட்சி கொடுத்தது எனச் சூளவம்சம் குறிப்பிடுகிறது. இவ்வாறேதான் இவனுக்குப் பின்னர் ஆட்சிபீடமேறிய மன்னர் பலரும் வலிமையற்றவர்களாகக் காணப்பட்டனர். மூன்றாவது உதயன் (கி.பி.945-53) காலத்தில் பராந்தக சோழனின் படைஎடுப்பு நிகழ்ந் தது. உதயன் ஒரு சோம்பேறி மட்டுமல்ல, குடிகாரனும்கூட. நான்காவது மகிந்தன் காலம் ஓரளவு அமைதி காணப்பட்ட காலமாக விளங்கினாலும் கூட, பின்வந்த ஐந்தாவது சேனன் (கி.பி.972-81), ஐந்தாவது மகிந்தன் (கி.பி.981-1017) போன்றோர் வலிமையற்று இருந்ததோடு இவர்கள் காலத் தில் ஈழத்திலுள்ள திராவிடப் படைப்பிரிவினரின் கையும் ஓங்கியிருந்தது. இப்படையினர் கலகத்துக்கஞ்சி மகிந்தன் ரோகணைக்கு ஓடவேண்டியிருந்தது. படையில் மட்டுமன்றிப் பொதுவாகவே தமிழர் செல்வாக்கு அநுராதபுர கால அரசின் இறுதிக் காலத்தில் மேலோங்கியிருந்தது. தமிழர் வசமிருந்த நிலங்கள் 'தமேழத்வலதெமின்' எனவும், தமிழர் வசித்த கிராமங்கள் 'தமெல்—கம்மின்' எனவும் தமிழரிடமிருந்து பெறப்பட்ட வரி 'தமெலகுழி' எனவும் இக்காலச் சான்றுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலை யில்தான் தென்னிந்தியாவில் பேரரசமைத்த சோழர் ராஜராஜன் தலைமை யில் (கி. பி. 985-1016) ஈழத்தின்மீது படைஎடுத்தனர்.

முதலாவது ராஜராஜன் தலைமையில் ஈழத்தின்மீது மேற்கொள்ளப் பட்ட படைஎடுப்பு இதுவரை நிகழ்ந்த படைஎடுப்புகளைவிடப் பல வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் வேறுபட்டிருந்தது. அநுராதபுரம் தலைநகராக இருக்கும் நிலைக் கப்பால் சிதைக்கப்பட்டது மட்டுமன்றித் தலைநகர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டது. அநுராதபுர காலத்தில் வெறும் இராணுவத் தளமாக விளங்கிய பொலநறுவை இவனுல் தலைநகராக்கப்பட்டதன் நோக்கம் இது மையப் பிரதேசமாக இருந்ததால் இதன்மூலம் ஈழம் முழுவதையும் ஆட்சி செய்தலே. அத்துடன் இதுவரை வந்த படைஎடுப்புக்களும் ஈழம் முழுவதும் ஆட்சி செய்தாலும்கூட சோழப் பேரரசர் ஈழத்தைத் தமது கடல் கடந்த பிரதேசங்களில் ஒன்ருகக் கருதி (9ஆவது மண்டலமாக்கி) தமது ராசப் பிரதிநிதிமூலமாக ஆள முற்பட்டனர். இதனுல் முதல்முதலாக நம் நாடு சுதந்திரமிழந்தது. இது கி.பி.1070ஆம் ஆண்டுவரை சோழப் பேரரசின் ஒரு அங்கமாக இருந்ததோடு தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட இவ்வரசின் ஆணையை ஏற்ற அரசாகவும் விளங்கியது. இவ்வாறு முக்கால் நூற்ருண்டாக ஏற்பட்ட அரசியல்தாக்கம் பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் முன்னெப்போது மில்லாத அளவுக்குப் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியது எனலாம். இதனை மனதிற் கொண்டே பேராசிரியர் அரசரத்தினம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார். ‘சோழர்கள் தோற்கடிக்கப் பட்டுச் சிங்கள அரசர்களின் அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்ட பொழுதிலும் தமிழர்களது செல்வாக்கு ஒழிந்துவிடவில்லை. தமிழர்களது எண்ணிக்கைப் பெருக்கமும் அவர்களது பொதுவான செல்வந்த நிலையும் படைத் துறையிலும் நிருவாகத் துறையிலும் அவர்கள் வகித்த செல்வாக்கான பதவிகளும் இதனைச் சாத்தியமற்றதாக்கி விட்டன.’ (Arasaratnam, S. 1964 :103) சோழர் ஆட்சி நடைபெற்றபோது தமிழர்கள் பெருளவுக்கு இந்நாட்டில் குடியேறினர். இவர்களில் படைவீரர்கள், வணிகர்கள், கலைஞர்கள், நிருவாகிகள், பிராமணர்கள் போன்ருேர் கணிசமான தொகையினராகக் காணப்பட்டனர். சோழர் காலம் தமிழகத்தில் அரசியல் வரலாற்றில் மட்டுமன்றி கலாச்சார வரலாற்றிலும் ஒரு முக்கிய காலகட்டமாக விளங்கியதால் அக்கலாச்சார வளர்ச்சியின் அம்சங்கள் பல முன் எப்போதுமில்லாத அளவுக்கு இந்நாட்டிற்குள் புகுவதற்கான வாய்ப்பை இவர்கள் ஆட்சி நல்கியதோடு அவை நிரந்தரமாக நீடித்து நிலைக்கவும் வழிசமைத்தது. சுருங்கக்கூறின் பல்லவர் காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட கலாச்சார மறுமலர்ச்சி முதிர்ச்சிகொண்ட காலமே சோழர் காலமாகும். இம்முதிர்ச்சியின் அச்சாணியாகக் கோயில் விளங்கியது. சோழர் காலத்தில் இக்கோயில் ஒரு நிறுவனமாகி, இந்து கலாச்சாரத்தின் பொக்கிஷமாக மேன்மை பெற்றது. இத்தகைய சிறப்புக்கள் நம்நாட்டையும் அடைந்த காலம்தான் சோழர் இங்கு ஆட்சி செய்த காலம் எனலாம். இதனுற்ருன் பொலநறுவைக் காலத்தின் சோழர் ஆட்சி இந்து மத வரலாற்றைப் பொறுத்தமட்டில் ஒரு மைல்கல்லாக அமைந்துவிடுகிறது எனலாம். (Sitrampalam, S. K. 1984)

சோழரால் மட்டுமன்றி இவர்களைக் கலைத்து அரசாட்சிசெய்த சிங்கள மன்னர்கள் ஏற்படுத்திய மணத்தொடர்புகளும் இந்து மதத்தின் செல்வாக்கை மேலோங்க வைத்தன. பொதுவாகச் சோழர் இங்கு ஆட்சி செய்த காலத்தில் அவர்களின் எதிரிகளாகிய பாண்டிய வம்சத்தவரோடு மணத்தொடர்புகளை ஏற்படுத்துவதில் சிங்கள அரச வம்சத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர். இதனுல் 11ஆம் நூற்ருண்டிலே ருேகணையில் பாண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சத்தவர்களாகிய விக்கிரம பாண்டியன், பராக்கிரம பாண்டியன் ஆகியோர் அரசாட்சி செய்ய முடிந்தது. சோழரிடமிருந்து அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றிய முதலாவது விஜயபாகுவின் சகோதரியாகிய மித்த ஒரு பாண்டிய இளவரசனை மணம் முடித்தாள். இவர்களது பிள்ளைகள் தான் மானபர்ணன், கீர்த்திசிறீமேகன், சிறீவல்லபன் ஆவர். பொலநறுவை அரசின் பெருமன்னனாகிய மகாபராக்கிரமபாகு மானபர்ணனின் மகனானதால் பாண்டியவம்ச வழித்தோன்றல் என்பதும் ஈண்டு மனதிற்கொள்ளற்பாலது. தமிழகத்தோடு மட்டுமன்றிக் கலிங்க நாட்டுடனும் சிங்கள மன்னர் நெருங்கிய மணத் தொடர்பை கி. பி. 10 ஆம் நூற்றாண்டிலிருந்து ஏற்படுத்தியிருந்தனர். இதனால் இந்துக்களாகிய கலிங்க வம்சத்தவரின் செல்வாக்கு சிங்கள அரண்மனையில் விதந்து காணப்பட்டது. முதலாவது விஜயபாகுவின் இரு அரசிகளான லீலாவதி, திரிலோகசுந்தரி ஆகியோரும் இந்திய வம்சத்தவரே. இவர்களில் கலிங்கத்திளவரசியாகிய திரிலோகசுந்தரி மிகவும் செல்வாக்குடன் விளங்கியவள். இவளது இந்து மத நடவடிக்கைகள் பௌத்த குருமாரையே சீற்றங்கொள்ள வைத்ததால் அவர்களது முறைப்பாட்டை ஏற்று விஜயபாகு "விகாரைகளின் அமைதியான வாழ்க்கையைக் குலைத்த தனது சொந்த இராணியையே தண்டிக்கும் முகமாக அவளின் வருமானங்களைப் பறிமுதல் செய்ததோடு அவளின் கழுத்தில் இரும்புச் சங்கிலியை மாட்டி நகரத்துக்குள் அவள் இழுத்துச் செல்லப்படுமாறு உத்தரவிட்டான். இதன் மூலம் அவன் பௌத்த சங்கத்தைச் சாந்தப்படுத்தியதோடு பௌத்த சங்கத்தின்மீது தான் கொண்டுள்ள பயபக்தியையும் உலகிற்கு எடுத்தியம்பினான்'' என சூளவம்சம் கூறுகிறது. (C. V. LX: 54 - 55) விஜயபாகுவின் பின்னர் ஆண்ட விக்கிரமபாகு II (கி. பி. *1112 – 1132*), கஜபாகு II (*1132 – 1153*) ஆகியோர் இந்துக்களாக விளங்கியதோடு கலிங்கரின் உதவியுடன்தான் அரசாட்சியும் செய்தனர். இவ்விருவரும் இந்துக்கள் என்ற காரணத்திற்காகச் சிங்கள அரசருக்கு நடைபெறும் பட்டாபிஷேக விழாக்கூட இவர்களுக்கு நடத்தப்படவில்லை. (Kiribamune. Srima. 1976) மகாபராக்கிரமபாகுவின் மனைவிகளில் ரூபாவதி கலிங்க இளவரசியாகும். லீலாவதி பாண்டிய இளவரசி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவளே பராக்கிரமபாகுவின் பட்டத்து மகிஷியாவாள். பராக்கிரமபாகுவின் சகோதரியின் மகனான இரண்டாவது விஜயபாகு தொடக்கம் மாகன்வரை (கி. பி. *1184 – 1215*) கிட்டத்தட்ட அரைநூற்றாண்டு காலம் பொலநறுவையில் பன்னிரண்டு அரசர்களும் இரு அரசிகளும் அரசாட்சி செய்தனர். இவர்களில் பதின்மர் கலிங்க வம்சத்தவராவர். ஒருவர் பாண்டியர். ஒருவர் மட்டுமே சிங்கள வம்சத்தவர். இதனால் இக்காலத்தைக் கலிங்கவம்சகாலம் என அழைப்பதும் உண்டு. எவ்வாறாயினும் கலிங்க வம்சத்தவர்கள் தாம் இந்துக்களாக இருந்து ஆட்சிசெய்தபோதும் பௌத்த மக்களின் அனுசரணையைப் பெறப் பலவாறு முயன்றனர். இத்தகையோரில் நிஸங்கமல்லன் (*1187-1196*) குறிப்பிடத் தக்கவன். இவனின் தந்தை பெயர் ஜெயகோபன். தாய் பெயர் பார்வதி. இந்துமதச் செல்வாக்கு அதிகரித்த இக்காலத்தில் அதை மறைப்பதற்கும், தான் பௌத்தர்களின் நண்பன் என்பதை வெளிக்காட்டவும் கல்வெட்டுக்களில் தனது கருத்துக்களை வெளியிடத் தவறவில்லை. உதாரணமாக பொலநறுவையில் கிடைத்த கல்பொத்த கல்வெட்டில் 'பௌத்தர்களல்லாத சோழர்கள், பாண்டியர்கள் பௌத்த சாசனத்தின் எதிரிகள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(E. Z. II: 98–123) எனக் கூறிப் பிறிதோரிடத்தில் 'பௌத்த மதத்திற்கே சொந்தமான ஈழநாட்டினைப் பரிபாலிக்க சோழ, கேரள மற்றும் ஏனைய பகுதிகளிலுமுள்ள பௌத்தர்களல்லாதவர்களைத் தெரியக்கூடாது என்றும் இவர்களோடு சேர்ந்து அழிவினை ஏற்படுத்துவோர் துரோகிகளே' (E .Z. II: 157–164) எனவும் விளிக்கிறான். இத்தகைய குறிப்புக்கள் பொலநறுவை யில் நிலவிய அரசியல் ஆதிக்கப் போட்டியையும் அதில் இந்துக்கள் பெற்ற முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதோடு இந்து மன்னர்கள் பௌத்தர்களது ஆதரவைப் பெற மேற்கொண்ட நடவடிக்கைகளையும் எடுத்தியம்புகின்றன.

மாகனது படைஎடுப்பும் (கி.பி.*1215–1255*) பொலநறுவையில் அவனது அரசாட்சியும் பொலநறுவை அரசின் இறுதிக் கட்டமாக அமைந்ததோடு அதனதும் பௌத்த மதத்தினதும் சிதைவுக்கும் வழிகோலியது. இவனது படைகளில் தமிழரும் கேரளரும் விதந்து காணப்பட்டனர். கலிங்க வம்சத் தவனாகிய இவன் வீரசைவசமயப் பிரிவைச் சார்ந்தவன் ஆகும். இவனது படைஎடுப்பு நிகழ்ந்த காலத்தில் இங்குள்ள நிலையை மினிப்பேயில் கிடைத்த கல்வெட்டும், சூளவம்சமும் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. இவனது படைஎடுப்புக்கு நான்கு ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட மினிப்பே கல்வெட்டு 'தமிழ் ஆக்கிரமிப்பாளர் முழுச் சமூக அமைப்பையும் சமய நிறுவனத்தையும் அழித்தனர்' எனச் கூறச் சூளவம்சம் (C.V.LXXX: *54–56*) 'ஈழத்து வாசிகளின் பல்வேறு தீயசெயல்களின் ஒட்டுமொத்தமான கூட்டின் விளைவாக ஈழத்தைப் பாதுகாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டியிருந்த தேவதைகள் அதனைச் செய்யத் தவறி விட்டனர். இதனால் பொய்யான மதத்தினைத் தழுவி இருந்த ஒருவன் (மாகன்) ஈழத்திற்கு வந்துசேர்ந்தான்' எனக் கூறுகிறது. இந்துவாகிய மாகனின் சமய நடவடிக்கைகளின் தாக்கத்தைப் பேராசிரியர் மலலசேகரா சற்று விரிவாக மிகைபட எடுத்தியம்பியுள்ளார். (Malalasekera, G. P. *1928 : 206*) அஃதாவது. 'அவனது ஈவிரக்கமற்ற கொள்ளைக்காரர் நாடு முழுவதிலும் சூறையாடுதலிலும், கற்பழித்தலிலும், சித்திரவதை செய்து இம்சைப்படுத்துவதிலும், கொலை செய்வதிலும் ஈடுபட்டனர். எளிமையான மஞ்சள் காவி உடைகூட இந்த மலபார் கூலிப்படையிலிருந்து பாது காப்பைப் பெறமுடியாதிருந்தது. மிகப் புனிதமான பௌத்த கோயில்களின் புனிதத்தன்மைகூடக் கெடுக்கப்பட்டு அழிக்கப்பட்டது. பௌத்த சமயம் படிப்படியாக அழிக்கப்பட்டமையையும், பௌத்த கோயில்கள் சூறையாடப் பட்டமையையும், பௌத்த பிக்குகள் வெளியேற்றப்பட்டமையையும், புனித மான எல்லாவற்றினதும் புனிதத்தன்மை கெடுக்கப்பட்டமையையும் மகா வம்சமும் ராஜரட்ணகாராவும் துயரத்தை ஊட்டக்கூடிய முறையில் மிக விரிவாக எடுத்துக் கூறுகின்றன. இவர்களின் கைகளுக்கு அகப்பட்ட நூல் களும் ஆவணங்களும் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. முழுத்தீவுமே தீப் பிடித்தெரியும் ஒரு வீட்டைப் போன்றோ அல்லது ஈமக்கிரியைகள் நடை பெறும் இருள் சூழ்ந்த ஒரு வீடு போன்றோ காட்சியளித்தது.'

எனவே அரசியல் ரீதியில் நோக்குகின்றபோது பொலநறுவைக் காலம் மூன்று காலகட்டங்களாக அமைகின்றது எனலாம். இதன் ஆரம்பகட்டம் சோழராட்சியுடன் தொடங்குகிறது. இக்காலத்தில் இந்து மதம் அரச மத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக விளங்க இந்து கலாச்சாரம் மேலோங்கியது. இரண்டாவது கட்டம் சுதேச மன்னர் காலமாகும். இதில்கூட இரு பகுதிகள் உண்டு. சிங்கள மன்னர் காலம் ஒரு பகுதி; கலிங்கவம்ச மன்னர் காலம் மற்றைய பகுதி ஆகும். சிங்கள மன்னர் காலத்தில் சோழர் விட்டுச்சென்ற இந்து நிறுவனங்கள் வளர்ச்சி கண்டன. இவர்களது மணத்தொடர்புகளும் பிறவும் இதற்கு உதவின. கலிங்கவம்ச காலம் மறுபடியும் இந்து மன்னரின் செல்வாக்கை முன்வைத்தது. இறுதிக்கட்டம்தான் மாகன் காலமாகும். சோழர்களைப் போலல்லாது மாகனின் நடவடிக்கைகள் பௌத்த மதத்தினைச் சிதைத்ததோடு இந்து மதத்தினது செல்வாக்கு மேலோங்கவும் வழி வகுத்தது.

இக்காலத்தில் வெறும் அரசியல் ஆதிக்கத்தால் மட்டும் இந்து மதம் மேலோங்கவில்லை. வணிகத்துறையில் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையே நிலவிய நெருங்கிய தொடர்பும் இந்து மத வளர்ச்சிக்கு வணிகர்களின் ஆதரவைப் பெற்றுத் தந்தது. கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து ஈழ — இந்திய வர்த்தகம் தமிழ் வணிகக் குழுக்களினது கையிலேதான் இருந்தது. ஈழத்தின் பல பகுதிகளிலும் வர்த்தக நடவடிக்கைகளுக்காகக் குடியேறிய இவ்வணிகக் குழுவினர் சுயாட்சி கொண்ட பட்டினங்களை அமைக்குமளவுக்குப் பலமும், அதிகாரமும், செல்வாக்கும் பெற்றிருந்தனர். உதாரணமாக பதவியாவில் இவர்கள் அமைத்த இத்தகைய பட்டினமொன்று 'ஐயம்பொழில்' பட்டினம் என அழைக்கப்பட்டது. (Veluppillai, A. 1972 : 20) இவ்வணிகக் குழுக்களில் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர், வீரவளஞ்சியர், நானாதேசிகள், நகரத்தார், வீரக்கொடியர் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். இவர்களது தமிழ்க் கல்வெட்டுக்கள் அநுராதபுரம், பொலநறுவை, பதவியா, புளியங்குளம், ஆனஉளுந்தாவை, வாஹல்கட, விஹாரேகின்ன இலக்கட்டுபெ போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. (இந்திரபாலா, கா. 1972 : 54-55). இத்தகைய வணிகக் குழுக்களது நடவடிக்கைகள் தென்னகம், ஈழம், தென்கிழக்காசியா போன்ற பிராந்தியங்களை உள்ளடக்கியிருந்தன. ஈழத்தில் தமது வர்த்தக நடவடிக்கைகளைப் பாதுகாக்க இராணுவப் பிரிவினரையும் தமது பொறுப்பில் வைத்திருந்தனர். காலகதியில் அரசர்கூட இவ்விராணுவப் பிரிவினரின் உதவியை நாடினர். இதனால் பொலநறுவைக் காலத்தில் வணிகரது மட்டுமன்றி, இராணுவப் பிரிவினரதும் சமய நடவடிக்கைகளும் இந்து மத வளர்ச்சிக்கு உதவின எனலாம். சோழராட்சிக் காலத்தில் ஈழத்தில் வேளைக்காரர், அகம்படியார், அணுக்கர் போன்ற இராணுவப் பிரிவினர் இயங்கினர். சோழராட்சி மறைந்தாலும்கூட சிங்கள மன்னராட்சியில் இவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பதை ஓரிரு உதாரணங்களால் விளக்கலாம். முதலாவது விஜயபாகு சோழ நாட்டின் மீது படைஎடுக்க முயற்சிகளை மேற்கொண்டபோது அவனது வேளைக்காரப் படையினர் கிளர்ச்சி செய்து அரசமாளிகையை எரித்துப் பொலநறுவை நகரின் சுற்றுடலைச் சூறையாடி, இப்படைஎடுப்புக்குப் பொறுப்பாக இருந்த இரு தளபதிகளையும் கொலை செய்தனர். விஜயபாகு மன்னன் கூட தனது உயிரைப் பாதுகாக்க ரேகணைக்குச் செல்ல வேண்டியிருந்தது. இத்தகைய கிளர்ச்சிக்குக் காரணம் தமிழ் இந்துக்களாகிய இவர்கள் தமது சகபாடிகள்மீது படைஎடுப்பதை விரும்பவில்லை என்பதே. இது மட்டுமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிச் சிங்கள அரசவம்சத்தின் ஆளுமைக்குரிய சின்னமாகிய தந்ததாதுக் கோயிலைப் பாதுகாக்கும் பணியைக்கூட இவர்கள் மேற்கொண்டிருந்த பொறுப்பொன்றே இவர்கள் அரசர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக விளங்கியதையும் இவர்களது செல்வாக்கையும் எடுத்தியம்புகின்றது. இவ்வாறு அரசியல், வணிக, இராணுவப் பிரிவினரின் பங்களிப்பில் வளர்ச்சி பெற்ற இந்து மதம் இக்கால நிர்வாகிகள், பிராமணர், கலைஞர்கள், மக்கள் ஆகியோரது ஆதரவு பெற்றும் வளர்ச்சியடைந்தது. இதனுல் முன்எப்போதுமில்லாத அளவுக்குப் பரந்த முறையில் வளர்ச்சி பெற்ற இந்து மதம் ஈழத்தில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பெற்றதோடு, பௌத்த மதத்தோடு பிணைந்து வளரவும் இக்காலம் வழி வகுத்தது எனலாம்.

முதலாவது ராஜராஜனுல் ஈழத்தின் வடபகுதி கைப்பற்றப்பட இவனது மகனுகிய முதலாவது ராஜேந்திரனுல் ஈழம் முழுவதும் (கி. பி. 1017) கைப்பற்றப்பட்டது. இவர்கள் ஆட்சி கி. பி. 1070 ஆம் ஆண்டு வரை நீடித்தது. ஈழம் சோழப் பேரரசின் ஒன்பதாவது, மாகாணமாக விளங்கி 'மும்முடிச் சோழமண்டலம்' என அழைக்கப்பட்டது. இதை நிருவகிக்கச் சோழ நாட்டிலிருந்து இராசப் பிரதிநிதி ஒருவன் அனுப்பப் பட்டான். இவனை 'சோழஇலங்கேஸ்வரன்' என ஈழக் கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. பொலநறுவைக்குச் சோழர் சூட்டிய பெயர் ஜனநாத மங்கலமாகும். இது ராஜராஜனின் பட்டப் பெயர்களிலொன்றுக விளங்கிய 'ஜனநாத' என்பதை நினைவூட்டுகின்றது. புலஸ்தி நகரம் என்பதும் இதன் இன்னெரு பெயராகும். இந்துமத முனியின் இத்தகைய பெயரொன்றே இந்துமதம் இங்கு பெற்ற செல்வாக்கினை எடுத்தியம்புகின்றது. பொலநறுவையில் காணப்படும் மகாபராக்கிரமபாகுவின் சிலை என வருணிக்கப்படும் சிலைகூட அகத்தியரதே எனவும் இனங்காணப்பட்டுள்ளது. (Rutnam, James, T. 1979) சோழராட்சி பற்றிச் சூளவம்சம் மிகச்சுருக்கமான தகவல்களைத் தருவதோடு ஒருதலைப்பட்சமான தகவல்களையும் தந்துள்ளது என்பதனை ஈழத்திலும் தமிழகத்திலும் கிடைத்துள்ள சோழரது கல்வெட்டுக்களும் பிற தொல்லியற் சான்றுகளும் எடுத்தியம்புகின்றன. இவர்களது ஆட்சிபற்றிப் பிரஸ்தாபிக்கையில் சூளவம்சம்,

> ''முழு ஈழத்திலும் பௌத்த சங்கத்தின் முப்பிரிவுகளுக்கும் சொந்தமான புனிதச் சின்ன அறைகளை இவர்கள் உடைத்துச் சூறையாடி பொன் விக்கிரகங்கள் போன்ற பெறுமதிமிக்க புனிதப் பொருட்களை எடுத்துச் சென்றனர். இங்குமங்கும் அவர்கள் பௌத்த தேவாலயங்களைத் தரைமட்டமாக்கியதோடு இரத்தத்தை உறிஞ்சும் யக்ஷர்கள் போல் ஈழத்தின் பொக்கிஷங்கள் யாவற்றையும் சூறையாடி அபகரித்துச் சென்றனர்'' (C. V. L. V. : 20 – 22) எனக் கூறுகின்றது.

அதிஷ்டவசமாகத் தமிழகத்திலும் ஈழத்திலும் கிடைத்துள்ள சோழரின் கல்வெட்டுக்கள் சோழராட்சியின் பல்வேறு அம்சங்கள்பற்றிச் சூளவம்சத்தைவிடப் பல்வகைகளிலும் விரிவான வேறுபாடான தகவல்களைத் தருகின்றன. நம்நாட்டில் முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன், அதிராஜேந்திரன் ஆகியோரது கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை முறையே யாழ்ப்பாணக்கோட்டை, ஊர்காவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுறை, மாதோட்டம், பதவியா, பொலநறுவை, மெடிறிகிரியா, மானுங் கேணி, நிலாவெளி, திரிகோணமலை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்துள்ள முதலாவது ராஜேந்திரனது கல்வெட்டு முக்கியம் வாய்ந்தது. (Indrapala, K. 1971:52–58) இக்கல்வெட்டுப் பூரணமான நிலையில் கிடைக்கப் பெருவிட்டாலும்கூட இக்கல்வெட்டில் தானத்தை அளித்தவராக சாத்தன் காணப்படுகிறுன். நல்லூரிலமைந்த இந்துக் கோயிலுக்கு இவன் அளித்த மிருகங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இம்மிருகங்களுக்கு அடைமொழியாகச் 'சாவாமூவா' என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளது. பொதுவாகத் தென்னிந்திய ஈழக் கல்வெட்டுக்களில் இவ்வடை மொழி கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆடு, மாடு, எருமை போன்ற மிருகங்களுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளதை நோக்கும்போது இச்சந்தர்ப்பத் திலும் இம்மிருகங்களே இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டன என்று கொள்ள லாம். இம்மிருகங்களில் இனவிருத்தியில் தொடர்ந்து இருப்பதற்காகப் பல் வகைப் பருவநிலையில் இவை அளிக்கப்பட்டதையும் 'சாவாமூவா' என்ற அடைமொழி எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் இவற்றிடமிருந்து பெறப் பட்ட நெய்யே கோயில்களில் விளக்கெரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. எவ்வாருயினும் இக்கல்வெட்டில் நல்லூர் எனவரும் குறிப்பும், இக்கல் வெட்டுக் கிடைத்த இடமாகிய கோட்டையும் பல வரலாற்று நிகழ்ச்சிகளை நம் மனக்கண்முன்னே நிறுத்துகின்றன எனலாம். போத்துக்கேயர் யாழ்ப் பாண அரசின் ராசதானியாக விளங்கிய நல்லூரிலுள்ள அரசமாளிகை, கோயில்கள் ஆகியனவற்றைச் சிதைத்த பின்னர் யாழ்ப்பாணக் கோட்டை யைக் கட்டினர் என்பதைப் போத்துக்கேய வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக் காட்டியதை நோக்கும்போது யாழ்ப்பாண அரசு நல்லூரில் இராசதானி அமைக்க முன்பே நல்லூரில் ஒரு இந்து ஆலயம் இருந்தது என்பதும் இவ் வாலயம் சோழர் பாணியிலமைந்திருந்தது என்பதும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகவே காணப்படுகின்றது. துர்அதிஷ்டவசமாக இது பற்றிய விபரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

நல்லூரைப் போன்று மேலும் பல இடங்களிலும் இந்துக் கோயில் களைச் சோழர் அமைத்திருக்கலாம் என ஊகிக்கவும் இடமுண்டு. பொது வாக ஈழத்தில் நிலைத்திருந்த சோழர் கடற்படை திரிகோணமலையில் மட்டுமே தரித்திருந்தது என்ற கருத்து நிலவுகிறது. நல்லூர்ச் சான்றை நோக்கும்போதும் வடபகுதியிலும் சோழராதிக்கம் நிச்சயமாக நிலைத் திருந்தது புலனுகின்றது. முதலாவது பராக்கிரமபாகுவினது நயினுதீவுக் கல் வெட்டில் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற வர்த்தகம்பற்றிய குறிப்பு வருவதும், இம்மன்னனது கடற்படை சோழருக்கெதிராக ஊர்காவற்றுறை, மட்டுவில், வலிகாமம் போன்ற இடங்களில் நிலைகொண்டிருந்தது பற்றி யும், சமகால தமிழகச் சோழக் கல்வெட்டுக்கள் எடுத்துரைப்பதை நோக்கும் போதும் பாக்குநீரிணையைத் தமது கடலேரியாக ஆக்க விரும்பிய சோழர் அதுவும் மாதோட்டம், திரிகோணமலை ஆகிய துறைமுகப் பிராந்தியங் களில் செல்வாக்குப் பெற்ற இவர்கள் நிச்சயமாக வடபகுதித் துறைமுகங் களிலும் தமது கடல் ஆதிக்கத்தை நிலைநாட்டியிருக்கலாம். இதனுல் காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை போன்ற துறைமுகங்கள் மட்டுமன்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குக் கரையிலும் இவர்களது செல்வாக்கு நிலைத்திருக்கலாம். ஆனால் இவைபற்றி விரிவான சான்றுகள் எமக்குக் கிடைக்கவில்லை. விரிவான சான்றுகள் கிடைக்காவிட்டாலும்கூட இங்கு கிடைத்துள்ள நாணயங்கள், சோழரை நினைவூட்டும். செம்பியன்பற்று, நல்லூர், மாவிட்டபுரத்தி லுள்ள 'வளவர்கோன்பள்ளம்', நவிண்டிலிலுள்ள 'கங்கைகொண்டான்' போன்ற இடப்பெயர்கள் சோழர் இங்கு விட்டுச்சென்ற எச்சங்களாகத் திகழ்கின்றன. கி. பி. 12ஆம் நூற்றாண்டில் சோழ மன்னனாகிய முதலாவது குலோத்துங்கனது சேனாதிபதியாகிய கருணாகரத் தொண்டமான் ஈழத்தை வென்றதுபற்றிக் கலிங்கத்துப் பரணியில் வரும் குறிப்பும், கரணவாய், வெள்ளப்பரவை ஆகிய இடங்களிலமைந்த உப்பளங்களிலிருந்து உப்பை ஏற்றிச் செல்வதற்காக இவனால் வெட்டப்பட்ட ஆறே தொண்டமான் ஆறு என்ற செய்தியும், இவனுடன் இணுவிலிலுள்ள கருணாகரப்பிள்ளை யார் இணைத்துக் கூறப்படுவதும் இச்சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராயப்பட வேண்டிய செய்திகளாக அமைகின்றன.

வன்னியர்பற்றிய குறிப்பு தமிழகத்தின் சோழக் கல்வெட்டுக்களில் கி.பி. **11**ஆம் நூற்றாண்டிலேதான் காணப்படுவதோடு, இராணுவக் கடமையிலீடுபட்ட இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களே வன்னிமைகள் என அழைக்கப்பட்டதை நோக்கும்போதும் சோழராட்சியில் இவர்கள் ஈழத்தின் வடமேற்கு, வடமத்திய, வட, கிழக்குப் பகுதிகளில் வந்து குடியேறியிருக்கலாமெனக் கொள்ளலாம். (Indrapala, K. 1970) வன்னி நாட்டில் சிறந்து விளங்கும் ஆலயங்களான உருத்திரபுரம் சிவன் கோயில், வவுனிக்குளச் சிவன் கோயில், ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் போன்ற தலங்கள் இக்காலத்திலே சிறப்படைந்திருக்கலாம். இவ்வாறேதான் வற்றாப்பளையிலுள்ள அம்மன் ஆலயமும் முக்கியம் பெற்றிருக்கலாம் அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குளாய்க் குடாவின் மேற்குப் பக்கமாக உள்ள கந்தசுவாமிமலை, குருந்தனூர் ஆகிய இடங்களிலுள்ள பொலநறுவைராச்சிய காலத்தைச் சேர்ந்த கோயில்கள்கூட சோழர் காலத்தில் தோன்றியிருக்கலாம்.

எவ்வாறாயினும் சோழர் காலத்திலமைக்கப்பட்ட ஐயந்திரிபற்ற சான்றுகள் அடிப்படையில் அமைந்த கோயில்களாக மாதோட்டத்தி லுள்ள 'ராஜராஜேஸ்வரம்', 'திருவிராமேஸ்வரம்' ஆகியவை விளங்குகின்றன. மாதோட்டத்தில் அமைந்திருந்த திருக்கேதீஸ்வரத்தைப்பற்றி அப்பரும் சுந்தரரும் பாடியுள்ளனர். இவர்கள் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவர்கள். சோழர்கள் இவர்கள் பாடிய திருக்கோயிலைத்தான் புனருத்தாரணம் செய்தார்களா அல்லது புதிய கோயில்களைக் கட்டினார்களா என்பது தெரியவில்லை. என்றாலும் ஊர்காவற்றுறைக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர் கட்டுவித்த கோயிலின் கல்லாலான கதவு நிலையில் எழுதப்பட்ட கல்வெட்டொன்றில் மாதோட்டத்தில் சோழத் தளபதியாகிய ஜெயங்கொண்ட மூவேந்தவேளாளர் குறிக்கப்படுவதால், இவர் இங்குள்ள கோயிலொன்றுக்குத் தானம் வழங்கினார் எனக் கொள்ளலாம். இத்தகைய சான்று சோழர் இப்பகுதியில் கட்டுவித்த கோயில்கள் அழிந்தாலும் அவற்றின் எச்சமாக இருப்பது நோக்கற்பாலது. (Indrapala, K. 1971 : 10).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழிக்குமரனால் அமைக்கப்பட்ட இராஜராஜேஸ்வரம் கல்வெட்டில், 'ராஜராஜஸ்வரத்து மஹாதேவன் கோயில்' என அழைக்கப்படுகிறது. இக்கோயிலுக்குச் சோழ நிர்வாகத்தில் பங்குகொண்ட இத்தாழிக்குமரன் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களை நோக்கும்போது இவ்வதிகாரிகள் இவ்வாறு அரசாங்க நிலங்களைக் கோயில்களுக்கும் தானமாகக் கொடுக்கவும், அவற்றை ஆதரிக்கவும் அனுமதிக்கப்பட்டனர் என்பது புலனாகின்றது. (Pathmanathan, S. 1976 : 59 - 70) இவன் கொடுத்த நிலம் ராஜராஜத் தெருவுக்குக் கிழக்கேயும் கம்மாளர் இருக்கைக்குத் தெற்கேயும் அமைந்திருந்தது. நிலங்கள் மட்டுமன்றி ஏனைய அரசாங்க வருமானங்களும் இக்கோயிலுக்கு அளிக்கப் பட்டமையும் இவற்றின்மூலம் வைகாசி விசாகத்தில் விழா எடுக்கப்படல் வேண்டுமென்ற இவனது விருப்பமும் பின்வரும் அடிகளால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

அஃதாவது,

"...... இவ்வூரில் நெய்யும் தறிகளால் கூடின முதலும் வட்டத்தால் கூடின முதலும் பாதை படவுகளால் கூடின முதலுங்கொண்டு திருதிருத்தியாமம் வைய்யாசி விசாகம் ஏழுநாளும் விழா எடுத்துத் தீர்த்தம் ஆட்டுவிப்பதாகவும் இது மட்டுமன்றி இங்குள்ள ஆண்டவனுக்கு நைவேத்தியம் வைப்பதற்கு ஒருபொழுதுக்கு இருநாழியாக எல்லாமாகத் தினம் ஆறு நாழி அரிசியும், இங்கு தரிசிக்கும் அந்தணர்களுக்குத் தினம் எட்டு நாழி அரிசியும் கொடுப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டதோடு இங்குள்ள மடத்திலும் அன்னதானத்திற்கு வேண்டிய ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன. (Velup pillai, A. 1972 : 42 – 55)

அடுத்து வருவதுதான் 'திருவிராமேஸ்வரமுடையான் மகாதேவன் கோயில்' என அழைக்கப்படும் திருவிராமேஸ்வரமாகும். இங்கு கிடைத்துள்ள முதலாவது ராஜேந்திரன் காலக் கல்வெட்டொன்று இக்கோயிலில் சந்தி விளக்கு — அஃதாவது மாலைநேர விளக்கெரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள்பற்றிக் கூறுகின்றது. இவ்விளக்கை எரிப்பதற்கு அரசனது பெருந்தானத்தைச் சேர்ந்த பணிமகன் ஒருவன் நான்கு பொற்காசுகளை முதலிட்டான். இந்நான்கில் இரண்டு பொற்காசுகள் இங்கு வாணிப முயற்சிகளிலீடுபட்டிருந்த சக்கரப்பாடியாரிடமும், தலா ஒவ்வொரு காசும் வெற்றிலை வணிகர், வாழைக்காய் வணிகரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்நான்கு பொற்காசுகளிடமிருந்து பெறப்பட்ட வருமானத்திலே இவ்விளக்கு எரிக்கப்பட்டது. எனவே மாதோட்டக் கோயில் அமைப்புப்பற்றி நாம் விரிவாக அறிந்துகொள்ள முடியாவிட்டாலும் கூட இக்கோயில்களில் நிலவிய அன்றாட ஒழுங்குகள்பற்றியும் இவற்றைக் கவனிப்பதில் அரச ஊழியர் கொண்டிருந்த பங்கு பற்றியும் அறியமுடிகிறது. சோழரால் மாதோட்டம் 'ராஜராஜபுரம்' எனப் பெயரிடப்பட்டதும் ஈண்டு நினைவுகூரற்பாலது.

அநுராதபுரத்தில்கூட மூதலாவது ராஜராஜன் காலத்தில் இந்துக் கோயிலும் பிராமணக் குடியிருப்பொன்றும் இயங்கியது என்பதற்கு மறைமுகமாகச் சில சான்றுகள் கிடைத்துள்ளன. இத்தகைய சான்றாக அமைவதுதான் மிகுந்தலையிலிருந்து மூன்று மைலுக்கு அப்பாலுள்ள மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருண்டிகமவில் கிடைத்துள்ள இரண்டாவது கஜபாகு காலக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் இவன் காலத்தில் நிலவிய பிராமணக் குடியிருப்பு 'ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்' என அழைக்கப்பட்டதும் தெரிகிறது. (Indrapala, K. 1971: 6–9) இவர்களுக்கு மானியமாகக் கிடைத்த காணி ஒன்றை ஏதோ ஒரு காரணத்தால் இவர்கள் இழக்க இக்காணிக்கு உரிமையாளராக வல்லபர் என்பவன் காணப்பட, இவனிடமிருந்து இதனைப் பெற்றுத் திரும்பவும் இப்பிராமணக் குடியேற்றத்துக்கு அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டுக் கூறுகிறது. இருந்தும் இக்கல்வெட்டின் முக்கியத்துவம் யாதெனில், இதில் வரும் 'சாளமேக', 'ஜயங்கொண்ட' ஆகிய பெயர்களே. சாளமேக இரண்டாவது கஜபாகுவின் முன்னேனான ஜெயபாகுவின் பட்டப் பெயர்களில் ஒன்ருகும். ஆனல் 'ஜெயங்கொண்ட' முதலாவது ராஜராஜனின் பட்டப் பெயராகும். எனவே இப்பிராமணக் குடியேற்றத்தை முதலாவது ராஜராஜன் 'ஜயங்கொண்ட சதுர்வேதி மங்கலம்' என்ற பெயருடன் அமைக்க இது கஜபாகு காலம்வரை தொடர்ந்திருக்க இந்துவாக விளங்கிய கஜபாகு பட்டாபிஷேகம் பெருததனல் முன்னேனான ஜெயபாகுவின் பட்டப் பெயரான 'சாளமேக' என்பதனையும் சேர்த்து 'ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்' என இதற்குப் பெயரிட்டான் எனக் கொள்ளுவது பொருத்தமாகும். அத்துடன் ராஜராஜனல் அமைக்கப்பட்ட இப்பிராமணக் குடியேற்றத்துடன் இந்துக் கோயில் ஒன்றும் இவன் காலத்தில் நிச்சயமாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில் பிராமணர்கள் பொதுவாகவே கோயிலை அண்டியே வாழ்ந்தனர். ராஜராஜன் கந்தளாயில் ராஜராஜேஸ்வரம் அமைத்து 'ராஜராஜ சதுர்வேதி மங்கலம்' என்ற பிராமணக் குடியேற்றத்தை ஏற்படுத்தியதை உற்றுநோக்கும்போது இங்கும் 'ஜயங்கொண்டேஸ்வரம்' என்ற ஒரு கோயிலையும் அமைத்து அதனைச் சேவிக்க ஜயங்கொண்ட சதுர்வேதி மங்கலம்' என்றெரு பிராமணக் குடியேற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தான் எனக்கொள்ளல் ஏற்புடைத்தான கருத்தாக அமைகின்றது.

சோழரது சமய நடவடிக்கைகள் விதந்து காணப்படும் இடமாகப் பொலநறுவை அமைகின்றது. நாட்டின் ஏனைய பாகங்களில் அவர்கள் அமைத்த கோயில்கள் அழிய, அவைபற்றிய சான்றுகளைக் கல்வெட்டுக்களின் மூலமாகவே அறியவேண்டிய நிலை காணப்படுகின்றது. பொலநறுவையில் இவர்கள் அமைத்த கோயில்கள் சில அழியாது இன்றும் அவர்கள் சமய நடவடிக்கைகளைப் பறைசாற்றி நிற்பதோடு காலத்தால் மிகப்பழைய, அழியாத கோயில்களாகவும் விளங்குகின்றன. அத்துடன் இவற்றுள் காணப்படும் கல்வெட்டுச் சான்றுகள் இக்கோயில்களது நிர்வாகம்பற்றியும் விரிவாகப் பேசுகின்றன. பொலநறுவையில் மாத்திரம் பத்துச் சிவன் கோயில்களும், ஐந்து விஷ்ணு கோயில்களும், காளி கோயில் ஒன்றும் உள்ளன. (இந்திரபாலா, கா. 1970: 13) இவற்றுள் சிவன் கோயில்களில் 2ஆம், 5ஆம், 6ஆம் சிவன் கோயில்கள் கட்டிடப் பாணியமைப்பைப் பொறுத்துச் சோழர் காலத்தவை என இனங்காணப்பட்டுள்ளன. இவற்றுள் காலத்தால் முந்தியது இரண்டாவது சிவதேவாலயமாகும். இங்கே கிடைத்துள்ள கல்வெட்டுச் சான்றின்மூலமாக இஃது முதலாவது ராஜராஜனின் பட்டமகிஷியாகிய வானவன் மாதேவியின் பெயரால் 'வானவன் மாதேவியீஸ்வரம்' என அழைக்கப்பட்டது புலனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. (Bell, H. C. P. 1906: 17-21). இக்கோயில் கர்ப்பகிருகம் (20அடி 6அங். சதுரம்), அந்தராளம் (15அடி × 6அடி × 10அடி), அர்த்த மண்டபம் (15அடி 6அங். × 10அடி)), மண்டபம் (30அடி × 23அடி) என்ற அங்கங்களை உடையதாக அமைந்துள்ளது. இக்கோயில்பற்றிக் கூறவந்த பரணவித்தானா அவர்கள் 'திருப்திகரமான முறையில் பாதுகாக்கப்பட்டுள்ள இக்கோயில் ஒன்றுதான் முழுக்கமுழுக்கக் கருங்கல்லினால் கட்டப்பட்ட கட்டிடமெனக் கூறி, பொலநறுவையில் இன்று காணப்படும் கட்டிடங்களில் காலத்தால் பழையது மட்டுமன்றி ஈழத்திலுள்ள திராவிடக் கட்டிடக் கலையின் சிறப்புக்குச் சிறந்த உரைகல்லாகவும் இது அமைந்துள்ள தெனக் கூறியுள்ளார். (Paranavitane, S. 1973 : 79) இக்கோயிலை அண்டி மூன்று சிறுகோயில்களும் காணப்படுகின்றன. இவற்றுள் இரண்டு கணேச, முருகன் கோயில்கள் என இனங்காணப்பட்டுள்ளன. (Bell, H. C. P. 1906 : 21) இவற்றைவிட இக்கோயிலுடன் இரு சிறிய விஷ்ணு கோயில்களும் உள. இவை முறையே 'பள்ளிகொண்டான்', 'அழகிய மணவாளர்' என அழைக்கப்பட்டமையும் கல்வெட்டுகளின்மூலம் தெரியவருகிறது. (Bell, H. C. P. 1906 : 22)

ஐந்தாவது சிவதேவாலயம் ஒரு பள்ளிப்படைக் கோயிலாகக் காணப்படுகின்றது. மன்னர்கள் அல்லது சமயப் பெரியார்கள் இறந்தபின் அவர்களை அடக்கஞ் செய்து அவ்விடத்திலே எழுப்பப்பட்ட கோயில்களே பள்ளிப்படைக் கோயில்களாகும். இவ்வாறு பள்ளிப்படைக் கோயில்களை அமைக்கும் வழக்கம் பாண்டிய, சோழ வம்சங்களிடையே காணப்பட்டது. (சிறீனிவாசன். 1968 : 3-9) ஈழத்திலும் இவ்வழக்கம் நிலவியதை இக்கோயிலின் மகாமண்டபத்தில் எட்டுப் பானைகளில் நிரப்பிக் காணப்பட்ட எலும்புகள் எடுத்தியம்புகின்றன. இக்கோயிலின் அம்சங்களாகக் கர்ப்பகிருகம் (21 அடி சதுரம்), அந்தராளம் (7 அடி × 9 அடி), அர்த்தமண்டபம் (9 அடி 3அங். × 8 அடி 9அங்.) ஆகியவற்றினை விட மூன்று மண்டபங்களும் (25 அடி × 23 அடி; 24அடி × 23அடி; 75 அடி 6 அங். × 33 அடி 9 அங்.) காணப்படுகின்றன. இறுதியாக உள்ள பெரிய மண்டபத்தில் நாற்பது தூண்களுமிருந்தன. (Bell, H. C. P. 1906 : 5) இக்கோயிற் பிரகாரத்தில் ஐந்து சிறிய கோயில்களும் உள. இவற்றுள் இரண்டை அவற்றுள் கண்டெடுக்கப்பட்ட சிலைகளைக் கொண்டு பெல் அவர்கள் கணேசர், சப்தமாத்திரிகர் கோயில்கள் என இனங்கண்டுள்ளார். ஆறுவது சிவதேவாலயம் பொதுவாக ஐந்தாவது சிவதேவாலயத்தை ஒத்துக்காணப்பட்டாலும் கூட இங்கே கர்ப்பகிருகம் (8அடி சதுரம்), அந்தராளம் (4அடி 8அங். × 7அடி 6அங்), அர்த்தமண்டபம் (9அடி 2அங். × 7அடி 6அங்.) ஆகியவற்றோடு முகமண்டபமாக (20அடி 6அங். × 14அடி 9அங்.) ஒன்றே காணப்படுகிறது.

இக்கோயில்களைவிட இவற்றுக்கு அருகே மண்ணிலே புதைத்து வைத்து அகழ்வாய்வின்மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலச் சிற்பங்களே ஈழத்தில் சோழர் காலத்தின் கலைவளர்ச்சிக்குச் சிறந்த சான்றுகளாக அமைகின்றன. முன் எப்போதுமில்லாத அளவில் எண்ணிக்கையிலும், வகையிலும், தரத்திலும் சிறந்து காணப்படும் இவை தமிழகத்தில் சோழரின் சிற்பக்கலைக்கு எவ்வாறு அங்கு கிடைத்துள்ள வெண்கலச் சிலைகள் சிறந்த உரைகல்லாக விளங்குகின்றனவோ அவ்வாறே ஈழத்துச் சிலைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு இக்கலை அவர்கள் காலத்தில் மேன்மை பெற்றிருந்ததை விளக்கு கின்றன. வெறும் கலை அம்சத்தில் மட்டும் இவை முக்கியத்துவம் பெறு கின்றன என்றும் கூறிவிட முடியாது. அக்கால சமய வளர்ச்சியின் பல் வகை அம்சங்களையும் இவை சித்தரிப்பனவாகவும் உள. வெண்கலச் சிலை களில் சிவன், பார்வதி, முருகன், கணேசன், விஷ்ணு, பிரமா, சூரியன், நந்தி, நாயன்மார், காரைக்காலம்மையார், சிவலிங்கம் ஆகியவை குறிப் பிடத்தக்கவை. இவற்றுள் சிவன் பல்வகை மூர்த்தங்களில் காணப்படு கிறான். நடராஜ மூர்த்தம் சிறப்பாக அமைந்துள்ளது. இதைவிட சோமாஸ் கந்த மூர்த்தம், படுகவைரவ மூர்த்தம், சுகாசன மூர்த்தம் ஆகிய நிலைகளி லும் சிவன் சிலைகள் உள. விஷ்ணுகூட போகஸ்தான மூர்த்தத்தில் காணப் படுகிறார். அம்மன் விக்கிரகங்களில் பார்வதி மூர்த்தத்தைவிட, சரஸ்வதி, லட்சுமி ஆகியோரது சிலைகளும் உள. நாயன்மார்களுடன் காரைக்கால் அம்மையார் பேயுருவாகி இறைவன் புகழ்பாடும் நிலையிலுள்ள சிலை மிக மிகத் தத்ரூபமாக அமைந்துள்ளது. மாம்பழத்தைக் கையில் வைத்திருக்கும் கணேசர் சிலை முக்கியமானது. பொதுவாக மோதகமே கணேசருடைய சிலைகளில் காணப்படுவது வழக்கம். இம்மாம்பழம் சிவன் கணேசருக்கு மாம்பழம் ஈந்த கதையைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. இவ்வெண் கலச் சிலைகளைவிட கற்சிற்பங்களும் சிறப்பாக இக்காலத்துச் சோழர் பாணி யில் கிடைத்துள்ளன. இவற்றுள் சூரியன், அக்கினி, பிரமா, சிவலிங்கம், சப்தமாத்திரிகர்கள், மஹாகாளி, மஹிஷாசுரமர்த்தினி, விஷ்ணு, பார்வதி, கணேசர், முருகன் ஆகியோரது கற்சிலைகள் சிறப்பு வாய்ந்தவை. பொது வாக இங்கு கிடைத்துள்ள வெண்கலச் சிலைகள் நம் நாட்டில் உருவாக்கப் பட்டனவா அன்றி இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனவா என்ற விடயத்தில் அறிஞர் மத்தியில் ஒருமித்த கருத்து நிலவவில்லை. இற்றைக்கு முக்கால் நூற்றுண்டுகட்கு முன்னதாக இவைபற்றி ஆராய்ந்த பெல் என்ற அகழ்வாராய்ச்சியாளர் இவை இந்தியாவில் இருந்தே இறக்கு மதி செய்யப்பட்டன எனக் கருதினர். (Bell, H. C. P. 1908 : 17 - 18) ஆனல் பரணவித்தானவோ எனில் சோழராட்சியால் சிங்கள அரசவம்சமும் பிரபுத்துவ வர்க்கமும் அழிந்ததால் சிங்களக் கலைஞர்கள் போஷிப்பாரற்ற நிலையில் காணப்பட்டனர் எனக் கூறி இதற்குச் சான்முகச் சோழராட்சி யில் எவ்வித பௌத்த கட்டிடங்களுமே கட்டப்பட்டவில்லை எனவும் காட்டி, இதனல் இச்சிலைகளை உள்ளூர் கலைஞர்கள் வடித்தெடுத்திருக்க முடியாது எனக் காட்டி, இந்தியாவிலிருந்தே இவை கொண்டுவரப்பட்டன எனக் கூறியுள்ளார். (Paranavitane, S. 1973 : 79) ஆனல் கொடகம்புறே என்ற இன்னெரு அறிஞர் இச்சிலைகளை ஈழத்திலுள்ள உள்ளூர்க் கலைஞர் களே வடித்தனர் என அபிப்பிராயப்படுகிருர். (Godakumbura, G. C. 1961) இச்சந்தர்ப்பத்தில் இவ்வெண்கலச் சிலைகள் பற்றி கலாவிற்பன்னராகிய சிவராமமூர்த்தி அவர்களது கருத்து மனதிற் கொள்ளற்பாலது. அவர் 'ஈழத்துச் சோழர் காலச் செப்புத் திருமேனிகளில் சோழர் காலக் கலை யின் செல்வாக்கு இருந்தாலும் கூட இவற்றுள் உள்ளூர்க் கலைஞர்களது முத்திரை நன்கு பதிந்து காணப்படுகிறது' எனக் கூறி இத்தகைய தனித்து வத்திற்கு ஈழத்துக் கலைஞர்களது பங்களிப்பே காரணமெனவும் அபிப் பிராயப்படுகிருர். இறுதியாக இவர் 'அகழ்வாராய்ச்சியின்மூலமோ கண்டு பிடிப்புக்களின்மூலமோ கிடைக்கப்பெற்ற சிலைகளின் தொகையைவிடச் சிறப்புத் தன்மையில் நடராஜ வடிவ அமைப்பில் ஈழத்தின் பங்களிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோங்கி நிற்கின்றது' எனக் கூறியுள்ளார். (Sivaramamurti, C. 1974: 372-373) அறிஞர்கள் எவ்வாறு அபிப்பிராயப்பட்டாலும்கூட ஒன்று மட்டும் தெளிவு. அஃதாவது தென் ஆசியக் கலை மதச் சார்புடையது. இதற்கு இந்து மதம் விதிவிலக்கானதல்ல. இந்து மதக் கலைஞர்கள் சிற்ப சாஸ்திரத் தேர்ச்சியும், மத நடைமுறைகள்பற்றிய பாண்டித்தியமும் உடையவர்கள். இதனால் ஆரம்பத்தில் சோழக் கலைஞர்கள் ஈழத்தின் பிரதான பட்டினங்களில் கலைகளை வளர்க்க, இவர்களுடன் உள்ளூர்க் கலைஞர்களும் சேர்ந்து செயல்பட்டனர். இதனாற்றான் இச்சிலைகளில் சோழ அம்சங்களும் உள்ளூர்த் தனித்தன்மையும் காணப்படுகிறது. நிச்சயமாகச் சோழர் வருகைக்கு முன்னரே உள்ளூரில் வெண்கலச் சிலைகளை வடிக்கும் ஆற்றல் படைத்த கலைஞர்கள் இருந்தனர். இவர்கள் கலையில் சோழச் செல்வாக்கு இருந்தாலும்கூட உள்ளூர் முத்திரையும் காணப்பட்டது எனலாம். சோழரின் திராவிடக் கலையின் செல்வாக்கு பொலநறுவைக் கட்டிடக் கலையில் மிகவும் ஆழமானதாகப் பதிந்தும் உளது. இதுபற்றிப் பிறிதோரிடத்தில் நோக்குவோம்.

பொலநறுவையிலுள்ள வானவன் மாதேவீஸ்வரத்தில் கிடைத்துள்ள கல்வெட்டின்மூலம் சோழர் காலக் கோயில்களில் அன்றாட கடமைகளிலும், நிர்வாகத்திலும் ஈடுபட்டிருந்தோர்பற்றிய விபரம் காணப்படுகிறது. இக் கல்வெட்டுக்கு உரியவனாகச் சோழ அரச நிர்வாகத்தில் உயர்பதவி வகித்த பல்லவராயன் காணப்படுகிறான். இவன் இக்கோயிலுக்கு அளித்த விளக்கொன்றுபற்றியும், இவ்விளக்கை நித்தியம் எரிப்பதற்கு ஐந்து பொற்காசை வைப்பீடு செய்ததையும் இது கூறுகிறது. இத்தகைய கைங்கரியத்தைத் தவறாது கண்காணிப்பவர்களாகப் பதிபாத மூலப்பாடுடை பஞ்சாச்சாரியர், தேவகர்மிகள், கிரமவித்தன், சிவபிராமணர், பன்மகேஸ்வரர், பரிசாரகர், தேவரடியார் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (குணசிங்கம், செ. 1978/79) இத்தகையோர் தமிழகத்திலும் கோயில் நடவடிக்கைகளில் முக்கிய பங்குகொண்டிருந்ததால் ஈழத்திலும் சோழர் காலத்தில் அந்நடைமுறைகளே வழக்கிலிருந்தன என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

கல்வெட்டுச் சான்றுகள் பொலநறுவை மாவட்டத்திலுள்ள அத்தகட, மெடிறிகிரியா ஆகிய இடங்களில் சோழர் காலக் கோயில்கள் இருந்ததைக் கூறினாலும்கூட இவற்றின் அழிபாடுகள் நமக்குக் கிட்டவில்லை. அத்தகடவில் கிடைத்த கல்வெட்டு இங்கே முதலாவது ராஜராஜனால் அமைக்கப்பட்ட 'உத்தம சோழஸ்வரம்' பற்றிக் குறிப்பிடுகிறது. (Veluppillai, A. 1972 : 20-23) உத்தமசோழன் ராஜராஜனுக்கு முன்னர் சோழ அரசனாக விளங்கியவன். இக்கல்வெட்டில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட பல்வகைத் தானங்கள்பற்றிய குறிப்பு வருகிறது. இவற்றுள் மூன்று வேலி நிலம், நந்தாவிளக்கெரிப்பதற்கு இருபது பசுக்கள், ஐந்து 'சந்தி விளக்கு' எரிப்பதற்குக் கொடுக்கப்பட்ட 50 தென்னை மரங்கள் பற்றிய விவரம் காணப்படுகின்றது. பசு நெய்யும், தென்னையிலிருந்து பெறப்படும் எண்ணெயும் அக்காலத்தில் விளக்கெரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. நந்தாவிளக்கு பொதுவாகவே நிரந்தரமாக எரியும் விளக்காகும். சந்திவிளக்குக் கோயில்களில் பொதுவாக மாலை நேரங்களில் எரிக்கும் விளக்காகும். சிலசமயம் இவ்விளக்கு அதிகாலையிலும் எரிக்கப்படும். மெடிறிகிரியாவில் கிடைத்துள்ள கல்வெட்டு இரண்டாவது ராஜேந்திரன் (கி.பி. 1052 - 64) காலத்ததாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Indrapala, K. 1971 : 25–27) இக்கல்வெட்டில் மெடிறிகிரியா மண்டலகிரி என்றும், நித்தியவிநோதபுரம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. ராஜராஜனின் பட்டப் பெயர்களில் ஒன்றுதான் நித்தியவிநோதன் என்பதாகும் இதனுல் இவன் பெயரால் இவ்விடம் இப்பெயரைப் பெற்றது எனலாம். அத்துடன் இங்குள்ள சிவதேவாலயம் 'பண்டித சோழஸ்வரம்' எனவும் அழைக்கப் படுகிறது. இங்கே 'பண்டித சோழன்' என்ற பட்டப் பெயரை ராஜராஜ னது மகனுகிய முதலாவது ராஜேந்திரன் சூடியிருந்ததை நோக்கும்போது இக்கோயிலுக்கு ராஜேந்திரனது பெயர் சூட்டப்பட்டதும் தெளிவாகின்றது. இவ்விடத்தில் சோழப் படைப் பிரிவாகிய இளைய மும்முடிச் சோழ அணுக் கர் இராணுவப் பிரிவைச் சேர்ந்த வளவன்பித்தன்சரவணன் என்பான் தனது மகனின் ஞாபகார்த்தமாக பண்டிதசோழஸ்வரத்திற்கு நந்தாவிளக் கொன்றும், 26 பசுக்களும் தானமாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு எடுத் தியம்புகின்றது.

சோழர் காலத்தில் முக்கியமான இடங்களில் பதவியாவும் குறிப்பிடத் தக்கது. சிலர் சோழர் பொலநறுவையை ராசதானியாக அமைக்கமுன்னர் பதவியாவிலேதான் தமது தலைநகரை அமைத்திருந்தனர் எனவும் கருது கின்றனர். (Indrapala, K. 1971 : 32) காரணம் யாதெனில் வடஈழத்தைக் கைப்பற்றிய முதலாவது ராஜராஜனின் கல்வெட்டுக்கள் இங்கே காணப் படுவதுதான். இவ்விடத்தில் எல்லாமாக ஆறு சிவன் கோயில்களும் ஒரு காளி கோயிலும் உள. (Veluppillai, A. 1972 : 23–31; Indrapala, K. 1971: 32–36) இக்கோயில்களின் அடித்தளங்கள் மட்டுமே காணப்படுகின்றன. கொடகம்புறே அவர்கள் இக்கோயில்களில் சில பௌத்த கோயில்களின் அடித்தளங்களிலிருந்து கட்டப்பட்டிருக்கலாம் அல்லது பௌத்த கோயில் களை இடித்துப் பெறப்பட்ட பொருட்களைக் கொண்டும் கட்டப்பட்டிருக்கலா மெனவும் கருதுகிறுர்கள். (Godakumbura, G. E. 1962 : G. 67) இங்கு கிடைத்த கல்வெட்டுக்களில் சிவதேவாலயங்களில் கிடைத்தனவற்றில் முத லாவது சிவதேவாலயத்தில் கிடைத்த நான்கு கல்வெட்டுக்களும், மூன்ருவது சிவதேவாலயத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டும் குறிப்பிடத் தக்கவை. (Veluppillai, A. 1972 : 23–31)

பதவியாவிலுள்ள முதலாவது சிவதேவாலயம் ராஜராஜனின் பெய ரால் ''ரவிகுலமாணிக்கேஸ்வரம்'' என அழைக்கப்பட்டது. ரவிகுலமாணிக் கம் என்பது ராஜராஜனின் பட்டப் பெயர்களிலொன்ருகும். இங்கே கிடைத்துள்ள முதலாவது ராஜேந்திரனது காலக் கல்வெட்டில் இக்கோயி லுக்குத் தானம் வழங்குவோர்பற்றிய விபரம் வருகிறது. (Indrapala, K, 1971 : 32–36) இவர்களின் பட்டப் பெயர்களான உடையான், காந்தன், நாஞதேசிகள் போன்றவை குறிப்பிடப்படுவதை நோக்கும்போது இக் கோயிலைப் போஷிப்பதில் நிர்வாகிகளும், போர்வீரர்களும், வணிகர்களும் முக்கிய பங்கினை வகித்தது தெளிவாகின்றது. இக்கோயிலுக்கு அத்திவார மிட்டவர்களாக 'அழகன் வத்தமநான தேசிய்யாயத் துணைச் செட்டி', 'பதியில் வணிகன் தனியப்பன்' ஆகியோர் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் விளக்குகள், மணிகள், பொற்காசுகள், மிருகங்கள் ஆகியனவற்றைத் தான மாக அளித்துள்ளனர். பதவியாவிலே கிடைத்துள்ள திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் சாசனமொன்று சிவன் கோயிலொன்றினைப் பரிபாலிப்பதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் அதற்குச் சேவை புரிவதற்கும் இவ்வணிகர் அமைத்திருந்த சுயாட்சி கொண்ட நகரமாகிய ஐயம்பொழில் பட்டினம் பொறுப்பாயிருந்ததை எடுத்தியம்புகிறது. பதவியாவிற் கிடைத்த மற்ருெரு திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவரது கல்வெட்டில் "காளி கணம்" பற்றிய குறிப்பு வருகிறது. இத்தகைய குறிப்பு காளி அல்லது துர்க்கை வழிபாடுடையோராக இவர் கள் விளங்கியதை எடுத்துக்காட்டுகிறது. அத்துடன் இதே கல்வெட்டில் வரும் 'வடதழி' என்ற குறிப்பும் இவர்களால் நிருமாணிக்கப்பட்ட காளி கோயிலைக் குறிக்கலாம். காலத்தால் 12ஆம் 13ஆம் நூற்ருண்டை இக் கல்வெட்டுச் சேர்ந்தாலும்கூட பதவியாவில் சோழர் காலந்தொட்டு சிவ, காளி வழிபாடுகள் நிலைத்திருந்ததையும், இதற்கு வணிகர் கொடுத்த ஆதரவையும் இவை எடுத்துக்காட்டுகின்றன. (Veluppillai. 1971 : 46–57) இது மட்டுமன்றி பதவியாக் கல்வெட்டுக்களில் வரும் பெயர்கள்பற்றியும் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகின்றது. இப்பெயர்கள் முதலாவது சிவ தேவாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுக்களிலும் காணப் படுகின்றன. (Veluppillai, A. 1972: 23 - 28) இக்கல்வெட்டில் வரும் செட்டி, வணிகன் போன்ற பெயர்கள் இச்சிவன்கோயிலை அமைப்பதில் வர்த்தகர் கொண்டிருந்த பங்களிப்பை எடுத்துக்காட்டும் அதேநேரத்தில் இவர்களது பெயர்களான நாராயணன், திருச்சிற்றம்பலமுடையான் போன்றவையும் நாராயணன், வரதன், திருமால், அழகன் போன்றவையும் முக்கியம் வாய்ந்தவையாகும். நாராயணன் திருச்சிற்றம்பலமுடையான் என்ற பெயர் தந்தை விஷ்ணுவழிபாட்டைப் பேணியதையும் மகன் சிவவழிபாட்டைப் பேணியதையும் எடுத்துக்காட்ட, வரதன், திருமால், அழகன் போன்ற பெயர்கள் வைணவ மதத்தைச் சார்ந்தவர்கள்கூட சிவாலயங்களை அமைத்தனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. பொதுவாகத் தமிழகத் தில் சைவ–வைணவ மதங்களுக்கிடையே கசப்புணர்ச்சி நிலவியிருந்தாலும் கூட ஈழத்தில் இத்தகைய கசப்புணர்ச்சி காணப்படவில்லை என்பதற்குப் பதவியாவிற் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் மட்டுமன்றி பொலநறுவையி லுள்ள சிவதேவாலயத்திலமைந்த 'அழகிய மணவாளன்', 'பள்ளி கொண் டான்' எனப் பெயர் கொண்டிருந்த வைணவ ஆலயங்களும் சான்று பகருகின்றன.

சோழரின் தலைநகராகப் பொலநறுவை விளங்கினுலும்கூட திரிகோண மலை மாவட்டமும் அவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டு இருந்தது. இம் மாவட்டத்தில் கிடைத்த சோழரின் ராசப் பிரதிநிதியாகிய 'சோழ இலங் கேஸ்வரன்' கல்வெட்டுக்கள் இவ்வாறு எண்ணத் தூண்டுவதோடு, எண் ணிக்கையில் வேறெம் மாவட்டத்தையும்விட இங்குதான் தமிழ்க் கல் வெட்டுக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. தென்கிழக்காசிய வர்த்தகத் தில் சோழர் மேலாதிக்கம் கொண்டிருந்ததால் திரிகோணமலைத் துறை முகம் இதற்கு வாய்ப்பாகவும் அமைந்தது எனலாம். பல்லவர் கால நாயன் மார்கள் பாடல்களில் திருக்கோணேஸ்வரம் சிறப்பாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. மாதோட்டத்தைப்போன்று இங்கும் சோழர்கள் பல்லவர் காலக் கோயிலைத் திருத்தினுர்களா அன்றிப் புதிய கோயிலை நிருமாணித்தார்களா என்று கூறுவது கஷ்டமாகத் தென்படுகிறது. என்ருலும் இக்காலத்தில் கோணேஸ்வரம் 'மச்சகேஸ்வரம்' என அழைக்கப்பட்டதென்பதைத் தக்ஷிண கைலாச புராணமும், கோணுசல புராணமும் கூறுவதுடன் இங்கு மானுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேணி, நிலாவெளி ஆகிய இடங்களிற் கிடைத்த சோழர் காலக் கல்வெட்டுக்களும் இதனை உறுதி செய்கின்றன. (Gunasingham, S. 1974) சோழர்களாற் கட்டப்பட்ட கோயில் அழிந்தாலுங்கூடப் பிற்காலத்தில் இக்கோயிலின் பாகங்களைப் பயன்படுத்தி இந்துக் கோயில்கள் பல கட்டப்பட்டிருக்கலாமென ஊகிக்க இடமுண்டு. காரணம் திரிகோணமலை மாவட்டத்திலுள்ள பல இந்துக் கோயில்களின் தூண்களில் சோழர்கால எழுத்து வடிவம் காணப்படுவதோடு நிலாவெளிப் பிள்ளையாரின் கிணற்றின் படிக்கட்டிற்கூட "திருகோணமலை மச்சகேஸ்வரமுடைய மஹாதேவர்க்கு" என்ற வாசகம் பொறித்த கல்வெட்டுக் காணப்படுகின்றது. (குணசிங்கம், செ. *1973 : 105*) நிலாவெளியிற் கிடைத்த கல்வெட்டு மச்சகேஸ்வரத்தின் அன்றுட செலவுகளை நிவர்த்தி செய்யத் தானமாகக் கொடுக்கப்பட்ட 250 வேலி நிலம்பற்றிக் கூறி இந்நிலத்தின் எல்லைகளைக் குறிக்கிறது. (Gunasingham, S. 1975 : 61–71)

கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்ட சோழஇலங்கேஸ்வரன் கல்வெட்டும் சோழரின் சமய நடவடிக்கைகள்பற்றிக் கூறுகின்றது. (Gunasingham, S. 1974 : 21–22) இக்கல்வெட்டு இங்கே ஆரம்பிக்கப்பட்ட 'ராஜராஜ சதுர்வேதிமங்கலம்' என்ற பிராமணக் குடியிருப்புப்பற்றிக் குறிக்கிறது. கோயிலை அண்டியே பிராமணர்கள் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக வாழுவதால் இங்கும் சோழர் காலக் கோயில்கள் இருந்தன என்றும், இவை முதலாவது ராஜராஜனல் தோற்றுவிக்கப்பட்டன என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களாக அமைகின்றன. இவ்விடத்திலே கண்டெடுக்கப்பட்ட மகாவிஷ்ணு, ஆவுடையார், பார்வதி, நந்தி ஆகியோர் சிற்பங்கள் சைவ, வைணவ வழிபாடுகள் இங்கே திழைத்தோங்கியதையும் எடுத்தியம்புகின்றன. இப்பிராமணர் குடியிருப்பு நிஸங்கமல்லன் காலம்வரை நீடித்ததற்கான சான்றுகள் இருப்பதால் கந்தளாயும் மச்சகேஸ்வரம்போன்று முக்கிய இந்து தலமாக விளங்கியது எனலாம். முதலாவது விஜயபாகு காலக் கல்வெட்டில் இங்கிருந்த சிவஸ்தலம் 'தென்கைலாசம்' என அழைக்கப்பட்ட சான்றும் இதனை உறுதி செய்கின்றது. இப்பிராமணக் குடியிருப்பாளர் தமது கருமங்களை ஆற்ற ஒரு உள்ளூர் நிறுவனமாகிய 'சபை' என்ற பெயரால் ஒரு அமைப்பைப் படைத்திருந்தனர் என்பதை இக்கல்வெட்டில் வரும் "பெருங்குடிப் பெருமக்கள்" என்ற வாசகம் எடுத்தியம்புகின்றது. சமகாலத் தமிழகக் கல்வெட்டுக்களிலும் பிராமணர் கிராமங்களிலியங்கிய சபையை நிர்வகித்தோர் இவ்வாறு அழைக்கப்பட்டது தெரிகிறது. இத்தகைய அமைப்பொன்றே கணிசமான தொகையினராகப் பிராமணர் இங்கு வாழ்ந்தனர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. இதே கல்வெட்டில் இங்குள்ள காளி கோயில்பற்றிய குறிப்புமுண்டு. துரதிஷ்டவசமாக இதுபற்றிய வேறு விவரங்கள் நமக்குக் கிடைக்காவிட்டாலும் இம்மாவட்டத்தில் காளி/துர்க்கை வழிபாடு பொலநறுவை மாவட்டத்திற் காணப்பட்டது போன்று நிலவியதென்பதைப் பறையனூரில் கிடைத்துள்ள துர்க்கையின் சிலை ஒன்று எடுத்தியம்புகின்றது. (வீரகேசரி, *13 – 7 – 1980*)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சோழரின் நடவடிக்கைகள்பற்றி நாம் அறியமுடியாதிருக்கின்றது. எவ்வாறுயினும் சோழர் முழு ஈழத்திலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றதாலும், ரேகனையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற கிளர்ச்சிகளை அடக்க இம்மாவட்டங்களும் நிச்சயமாக அவர்கள் ஆதிக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும். இருப்பினும் இதனை விரிவு படுத்தத் தற்சமயம் சான்றுகள் கிடைக்காவிட்டாலும்கூட மட்டக்களப்பு மாவட்டத்தில் பழைமை வாய்ந்த திருப்படைக் கோயில்கள் பல இவர்களின் போஷிப்பைப் பெற்றிருக்கலாம். இவ்வாறேதான் தென்கிழக்கு ஈழத்தி லுள்ள கதிர்காமமும் முக்கியம் பெற்றிருக்கலாம்.

சோழர் ஈழத்தைவிட்டுச் சென்றாலும் அவர்கள் வளர்த்த கலைமரபு நீடித்து நிலைத்தது என்பதற்கான தடயங்கள் திரிகோணமலை, அநுராதபுரம், யாழ்ப்பாண மாவட்டங்களில் காணப்படுகின்றன. திரிகோணமலையில் 1950ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட சிவன், பார்வதி, சுகாசனமூர்த் தத்திலுள்ள சிவன், பார்வதி ஆகியோர், பிள்ளையார் போன்றோரது வெண் கலச் சிலைகள் பிற்காலச் சோழர் கலைமரபின் அம்சங்களுடன் காணப்படு கின்றன எனக் கருதப்படுகிறது. (Balendra, W. 1953) அநுராதபுரத்திலும் தனித்துவம் வாய்ந்த அர்த்தநாரீஸ்வரர் விக்கிரகம் ஒன்று 1982 இல் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1985இல் வெளிவந்த 'ஈழமுரசு' என்ற நாளிதழ் செய்தி மேலும் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலச் சிலைகள்பற்றிய விவரங்களைத் தருகின்றது. (ஈழமுரசு, 9-7-1985) அஃதாவது

> 'அநுராதபுரப் பகுதியில் தற்போது நடைபெற்று வரும் அகழ் வாராய்ச்சியின்போது ஒன்பது இந்து விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. பத்தாம் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கணிக்கப்படும் இவ்விக்கிரங்களில் சில சிதைந்த நிலையில் காணப் பட்டன' எனக் கூறுகிறது.

இச்செய்தியை ''சற்றடே ரிவியூ'' என்ற ஆங்கிலப் பத்திரிகையும் பிர சுரித்து மேலும் பல விபரங்களைத் தந்துள்ளது. (Saturday Review 13-7-1985) அஃதாவது இவ்விக்கிரகங்களில் ஒன்றில் வரும் 'நானாதேசி' என்ற குறிப்புப்பற்றி இந்நாளிதழ் குறிப்பிடுவது முக்கியம் வாய்ந்த செய்தி யாக அமைகிறது. இக்காலத்தில்தான் நானாதேசிகள் செல்வாக்குடன் காணப்பட்டனர் எனவும் முன்னர் கண்டோம். இவர்களின் சமய நட வடிக்கைகள் பற்றிப் பதவியா, பொலநறுவை ஆகிய இடங்களில் கிடைத் துள்ள கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. இவ்வாறேதான் அநுராத புரத்திலும் பல இந்துக் கோயில்களை இவர்கள் அமைத்திருக்கலாமென்பதும் இவ்விக்கிரகங்கள் அழிந்த அக்கோயில்களிலே இவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை எனவும் எண்ணத் தூண்டுகிறது. யாழ் மாவட்டத்தி லுள்ள கமால் வீதியில் கிடைத்துள்ள வெண்கலச்சிலை, சண்டேஸ்வரரது கற்சிலை ஆகியனவும் இம்மரபு வழிவந்தனவே எனக் கொள்ளப்படுகிறது. (வீரகேசரி 25-2-1979) இவ்வெண்கலச்சிலை துர்க்கையின் ஓர் வடிவ மாகிய நந்தாவினது என்று பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் இனங் கண்டுள்ளார். (வீரகேசரி 25-2-1979)

சோழரிடமிருந்து ஈழத்தை மீட்டெடுத்த முதலாவது விஜயபாகுவின் (கி. பி. 1070 – 1110) முக்கிய பணியாக பௌத்த மதத்தைப் புனருத்தார ணம் செய்தல் அமைந்தது. சோழராட்சியில் வேண்டியளவு அரச ஆதரவு இல்லாததால் பௌத்த குருமாரின் சங்கம் சீர்குலைந்தது. வயோதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்க, புதிதாக எவரும் சேரவில்லை. சிலர் இந்தியாவுக்கும் சென்று விட்டனர். இதனால் பர்மாவிலிருந்து பௌத்த பிக்குகளை வரவழைத்த தோடு புதிதாகவும் சிங்களக் குருமாரைச் சங்கத்தில் சேர ஊக்குவித்து மூன்று நிக்காயாக்களையும் ஒருங்கிணைத்தான் எனப் பொலநறுவையிலுள்ள வேளைக்காரர் கல்வெட்டு எடுத்துக்கூறுகிறது. (E.Z : II : 242 – 256) பௌத்த சமயத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் பௌத்த குருமாரின் வேண்டுதலுக்கமையவும் முடிசூடினான் என வேளைக்காரர் கல்வெட்டுக் கூறுகிறது. பௌத்தத்தை ஆதரித்தாலும் இவனது அரண்மனையில் இந்துச் செல்வாக்கு மலிந்திருந்ததையும் பௌத்த குருமாரைச் சாந்தப்படுத்து வதற்காகத் தனது அரசியையே தண்டித்தான் எனச் சூளவம்சம் கூறி யுள்ளதையும் ஏற்கனவே கண்டோம். விஜயபாகுவின் ஆட்சிபற்றிப் பரண வித்தானா அவர்கள்,

> 'அரசு கட்டிலேறின பின்னர் இந்து மத வழிபாட்டு முறைகளைப் புறக் கணிக்க முடியவில்லை. இவன் சோழர் காலச் சமய ஸ்தானங்கள் தொடர்ந்து இயங்க அனுமதித்ததோடு தனது காலத்தில் அமைக்கப் பட்ட சைவக் கோயில்களுக்கும் தனதாதரவை வழங்கினான்' எனக் கூறியுள்ளார். (Paranavitane, S. 1960 : 563)

இதற்குச் சான்றாக கந்தளாயில் இவன் மேற்கொண்ட சமய நடவடிக்கை களைக் காட்டலாம். சோழரால் கந்தளாயில் அமைக்கப்பட்ட ராஜராஜேஸ் வரமும் அதனை அண்டியுள்ள 'ராஜராஜ சதுர்வேதிமங்கல'மும் இவன் காலத்தில் இவனது ஆதரவைப் பெற்றதோடு அம்மன்னன் தனது பெயரை யும் சேர்த்து முறையே 'விஜயராஜேஸ்வரம்', 'விஜயராஜ சதுர்வேதிமங் கலம்' எனவும் இவற்றுக்குப் பெயரிட்டான். இதனால் தொடர்ந்தும் சோழர் விட்டுச்சென்ற இந்து நிறுவனங்கள் இவனது ஆதரவைப் பெற்றன என்பது வெள்ளிடைமலை. கந்தளாயிலுள்ள கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானத்தைப் பளமோட்டைக் கல்வெட்டு எடுத்தியம்புகிறது. (E. Z. IV: 191–196) இக்கல் வெட்டில் இக்கோயில் 'தென்கைலாசம்' என அழைக்கப்படுகிறது. நாகய் சாணி என்ற பிராமண விதவைப்பெண் இறந்த தனது கணவனான காராம் பைச் செட்டுயஜ்ஜீய கிரமவித்தன் ஞாபகார்த்தமாக அளித்த தானத்தைக் கூறும் இக்கல்வெட்டு தானங் கொடுத்தோரின் எண்ணம் சரிவர நிறைவேறும் வண்ணம் பார்த்துக்கொள்ளும் பொறுப்பும் இங்கே இருந்த வேளைக்கார இராணுவப் பிரிவிடமிருந்ததைக் கூறுகிறது. தானமாக 35 காசும் 9 களஞ்சு பொன்னும் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டது. இவற்றின் வருமானத்தி லிருந்து விளக்கேற்றல், பூந்தோட்டத்தைப் பேணுதல், ஏழு தேவதாசி களைப் போஷித்தல் போன்ற கருமங்களை இத்தானத்தை அளித்தவர் விரும்பியது தெரிகிறது. இதனால் சமகால தென்னிந்தியாவில் நிலவியது போன்ற கைங்கரியங்கள் ஈழத்திலுள்ள கோயில்களிலும் நடைபெற்றமை புலனாகின்றது.

விஜயபாகுவுக்குப் பின்னர் முடிசூடிய ஜெயபாகு (கி. பி. 1110–1112) காலப்பகுதி மிகக் குறுகிய ஆட்சிக்காலமாக அமைய இவன் பின்வந்த இரண்டாவது விக்கிரமபாகு (கி. பி. 1111–1132) இரண்டாவது கஜபாகு (கி. பி. 1132 – 1153), ஆகியோர் காலம் இந்து மதவளர்ச்சியில் முக்கிய காலமாகத் திகழ்ந்தது. இவர்கள் இருவரும் இந்துக்களாக இருந்ததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள — பௌத்த மன்னர்களுக்கு நடக்கும் முறையான பட்டமளிப்பு விழாக்கூட இவர்களுக்கு நடைபெறவில்லை. இதனுல் இவர்கள் ஆட்சிக் காலக் கல்வெட்டுகளிலெல்லாம் ஜெயபாகுவின் பெயரே காணப்படுகிறது. சூளவம்சமோ எனில் விக்கிரமபாகுவுக்கு முறையான முடிசூட்டுவிழா நடைபெறவில்லை எனக்கூறிக் கஜபாகுவின் முடிசூட்டுவிழா பற்றி ஒன்றுமே கூறவில்லை. பூஜாவலியா, ராஜவலியா போன்ற நூல்களில் ஈழத்தை ஆண்ட மன்னர் பட்டியலில் கஜபாகுவின் பெயர் காணப்படவில்லை. இதற்கெல்லாம் காரணம் இவர்கள் பௌத்தர்களாக இல்லாததே. (Kirubamune, S. 1976 : 12 - 32) சூளவம்சத்தில் விக்கிரமபாகு இந்துவாகவே செயற்பட்டான் என்பதை விளக்கப் பல சான்றுகள் உள. ஓரிடத்தில் சூளவம்சம் "அவசியமான யாகத்தையும் ஏனைய இந்துக் கிரியைகளையும் வேதங்களிலும் வேதாகமங்களிலும் கைதேர்ந்த தனது புரோகிதர்களாலும் ஏனைய பிராமணர்களாலும் நிறைவேற்றினுன்" (C. V. LXII: 33 - 34) எனக் கூறுகிறது. இதுமட்டுமன்றி இவன் காலத்தில் இவனுற் கட்டப்பட்ட பௌத்த கோயில்களோ அன்றி அவற்றுக்குக் கொடுக்கப் பட்ட தானங்கள் பற்றியோ எதுவித சான்றுமில்லை. அதுமட்டுமல்லாமல் இவன் தன்னிச்சையாகப் பௌத்த கோயில்களின் நிலங்களைத் தனது சேவையிலிருந்தோருக்கு அளித்ததோடு நகரத்திலுள்ள விகாரைகளையும் வெளிநாட்டுப் படைவீரர்களின் வாசஸ்தலங்களாக மாற்றியதோடு தந்த தாதுக் கோயில்கள் போன்றனவற்றுக்குக் கொடுக்கப்பட்ட பொருட்களையும் தன்னிச்சையாக விரயஞ் செய்தான் எனவும் சூளவம்சம் கூறி இவனும் இவனது சகாக்களும் பௌத்த மதத்திற்கு முரணுன முறையில் நடந்தனர் எனவும் கூறுகிறது. (C. V. LXI : 54–61) விக்கிரமபாகுவின் இந்துமதப் பற்றைக் காகம்பிலியாவக் கல்வெட்டு (E. Z. V. III : 404–408) மிகச் சிறப்பான முறையில் பின்வருமாறு கூறுகிறது. அஃதாவது 'பார்வதி — பதி — தத்தாசிர் — வீர — மகா – விருஷ நீதி பராயன்ய ராஜ நாராயண —' இதன் பொருள் யாதெனில் 'பார்வதியின் பதியாகிய சிவனுல் ஆசீர்வதிக்கப் பட்டவனும் வீரம் மிக்கவனும் மகா நந்தியுமாகிய அவனுக்கு ஒழுக்கமே இறுதிக் குறிக்கோள். அதுமட்டுமன்றி அவன் நாராயணனைப்போன்ற மன்னனுமாவான்' என்பதாகும்.

விக்கிரமபாகு இந்து மதத்திற்கு அளித்த ஆதரவைக் குருநாகல் மாவட்டத்திலுள்ள மாகல என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டுகள் எடுத்துக் காட்டுகின்றன. (E. Z. III : 302-312) இதில் மாகல என்ற இடமும் இவன் பெயரால் "விக்கிரமசாளமேகபுர" எனப் பெயர் மாற்றம் பெற்றதும் தெரிகிறது. இம்மரபை ஈழத்தில் சோழர் சிறப்பாகக் கடைப்பிடித்தனர். மேற் கூறிய கல்வெட்டில் இங்குள்ள சிவதேவாலயம் "விக்கிரமசாளமேகஸ்வரம்" என அழைக்கப்பட்டுள்ளது. கந்தளாயிலுள்ள சோழர் காலக் கோயிலுக்கு விஜயபாகு தனது பெயரையும் சேர்த்து இட்டதுபோல் இவனும் சோழரால் இங்கே அமைக்கப்பட்ட கோயிலுக்குத் தனது பெயரை இட்டான் எனக் கொள்ளலாம். அத்துடன் இக்கல்வெட்டு சோழ மன்னன் குலோத்துங்கன் மகளாகிய 'சுத்தமல்லியாழ்வார்' இக்கோயிலில் 'நந்தா விளக்கு' ஒன்று நிரந்தரமாக எரிவதற்கு வைப்பீடு செய்த பத்துக் காசுகள் பற்றியும் கூறுவதோடு இவ்விளக்கு சூரிய சந்திரர் நிலைக்குமட்டும் நீடித்து நிரந்தரமாக எரியவேண்டுமென்ற அவளின் விருப்பத்தையும் எடுத்தியம்புகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. இக்கோயில் பிற்காலத்தில் இடிக்கப்பட்டு அதன் கற்களையும் தூண்களையும் கொண்டு புதுமுத்தாவ என்ற இடத்தில் ஒரு பௌத்த கோயில் கட்டப்பட்டாலும் இதைச் சுற்றிக் காணப்படும் லிங்கமும் பிற சான்றுகளும் இக்கோயில்பற்றிய உண்மையைக் கூறுகின்றன.

ஈழத்தின் வடபகுதியை இராஜரட்டையைப் பொலநறுவையைத் தலை நகராகக் கொண்டு விக்கிரமபாகு ஆன தக்கிண தேசத்தை மானுபர்ணன் ஆட்சி செய்ததைச் சூளவம்சம் கூறுகின்றது. மானுபர்ணனின் பட்டத்து இளவரசியாகிய ''இரத்தினவலி'' ஒரு கலிங்க இளவரசியேயாகும். இவளது மகன்தான் பொலநறுவைக் காலத்தில் பிரசித்தம் பெற்ற முதலாவது பராக்கிரமபாகுவாகும். இதனால் இக்காலத்தில் மானுபர்ணனின் அரண்மனையில் இந்துச் செல்வாக்கு நிறைந்து காணப்பட்டது எனலாம். இம்மன்னனுக்கு முதலில் பிறந்த பிள்ளைகள் இருவரும் பெண் பிள்ளைகளே. தனது வம்சத் தொடர்பை நீடிக்கவும், பொலநறுவை மன்னன் விக்கிரம பாகுவைத் (II) தோற்கடிக்கவும் தனக்கு ஒரு ஆண்மகவு பிறக்கவேண்டுமென இவன் அவாக்கொண்டிருந்தான். அப்போது இம்மன்னன் தனது வம்சத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் ''உலகிலுள்ள எல்லா அரச வம்சங்களிலும் தூயவம்சமெனப் போற்றப்படும் வம்சமாகிய சந்திர வம்சம்'' எனச் சூள வம்ச ஆசிரியர் குறிப்பிடுகிறார். (C. V. LXII : 5 – 7) மேலும் இம்மன்னன் பற்றிச் சூளவம்சம் குறிப்பிடுகையில் ஆண்மகவை விழைந்த இவன் உலகியல் விடயங்களில் கவனம் செலுத்தாது, தனது அரசியற் பொறுப்பை மந்திரிமாரிடம் ஒப்படைத்துவிட்டுப் பல புண்ணிய நடவடிக்கைகளில் ஈடுபட்டான் என்றும் இவ்வாறு ஈடுபடுகையில் ஓர் இரவைத் தெய்வங்களுக்கெல்லாம் அரசனாக விளங்கும் தெய்வத்தின் கோயிலில் (King of the Gods) கழித்தான் எனவும் கூறுகிறது. (C. V. LXII : 11 – 12) அப்போது அதிகாலையில் அத்தெய்வம் அவனுக்குக் காட்சி கொடுத்தது. இக்காட்சியைச் சூளவம்சம் சிறப்பாகக் கூறுகிறது. அஃதாவது மினுமினுப்பான உடையும் ஆபரணங்களும் அணிந்து நறுமணம் வீசும் மலர்மாலையும் சூடி ஜோதிமயமாகத் தோற்றமளித்த இத்தெய்வத்தின் காட்சி அதிகாலையில் சூரிய ஒளியால் வானமண்டலம் ஒளிப்பிழம்பாய்க் காட்சியளிப்பதை ஒத்திருந்ததென்பதாகும். (C. V. LXII : 12 – 14) அத்துடன் இக்காட்சியின்போது இம்மன்னனுக்குப் புகழ்வாய்ந்த மகன் பிறப்பான் எனவும் இத்தெய்வத்தால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது.

மேற்கூறிய சம்பவத்தில் எமது சிந்தனையைத் தூண்டுவது யாதெனில் சூளவம்சத்தில் வரும் கூற்றாகிய ''தெய்வங்களுக்கெல்லாம் அரசனாகி விளங்கும் தெய்வத்தின் கோயில்'' என்ற கூற்றேயாகும். இக்கூற்று இந்திரனையே குறிக்கின்றது எனச் சூளவம்சத்தை மொழிபெயர்த்த கெய்கர் கருதினாலும் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. மானுபர்ணன் தக்கிண தேசத்தில் அரசாட்சி செய்ததால் அவ்விடத்தில் பிரசித்தி பெற்ற கோயிலொன்றிலேதான் இக்கனவை இவன் கண்டிருத்தல் வேண்டும். இந்திரனின் பிரசித்தி பெற்ற கோயில் இவ்விடத்தில் இல்லை. ஆனால் பிரசித்திபெற்ற தேவஸ்தலமாகப் பண்டுதொட்டு 'தேவிநுவர' விளங்கியதென்பதற்குச் சான்றுகள் உள. (சிற்றம்பலம், சி. க. 1984) இதே இடத்திற்குள் உப்புல்வன் (மாயவன்) ஆலயம் கி. பி. 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளிலிருந்தது. முதலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது விஜயபாகு போன்ரூேர் இவ்விடத்தில் பௌத்த விகாரை ஒன்றையும் கட்டியதாகச் சூளவம்சம் குறிக்கிறது. பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன் காலத்தில் "தேவிநுவர" பற்றிய குறிப்பும் சூளவம்சத்தில் வந்தாலும் நிஸங்கமல்லன் இவ்விடத்தைத் தனது நாடளாவிய யாத்திரையின்போது தரிசித்தான் என இவனது கல்வெட்டு எடுத்துக்காட்டுகின்றது. (Paranavitane, S. 1960 : 514) இருந்தும் விஜயபாகு, பராக்கிரமபாகு நிஸங்க மல்லன் ஆகியோரது காலத்தில் இவ்விடத்திலுள்ள இந்துக்கோயில்பற்றிய குறிப்புக் காணப்படவில்லை. எனினும் 13 ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் இரண்டாவது பராக்கிரமபாகுவின் காலத்தில் அவனது சகோதரியின் மகனுகிய வீரபாகு சாவகர்மீது தான் அடைந்த வெற்றியைக் கொண்டாடும் முகமாக இங்குள்ள உப்புல்வன் கோயிலில் விழா எடுத்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. (C. V. LXXXIII : 49) இக்கூற்றிலிருந்து இக்கோயில் இக்காலத்தில் மட்டுமன்றி இதற்கு முன்னரும் பல நூற்றுண்டுகள் பிரபல்யம்வாய்ந்ததொன்ருக இருந்திருத்தல் வேண்டுமென்பது தெளிவாகின்றது. மூன்ருவது பராக்கிரமபாகுவின் நைய்மானுக் கல்வெட்டில் உப்புல்வன் 'தெய்வங்களது அரசன்' எனப் பொருள்தரும் "தேவராஜ" என விளிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (Veluppillai, A. 1972 : 56-67) இதனுல் மானுபர்ணன் வழிபட்ட கோயில் இது எனக் கொள்ளலாம். இவன் காலத்திற்கும் இதற்கு முன்னரும் பின்னரும் இக்கோயில் செல்வாக்குப் பெற்றிருந்தது எனலாம். போத்துக்கேயர் காலத்திலும் இதன் செல்வாக்கு நீடித்திருந்தது. இவ்வாறேதான் கதிர்காமமும் அமைந்திருந்தது.

நாட்டின் தென்மேற்கே எவ்வாறு உப்புல்வன் (மாயவன்) கோயில் பிரசித்தம் பெற்றிருந்ததோ அவ்வாறேதான் தென்கிழ்த் திசையில் கதிர்காமமும் பிரபல்யமடைந்திருந்திருந்தது. கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பிருந்தே இக்கோயிலின் தோற்றம் அமைந்திருந்தாலும் இதன் தொடர்ச்சியான வரலாற்றைப் பௌத்த மத வரலாற்று நூலாகிய சூளவம்சம் தரவில்லை எனலாம். என்ருலும் அருணகிரிநாதர் போன்ரூேர் புகழ்பாடுமளவுக்கு இத்தலம் பெருமை பெற்றிருந்ததையும், போத்துக்கேயர் கால நூல்களில் இதுபற்றிய குறிப்பு வருவதை நோக்கும்போதும் பொலநறுவைக் காலத்திலும் இக்கோயில் சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கியிருக்கலாமெனலாம். இதைப்போன்றே கிழக்கிலங்கையிலும் புகழ் பெற்ற முருகன் ஆலயங்களும் சிறந்து விளங்கியிருக்கலாம். சிங்கள மக்களின் நாட்டார் வழிபாட்டிலும் முதற்கடவுளாகிய மாயோனுக்கு (உப்புல்வனுக்கு) அடுத்ததாகச் சேயோன் (கதிர்காமக் கடவுள்) வணங்கப்படுவதும் மேற்கூறிய கருத்தை வலுவூட்டுவனவாக இருக்கின்றன. (சிற்றம்பலம், சி. க. 1983)

சூளவம்சம் பிறிதோரிடத்தில் மானுபர்ணன் தனக்கு மகன் பிறப்பது பற்றிக் கண்ட கனவுபற்றியும், அக்கனவுக்கான விளக்கத்தை இம்மன்னன் புரோகிதர்களை அழைத்து அறிந்தான் எனவும் கூறுகிறது. (C. V. LXII:28) மகப்பேறு சிறப்பாக நடப்பதற்காக இம்மன்னன் தனது அரண்மனைப் புரோகிதர்களாலும், வேத, வேதசாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்ற ஏனைய பிராமணர்களாலும் நன்மை பயக்கும் வேள்விகளையும் ஏனையவற்றையும் செய்வித்தான். (C. V. LXII : 33 – 34) இவனுல் பிராமணர்களுக்கு விசேடமாகத் தானங்களும் வழங்கப்பட்டன. (C. V. LXII : 42-43)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் பிறந்தவுடன் அங்கலட்சண சாஸ்திரத்தில் கைதேர்ந்த தனது புரோகிதரையும் ஏனைய பிராமணரையும் அழைத்து அவர்களுக்கு வழக்க மாகக் கொடுக்கும் மரியாதையையும் ஏனைய சிறப்புக்களையும் செய்து மகனின் அங்கலட்சணங்களின் சிறப்புக்கள்பற்றி விளக்குமாறும் பணித்தான். (C. V. LXII : 45 – 47) இந்துமத ஆசாரமுறைப்படி நடக்கும் கிரியைகளான காதுகுத்துதல், சோறூட்டல் ஆகியனவற்றைப் பராக்கிரமபாகுவுக்குச் செய்ததோடு (C. V. LXX : 53 - 54) உபநயனக் கிரியையும் நடந்தேறியது. (C. V. LXIV : 13).

இரண்டாவது கஜபாகு இந்துவாகவே வாழ்ந்தான். இதனையே சூள வம்சம் இம்மன்னன் வெளிநாட்டிலிருந்து மதநம்பிக்கையற்றவர்களை அழைத்து வந்து நாட்டை அவர்களால் நிறைத்தான் எனக் குறிப்பிடு கிறது. (C. V. LXX : 53 - 54) பொதுவாகச் சூளவம்சத்தில் இந்துக்களை மதநம்பிக்கையற்றவர்கள் 'தவறான நம்பிக்கைகளை அல்லது கோட்பாடு களைத் தழுவுபவர்கள்' எனக் குறிப்பிடுவதும் ஈண்டு நோக்கற்பாலது. இரண்டாவது விக்கிரமபாகு காலத்தில் பாதுகாப்பிற்காக ரூகணைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அரச சின்னமாகிய தந்ததாதுவும் அத்துடன் எடுத் துச் செல்லப்பட்ட புத்தரது பிச்சாபாத்திரமும் (C. V. LXI : 61 – 62) இவன் காலத்திலும் பொலநறுவைக்கும் எடுத்துவரப்படாததொன்றே இவ் விரு மன்னர்கள் பௌத்த மதத்திற்கு ஆதரவை நல்கவில்லை என்பதனை எடுத்தியம்புகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக முதலாவது பராக்கிரம பாகுவைத் தனது வாரிசாக ஏற்றபின் பொலநறுவையில் வசிப்பதற்குப் பதிலாகக் கஜபாகு II கந்தளாயில் (கங்காதடாகவில்) வாழ விரும்பியதும் இவனது இந்துமத ஈடுபாட்டினை எடுத்துக் காட்டுகின்றது எனச் சிறீமா கிருபாமுன அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். (Kirubamuna, Srima. – 1976) சூளவம்சம்கூட இவ்விடத்திலே இவன் சந்தோஷமாக வாழ்ந்தான் எனக் குறிக்கிறது. (C. V. LXXI : 1 – 2) எனினும் பேராசிரியர் பத்ம நாதன் அவர்கள் இக்காரணத்தோடு ஈழத்தின் வடகிழக்கில் இக்காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய திராவிடக் குடிமக்கள் இம்மன்னனுக்கும் இவன் தந்தைக்கும் அளித்த ஆதரவுமே இம்மன்னனைத் தனது இறுதிக்கால வாசஸ் தலமாகக் கந்தளாயைத் தேர்ந்தெடுக்க வைத்தது எனக் கருதுகிறார். (Pathmanathan, S. 1982) பொலநறுவையிலுள்ள பாண்டியர் கலைப்பாணியி லமைந்த முதலாவது சிவதேவாலயத்தைக் கட்டுவித்தவனும் இவனே எனவும் நம்பப்படுகிறது. (Navaratnam, C. S. 1964) கந்தளாயிலுள்ள பிராமணக் குடியிருப்புக்களுக்கான எல்லைக்கல் நாட்டப்பட்ட செய்திபற்றிக் கல்வெட்டொன்றின் மூலம் அறியமுடிகிறது. (Swaminathan, K. D. 1960 : 43 – 46) இதனால் ராஜராஜனால் ஆரம்பிக்கப்பட்ட இக்குடியிருப்பு கஜ பாகுவின் போஷிப்பையும் பெற்றது எனலாம். கப்புறுவடுஓயாத்தூண் கல்வெட்டின்மூலம் (E. Z. V. III : 394 – 404) இந்துமதக் கிரியைகளில் இவனுக்கிருந்த ஈடுபாடு மேலும் புலப்படுகிறது. இக்கல்வெட்டுக் கந்தப் பெருமானின் விழாவுக்காகச் சிலைகளையும் ஏனைய பொருட்களையும் யாத்த சிற்பியாகிய 'டாபெறறங்கிடாகே கினுபி' என்பவனுக்கு இவனால் நிலம் வேதனமாகக் கொடுக்கப்பட்டதைக் கூறுகின்றது. இச்சிற்பி கிரியைகளைச் சீராகவும் செம்மையாகவும் நடாத்தும் திறமை பெற்றிருந்தான் என் பதும், மன்னன் செய்ய விழைந்த லக்ஷபூசைக்காகக் கந்தனுடைய விக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகம் உட்படப் பல்வேறு சிலைகளையும் ஓவியங்களையும் வடித்தமைக்காக நிலத்தைப் பெற்றான் என வரும் குறிப்பு மன்னனது இந்துமத ஈடுபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது.

கோணேசர் கல்வெட்டிலும் திருக்கோணாசல புராணத்திலும் கஜபாகு திருக்கோணேஸ்வரத்தைப் போஷித்தது குறிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் இத்தலம் 'தென்கைலாசம்' எனவும் அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் பூசகர்கள் வீரசைவர்களாக (பாசுபதர்களாக) இருந்திருந்தார்கள். காரணம் கோணேசர் கல்வெட்டில் கஜபாகு கோணேஸ்வரத்தை நோக்கி வருவதையறிந்த பாசுபதர் கடலில் வீழ்ந்திறந்தனர் எனக் கோணசர் கல்வெட்டுக் கூறினாலும் அதற்குரிய காரணத்தைக் கூறவில்லை. இவர்கள் இறக்கக் கஜபாகு பிராமணர்களைப் பூசகர்களாக நியமித்தான்போலும். பிராமணர்கள் சைவநாய முதன்மை, வேதநாய முதன்மை என்ற பட்டங்களையுடைய இருபாக முதன்மையினராய் இக்கோயிலின் அர்ச்சகராக விளங்கினர். கோணேசர் கல்வெட்டில் பிறிதோரிடத்தில் (பக். 11 - 13) இங்கே பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே நிலவிய வாதப் பிரதிவாதங்களால் கிரியைகள் தடைபட்டிருந்தது பற்றியும், அப்போது கஜபாகு வாணிபன், தானத்தார், வரிப்பத்தார் போன்றோரை அழைத்து விசாரணை செய்தபின்னர் முன்னர்போல் சமயக் கிரியைகள் நடைபெற ஆவன செய்தான் என்ற குறிப்பும் வருகிறது. இம்மன்னன் தான் சோழ நாட்டிலிருந்து பல்வேறு குடிகளையும் அழைத்துக் கோயிற் குடிமைகளாகவும் நியமித்தான். இவன் நூறு பொற்காசையும் கோணநாதருக்கீந்து நிலத்திலும் பிறவற்றிலுமிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் கோயிலுக்குக் கிடைக்கவும் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தான்.

இறுதியாக அநுராதபுர பொலநறுவை மாவட்டங்களில் கஜபாகு மன்னன் காலத்தில் விளங்கிய பிராமணக் குடியேற்றங்கள் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. அநுராதபுரத்திலுள்ள மகாகிருண்டேகம என்ற இடத்திலுள்ள 'ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதிமங்கலம்' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சோழர் காலத்தில் இக்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாமென முன்னர் கூறியிருந்தோம். எனினும் அக்காலத்திலிருந்து கஜபாகு காலம்வரை இது நீடித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது. கஜபாகு இதனைப் போஷித்தது பற்றிய குறிப்புக் காணப்படாவிட்டாலும் கூட இந்துவாகிய இவன் இதனை ஆதரித்திருப்பானென்று கொள்வதில் தவறில்லை. (Indrapala, K. 1971 : 6 – 9) பொலநறுவை மாவட்டத்திலுள்ள கிங்குருக்தமன என்ற இடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டில் இப்பகுதியில் உள்ள 'பாடோனிமாசார்' என்ற இடத்திலுள்ள 'பிரமஸ்தானம்' பற்றிய குறிப்பு வருகிறது. (Indrapala, K. 1971 : 14 – 17) பிரமஸ்தானமென்பது கிராமத்தில் பிராமணர் வாழும் பகுதியைக் குறிக்கும். இக்கல்வெட்டு உடகமு ஆயித்தன் என்பவன் (கஜபாகு மன்னனின் ஆட்சியின் நாற்பதாவது ஆண்டில்) அகம்படி இராணுவப் பிரிவில் சிவிகை தூக்குபவனாகக் கடமையாற்றியபோது தனக்குச் சீவனமாகக் கொடுத்த நிலத்தின் வருமானத்தின் ஒரு பகுதியை (ஒரு அமணத்தை) விற்று இப்பிராமணர் குடியிருப்புக்கு அதன் வருமானத்தை அளித்ததைக் குறிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பராக்கிரமபாகு (கி. பி. 1153–1186) தனது தேவநாகலக் கல்வெட்டில் கஜபாகு, மானுபர்ணு ஆகியோரிடம் தான் போரிட்டதற் கான காரணம் விஜயபாகுவின் பின்னர் சீரழிந்த பௌத்த மதத்தைப் புன ரமைப்புச் செய்வதற்கே எனக் கூறச் சூளவம்சம் பௌத்த சாசனத்தின் மேன்மைக்காக இவன் உழைத்ததைக் கூறிக் கஜபாகு II மதநம்பிக்கை யற்றவர்களால் ராஜரட்டையை நிரப்பினுன் என அறிந்து பராக்கிரமபாகு I கோபங் கொண்டதாகவும் கூறுகிறது. (C. V. LXX : 53 – 56) எவ்வா ருயினும் பராக்கிரமபாகு இந்துச் சூழலில் வளர்ந்தாலும் கூட அரச மத மாகிய பௌத்தத்திற்கு வேண்டிய ஆதரவை நல்கத் தவறவில்லே. ஒரு சமயம் அரசியல் நோக்கங்களுக்காகவும் இவ்வாறு செய்திருக்கலாம். முக் கால் நூற்றுண்டுக்கு முன்னர் விஜயபாகு எவ்வாறு ஆதரவின்றிச் சோழ ராட்சியில் சீரழிந்த பௌத்த மதத்தைப் புனருத்தாரணம் செய்ய முற்பட் டானே அவ்வாறுதான் விஜயபாகு மறைவுக்குப் பின்னர் சீரழிந்த பௌத் தத்தையும் பராக்கிரமபாகு புனரமைப்புச் செய்யவேண்டியிருந்தது. விக் கிரமபாகு, கஜபாகு மன்னர்கள் வேண்டிய ஆதரவை நல்காததே இத்தகைய நிலேக்குப் பௌத்தத்தை இட்டுச் சென்றது. இதனுல் பர்மாவிலிருந்து பராக்கிரமபாகுவால் பிக்குகள் வரவழைக்கப்பட்டதோடு பௌத்த நூல் களும் வரவழைக்கப்பட்டன. இப்பிக்குகள் கூட முந்திய மன்னர் காலத்தில் அரசின் போஷிப்பின்மையால் பர்மா சென்றிருக்கலாம் அல்லது அவ்வாறு சென்றவர்களின் சீடர்களாகவும் இருக்கலாம். (Paranavitane, S. 1960 : 564) பௌத்த சங்கத்திலும் ஊழல்கள் மலிந்து காணப்பட்டதால் போலிகளே அகற்றும் பணியும் பராக்கிரமபாகுவிடம் இருந்தது. எனினும் பிராமண ருக்கும் இந்து மதத்திற்கும் விஜயபாகுவைப் போன்றே பராக்கிரமபாகு வும் ஆதரவை நல்கியதைச் சூளவம்சம் பல இடங்களில் குறிப்பிடுகின்றது. இம்மன்னன் பிராமணருக்குத் தானம் கொடுத்ததோடு பிராமணர் பிராயச்சித்த சடங்குகளே மேற்கொள்ளுவதற்கும் மந்திரங்களே ஓதுவதற்கும் முறையே கேமமண்டபத்தையும் அழகிய தரணிகாராவையும் நிருமாணித் தான். (C. V. LXXIII : 71 – 72) இதைவிடச் சூளவம்சத்தில் இவன் பதின் மூன்று இந்துக் கோயில்களே அமைத்தானென்றும் சீரழிந்த நிலேயிலிருந்த 79 இந்துக் கோயில்களேப் புனருத்தாரணம் செய்தானென்ற குறிப்பும் (C. V. LXXIX : 19 – 22) பிறிதோரிடத்தில் 24 கோயில்களேப் புனரமைத் தான் எனவும் வருகிறது. (C. V. LXXIX : 80 – 81) துர்அதிஷ்டவசமாக இக்கோயில்களின் அழிபாடுகள் நமக்குக் கிடைக்கவில்லே.

கலிங்க வம்ச மன்னர்களில் முக்கியமானவன் நிஸங்கமல்லனுகும். (கி. பி. 1187 – 1196) இம்மன்னன் மக்கள் ஆதரவைப் பெறுவதற்காகப் பௌத்த மதத்தின் மேன்மைக்கு உழைப்பவன் தானே எனப் பலவாறு உரைத்தாலும் கூட இவன் வளர்ந்த சூழ்நிலே, சமய நடவடிக்கைகள் ஆகியவை இந்து மதத்தில் இவனுக்கிருந்த ஈடுபாட்டினே எடுத்தியம்புகின் றன. பொலநறுவையிலுள்ள பிறிதிதானகமண்டபப் பாறைக் கல்வெட்டு (E. Z. II. I : 165 - 178) இவனது இளமைக் காலச் சூழ்நிலே பற்றிக் கூறுகிறது. இந்துவாகிய இவன் தாய் தந்தையர் பெயர்கள் முறையே பார்வதி, ஜெய கோப ஆகும். இவன் பிறந்த நேரம், நட்சத்திரங்களின் சிறப்பு, இவனது அங்கலட்சணம் ஆகியவற்றை அவதானித்த இவனுடைய தகப்பன் தனது வம்சத்தை அலங்கரிக்க ஒரு திலகத்தைப் பெற்றுவிட்டதாக மகிழ்ந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இக்கல்வெட்டுக் கூறுகிறது. நிஸங்கமல்லனின் இந்துமத நடவடிக்கைகள் பற்றிப் பொலநறுவை, கந்தளாய் ஆகிய இரு இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் கூறுகின்றன. பொலநறுவையிலுள்ள முதலாவது சிவதேவாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டில் (E. Z. II : 146–148) 'இச்சிவ தேவாலயத்தில் தான் நடாத்திய நவக்கிரக சாந்தியின்போது தன்னைத் தூய்மைப்படுத்துவதற்காகத் தூய்மைச் சடங்கு சார்ந்த ஸ்நானத்தில் ஈடுபட்டான்' என்ற செய்தி காணப்படுகிறது. அத்துடன் இங்கு கிடைத்த பிறிதொரு கல்வெட்டின் மூலம் இவனால் இங்குள்ள பிராமணருக்குப் 'பிராமண சத்திரம்' ஒன்றமைக்கப்பட்டதும் தெரிகிறது. (Paranavitane, S. 1960 : 512) இவனது கந்தளாய் கல் ஆசனக் கல்வெட்டில் (E. Z. II : 287–88) இங்கு நிலவிய "சதுர்வேதி பிரமபுரம்"பற்றிய குறிப்பு வருகிறது. இக்கூற்று சோழர் காலத்தில் அமைக்கப்பெற்ற பிராமணர் குடியிருப்பு தொடர்ந்தும் நிஸங்கமல்லன் காலம் வரை மன்னரது ஆதரவு பெற்று இயங்கியதென்பதை நிரூபிக்கின்றது. அத்துடன் இவ்விடத்தில் "பார்வதி தர்மசாலா" என்றொரு தர்மசாலையையும் இம்மன்னன் ஸ்தாபித்தான். இவன் மேலும் இங்குள்ள கல்லாசனத்திலிருந்து இவ்விடத்தில் நடைபெற்ற இசை, நடன நிகழ்ச்சிகளையும், பார்வதி தர்மசாலையில் தானம் கொடுத்ததையும் அவதானித்ததாகவும் இக்கல்வெட்டுக் கூறுகிறது. ஈழத்தில் இவன் சுற்றுலா மேற்கொண்ட இடங்களில் சிவனொளிபாதம், தேவிநுவர ஆகியனவும் குறிப்பிடப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள ராமேஸ்வரத்தையும் இவன் புனரமைத்ததாகக் கூறப்படுகிறது.

கி. பி. 12ஆம், 13ஆம் நூற்றுண்டுகளில் இந்து மதம் பொலநறுவை, பதவியா, திரிகோணமலை ஆகிய இடங்களில் பெற்றிருந்த சிறப்பினைப் பல்வகையான ஆதாரங்கள் எடுத்தியம்புகின்றன. பொலநறுவையிலுள்ள அகலுண்டாவைச் சந்தியில் கிடைத்துள்ள 12ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டில் இங்குள்ள சிவதேவாலயத்திற்குக் கொடுக்கப்பட்ட தானம் குறிப்பிடப்படுகிறது. அத்துடன் இச்சிவதேவாலயத்திற்கான சிலை கூடச் சோழ நாட்டிலுள்ள ஸ்ரீரங்கத்திலிருந்து கொண்டுவரப்பட்டதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோயிலில் பகல்விளக்கு எரிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை இக்கல்வெட்டுக் குறிக்கிறது. தானப் பொருள்களாகப் பசுக்களும் எருதும் குறிப்பிடப்படுகின்றன. பசுக்களில் ஆறு சினை எய்தப்பட்ட நிலையிலும் ஏனையவை சாதாரண நிலையிலும் அளிக்கப்பட்டன. இவ்வாறு அளிக்கப்பட்டதன் நோக்கம் விளக்கெரிப்பதற்குத் தேவையான நெய்யைத் தொடர்ந்தும் இவைகளிடமிருந்து பெறுவதற்கேயாம். (Veluppillai, A. 1972 : 32–36)

பதவியாவும் சோழர் காலந்தொட்டு இந்து மதம் வளர்ச்சி பெற்ற இடங்களிலொன்ருக விளங்கியது. கி. பி. 12ஆம், 13ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் சாசனத்தில் இங்குள்ள சிவ, காளி கோயில்களுக்கு இவர்கள் கொடுத்த ஆதரவு கூறப்படுகிறது. (Veluppillai, A. 1971 : 46–57) இங்கே கிடைத்த கல்வெட்டில் 'காளி கணம்' பற்றிய குறிப்புண்டு அத்துடன் இக்கல்வெட்டுப் பூரணமாக வாசிக்க முடியாத நிலையில் பா வடிவில் அமைந்து காணப்பட்டாலும் கூட வணிகர் குழுவாகிய "வீரக்கொடியர்" இங்குள்ள சிவன் கோயிலுக்குக் கொடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானத்தைக் குறிக்கிறது. இதில் வரும் 'விக்கிரகஞ் செய்து கொடுத்தோம்' என்ற வசனம் இக்கோயிலுக்காக விக்கிரகங்களையும் இவர்களே அளித்திருக் கலாமென்பதை எடுத்துக்காட்டுகின்றது. (Veluppillai, A. 1972 : 19–22) இச்சந்தர்ப்பத்தில் பா வடிவில் அமைந்துள்ள இங்கே கிடைத்துள்ள கல் வெட்டுப்பற்றிக் கூறுதல் அவசியமாகின்றது. (Veluppillai, A. 1972 : 28–31) இது மூன்றுவது சிவதேவாலயத்தில் பெறப்பட்டது. இதன் காலம் கி. பி. 12ஆம் நூற்றுண்டாகும். இப்பா 'வலகலி' என அழைக்கப்பட்ட சிவன் மீது பாடப்பட்டதாகும். நாயன்மார்களால் கோணேஸ்வரம், திருக்கேதீஸ் வரம்பற்றிப் பாடப்பெற்றுலும் ஈழத்துக் கவிஞரால் சிவன்மேல் பாவுரு வில் பாடப்பெற்ற முதற் கல்வெட்டு இதுவே என இதனைப் பதிப்பித்த பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள். இனிப் பாவை நோக்குவோம். அஃதாவது,

"உத்தமர் தங்கோயில் வலகலி எனலும்
நித்த நியமம் நெறி வளர்
சித்தமுடன் சீர் இளமை சேர்ந்த
பதியில் விளையாரம்ப பேர்இளமை யார்த்துகள்
போதா வாயிரங் கொண்டுரைப்பர் திரு
சுத்தமாக முயன்ருன் முயன்ற திரு."

இப்பாடலிலே உயிரின் தோற்றுவாயாக இருப்பவரும், என்றும் இளமை குன்றுதவருமான சிவனின் பாதங்களின் தூசிக்குச் சமர்ப்பணம் செய்யும் ஆயிரம் மலர்கள்மூலம் ஈட்டும் அருட்செல்வத்திற்கு ஒப்பாகத் தூய முறை யில் ஈட்டப்பட்ட (வணிகரின்) செல்வம் சமப்படுத்தப்பட்டுள்ளது. இக் கல்வெட்டை ஆராய்ந்த பேராசிரியர் வேலுப்பிள்ளையவர்கள் இக்கல்வெட் டுச் சான்று 'சிவபாத வணக்கம்' பதவியாவில் இக்காலத்தில் நிலைத்திருந் தது எனவும் கூறியுள்ளார். சிவனது பாத வழிபாடு இக்காலகட்டத்தில் ஈழத்தில் மட்டுமன்றித் தென்கிழக்காசிய நாடுகளிலும் நிலைத்திருந்தது என்பது ஈண்டு கவனிக்கத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் பதவியாவில் 1970இல் கண்டெடுக்கப்பட்ட நந்தி இலட்சனையையுடைய ஒரு வெண்கல முத்திரைபற்றிக் குறிப்பிடுதல் அவ சியமாகின்றது. (இந்திரபாலா, கா. 1972 : 76) இது பதவியாவிலுள்ள சிவதேவாலயமொன்றிலேதான் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காலம் கி. பி. 13ஆம் நூற்றுண்டாகும். இதன் ஒரு பக்கத்தில் நந்தி ஒரு விரிந்த தாமரை மலரிலுள்ளது. நந்தியின் இருமருங்கினும் குத்துவிளக்குகள் காணப் படுகின்றன. நந்தியின் மேலே பிறைச் சந்திரனும், குடையும் உள்ளன. அத்துடன் இம்முத்திரையில் நந்தி வலதுபுறம் பார்த்தவண்ணம் கால்களைப் பூரணமாக மடக்கிக்கொண்டு காணப்படுகிறது. இதனை யாழ்ப்பாண மன்னரது நாணயங்களோடு ஒப்பிடும்போது அவர்கள் நாணயங்களிலும் நந்தி, பிறை, நட்சத்திரங்கள் உள. அத்துடன் யாழ்ப்பாண மன்னரது நாணயங்களில் நந்தி இடது புறம் பார்த்தவண்ணம் ஒரு காலைப் பூரண மாக மடக்காது சிறிது உயர்த்திக்கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. எனினும் பதவியா முத்திரையின் முக்கியத்துவம் இதில் பொறிக் கப்பட்ட சாசனத்திற்றுன் உண்டு. இச்சாசனத்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஸ்வஸ்தி ஸ்ரீமத் த்விஜா வாஸ
ஸ்ரீபதிக்ராம வாஸிநாஹ்
மஹேஸஸ்ஸ்யை ததிந்த்ராதி
மௌலி ராஜித ஸாஸநம்''

எனப் பரணவித்தானு அவர்கள் படித்துள்ளார். (இந்திரபாலா, கா. 1972 : 76) வடமொழியிலமைந்த இச்சாசனத்தின் எழுத்துக் கிரந்தத்திலுள்ளது. இதனைத் தமிழில் 'ஸ்வஸ்தி! சீருடைய பிராமணர் வசிக்கின்ற ஸ்ரீபதி கிராமத்தில் வதிகின்ற, இந்திராதியோருடைய முடிகளினாலே அலங்கரிக்கப்பட்ட, மஹேஸருடைய சாசனம்' என மொழிபெயர்த்துள்ளார் பேராசிரியர் இந்திரபாலா அவர்கள். இச்சாசனத்தில் பதவியாவுக்கும் ஸ்ரீபதிக் கிராம என்ற பெயர் காணப்படுகிறது. இதனை முறையே ஸ்ரீ. பதி, கிராம என்று மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் 'பதி' என்பது இதன் பழைய பெயராகும். இதனுடன் திரு என்ற பொருள் தரும் 'ஸ்ரீ' என்ற சொல்லும், 'ஊர்' எனப் பொருள்படும் 'கிராம' என்ற சொல்லும் சேர்த்தே இவ்வாறு 'ஸ்ரீ பதி கிராம' என இது அழைக்கப்பட்டது. இதிலே வரும் 'மகேசர்' என்ற சொல்பற்றிய விளக்கம் அவசியமாகின்றது. சிவனுக்கும் 'மகேஸ' என்ற பெயர் காணப்படுவதாலும், இம்முத்திரை சிவ தேவாலயத்திற் கண்டெடுக்கப்பட்டதாலும் இம்முத்திரை சிவனைக் குறித்தது என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக இத்தேவாலயத்தை நிர்வகித்த சிவனை வழிபட்டோரைக் குறித்தது என்பதே பொருத்தமானதாக அமைகின்றது. பதவியாவிலே 'காளி கணம்' அஃதாவது காளி கோயிலை நிருவகித்தோர்பற்றிய குறிப்பும் காணப்படுவதால் அதேபோல் இச்சிவதேவாலயத்தையும் நிருவகித்தோர் இவ்வாறு 'மகேஸர்' எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் சோழர் காலத்தில் காணப்பட்ட இந்து நிறுவனங்கள் பதவியாவில் கி. பி. 13 ஆம் நூற்றாண்டுவரை நீடித்திருந்ததை இம்முத்திரை உணர்த்துகிறது. பதவியாவில் கவுண்டியை கோத்திரத்தைச் சேர்ந்த பிராமணர் வாழ்ந்ததையும் இங்குள்ள தமிழ்க் கல்வெட்டு எடுத்துக்காட்டுகிறது. (Veluppillai, A. 1971 : 74–75)

இக்காலத்தில் ஈழத்தின் புகழ் பூத்த சிவாலயங்களாகிய திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும், சிறப்புடன் விளங்கின எனலாம். திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள திரிகோணமலை மாவட்டம் ஒரு முக்கியமான மாவட்டமாகவும் விளங்கியதையும் இக்காலச் சான்றுகள் உணர்த்துகின்றன. இதனாற்றான் சோழர் பின்னும் அரசுகட்டிலேறிய விஜயபாகு, விக்கிரமபாகு, கஜபாகு போன்றோர் நடவடிக்கைகள் மட்டுமன்றிக் குளக்கோட்டன் போன்றோர் சமய நடவடிக்கைகளும் இங்கு காணப்படுகின்றன. ஆனால் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இங்கிருந்த இந்து நிறுவனங்கள் சோழர் காலத்தில் சிறப்புடன் விளங்கினாலும் சோழருக்குப் பின்னர் அவற்றைச் சிங்கள மன்னர்கள் எவ்வாறு போஷித்தார்கள் என்பதனை அறியப் போதிய தடயங்கள் தற்போது காணப்படவில்லை. என்றாலும் பொலநறுவை அரசின் வீழ்ச்சியின் பின்னர் பாண்டியரது படைஎடுப்புக்களிலும் இத்தலம் பாண்டியரால் போஷிக்கப்பட்டதற்கான தடயங்கள் காணப்படுவதால் சோழரைத் தொடர்ந்தும் மாதோட்டத்திலுள்ள இந்து நிறுவனங்கள் சிறப்பாக இயங்கின எனக் கொள்ளலாம். துர்அதிஷ்டவசமாகப் பௌத்த மத வரலாற்று நூலாகிய சூளவம்சம் இவைபற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறத் தவறிவிட்டது எனலாம். மன்னர்—சிலாபக் கரையோரம் சோழர் காலத்து வணிகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றதாலும். இப்பகுதியில் தமிழ்க் குடியேற்றங்கள் காணப்பட்டதாலும் ''முன்னீஸ்வரம்'' கூட இக்காலத்தில் முக்கியம் பெற்ற தலமாக விளங்கியிருந்தது எனலாம். (Indrapala, K. 1969) வடக்கே அமைந்த, யாழ்ப்பாணமாலையில் கூறப் படும் திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி ஆலயங்கள் சோழர் காலத்தில் பேணப்பட்டிருக்கலாம். இவ்வாலயங்களோடு தொடர்புடைய கதைதான் 'உக்கிரசிங்கன்' கதையாகும். இவ்வாறேதான் மாவிட்டபுரத் துடன் தொடர்புடைய மாருதப்புரவல்லிக் கதையாகும். ஓரளவில் இத் தலங்களது தலபுராணமாக இவை அமைந்தாலும்கூட யாழ்ப்பாணத் தில் கருங்கல் காணப்படாததால் சுண்ணும்புகொண்டே இக்கோயில்கள் கட்டப்பட்டன என்பதாலும் பலமுறை இவை கட்டப்பட்டன எனக் கொள்ளலாம். இவ்வாறு பலமுறை கட்டப்பட்ட சான்றுகள் எமக்குக் கிடைக்காவிட்டாலும் ஒருசில சான்றுகள் எமக்குக் கிடைக்கின்றன. இவற் றுள் மேற்கூறிய கதைகள் ஒருசிலவாகும். இதேபோன்று சோழர் தாபித்த நல்லூர்க் கோயிலின் தொடர்ச்சியான வரலாறு எமக்குக் கிட்டவில்லை. இவ்வாறேதான் வல்லிபுரம், புன்னலை ஆகியவற்றில், வளர்ச்சி பெற்ற மாயோன் வழிபாட்டுத் தலங்களின் வரலாறும், செல்வச்சந்நிதியில், தெற்கி லுள்ள கதிர்காம வழிபாட்டு முறையிலியங்கிய முருக வழிபாட்டின் வர லாறும் நமக்குக் கிடைக்கவில்லை.

நிஸங்கமல்லனது ஆட்சியைத் தொடர்ந்து பொலநறுவையில் இரண்டு சகாப்தங்களாகக் கலிங்கர் ஆட்சி நடைபெற்றது. பின்னர் கி. பி. 1215இல் கலிங்க வம்சத்தவனுகிய மாகனது படைஎடுப்பு நிகழ்ந்தது. ஆராய்ச்சி யாளர், மாகன் கி. பி. 1247 வரையும் பொலநறுவையில் ஆட்சி செய்த பின்னர் யாழ்ப்பாணம் சென்முன் எனக் கருதுகின்றனர். இதனுல் யாழ்ப் பாண அரசைத் தோற்றுவித்த 'விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி' இவனே எனக் கருதுகின்றனர். யாழ்ப்பாணவைபவமாலை போன்ற நூல்கள் இவ் விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி தென்னிந்தியாவிலிருந்து பல உயர் குலத் தவரையும் பல்வேறு சாதிப் பிரிவினரையும் யாழ்ப்பாணத்திலும் வன்னி யிலும் குடியேற்றினன் எனக் கூறுகின்றன.

சூளவம்ச ஆசிரியர் கூற்றின் மூலம் மாகனது படையில் 24,000 பேர் இருந்தமை தெளிவாகின்றது. இதில் பெரும்பான்மையோர் தமிழராகும். இதனுற்போலும் மட்டக்களப்பு மான்மியத்தில் மாகன் தமிழ் மதமாகிய சைவத்தைப் பரப்பியவன் என விளிக்கப்படுகிறுன். மட்டக்களப்பு மான் மியம் மாகன் தோப்பையிலுள்ள (பொலநறுவையில்) புத்த விகாரை, பௌத்த ஆலயங்கள் எல்லாவற்றையும் இடித்துப் புத்த குருமாரைத் தேடிப்பிடித்துச் சிறைப்படுத்தியது குறிப்பிடப்பட்டுள்ளது. (நடராசா, F. X. C. 1962 : 53) சூளவம்சம் மாகனது நடவடிக்கைகள்பற்றி மேலும் விரிக்கிறது. தவருன நம்பிக்கைகளை மக்கள் கடைப்பிடிக்கும் வண்ணம் அவர்களை நிர்ப்பந்தித்ததோடு கலப்பின்றி இயங்கிய நான்கு வர்ணங்களுக்கு மிடையேயும் குழப்ப நிலையை உருவாக்கினுன். (C. V. LXXX : 75) அத் துடன் கிராமங்கள், வயல்கள், வீடுகள், தோட்டங்கள், அடிமைகள், மாடு கள், எருமைகள் போன்ற எவை எவை சிங்களவருக்குச் சொந்தமாக இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனவோ அவற்றை எல்லாம் பறித்துக் கேரளருக்குக் கொடுத்தான். விகாரைகள், பிரிவேனுக்கள், ஏனைய வழிபாட்டிடங்களைத் தனது படைவீரரின் வசிப்பிடங்களாக மாற்றினன். பௌத்த மதத்திற்குச் சொந்தமான செல்வங்கள், சொத்துக்கள் ஆகியனவற்றை அபகரித்து நரகத்திற்குப் போவதற்கான பல்வகையான பாவங்களுக்கும் உரித்தானன். (C. V. LXXX : 61 – 79) மாகன் பிக்குமார்களைச் சித்திரவதை செய்ததோடு அவர்களது வருமானங்களைப் பறித்ததால் பலர் தமிழகத்திலுள்ள சோழ, பாண்டிய மண்டலங்களுக்குச் சென்றனர் எனச் சூளவம்சம், பூஜாவலிய போன்ற நூல்கள் கூறுகின்றன. பிறிதோரிடத்தில் சூளவம்சம் மாகன் கூட்டத்தினர் 'பிரபலமான பல நூல்களைப் பிய்த்தெறிந்து கிழித்து அங்குமிங்குமாக வீசி எறிந்தனர்' எனவும் கூறுகின்றது. (C. V. LXXX : 67) மாகனது இந்த நடவடிக்கைகளுக்குப் பலர் பலவித வியாக்கியானம் அளிக்கின்றனர். இதில் பிரதானமானது அரசியல் நோக்கம் ஆகும். அதாவது மக்களைக் கொடூரப்படுத்தி அவர்களுக்கு அழிவை ஏற்படுத்தினல் தனது ஆட்சிக்கு எதிராக அவர்கள் கிளர்ச்சி செய்யமாட்டார்கள் என்பதாகும். தனது அரசியல் சாதனைகளுக்குப் பௌத்த சங்கம் பெரிய தடையாக இருந்ததால் அவர்களை இவ்வாறு கொடுமைப்படுத்தினன் எனவும் கூறுகின்றனர். மாகன் மக்களைக் கொள்ளையடித்துத் தனது படைவீரரையும் திருப்தியடையச் செய்தான் என்பதும் மறுப்பதற்கில்லை. இவையெல்லாவற்றையும்விட மாகனது மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு அவன் தழுவிய மதமாகிய வீரசைவமே காரணம் எனவும் சிலர் வாதிடுகின்றனர். (Liyanagamage, A. 1968 : 98–132) இவ்வீரசைவம் கி. பி. 12ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் வளர்ச்சி கண்டது. ஈழத்திலும் கஜபாகு (II) மன்னன் காலத்தில் திருக்கோணேஸ்வரத்தின் அர்ச்சகர்களாக இவர்கள் காணப்பட்டனர். இவர்களைப் பாசுபதர் எனவும் அழைப்பர். லிங்கத்தைக் கழுத்தில் தரித்துச் சென்றதால் 'லிங்காயர்கள்' எனவும் இவர்கள் அழைக்கப்பட்டனர் இவர்கள் இந்து மதத்தின் ஏனைய பிரிவுகளைக்கூட வெறுத்தவர்கள். இவர்கள் நம்பிக்கை யாதெனில் ஆத்மா சிவனிடத்திலிருந்தே புறப்பட்டு இறுதியில் சிவனிடமே ஒடுங்குகின்றது என்பதாகும். இவ்வாறு ஒடுங்கும் அனுபவத்தை 'லிங்காங்க சாமாரஸ்யம்' என இவர்கள் அழைப்பர்.

மட்டக்களப்பில் மாகன் மேற்கொண்ட சமய நடவடிக்கைகளுக்கான சான்றுகள் உள. பொதுவாக இவனைத் தமிழ் மன்னனென்றே மட்டக்களப்புக் கோயில்களில் இருக்கும் பட்டயங்கள் கூறுகின்றன. பழுகாமத்தில் அரசிருக்கையை அமைத்திருந்த இவன் பட்டிருப்புக்கருகாமையிலுள்ள போரைதீவுச் சித்திரவேலாயுத சுவாமி கோயில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் ஆகியவற்றைக் கட்டி அவைகளுக்கு நெல் வயல்களையும் மானியமாகக் கொடுத்தான். (கந்தையா, வி. சீ. 1964 : 408–409) இச்சந்தர்ப்பத்தில் திருக்கோயிலிலுள்ள மேற்படி சித்திரவேலாயுத சுவாமி கோயிலே மட்டக்களப்பிலுள்ள முதலாவது திருப்படைக் கோயில் மட்டுமன்றித் தேசத்துக் கோயில் என மக்களால் போற்றப்படுவதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயிலும் மற்றொரு திருப்படைக் கோயிலாகும். இக்கோயில்களின் நிருவாகம், கலிங்க வேளாளரிடமே இருந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது. தான்தோன்றீஸ்வரர் கோயிலில் பூசை செய்யும் பிரிவினர் இன்றும் வீரசைவத்தைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமரென அழைக்கப்படுகின்றனர். சீவன்முத்தர் நிலையிலே இருப்பவர்கள்தான் இவர்கள். முன்பொருகால் பண்டைய கிழக்கிலங்கைக் கோயில்களிலெல்லாம் இவர்களே பூசகர்களாக இருந்தனர் என்றும் ஆனால் இன்று தான்தோன்றீஸ்வரர் கோயிலில் மட்டுமே இவர்கள் பூசகர்களாக விளங்குகின்றனர் எனவும் கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு முழுவதுமே தமிழ் மதமே வளரச்செய்த மாகன் அங்குள்ள குடிகளை ஏழாகப் பிரித்து அவர்களுக்கு வகுத்த கோயிற் கடமைகளையும் கூறியுள்ளது. அவையாவன;

''சொல்லரிய விளக்கேற்றல் பூவெடுத்தல் தூசகற்றல் சாணமிடல் அணி விளக்கல் நல்ல மலர்மாலை கட்டல் மேளமீட்டல் நற்சந்தனமரைத்திடுதல் நெல்லுக்குத்தல் துல்லியமாய் வளர்ச்சிவிகை ஏந்திச்செல்லல் தானிகட்டல் அமுது வைத்தல் முதன்மைபாப்பான் வல்லபதம் நீர் வார்த்தல் அகத்தில் தொண்டு புரியுமென்று மாகோனும் வகுத்துப் பின்னும்''

என்பதாகும். எனவே மாகனது வருகை கிழக்கு மாகாணத்தில் இந்துமத வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாக அமைந்தது எனக் கொள்ளலாம். வடக்கே யாழ்ப்பாண ராச்சியத்தைத் தோற்றுவித்த இவனது சமய நடவடிக்கைகள்பற்றிப் பிறிதோரிடத்தில் ஆராயப்படும்.

திரிகோணமலையில் மாகன் காலத்தில் இந்து சமய நடவடிக்கைகளில் ஈடுபட்ட மன்னனொருவனாகிய 'சோடகங்கன்' கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. (Paranavitane, S. 1955 : 170–173) இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1223 ஆகும். சோடகங்கன் என்ற பெயரைக் குளக்கோட்டன் சூடியிருந்ததாகத் தக்ஷிணகைலாச புராணம் கூறுகின்றது. இதனால் இரு பெயர்களும் ஒன்றையே குறிக்கின்றது எனலாம். இதனால் குளக்கோட்டனின் காலம் கி. பி. 5 ஆம் நூற்றாண்டல்ல, ஆனால் 13 ஆம் நூற்றாண்டே எனவும் அறிஞர் கொள்ளுகின்றனர். திரிகோணமலையில் சோழர் பணியும் மரபுகளும் நன்றாக வேரூன்றியமையால் கங்க வம்சத்தவன் சோழரைக் குறிக்கும் 'சோழ' என்ற அடைமொழியையும் சேர்த்திருக்கலாமெனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வேலுப்பிள்ளை, ஆ. 1985) இக்குளக்கோட்டன் மனுநீதிகண்ட சோழனாகப் போற்றப்படுவதும், கோணேசர் கல்வெட்டில் சோழ மன்னன் ராஜராஜனை நினைவூட்டும் வகையில் 'ராசராசனாகிய குளக்கோட்டுராசன்' என்ற குறிப்பு வருவதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. இனிக் கல்வெட்டை நோக்கும்போது வடமொழியிலமைந்த இக்கல்வெட்டின் பெரும்பகுதி உடைந்துவிட்டாலும் கூட எஞ்சிய பகுதி கோணேஸ்வரக் கோயிலின் ஒரு பகுதியே எனப் பரணவித்தான இனங்கண்டுள்ளார். இக்கல்வெட்டைப் பதிப்பித்த பரணவித்தான அன்று தெரிவித்த கருத்து மிக முக்கியமானதொன்றாகும். அஃதாவது,

''மகாசேனன் மேற்கொண்ட துன்புறுத்தல்களின் விளைவாகப் பௌத்த சமயத்தைச் சாராத சமயங்களின் கோயில்கள் தற்காலிகமாக (திரிகோணமலையில்) அழிக்கப்பட்டாலும் மக்களுடைய விசுவாசத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்குப் பிராமண நிலையங்களுடன் பௌத்த நிலையங்கள் போட்டியிட்டபொழுதிலும் பௌத்த சமயம் இத்துறைமுக நகரமாகிய திரிகோணமலையிலிருந்து பின்வாங்கவேண்டியிருந்தது. போத்துக்கேயர் மூர்க்கத்தனமாக இந்து சமயத்தை நசுக்க நினைத்தபோதிலும் இன்று வரை இந்து சமயமே அங்கு நிலைத்துநிற்கிறது.

குளக்கோட்டன் புனருத்தாரணம் செய்த கோணேஸ்வர ஆலயம் பற்றிக் கோணேசர் கல்வெட்டு பின்வருமாறு உரைக்கிறது. (சோமஸ்கந்தர், மா. *1968*) அஃதாவது,

'திருந்து கலி பிறந்து ஐநூற்றெருபதுடன்
இரண்டாண்டு சென்ற பின்னர்
புரிந் திடபமாதமதில் ஈரைந்தாந் தேதி
திங்கள் புணர்ந்த நாளில்
தெரிந்த புகழ் ஆலயமும் சினகரமும்
கோபுரமும் தேரூர் வீதி
பரிந்து ரத்ன மணிமதிலும் பாபநாசச்சுனையும்
பகுத்தான் மேலோன்.' (பாட்டு *23*)

குளக்கோட்டன் திருப்பணியைப் பிறடறிக் கோட்டையிலுள்ள தமிழ்ச் சாசனமும் நினைவு கூர்கிறது. அச்சாசனத்தில்,

'முன்னே குளக்கோடன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே – மன்னவ பின்
பொண்ணாத தனை இயற்ற அழித்தே வைத்து
எண்ணுரே பின்னரசர்கள்.'

என வருகிறது.

குளக்கோட்டனின் காலம் கி. பி. *436* என வரும் யாழ்ப்பாணவைபவ மாலையின் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாததொன்ருக இருந்தாலும் கூட இவனது நடவடிக்கைகள் பற்றி யாழ்ப்பாணவைபவமாலை தரும் செய்தி முக்கியமானது. (சபாநாதன், குல. *1949 : 8 – 9*). அச்செய்தி பின்வருமாறு அமைந்துள்ளது.

''கி. பி. *436*இல் மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராசன் யாத்திரை பண்ணித் திருக்கோணேசர் மலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகாமத்திற் பழுதுபட்டுக் கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுதுபார்ப்பித்து அக்கிரகாரம் முதலிய வேலைகள் அனைத்தையும் திருத்துவித்துக்கொண்டிருந்தான்.''

மேலும் தெரிவிக்கையில்,

''குளக்கோட்டு மகாராசன் திருப்பணியை நிறைவேற்றி யவ்வாலயப் பணிவிடைகளை நிறைவேற்றுவதற்கும் கோணேச லிங்கத்திற்குப் பூசனை புரிவிப்பதற்கும் செலவு வரவுகளுக்காக ஏழு நாடுகளில் வயல் நிலங்களையும், தோப்புக்களையும் ஏற்படுத்தி அவைகளிற் பயிரிட்டு வருமானஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியிருத்தித் தன் நாட்டுக்கு மீண்டான். அந்நாள் முதல் அவ்வருமானங்களால் ஆலயப் பணிவிடைகளும் அந்தணர் அக்கிரகாரங்களும் மடங்களும் சம்பிரமமாகச் சிறந்து விளங்கின."

கோணேசர் கல்வெட்டு, திருக்கோணசல புராணம், தட்சணகைலாச புராணம் ஆகியவற்றில் குளக்கோட்டன் கோணேஸ்வரக் கோயிற் கடமைகளை நிறைவேற்ற மேற்கொண்ட பணிகள் பற்றிய குறிப்பு வருகிறது. இவன் தமிழ்நாட்டிலுள்ள மருங்கூரிலிருந்து வளவர் சாதியைச் சேர்ந்த முப்பது குடும்பங்களைத் திரிகோணமலையிலமர்த்தித் 'தானத்தார்' என்ற பட்டப் பெயரையும் அவர்களுக்களித்தான். காரைக்காலிலிருந்து இருபது குடும்பங்களை அழைத்துவந்து 'பண்டாரத்தார்' என்ற பட்டம் கொடுக்கப் பட்டது. திரிகோணமலையிலுள்ள பள்ளவெளி அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது. திருநெல்வேலியிலிருந்து காராளர் சாதியைச் சேர்ந்த பிரபுத்துவ மரபினர் அழைத்து வரப்பட்டு அவருக்கு 'முதன்மை' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. கோயில் விழாக்களுக்கு இவரே பொறுப்பாகவிருந்தார். இவருக்குக் கட்டுக்குளத்தூர், நிலாவெளிக் கிராமங்கள் கொடுக்கப்பட்டன. கோணேசர் கல்வெட்டு மேலும் ஐந்து ஆசாரிகள் (சிற்பிகள்) சோழ நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு திரிகோணமலையில் குடியமர்த்தப் பட்டதைக் கூறுகிறது. இறுதியாக மதுரையிலிருந்து ஒருவன் அழைத்து வரப்பட்டு அவனுக்கு வன்னிபம் (வன்னியன்) என்ற பட்டமும் கொடுக்கப் பட்டது.

சற்று விரிவாக ஆராய்ந்தால் மருங்கூரிலிருந்து அழைத்துவரப்பட்ட முப்பது குடிகளது பரம்பரையினர் இறைவன் முன் ஆலாத்தி எடுத்தல், நடனமாடல், பன்றி குற்றல் போன்ற கடமைகளைச் செய்தனர். பன்றி குற்றல் என்பது வேட்டைத் திருவிழாவையே குறிக்கும். இவை தானத்தாரின் கடமைகளாக இருந்தன. வரிப்பத்தார் பட்டாடை கொய்தல், கட்டல், புட்ப பத்திரங்கள் எடுத்தல், தூர்தல், விளக்கேற்றல், தளிசை தட்டுமுட்டு இவைகளை விளக்குதல், தீர்த்தமெடுத்தல், நெல்லுக் குத்துதல், சாணம் மெழுகல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல் ஆகிய கடமைகளிலீடுபட்டிருந்தனர். தானத்தார், வரிப்பத்தார் ஆகியோரிடையே நடுநின்று நீதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டி நகரை அரசு செய்வது மதுரையிலிருந்து அழைத்துவரப்பட்ட தனியுண்ணாப் பூபாலனது கடமையாகவிருந்தது. குளக்கோட்டன் அமைத்த கோயில் பாண்டியர் கலை மரபில் அமைந்திருந்த தென்பதை நிரூபிக்கும் வண்ணம் இப்பகுதியிற் சான்றுகள் கிடைத்துள்ளன. போத்துக்கேயர் இக்கோயிலை இடித்த போது இதன் அழிபாடுகள் கடலில் வீழ்ந்தன. இவற்றை ஆதர் கிளாக், மைக் வில்சன், ரொட்னி ஜொங்க்லஸ் ஆகியோர் படம்பிடித்துள்ளனர். (இந்திரபாலா, கா. 1970 : 26). இவற்றுள் தாமரைச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தூண்கள், கதவு நிலைகள் ஆகியவை அடங்கும்.

மட்டக்களப்பு மான்மியத்தில் ஆடகசவுந்தரி மகாசேனனை மணந்தாள் எனக் குறிக்கப்படுகிறது. இம்மகாசேனன் உண்மையிலே குளம் தொட்டு வளம் பெருக்கிய குளக்கோட்டனே. இம்மன்னனும் கோணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத்திற்குத் திருப்பணிகள் செய்தவன் கூட. ஆடகசவுந்தரியின் மகனே சிங்ககுமாரன் என மட்டக்களப்பு மான்மியம் கூற, கோணேசர் கல்வெட்டும் இதனை உறுதிப்படுத்துவதால் இச்சிங்ககுமாரன்தான் யாழ்ப்பாண வைபவமாலையில் 'உக்கிரசிங்கனுக' வருகிறுன் எனப் பரணவித்தான கருதுவது நியாயமாகத் தெரிகிறது. உக்கிரசிங்கன் – மாருதப்புரவல்லி கதைகள் கி. பி. 8 ஆம் நூற்றுண்டெனக் கொள்ளப்பட்டாலும்கூட இக் கதையில் ஒரு வரலாற்று உண்மை உண்டு. அஃதாவது பொலநறுவையில் மாகன் ஆட்சி நடைபெற வட, கிழக்குப் பிராந்தியங்களில் இத்தகைய குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தனர் என்பதே. மாருதப்புரவல்லி பற்றி யாழ்ப்பாணவைபவமாலைச் செய்தி பின்வருமாறு அமைகின்றது.

'மாருதப்புரவல்லி தனக்குக் குதிரைமுகம் நீங்கிய காரணத்திஞற் கோயிற் கடவையென்னுங் குறிச்சிக்கு மாவிட்டபுரம் எனப் பெயர் சூட்டி அவ்விடத்திலே கந்தசாமி கோயிலைக் கட்டுவிக்க ஆரம்பித்து அதற்கு வேண்டிய சகல வஸ்துக்களும் விக்கிரகங்களும் பிராமணரும் வரும்படி பண்ணவேண்டுமென்று பிதாவாகிய திசைஉக்கிரசோழனுக்குத் திருமுகம் அனுப்பினுள். அப்போது திசையுக்கிரசோழன் சகல ஆயத்தங்களும் பண்ணிக்கொண்டு பெரிய மணத்துளார் என்னும் தீட்சிதர் மூலம் சகல தளபாடங்களையும் கந்தசாமி, வள்ளியம்மன், தெய்வநாயகி அம்மன் விக்கிரகங்களையும் மணத்துளார் கையில் ஒப்புவித்து அனுப்பிவைத்தனன். தீட்சிதர் அவைகளைக் கொண்டு வந்து காசாத்துறையில் வந்திறங்கினுர். கந்தசாமி விக்கிரகங்கள் வந்திறங்கிய காரணத்தால் அத்துறை காங்கேசன்துறை எனப் பெயர் பெற்றது.'

எவ்வாருயினும் சிவ, முருக, மாயோன், அன்னை வழிபாடுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பண்டுதொட்டு நிலவியவை. (சிற்றம்பலம், சி. க. 1984) இத்தகைய வழிபாட்டுத் தலங்கள் காலத்திற்குக் காலம் புதுப்பித்துக் கட்டப்படுவதும் மரபு. இத்தகைய மரபொன்றையே மாருதப்புரவல்லி, உக்கிரசிங்கன் கதைகள் பிரதிபலிக்கின்றன என எண்ணத் தூண்டுகின்றது. சோழர் காலத்தில் நல்லூரிலுள்ள கோயில் பற்றிக் கண்டோம். இவ்வாறே மாயோன், அன்னை வழிபாட்டிற்குரிய வல்லிபுரம், பொன்னுலை, நாகேஸ்வரி அம்மன் ஆலயங்களும் சிறப்புற்றிருந்திருக்கும். துர்அதிஷ்டவசமாக இவைபற்றிய விபரம் நமக்குக் கிட்டவில்லை. வன்னி மாவட்டத்திலும் உருத்திரபுரம் சிவன் கோயில், ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில் போன்றவையும் மாகனது ஆதரவைப் பெற்றிருக்கலாம்.

இக்கால இந்துக் கோயில்களை நோக்கும்போது பொலநறுவையிலுள்ள 2, 5, 6 இலக்கமுள்ள சிவதேவாலயங்களை, விட ஏனையவை கி. பி. 12 ஆம், 13 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தனவாகும். இவற்றுள் பெரும்பாலானவை மாகனது ஆட்சியில் கட்டப்பட்டனவாகும். இப்பிறபட்ட சிவதேவாலயங்களில் மூன்ருவது சிவதேவாலயத்தைவிட ஏனையவை செங்கல்லினுலேயே அமைக்கப்பட்டன. முதலாவது சிவதேவாலயம்கூடப் பாண்டியர் கலைப் பாணியில் கட்டப்பட்டது. விஷ்ணுதேவாலயங்களில் இரண்டாவது விஷ்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயத்தைவிட ஏனையவை செங்கற்களினாலே கட்டப்பட்டன. பொல நறுவையைவிட வடமத்தியமாகாணத்திலும் பல கோயில்கள் இருந்தன. ஆனால் இவை அழிந்துவிட்டன. எனினும் இவையிருந்தன என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் இவ்விடங்களிலே கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள் அமைகின்றன. கிங்குராம என்ற இடத்தில் அக்கினி, யமன், இந்திரன் ஆகியோரது வெண்கல விக்கிரகங்கள் கிடைத்துள்ளன. இவ்வாறேதான் மஹாகணதராவ என்ற இடத்தில் சாமுண்டி தெய்வத்தின் புடைப்புச் சிற்பமும் சப்தமாத்திரிகர்களது புடைப்புச் சிற்பமும் கிடைத்துள்ளன. மொரகொடவீவவில் நடமாடுபவர்களுடைய புடைப்புச் சிற்பம் கொண்ட ஒரு தூண், மண் விளக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அநுராதபுர மாவட்டத்தில் ''வேரகல'' என்ற இடத்தில் அர்த்தநாரீஸ்வரரது விக்கிரக மொன்று கிடைத்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கந்தசாமிமலை, குருந்தனூர் ஆகியவற்றிலும் பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த கோயில்களின் அழிபாடுகள் உள. (இந்திரபாலா, கா. 1970 : 30–40)

திரிகோணமலையில் கோணேஸ்வரத்தைவிட தம்பலகாமக் கோணேஸ் வரமும் குளக்கோட்டனுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. திரிகோண மலையிலிருந்து 25 மைல் தொலைவிலுள்ள பறையனூரிற்றான் துர்க்கையின் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அகஸ்தியரோடு தொடர்புடைய திருக் கரசை கங்குவேலியிலிருந்து எட்டு மைல் தொலைவிலுள்ளது. திருக்கரசைக்கு மற்றொரு பெயர் அகஸ்தியர் ஸ்தானமாகும். இங்கே பரமேஸ்வரன் கோயி லுண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாகனால் அமைக்கப்பட்ட திருக் கோயில், தான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள் பாண்டியர் கலைப்பாணியி லமைக்கப்பட்டன. மேலும் மட்டக்களப்பிலுள்ள ஏனைய சைவ ஆலயங்க ளுக்கு மாகன், குளக்கோட்டன் ஆகியோரது ஆதரவுமிருந்தது. ஆயினும் இதுபற்றி விரிவாக அறிய முடியவில்லை.

பொலநறுவைக் காலத்தில் திராவிடக் கலை முன்னைய காலத்தைவிட உச்சநிலை எய்திய காலமெனவும் கூறலாம். அநுராதபுர காலத்தில் சிங்கள பௌத்த கலையுடன் சங்கமியாது அங்குமிங்குமாகச் சிலசில அம்சங்கள் மூலமே பிரதிபலித்த இக்கலை பொலநறுவைக் காலத்தில் பௌத்த கலை யோடு சங்கமித்துத் தனது செல்வாக்கை எடுத்தியம்பி நிற்கின்றது எனலாம். சோழராட்சியும், சோழரது கலைஞர்களும் இந்நாட்டிற் திராவிடக் கலை வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டமை குறிப்பிடத் தக்கது. சோழர் மறை விற்குப் பின் சோழக் கலை மரபிற் பயிற்சி பெற்ற கலைஞர்கள் திராவிடக் கலை அம்சங்களைப் பௌத்த கட்டிடக் கலையிற் புகுத்தத் தவறவில்லை. சோழ ராட்சி மங்கிய பின்னரும் பல தமிழ்க் கலைஞர்கள் ஈழத்தில் வாழ்ந்தார் கள் என்பதனை எடுத்துக்காட்டுவனவாகப் பதவியா, பொலநறுவை ஆகிய இடங்களிலுள்ள தமிழ்க் கலைஞர்களது தமிழிலமைந்த மேசன் குறியீடுகள் எடுத்தியம்புகின்றன. சிங்கள—திராவிடக் கட்டிடக் கலையின் சங்கமிப்புக்குப் பொலநறுவையிலுள்ள தூபராம சிறந்த உரைகல்லாக அமைகின்றது. (Bandaranayake, Senake. 1974) பொலநறுவையில் மகாபராக்கிரமபாகு அமைத்த மகாதூபி அல்லது தெமளதூபி கூடத் தமிழ்க் கலைஞர்களின் படைப்பே. இக்காலத்தில் ஆக்கப்பட்ட சந்திரவட்டக் கல்லிலும் இந்து மதச் செல்வாக்குக் காணப்படுகிறது. உதாரணமாக அநுராதபுர காலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரவட்டக் கல்லில் யானை, எருது, சிங்கம், குதிரை, அன்னம் ஆகியவை எல்லாம் ஒரே நிரையிற் காணப்பட பொலநறுவைக் காலச் சந்திரவட்டக் கல்லில் இவை தனி நிரையிற் காணப்படுவதோடு இந்துக்களின் புனிதப் பொருளாகிய எருது இவற்றில் இடம்பெருததும் ஈண்டு கவனிக்கத் தக்கது. பௌத்த கட்டிடக் கலையிற் பொலநறுவைக் காலத்தில் விக்கிரக சாலைக ளான 'பிரதிமாகர' என்ற கட்டிட அமைப்புக்கள் மலிந்து காணப்படுவ தும் இந்து மதச் செல்வாக்கே எனக் கொள்ளப்படுகிறது.

பிராமணர் செல்வாக்கு முன் எப்போதுமில்லாத அளவுக்கு உயர்ந்து காணப்பட்டது. அநுராதபுர காலத்திலும் 'புரோகிதர்' பதவி அரண் மனையில் ஒரு முக்கிய பதவியாக இருந்தாலும் அரண்மனையில் பௌத்த மதத்திற்கே முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. ஆனுல் பொலநறுவைக் காலத்திலோ எனில் அரண்மனையில் இந்துச் செல்வாக்கு மேலோங்கிய தோடு புரோகிதரின் செல்வாக்கும் மலிந்தது. வடமொழிக்கு முன்னரை விட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதோடு வடமொழி நீதி சாஸ்திரங் களை அரசியற் தத்துவமாகவும் மன்னர் கைக்கொண்டனர். மனுஸ்மிருதி, கௌடில்யனது அர்த்த சாஸ்திரம் போன்றன இக்காலத்தில் செல்வாக்குப் பெற்ற நூல்களாக மன்னரால் கைக்கொள்ளப்பட்டன. சூளவம்சத்திற் கூட வடமொழிக் காவியங்களின் செல்வாக்கு மலிந்து காணப்படுவது ஈண்டு நோக்கற்பாலது. இரண்டாவது விஜயபாகு (கி. பி. *1186 – 1187*) 'பராக் கிரமபாண்டியன் (கி. பி. *1212 – 1215*) ஆகியோர் மனுதர்மசாஸ்திர விதி களுக்கமையவே ஆட்சி நடாத்தினர் எனச் சூளவம்சம் கூறுகிறது. (C. V. LXXX *:* 9 , 53) எனவே பிராமணர்கள் சிங்கள அரசில் பிரிக்க முடியாத பிரிவினராக விளங்கினர். இதை மனதிற்கொண்டே மெண்டிஸ் அவர்களும் பிராமணர்களின் செல்வாக்குக்கான காரணத்தைப் பின்வரு மாறு குறிப்பிடுகிருர். "பிராமணர்கள் பௌத்த பிக்குகளுடன் நேரடி யாக மோதவில்லை. (காரணம்) இவர்கள் துறவிகளல்லர். பிராமணர் களது பிரதான கடமைகளாக வீட்டுக் கிரியைகளும் யாகம் நடாத்துவ துமே அமைந்தன. இத்தகைய கிரியைகள் தமது எல்லைக்கப்பாற்பட்டவை எனப் பௌத்த குருமார் நினைத்தனர்". (Mendis, G. C. 1947 *:* 60 – 61)

இக்காலத்தில் அரச தத்துவத்தில் மனிதன் தெய்வீகத் தன்மை வாய்ந் தவன் என்ற கருத்து வலுப்பெற்றதற்கும் இந்து சாஸ்திரங்களின் செல் வாக்கே காரணம் எனலாம். சோழர் கல்வெட்டுக்களில் 'உடையார்', 'தேவர்' என்ற சொற்கள் காணப்பட்டாலும் கூட தேவர் என்ற சொல்லே பரவலாக உபயோகிக்கப்பட்டது. இம்மரபைச் சோழரின் பின்வந்த சிங் கள அரசரும் பின்பற்றினர். அநுராதபுர காலத்தில் மன்னனின் பட்டப் பெயர்களாக மகாபருமக, மகாராஜ காணப்பட்டன. ஆனுல் பொல நறுவைக் காலத்தில் மகாபருமக வழக்கொழிந்தது. மகாராஜ என்பது வழக்கிலிருந்தாலும் சாம்ராஜ்ஜ தத்துவத்தை வெளிக்காட்டும் 'சக்கர வர்த்தி' என்ற சொல்லே பிரபல்யம் பெற்றுப் பொலநறுவைக் காலத்தில் திகழ்கிறது. இச்சந்தர்ப்பத்தில் சோழர் காலக் கல்வெட்டுக்களில் 'திரி புவனச் சக்கரவர்த்திகள்' என அவர்கள் வர்ணிக்கப்படுவதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. இஃது அவர்களது வீரியச் செயல்களையே பிரதி பலிக்கின்றது எனலாம். ஈழத்திலும் அநுராதபுர காலத்தில் மன்னர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள் பெருமளவுக்கு அவர்கள் பௌத்த மதத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டினைப் பிரதிபலிப்பனவாக இருக்க இக்கால மன்னர்களின் பெயர்கள் அவ்வாறின்றி அவர்களது வீரத்தன்மையைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன. விஜயபாகு, கஜபாகு, விக்கிரமபாகு, பராக்கிரமபாகு போன்ற பெயர்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாக அமைகின்றன. மன்னர்கள் இக்காலத்தில் தெய்வீக நிலையிலேயே வைத்துப் பேணப்பட்டனர். மனுஸ்மிருதியில் இவ்வம்சம்பற்றிக் கூறப்படுபவை இக்காலக் கல்வெட்டுக்களிலும் கூறப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் முதலாவது பராக்கிரமபாகுவின் தேவநாகலக் கல்வெட்டில் அம்மன்னன் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறான் என நோக்குவது பொருத்தமானதாகும். (E. Z. III : 312–315) அது கூறுவதாவது,

> "மூர்க்கத்தனத்திலும், அனல் கக்குகின்ற சக்தியிலும் சூரியனையும், வீரத்தில் மகேஸ்வரனையும், இறுமாப்பில் உபேந்திராவையும், அரசனுக்குரிய பண்பில் தேவர்களின் தலைவனாகிய இந்திரனையும், செல்வச் செழிப்பில் செல்வத்தின் தெய்வமாகிய குபேரனையும், உயிர்களுக்கு இன்பத்தை அருளுவதில் கீர்த்தி கிறுவையும், ஞானத்தில் தெய்வங்களின் குருவாகிய பிரகஸ்பதியையும், மென்மையில் சந்திரனையும், அழகில் கந்தர்வரையும், அன்பில் போதிசத்துவரையும் இவர் விஞ்சுகிறார்"

என்பதாகும். முதலாவது விஜயபாகுவின் அம்பகமுக பாறைக் கல்வெட்டிலும் இதே தொனி காணப்படுவதும் ஈண்டு நோக்கற்பாலது. (E. Z. II : 202–218) மனுஸ்மிருதியில் அரசர்கள் மனித உருவில் காணப்பட்டாலும் தெய்வங்களே என்று குறிப்பிடுவதுபோன்று நிஸங்கமல்லனும் தனது கல்பொத்த கல்வெட்டில் இவ்வாறு கூறியுள்ளான். இராசவாகினியில் (Saranatissa, Thera. 1899 : 45) ஆறு தெய்வங்களாகிய யமன், சூரியன், சந்திரன், மிருத்யு, குபேரன், அக்கினி ஆகியோரிலிருந்து படைக்கப்பட்டவர்கள் போன்று அரசர்கள் புவியில் நடந்துகொள்கின்றனர் என வரும் குறிப்பும் மன்னரின் தெய்வீகக் கோட்பாட்டை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளது. இக்காலத்தில் சாதி அமைப்புக்கூட வலுவடைந்து காணப்பட்டது எனலாம். முதலாவது விஜயபாகு சிவனொளிபாதமலையில் தாழ்த்தப்பட்டவர்கள் சென்று வழிபட உரிமையில்லாதவர்களாக இருந்ததால் அவர்களுக்கெனத் தாழ்ந்த பகுதியில் ஒரு கட்டிடத்தை அமைத்தான் என வருகின்ற கூற்றும், மாகன் நான்கு வர்ணங்களின் கலப்புக்கு வழிவகுத்தான் எனச் சூளவம்சம் கூறுவதும் இந்து மதச் செல்வாக்கால் ஏற்பட்ட சாதி அமைப்பின் வலுவைக் காட்டுகின்றன. இக்காலத்தில் இந்து மதத்தின் செல்வாக்குப் பௌத்த மதத்தில் வலுவடைந்து காணப்பட்டது எனலாம். இந்து விக்கிரகங்கள் பௌத்த வழிபாட்டிடங்களில் வைத்து வழிபடப்படவில்லை எனப் பரணவித்தானா கூறினாலும் (Paranavitane, S. 1960 : 578) பிற சான்றுகள் எதிர்மாறான செய்திகளையே தருகின்றன. இதுபற்றி ஆரியபாலா அவர்களின் கூற்றை நோக்குவாம். (Ariyapala, M. B. 1968 : 184–185)

> "பௌத்த சமயம் ஒரு தத்துவமாக இருந்ததால் சாதாரண பொது மக்களுக்குத் திண்ணியமானவற்றை அதனால் அளிக்க முடியவில்லை. அதன் விளைவாக சாதாரண மக்கள் பௌத்த சமயத்தைச் சாராத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் இந்து சமயத்திலிருந்தும் பிராமணச் சடங்கு முறைகளிலிருந்தும் தழுவினர். இவை திண்ணியமான வழிபாட்டு வடிவங்களை அவர்களுக்கு அளித்தன. இறுதியாகப் பௌத்த மதமே இத்தகைய வடிவங்களை மேற்கொள்ளலாயிற்று. இதனுற்றான் பௌத்த கோயில்களும் தாதுகோபுரங்களும் தோன்றின. சகிப்புத் தன்மை பௌத்த மதத்தில் ஓர் அடிப்படையாக இருந்ததினுல் இந்த முரண்பட்ட சமய நடைமுறைகளையும் அது அனுமதித்தது. ஒரே கட்டிட அமைப்பில் இந்துத் தெய்வங்களும் பௌத்த விக்கிரகங்களும் வழிபடப்பட்டன. கர்மம் அல்லது ஊழ்வினை என்ற கோட்பாடு சாதாரண மனிதனின் அறிவிற்கு எட்டாத ஒன்ருக இருந்தது. ஆதலால் சாதாரண மக்கள் இந்துசமயத் தெய்வங்களிலும் நடைமுறைகளிலும் ஈடுபாடு கொண்டனர். ஏனெனில் இவை அவனது அத்தியாவசிய உடனடித் தேவைகளையும் அறிவுத் தாகத்தையும் நிறைவேற்றின. துன்பங்கள் ஏற்படும்போது ஓர் தஞ்சமாகவும் சகல துன்பங்களையும் தீர்க்கும் ஓர் மருந்தாகவும் மக்கள் தெய்வங்களை வழிபட்டனர். இத்தெய்வங்கள் பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருந்தன என்று அவர்கள் கருதினர். இப்பண்டைய நடைமுறைகள் காலாதிகாலமாகத் தொடர்ந்து இற்றைவரை நீடித்துள்ளன''

இக்காலத்தில் பௌத்த மதம் இந்து மதச் செல்வாக்குக்கு உட்பட்டிருந்ததை மிற்றன் என்பவரும் சிறப்பான முறையில் எடுத்துக் காட்டியுள்ளார். (Mitton, G. E. 1916 : 205 – 206) அஃதாவது ''பொலநறுவையில் இந்து மதம் தூய பௌத்த கோட்பாட்டின்மீது செலுத்திவந்த ஆதிக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதை நாம் இங்கும் அவதானிக்கலாம். தென்னிந்தியாவிலிருந்து படைஎடுத்தோரின் தொகை பெருகப்பெருக ஒவ்வொரு படைஎடுப்பும் பின்வாங்கியபின் அது சில தனி நபர்களை இங்கே குடியமர்த்திச் சென்றது. இவர்கள் தமது சொந்த நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் இங்கு புகுத்தி இந்நாட்டுவாசிகள் மீது அந்நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் செல்வாக்கு வகிக்கச் செய்தனர். பௌத்தம் தனது தனித்துவ அம்சங்கள் சிலவற்றை இழக்க இந்துத் தெய்வங்கள் மேலும்மேலும் பௌத்த கோயில்களில் வழிபடப்படலாயின'' என்பதாகும்.

ஈழத்தில் இந்து மதம் பௌத்தத்தின்மீது கொண்டிருந்த செல்வாக்குக்கு வெளிநாட்டுப் படைஎடுப்புகள் மட்டும் காரணமல்ல. இந்நாட்டில் சிங்கள–தமிழ் மொழி பேசியோர் பௌத்தம் இங்கு வரமுன்னர் இந்துக்களாகவே விளங்கினர். பௌத்தத்தைச் சிங்களமொழி பேசியோர் தழுவினுலும் கூடத் தமது பழைய இந்து நம்பிக்கைகளையும் பேணினர். இவை நாட்டார் வழிபாடுகளாக அவர்களால் பேணப்பட்டன. அநுராதபுர அரசு காலத்தில் பௌத்த மதம் கொண்டிருந்த இறுக்கமான கட்டுப்பாட்டினுல் பௌத்த மதத்துடன் இவை சங்கமிக்கவில்லை. ஆனுல் பொலநறுவைக் காலத்தில் பௌத்த சங்கமும் தளர்நிலை அடைந்ததும், இந்துச் செல்வாக்குப் பல வழிகளில் செறிந்திருந்ததும் இந்துமத நம்பிக்கைகள் பரவலாகப் பேணப்படவும் பௌத்தத்துடன் சங்கமிக்கவும் வழிபிறந்தது. இதனையே சந்தேச இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்சேர்க்கை

கடந்த நவம்பர் மாதம் (20 – 11 – 1985) இல் வெளிவந்த தினகரன் பத்திரிகையில், ''பொலநறுவையில் சோழர்கால இந்து விக்கிரகங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன'' என்ற தலைப்பில் பின்வரும் செய்தி பிரசுரமானது. அஃதாவது;

**பொலனறுவையில் சோழர்கால இந்து விக்கிரகங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன: கலாச்சார முக்கோணப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.**

பொலனறுவையிலுள்ள அலஹ்ர் பிரிவேனுப் பகுதியில் கலாச்சார முக்கோணத் தொல்பொருள் ஆய்வுக் குழுவினர் ஆராய்ச்சி நடத்தியபோது சோழர் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த இரண்டு இந்து சமய விக்கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

நிலத்தைத் தோண்டியபோது பல இந்துக் கோவில்கள் இருந்த சான்றுகள் கிடைத்தன. சிவலிங்கம், ரிஷபம், நந்தி ஆகியவற்றின் பகுதிகள் முதலில் காணப்பட்டன. மேலும் தோண்டியபோது சிறப்பும் முக்கியத்துவமும் மிக்க இரு முழு விக்கிரகங்கள் கிடைத்தன. சூரிய விக்கிரகமும் திவ்யராஜன், பரசுராமர் சிலைகளும் இவை. இச்சிலைகள் காணப்பட்ட ஆலயச் சுவர்கள் செங்கல்லால் அமைக்கப்பட்டிருந்தன. சூரிய விக்கிரகம் தனிக் கல்லில் செதுக்கப்பட்டதாகும்.

மூர்த்தி நடுவேயும் அருகில் இருமருங்கிலும் சக்திகள் இருவர் காணப்படுகின்றனர். சூரிய பகவானின் கைகளிலும், சக்தியர் கைகளிலும் தாமரை மலர்கள் காணப்படுகின்றன.

இவை போன்ற சிலைகள் முன்பு இங்கு கண்டெடுக்கப்படவில்லை. பரசுராமர் விக்கிரகத்தின் கையில் கோடரி காணப்படுகிறது.

இவை பத்தாம் நூற்றுண்டைச் சேர்ந்தவை என்றும் மிகச் சிறந்த சிலைகள் என்றும் திட்ட டைரக்டர் பேராசிரியர் பி. எல். பிரேமதிலக தெரிவித்தார்.

பொலனறுவையில் காணப்பட்ட மிகப் பெரிய இந்து ஆலயமான நல்வின்னை விகாரையில் காணப்பட்ட தாமரை மலர்கள் போன்றே இவை இருப்பதாகப் பேராசிரியர் கூறுகின்ருர்.

இந்த விகாரையில் காணப்படும் செங்கல் சுவர் அரவத்தின் தலை போன்றிருக்கின்றது. இது பௌத்த ஆலயமல்ல. சிவ, நடராஜ வெண்கல விக்கிரகமும், சிவலிங்கம் போன்ற இதர ஐம்பொன் விக்கிரகங்களும் முன்பு இங்கே கண்டெடுக்கப்பட்டன. இப்போது இவை அனுராதபுர மியூஸியத்தில் இருக்கின்றன.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாவியவை (தமிழ்)


ஈழமுரசு (நாளிதழ்)

இந்திரபாலா, கா. 1970 இலங்கையில் திராவிடக் கட்டிடக் கலை. கொழும்பு.

1972 யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம். கண்டி.

கந்தையா, ந. சி. 1964 மட்டக்களப்புத் தமிழகம். சுன்னாகம்.

குணசிங்கம், செ. 1973 கோணேஸ்வரம். பேராதனை.

1978/79 ஈழத்து இந்துக் கோயில் நிர்வாகம்: பொலனறுவை வானவன் மாதேவீஸ்வரக் கோயில்.

அதிராஜேந்திரன் காலக் கல்வெட்டு. பேராதனை.

சபாநாதன், குல. 1949 யாழ்ப்பாண வைபவ மாலை கொழும்பு.

சிற்றம்பலம், சி. க. 1983 "பௌத்தத்திற்கு முந்திய ஈழத்து இந்து மதம்" சிந்தனை (புதிய தொடர்) தொகுதி 1, இதழ் 3.

1984 ஈழமும் இந்து மதமும் – அநுராதபுர காலம் சிந்தனை (புதிய தொடர்) தொகுதி 2 இதழ் 1

சிறீனிவாசன், இ. ஆர். 1968 பள்ளிப்படை. சிந்தனை மலர் 2. இதழ் 1 (பழைய தொடர்) கல்விக்கழகம் பேராதனை. பக். 3–9 கொழும்பு.

சோமாஸ்கந்தர், வை. 1968 கோணேசர் கல்வெட்டு. திரிகோணமலை.

வீரகேசரி (நாளிதழ்)

வேலுப்பிள்ளை, ஆ. 1985 "கோணேசர் கல்வெட்டுப் பற்றிய நுண் ஆய்வுகள்" – சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், வெளியீடு, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை வெளியீடு.

நடராசா, F. X. C. 1962 மட்டக்களப்பு மான்மியம். கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாவியவை (ஆங்கிலம்)


| | | |
|---|---|---|
| Arasaratnam, S. | 1964 | **Ceylon** (New Jersey) |
| Ariyapala, M. B. | 1968 | **Society in Medieval Ceylon.** Colombo. |
| Balendra, W. | 1953 | **Trincomalee Bronzes.** Colombo. |
| Bandaranayake, S. | 1974 | **Sinhalese Monastic Architecture** (Leiden) |
| Bell, H. C. P. | 1906 | **Archaeological Survey of Ceylon. Annual Report.** Colombo. |
| | 1908 | **Archaeological Survey of Ceylon. Annual Report.** Colombo. |
| C. V. | 1973 | **Culavamsa.** Edited and Translated by Geiger, W. (Reprinted). London. |
| E . Z. | | **Epigraphia Zeylanica.** |
| | Vol . II | No. 17 "Polonnaruwa Galpota-Slab Inscription". pp. 98 – 123. |
| | Vol . II | No. 25 "Polonnaruwa – Siva – Devalaya-slab Inscription" pp. 146 – 148. |
| | Vol . II | No. 28 "Polonnaruwa Slab Inscription at the North Gate of the Citadel" pp. 157-164. |
| | Vol. II | No. 29 "Polonnaruwa Priti Danaka Mandapa Rock Inscription" pp. 165 – 178. |
| | Vol. II | No. 35 "Ambagamuva Rock Inscription of Vijayabahu I pp. 208 - 218. |
| | Vol. II | No. 40 "Polonnaruwa Slab Inscripton of Velaikaras" pp. 242 - 246. |
| | Vol. II | No. 42 Kantalai Gal Asana Inscription of Kitti Nissanka Malla. pp. 287 – 288. |
| | Vol. III | No. 33 "Two Tamil Pillar Inscription from Budumuttava" pp. 302 – 312. |
| | Vol. III | No. 34 "Devanagala Rock Inscription of Parakramabahu I" pp. 312 – 325. |
| | Vol. IV | No. 24 "A Tamil Slab Inscription from palamottai". pp. 191 – 196. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | Vol. V | Part. III No. 38 "Kampuruvadu - oya Pillar Inscription of Gajabahu II" pp. 394 - 404 |
| | Vol.V | No. 39 "Kahambiliyava Slab Inscription of Vikkramabahu II" pp. 404 - 408. |
| Godakumbura, G, E. | 1961 | **Administrative Report** of the **Archaeological Commissioner** for 1960. |
| | 1962 | **Administrative Report** of the **Archaeological** Commissioner for 1961/62. |
| Gonasingham, S. | 1974 | Two **Inscriptions of Cola Ilankesvara Deva** Trincomalee Inscriptions series No. I Peradeniya. |
| | 1975 | A Tamil Slab Inscription at Nilaveli. The **Sri Lanka Journal of the Humanities** Vol. I, No. I, pp. 61 - 71. |
| Indrapala, K. | 1969 | "Early Tamil Settlement in Ceylon" **J. R. A. S. (C. B.) New Series Vol. XIII** pp. 43 - 63. |
| | 1970 | "The origin of the Tamil Vanni Chieftaincies of Ceylon" in **The Ceylon Journai of the humanities**. Vol. I, No. I, pp.111-140 |
| | 1971 | **Epigraphia Tamilica** Vol. I, Part. 1, Jaffna. |
| Kirubamune, S. | 1976 | The Royal Consecration in Medieval Sri Lanka. The problems of Vikkramabahu II and Gajabahu II in **Sri Lanka Journal** of **South Asian Studies** pp. 12-32. |
| Liyanagamage, A. | 1968 | **The decline of Polonnaruwa and the rise of Dambadeniya**, Colombo. |
| Malalasekera, G. P. | 1928 | **Pali literature of Ceylon**, Colombo. |
| Mendis, G. C. | 1947 | **Early History of Ceylon**, Calcutta. |
| Mitton, G. E. | 1916 | **Lost Cities of Ceylon**, Colombo. |
| Navaratnam, C. S. | 1964 | A **short** history of **Hinduism** in Ceylon. Jaffna. |
| Paranavitane, S. | 1955 | "Fragmentary Sanskrit Inscription from Trincomalee". In E. Z. Vol. V, Part I. Ins No. 14 pp. 170 - 173. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 **History of Ceylon** Vol. I Part II (ed), Colombo.

1973 The Art and Architecture of Polonnaruwa Period in the **Ceylon Historical Journal** Vol. IV , pp. 76 - 101.

Pathmanathan, S. 1979 "Chola Inscriptions from Mantai" திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் (கொழும்பு) பக். 59 – 70.

1982 Hinduism in Sri Lanka circa — 1000-1250: Paper **submitted for the World Hindu Conference** held in Colombo, Sri Lanka.

Rutnam, J. T. 1979 The **Polonnaruwa Colossus A Critique of an Ancient statue.** (Chunnakam)

Saratissa Thera (ed) 1899 **Rasavakini**, Part II. (Colombo)

Saturday Review (Weekly News paper)

**Sitrampalam**, S. K. 1984 The Chola Temples of Sri Lanka A study – A **paper submitted for the seminar in connection with the Thousandth Coronation year of Rajaraja I** in December 1984. (Tanjore)

Sivaramamurti, C. 1974 **Nadaraja in Art Thought and Literature.** (New Delhi)

Swaminathan, K. D. 1960 "An Inscription of Gajabahu II" in The **Ceylon Historical Journal** Vol. X, Nos. 1 – 4, July 1960 April 1961 pp. 43-46

Veluppillai, A. 1971 Ceylon Tamil Inscriptions Part I Peradeniya.

1972 Ceylon Tamil Inscription Part II Peradeniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CINTANAI

Vol. II (New Series) JULY 1984 No. II

CONTENTS

The system of government under the Pandyas

— **Natana. Kasinathan**

Derivative Nouns in Jaffna Tamil

— **S. Suseendirarajah**

Some important aspects of Irrigation and Planning in an Agricultural reigion

— **A. Kanapathippillai**

Ceylon Tamil Merchant Guilds (1000 - 1250 A. D. )

— **S. Pathmanathan**

The rise of the Entrepreneur Class in Sri Lanka and its capitalist alignment.

— **V. Nithyanandan**

Sri Lanka and Hinduism - Polonnaruwa period (1000 - 1250 A. D.

— **S. K. Sitrampalam**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை நிரந்தர வைப்பு நிதிக்கு
## கொடை உதவியோர் பட்டியல்

| | |
|---|---|
| மஹாராஜஶ்ரீ சண்முகநாதக் குருக்கள்<br>மாவை ஆதீனகர்த்தா | 5,000-00 |
| திரு. ரி. குமாரசாமி ஜவுளி நிறுவனம்<br>42, 44, பஸார் வீதி, யாழ்ப்பாணம். | 5,000-00 |
| பொ. கந்தசாமி<br>மஞ்சவனப்பதி, கொக்குவில். | 5,000-00 |
| பேராசிரியர் இ. கனகசுந்தரம், மருத்துவபீடம்<br>யாழ். பல்கலைக்கழகம் | 5,000-00 |
| சீமாட்டி நிறுவனம்<br>மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | 2,500-00 |
| கணேசன் ஸ்ரோர்ஸ் | 1,001-00 |
| விமாகி நிறுவனம்<br>27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | 1,001-00 |
| க. கதிரவேற்பிள்ளை<br>நீதிபதி, கிளிநொச்சி. | 1,000-00 |
| முருகன் உபயம் | 500-00 |
| செ. அஞ்சலாதேவி மூலம் பரந்தன், கிளிநொச்சி,<br>சாவகச்சேரி அன்பர்கள் அளித்த நன்கொடை | 2,581-00 |
| சி. சின்னத்துரை<br>இணுவில் | 5,000-00 |
| எஸ். சிவகுமாரன்<br>ஶ்ரீராம் ரெக்ஸ்ரயில்ஸ் | 5,000-00 |
| நா. வ. கந்தையா அன் சன்ஸ் | 1,001-00 |
| ஶ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்<br>நயினாதீவு | 10,000-00 |
| | 49,584-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தாப் படிவம்

நிர்வாக ஆசிரியர்,
**சிந்தனை,**
நூலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
இலங்கை.

சிந்தனை, மூன்று இதழ்களுக்கான சந்தாப்பணம் அனுப்பியுள்ளேன். இத்துடன் காசுக்கட்டளை / காசோலை / தபாற்கட்டளை / பணம் அனுப்பிவைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 75–00 |
| இந்தியா (இந்திய ரூ.) | ரூபா | 75-00 |
| வேறு நாடுகள் | £ 6–00 | $ 12–00 |

(தபாற்செலவு உட்பட)

பெயர்.......................................................................................................

முகவரி.....................................................................................................

நாடு..................................................

திகதி......................................

கையொப்பம்..............................................

# Subscription Form

Managing Editor,
**Cintanai**,
The Library,
University of Jaffna,
Thirunelvely,
Sri Lanka.

Please send me 3 issues of Cintanai to my address given below. I enclose a Cheque / Bankers order / M. O. / P. O. in your name for Sri Lanka Rs. 75/-, India Rs. (Ind. Rs.) 75/-, other countries £ 6-00 / $ 12-00 per year. (Postage included)

**Name:**.......................................................................................................

**Address:**..................................................................................................

**Country:**..................................................

**Date:**......................................

**Signature:**..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்:
சி. க. சிற்றம்பலம், M. A., Ph. D.

நிர்வாக ஆசிரியர்:
சி. முருகவேள், B.A., Dip.in Lib. Sc.

ஆசிரியர் குழு:
வ. ஆறுமுகம், M. Phil., Dip. in Ed.
வே. இராமகிருஷ்ணன், M. Phil., Dip. in Ed., Ph. D.
செ. பாலச்சந்திரன், M. Sc.
பார்வதி கந்தசாமி, B. Phil., Ph. D.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

தொகுதி II. (புதியதொடர்) ஆடி, 1984 இதழ் II.

## உள்ளுறை

பாண்டியர்கால ஆட்சி இயல்
— நடன. காசிநாதன் 1

யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில்
ஆக்கப் பெயர்கள் 19
— சு. சுசிந்திரராசா

பயிர்ச்செய்கைப் பிரதேசம் ஒன்றில்
நீர்ப்பாய்ச்சல் திட்டமிடுதலில்
சில முக்கிய அம்சங்கள் 39
— அ. கணபதிப்பிள்ளை

இலங்கைத் தமிழ் வணிக கணங்களும்
நகரங்களும் (கி. பி. 1000 – 1250) 45
— சி. பத்மநாதன்

இலங்கையில் முயற்சியாளர் வர்க்க எழுச்சியும்
அதன் முதலாளித்துவ இணக்கப் பான்மையும் 79
— வி. நித்தியானந்தன்

ஈழமும் இந்து மதமும் — பொலநறுவைக் காலம்
(கி. பி. 1000 – 1250) 115
— சி. க. சிற்றம்பலம்

விலை ரூபா 25-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org